வெளியீடு: ௧௪௪

# ரலிங்க லீலை-ஆராய்ச்சி

◘

ஆசிரியர்:

வித்துவான், திரு. வீ. குமாரசாமி ஐயர்

◘

திருநெல்வேலித் தென்னிந்திய
வசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.,
நெல்வேலி :: சென்னை-1.

First Edition: Sep., 1958.

PIRABULINGA LEELAI AARAICHI

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office*:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 1100

# பதிப்புரை

அமிழ்தினும் இனிய நம் செந்தமிழ் மொழியில் பண்டைக் காலத்தில் ஆக்கிய இலக்கியங்கள் அனைத்தும் செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளன என்பது யாவரும் அறிந்த தொன்றாகும். அவ்விலக்கியங்கள் கற்று வல்ல சான்றோர்கட்கேயன்றி மற்றையோர்க்குப் பயன்படாது வாளாவிருந்தன. அவற்றை ஆய்ந்து எளிய இனிய உரை நடையில் ஆக்கியும் அவற்றின் பொருள்களை ஆராய்ச்சியால் வெளிப்படுத்தியும் யாவர்க்கும் பயன்படுமாறு செய்வது எமது கழகத்தின் நோக்கமாகும். அம்முறையில் பண்டைக் காலத்துச் சங்க நூல்களும் பிற்காலத்துப் புராணங்களும் ஆராய்ச்சியாகவும் உரைநடையாகவும் வெளியிடப்பெற்றன. அவைகளைக் கற்றுப் பயனடைந்தோர் பலர் என்பதற்கு எமது கழகப்பதிப்பு நூல்கள் தமிழ்நாட்டு நூல் நிலையங்கள், கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள், மன்றங்கள், கழகங்கள், மனைகள் எங்கணும் நிறைந்திருப்பதே சான்றாகும். அவ் வுயரிய நோக்கத்துடன் தமிழ்த் தொண்டு புரிந்துவரும் எம் கழகவாயிலாக இப்போது "பிரபுலிங்கலீலை யாராய்ச்சி" என்ற உரைநடை நூல் வெளிவருகின்றது. பல்கலைக்கழக வித்துவான் வகுப்புக்கும் புலவர் வகுப்புக்கும் பிரபுலிங்க லீலை என்ற நூல் பாடமாக வருவதால் அம் மாணவர் கட்கும் இஃது ஓர் ஆராய்ச்சி நூலாகும்.

இவ்வரிய ஆராய்ச்சி நூல் மதுரைமாவட்ட நாட்டாண் மைக் கழகப்பள்ளிகளில் ஒன்றாகிய மேலூர் உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழ் ஆசிரியர் வித்துவான் திரு. வீ. குமாரசாமி ஐயரவர்களால் ஆக்கப்பெற்றது. வீர சைவ

*

மரபினர் ஆகிய சிவப்பிரகாச அடிகளார் இயற்றிய பிரபு லிங்கலீலை நூலை அவ்வீர சைவ சமயத்தினர் ஆகிய குமார சாமியவர்கள் ஆராய்ந்ததால் இஃது யாவரும் போற்றத் தக்க புதுமை நூலாகும். 'பாம்பே பாம்பின் காலறியும்' என்ற பழமொழிப்படி அச்சமயவுண்மை யாய்ந்தெழுதும் வன்மை அச்சமயத்தவர்க்கே விளங்கும். சீரிய செந்தமிழ்ப் புலமையும் வீர சைவ சமயவுண்மையும் வாய்ந்த அவர்கள் பல ஆண்டுகளாக ஆய்ந்து கண்ட ஆராய்ச்சியை மக்கட்குப் பயன்படுமாறு தொகுத்து நூலாக்கித் தந்தனர். இந்நூலை அவர்கள் கற்றதும் கேட்டதும் வரலாறு முதலியவற்றை உணர்ந்ததும் ஆராய்ச்சியும் அவர்கள் எழுதிய முன்னுரை யால் நன்கு விளங்கும்.

இத்துணை அரிய பெரிய முயற்சியால் ஆக்கிய இவ் வாராய்ச்சி நூலை எமது கழகத்திற்கு அன்புடன் உதவிய ஆசிரியர் திரு. வீ. குமாரசாமி அவர்களுக்குக் கழகத்தின் நன்றி என்றும் உரியது. மேலும் இதுபோன்ற நூல்கள் ஆக்கியுதவுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் உடல் நலமும் நீண்ட வாழ்நாளும் அருளுமாறு வேண்டுகின்றோம்.

சிவப்பிரகாச அடிகளாரின் புதிய கற்பனைகள், வீர சைவசித்தாந்தம் என்ற சமயவுண்மை, திருக்குறட் கருத் துக்கள், சோதிடநூல் ஆட்சி, பழமொழி பயின்ற இடங் கள், இலக்கண நூலாட்சி, தருக்கநூல் ஆட்சி இவற்றை எடுத்துக் காட்டியிருக்கும் அருமை பெருமை புலவர்கள் வியந்து போற்றத்தகுவன என்பது ஒருதலை. எனவே தமிழ் மொழியார்வம் நிறைந்த நம்நாட்டு மக்கள் இதனை வாங்கிக் கற்றுப் பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை

"பூவாய் நெடுங்கோட் டுறுபசுந்தேன்
கைகான் முடங்கு பொறியிலிதன்
நாவா யொழுகிற் றெனவுலகம்
அளந்த மாலு நான்முகனுங்
காவா யெனநின் றேத்தெடுப்பத்
தானே வந்தெங் கரதலத்தின்
மேவா அமர்ந்த மாமணியைத்
தொழுது வினைக்கு விடைகொடுப்பாம்."
(பிரபுலிங்க லீலை.)

தமிழ்மொழியிலுள்ள பிரபுலிங்க லீலை என்னும் காப்பியப் பனுவல் "எவனொரு நொடியில் எண்ணாது இசைத்ததோர் செய்யுள் மற்றைக், கவிகள்பன் னாள்நினைந்த காப்பியங்கட்கு மேலாம்" என்று போற்றிப் புகழத்தக்க புலமைச் செல்வராகிய சிவப்பிரகாச முனிவரால் கன்னட மொழியில் சாமரசர் இயற்றிய நூலைத் தழுவி இயற்றப் பெற்றதாகும். இந்நூலில் சமய நூற் கருத்து மட்டு மன்றிக் காவியச்சுவையும் கற்பனைத் திறமும் அலங்கார நலமும் நீதிநூற் கருத்துக்களும் நிரம்பியுள்ளனவாதலின், இந்நூலைத் தமிழ்ப்புலவர்கள் யாவரும் விரும்பிப் பயில் கின்றனர். பல்கலைக் கழகத்தாரும் புலவர் தேர்விற்கு அவ்வப்பொழுது பாடநூலாக வைத்து வருகின்றனர். இராமாயணம், பாரதம் முதலிய நூல்களைப் பிரசங்கம் செய்வதுபோல இந்நூலிலுள்ள சில பகுதிகளையும் புலவர் கள் பொதுமக்கள் கேட்டின்புறுமாறு பிரசங்கம் செய் கின்றனர். மாயைக்கும் அல்லமருக்கும் நிகழ்ந்த நிகழ்ச்சி

யைக் கன்னடத்திலும் தமிழிலும் நிழற்படமாக எடுத்தும் காட்டுகின்றனர். இவ்வாற்றால் இந்நூல் யாவரும் விரும்பத் தக்க மாண்புடையது என்பது விளங்கும்.

இத்தகைய நூலை யான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்றபொழுது புலவர் தேர்விற்குப் பாடமாக வைத்திருந்தார்கள். எங்களுக்கு உயர்திரு ஆசிரியர் R. கந்தசாமியார் அவர்கள் நன்கு கற்பித்தார்கள். எங்கள் சமய நூலாதலின் முன்னரே யான் இதனைப் பயின்றிருந்தாலும் அவர்களிடம் பாடங்கேட்டதால் நூற்பொருளைச் செவ்விதின் உணர்ந்தேன். பின்னரும் பல்கால் பயின்று செய்யுள்களுக்குரிய குறிப்புகளும் எழுதிவந்தேன். கன்னடப் புலவர்களைச் சந்திக்குங்கால் அவர்களிடம் கன்னடப் பிரபுலிங்க லீலையிலுள்ள கருத்துக்களையும் ஒப்புமைப் பகுதிகளையும் கேட்டறிந்தேன். இந்நூலில் வருகின்ற வீர சைவ சமயக் கருத்துக்களை அறியச் சித்தாந்த சிகாமணி, *வீர சைவ தத்துவப்பிரகாசம், பரமரகசிய சடுத்தலம் முதலிய நூல்களையும் படித்தறிந்து உண்மைப் பொருளை உணர்ந்தேன். இந்நூலைப்பற்றிப் பல இடங்களில் சொற்பெருக்கும் ஆற்றினேன். இரண்டாண்டுகளுக்கு முன்னர்க் குடந்தை—வீர சைவப் பெரிய மடத்துத் தலைவர் அருண்மிகு—சாந்த சாரங்க தேசிகேந்திர சுவாமிகள் தலைமையில் மூன்று நாட்கள் "பிரபுலிங்க லீலையில் சமயக் கருத்துக்கள்" என்ற பொருள்பற்றித் தொடர்ந்து பேசும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அச் சுவாமிகள் கன்னட நாட்டில் பிறந்தவர்கள்; கன்னடமொழியில் சிறந்த புலமையுடையவர்கள்; சடுத்தல சித்தாந்த மெய்யறிவு பெற்றவர்கள். அவர்கள் இந்நூலைப்பற்றி அவ்வமயம் அருளிய உரையும், மற்றும்

* இவ்விரு நூல்களும் அச்சில் வெளிவராதவை.

பெரியோர்களுடைய ஆக்கவுரைகளும் இந்நூலிற்கு ஓர் ஆராய்ச்சி எழுதவேண்டுமென்ற என் உள்ளத்திருந்த எண்ணத்தை மேலும் தூண்டலாயின.

இந்நிலையில் திருவருட் செயலால் திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் செயலாளர் உயர் சைவத் திருவாளர் வ. சுப்பையா பிள்ளையவர்கள் "பிரபு லிங்கலீலை ஆராய்ச்சி" என்ற தலைப்பில் நூல் எழுதித் தருமாறு எனக்கு நேரிலும் கடிதமூலமாகவும் பன்முறை அறிவித்து ஊக்கினார்கள். அவர்களால் யான் மேற் கொண்ட எண்ணம் இந்நூல் வடிவில் உருப்பெறலாயிற்று. அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி என்றென்றும் உரியதாகும்.

இந்நூலில் வருகின்ற நிகழ்ச்சிகள் இவ்வாறிருத்தல் கூடுமா? என்பதுபோன்ற ஆராய்ச்சியில் யான் புகவில்லை. இலக்கியம், சைவ—வீரசைவ சித்தாந்தம் ஆகியவற்றையே ஆய்ந்து எழுதியுள்ளேன். இந்நூலில் முதற்கண் வரலாற்றைச் சுருக்கமாக வரைந்துள்ளேன். அதைப் படிப்பவர்கள் நூற்பொருளை எளிதில் காண்பர். கதிகளின் ஆராய்ச்சியில் சமயக் கருத்தும் பிறவும் ஆராயப்பெற்றுள்ளன. இலக்கண நூலாட்சி, தருக்க நூலாட்சி, சோதிட நூலாட்சி, பழமொழிகள் பொதிந்துள்ள இடங்கள், கற்பனைத்திறம் முதலியவற்றை அவ்வத் தலைப்பில் விளக்கியுள்ளேன். இவை மூலநூலைப் பயில்வார்க்கு உதவியாக இருக்கும். மற்றும், வீரசைவ சடுத்தல சித்தாந்தமும் சுருக்கமாக வரைந்துள்ளேன். வீரசைவ சித்தாந்தம் யாதோ என்றெண்ணுவார்க்கு இவ்விளக்கம் சிறிது உதவியாக இருக்கும். இவ்வாற்றால் இவ்வாராய்ச்சி நூலை அறிஞர் உலகம் உவப்புடன் ஏற்றுக்கொள்ளுமென்றே நம்புகின்றேன்.

"முற்றும் உணர்ந்தவரில்லை" ஆதலின் இவ்வாராய்ச்சியில் ஏதேனும் என் அறியாமையால் குறை நேர்ந்திருப்பின் அறிஞர்கள் அதனை அறிவிப்பார்களாயின் உவப்புடன் ஏற்றுத் திருத்திக்கொள்வேன்.

என்னை இப்பணியில் இயக்கி முட்டின்றி நிறைவேற்றிய இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றேன்.

மேலூர்,<br>விளம்பி, ஆவணி - 20உ

இங்ஙனம்<br>வீ. குமாரசாமி

## சிவப்பிரகாசர் துதி

எவர்க்குமெய்ஞ் ஞான சோதி
யீயுமா ணிக்க மாகி
உவப்பொடு வெறுப்பு மாகி
யுற்றிடு விடயத் தெய்தும்
பவப்பெரும் புணரி நீந்தப்
பாரதி யாகும் எங்கள்
சிவப்பிர காச தேவன்
திருவடி சென்னி சேர்ப்பாம்.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| க. | வரலாற்றுச் சுருக்கம் | க |
| உ. | இந்நூலில் வரும் கூற்றுக்குரியவர்களும் அவர்களைப்பற்றிய குறிப்புகளும் | ருo |
| ௩. | முதனூல் | ருஎ |
| ௪. | முதனூல் ஆசிரியர் | சுக |
| ரு. | வழிநூலாசிரியர் வரலாறு | சு௪ |
| சு. | நூலின் காலம் | சுஅ |
| எ. | நூலின் பெயர்க் காரணம் | சுகூ |
| அ. | வீட்டு நூலுள் அறிவுநூல் | எக |
| கூ. | நூலின் பொது இயல்பு | எ௩ |
| கo. | நூலாராய்ச்சி | எசு |
| கக. | இலக்கண நூலாட்சி | ககூo |
| கஉ. | தருக்க நூலாட்சி | உoo |
| க௩. | சோதிட நூலாட்சி | உoசு |
| க௪. | இந்நூலில் ஆட்சிபெற்றுள்ள பழமொழிகள் | உகo |
| கரு. | கற்பனைத் திறம் | உகஅ |
| கசு. | முடிப்புரை | உ௪எ |

# பிரபுலிங்க லீலை—ஆராய்ச்சி

## க. வரலாற்றுச் சுருக்கம்

**கைலாயத்தில்**

திருக்கைலாயத்தில் திருச்சபை கூடிற்று. அங்கு அனந்தனாலும் புனைந்துரைக்க முடியாத ஓர் அழகிய மண்டபத்தில் இறைவனும் இறைவியும் வீற்றிருந்தனர். பிராட்டி பக்கலில் அரமபையர் பலர் அணுகி நின்றனர். அருந்ததி முதலிய மாதர்கள் வாழ்த்துரை கூறினர். இலக்குமிகள் பலர் வெண்கவரி யிரட்டினர்; இந்திராணிகள் விசிறி அசைத்தனர்; கலைமகளிர் துதி கூறினர்; உருத்திர கணிகையர் நடித்தனர்; சாத்துவிகம், இராசதம், தாமதம் என்ற முக்குணங்களும உருவெடுத்து வந்த மாதர்கள் உமாதேவியின் பக்கத்து நின்றனர். அவர்களுள் தமோகுண மாதாகிய மாயை என்பாள் செருக்குடன் நின்ருள்.

மற்றும், அச்சபைக்கு உருத்திரர்களும் நாரணர்களும் பிரமர்களும் இந்திரர்களும் அளவற்றோர் வந்தடைந்தார்கள். உரகர், சித்தர்கள் முதலியோரும் வசிட்டர் முதலிய முனிவர்களும் திருவோலக்கங் காண வந்துற்றனர். பூதகணங்களும் வீரபத்திரர், வயிரவர், வீரகாளி, பிருங்கி முதலியோரும் வந்து நிறைந்தனர். நந்தியம் பெருமான் காவல்பூண்டு களிப்புடனை திரிந்தார். அத் திருச்சபை பேரொளியுடன் விளக்கமுற்றிருந்தது.

இவ்வாறிருந்த திருச்சபையில் உமையம்மையார்க்கும் சிவபெருமானுக்கும ஓர் உரையாடல் நிகழ்ந்தது.

**உமையம்மையார் :** (சிவபெருமானை நோக்கி) தலைவ! இங்குக் குழுமியுள்ள பெருமையுடைய இவர்கள் கொடிய பிறவியை யடையாதவராய் வீட்டின்பத்தை யடைவார்களா? அன்றி நிலையற்றவராய்ப் பிறப்பு இறப்புக்களில் உழல்வாரா? இதனை அருள்வீராக.

**சிவபெருமான் :** உமையே! நின் வினா நன்று. திருமால், அயன் முதலானவரும் பெயர், உருவம், செயல் ஆகியவற்றை உடையவர். ஆதலின், அவர்கள் வீட்டின்பத்தை யடையார்.

**உமை :** அவ்வாறாயின், பெயர், உருவம், செயல் ஆகிய வைகளைக் கடத்தற்கு யாது செய்தல் வேண்டும்? அதற்குரிய சூழ்ச்சி யாது? அருள்வீராக:

**சிவபெருமான் :** விண்ணுலகத்தில் போகத்தை அனுபவித்தற்குரிய உடலால் வீட்டின்பத்தை யடைதல் முடியாது. மண்ணுலகில் பிறந்து மெய்ஞ்ஞானத்தை யடைந்தவரே அழியா இன்பத்தை அடைவர்.

**உமை :** அவ்வாறாயின் மண்ணுலகில் ஞானநெறியை அருளத்தக்க ஞானாசிரியன் யாவன்? அருள்வீராக.

**சிவபெருமான் :** உமையே! சுஞ்ஞானி, நிராங்காரன் என்பவர்கள் செய்த தவத்தின் பயனாக அல்லமன்! என்ற பெயருடையவன் மண்ணுலகில் தோன்றியுள்ளான். அவன் என்னுடைய வடிவமேயாவன். அவன் ஞானநெறியை யுணர்ந்தும் நற்குரவனாவான். அவனைக் காணுதல் உனக்கு அரிது.

**உமை :** எனக்கு அரிது என்று கூறுதல் எவ்வாறு? இங்குள்ளோர் யாவர்க்கும் அவனைக் காணுதல் எளிதேயாகும்.

**சிவபெருமான் :** உமையே! கோபங்கொள்ளற்க. நீ கூறுவதுபோல் அல்லமன் எளியனல்லன். வினையினீங்கிய அன்பர்கள் விரும்பும் வடிவமுடையனாகி அவர்

காணத் தோன்றி யருள்புரிவான்; பிறரால் காண முடியாதவன்.

என்று கூற, யான் காணச்செய்வேனென்று தன் பக்கத்தில் நின்ற தமோகுண வடிவமாகிய மாயையை அழைத்து "மண்ணுலகிற் சென்று அல்லமனைக் கண்டு அடைவாய்" என்று ஏவ, அம் மாயையும "அல்லமனை அறிந்து யான் அணைவேன்; கூடாதாயின் வலிந்துபற்றி இங்கு இழுத்து வருவேன்" என்று சூளுரைத்தாள். அவ்வுரை ஓர் அற்பமாக எறும்பு "கடல்நீரை வற்றும்படி உண்டிடுவேன்" என்று கூறுவதை யொத்திருந்தது. உடனே மாயை கைலையினின்று நீங்கி மண்ணுலகை யடைந்தாள்.

**உலகில் மாயை**

விளவல தேயம் என்றொரு தேயம் உண்டு. அத்தேயம் திருமால் திருமணக் காலத்தில் நிலமகளுக்கு அணிந்த மதாணிபோல் சிறந்து விளங்குவது. அதன் தலைநகரம் **வைவைசை நகர்**. அந்நகரம் அம்மதாணியில் அழுத்திய விலையுயர்ந்த இரத்தினம்போல் இலங்குவதாம். அத்தகு சிறப்புற்ற நன்னகரை **மமகாரன்** என்னும் மன்னன் மாண்புற ஆட்சிபுரிந்தான். அவன் ஈகையால் புகழ்பெற்று விளங்கினான். அவனுடைய மனைவி **மோகினி** என்பாள். அவ் விருவரும் மகப்பேறின்மையால் பல நோன்பு நோற்றனர். அதன் பயனாக உமை யருளால் மாயை, மோகினி வயிற்றில் கருவாக அமைந்தனள். பத்துத் திங்கள் கழிந்தபின்னர் சலஞ்சலம் முத்தினை யீன்றாற்போல் ஒரு பெண்மகவை அம்மோகினி ஈன்றாள்.

மாயையாகிய மகவு மண்ணுலகில் தோன்றியவுடன் மன்மதன் மகிழ்ச்சியுற்றான். மாதவர் மனமயக்குற்றனர். அவர்கள் நெஞ்சம் கலக்கமடைவதற்குக் காரணம் அறியாமல் திகைத்தனர். துருவாச முனிவர் அத் தவத் தினர்பால் வந்தடைந்தார். அவரிடம் எழுதிய விளக்குப் போலிருந்த தம் உள்ளம் தென்றல் முன் வைத்த சுடர்

போல் சலனமடைவதை அறிவித்தனர். துருவாசர், "மாயை உலகில் மகவாகத் தோன்றியிருக்கின்றாள். ஆதலின் உங்கள் ஆற்றல் உடைந்தது. நீங்கள் அல்லமனை யுன்னுவீராயின் நுங்கள் அல்லல் ஒழியும்" என்று கூறி யகன்றார்.

மகவைப் பெற்ற மமகாரனும் மோகினியும் அம்மக விற்கு மாயை யென்ற பெயரிட்டுப் பல சிறப்புச் செய்தனர். மோகினித்தாய் மகவைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தாள். குழந்தையாகிய மாயை பெற்றோரை மழலைச் சொற்களைப் பேசியும், உடற்கின்பம் பயப்ப அவர்மேல் விழுந்தும், அவர் உண்ணும் இனிய உணவைக் கையாற் பிசைந்தும் இன்புறச் செய்தாள். இவ்வாறு வளர்ந்த மாயை மங்கைப் பருவமடைந்தாள். அப் பருவத்தில் மன்னன் தனியாக மாளிகை ஒன்றமைத்துக் கொடுத்து அங்குப் பல கலைகளையும் கற்றுணர்ந்த மாதர்கள் பலர் சூழ்ந்திருக்கச் செய்தான். அவர்களுடன் மாயை அம் மாளிகையிலிருந்து யாழ் இயக்கியும், இனிமையுறப் பாடியும், ஆடியும், பந்தடித்தும, கிளியை வளர்த்து அதற்குப் பேசக் கற்றுக் கொடுத்தும் தம் பொழுதைப் போக்கினாள்.

மமகாரன் தன் மகளுக்கு மணம்புரிய எண்ணினான். அப்பொழுது அவனுடைய குருவாகிய ஆங்காரன் என்னும் பெரியார் வந்தார். அவரை மாயை கண்டு வணங்கினாள். அவளைக் கண்டவுடன் அவ் வாசிரியர் "இவள் ஒரு காரணத்தால் உலகில் தோன்றியவளாவாள். இவளுக்குக் கணவனாக உரியவர் மனிதரல்லர்; நம் சங்கரனே யாவன்" என்றருளினார். அதற்கு மமகாரன் "திருமாலும் நான் முகனும் காணுதற்கரிய பெருமான் இம் மாதுக்கு எளியனாவனோ?" என்றான். அதற்கு அவர் "அன்பர் வேண்டிய கோலமுடையவனாய் நணுகுவான்; இஃது உண்மை" என்றார். அவ்வாசிரியர் மாயைக்குச் செந்நெறி களைக் கற்பித்துச் சென்றார். மாயை ஆசிரியர் அருளிய வண்ணம் அந் நகரிலுள்ள மதுகை நாதனைத் தனக்குரிய கணவனாப் பெற எண்ணி வழிபடத் தொடங்கினாள்.

### மதுகைநாதன் வழிபாடு

மாயை வைகறைப் பொழுதில் வாச நீராடினாள். தோழியர் பலர் மாயையை ஆடைகளாலும் அணிகலங்களாலும் நன்கு அலங்கரித்தனர். மாயை அழகிய பூங்கொடிபோல் விளங்கினாள். மங்கையர் வழிபாட்டிற்குரிய பொருள்கள் யாவற்றையும் எடுத்துக்கொண்டனர். மாயை குயிலனைய மாதர்குழாம் புடைசூழ, மயில்போல் எழுந்து, சிவிகையில் அமர்ந்தாள். இயங்கள் முழங்கின. மாதர்கள் பின்தொடர்ந்து சென்றனர். இருபாலும் வெண்கவரி யிரட்டினர். மாதர்குழாம் தெருவிடைச் சென்றது. அம் மகளிர் வனப்பைக்கண்ட ஆடவர் யானையுண்ட விளாங்கனிபோல் கருத்தழிந்தனர். இவர்களுடைய இடை, நுதல், விழி, வாய் ஆகிய இவ்வவயவங்கள் நம் அறிவைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கொள்ளை கொண்டனவே! நம் அறிவெல்லாம் போயிற்றே! என்று அழுங்கினர்.

இவ்வாறு ஆடவர் மனம் மாழ்க, அம்மாதர் குழாத்துடன் மாயை மதுகைநாதன் திருக்கோயிலை யடைந்தாள். சென்னிமேல் குவிந்த கையுடன் கோபுரவாயில் வழியாகப் புகுந்து சிவபெருமான் எதிர்சென்றாள். இறைவனை யணுகி வழிபாடியற்றுதற்குரிய பொருள்கள் யாவற்றையும் மங்கையர் கொடுக்க, மாயை இறைவனை ஆகமமுறையில் நீராட்டி, மலர்மாலை சூட்டி, அலங்கரித்துப் பல்வகைய உபசாரங்களும் புரிந்தாள்; துதித்தாள்; ஐந்தெழுத்தோதினாள்; வலமாக வந்தாள்.

### நடனமாடல்

பின்னர் நடன அரங்கை யடைந்தாள். நடனம் புரிவதற்கேற்ற உடையைத் தோழியர் அணிய அணிந்து கொண்டாள். சிவபெருமான் திருமுன்னர் மாதர்கள் வீணைகொண்டு இசைபாட, தண்ணுமை முழங்கத் தாளத்துடன் ஒத்து நடித்தாள். அவள் இடையில் ஒரு கை வைத்து ஒரு கையை நீட்டி நின்றது என் ஒரு கையுடன் மற்போர் புரிக எனச் சிவபெருமானை அழைத்தல்

போலிருந்தது. அவளுடைய காற் சதங்கையின் ஒலி மன்மதனை வா என்றழைத்தல் போலிருந்தது. இவ்வாறு ஒரு பொற்பாவை நடிப்பதுபோல் கண்டோர் வியப்புற நடித்தாள். அவளுடைய நடனத்தைக் காண இளைஞர்கள் பட்ட பாட்டினை என்னென்றுரைப்பது! மதில்மேல் இவர்ந்தும், மதிலிலுள்ள துவாரத்துள் முகத்தை வைத்தும், முன்னின்றவர் தோள்மேல் ஏறியும் காண இடர்ப் பட்டனர். நடனம் முடிந்த பின்னர் நித்தலும் வழிபாடியற்றும் அருந்தவன் மாயைக்கு இறைவனுக்கு அணிந்திருந்த மலர்மாலை முதலியவற்றை யளித்தான். அவற்றைப் பெற்று அவ்வரங்கிலிருந்தாள் மாயை. இவ்வாறு மாயை அன்புடன் வழிபாடியற்றுவதை எங்கும் நிறைந்துள்ளவனாகிய அல்லமன் அறிந்தான்.

### பிரபுதேவர் வருகை

அல்லமன் மாயை புரியும் வழிபாட்டிற்கு அருள் புரியத் திருவுள்ளங்கொண்டான். அழகும் இளமையும் பொருந்திய முருகன் என்று சொல்லத்தக்க வடிவங் கொண்டான். விலை யறியமுடியாத ஆடையை இடையில் உடுத்தினன். சந்தனம், கத்தூரி முதலிய மணப் பொருள்களை மார்பில் அணிந்தான். குயில் முகம்போல் தலைமயிரை முடித்தான். அதன்கண் மலர் மாலையைச் சூடினன். தலைப்பாகையையும் தரித்துக் கொண்டான். நெற்றியில் திலகம் இட்டினன். காதணி முதலிய அணி கலங்களையும் அணிந்துகொண்டான். முதுகில் மத்தளம் ஒன்றையும் தாங்கி மதுகைநாதன் கோபுரத்து எதிரே போய் நின்று மத்தளத்தை முழக்கினன். மத்தள முழக்கும்போது அவன் விரல் அசைந்தறைதலன்றி உடல் அசையாமல் நின்றான். அம் மத்தள முழக்கத்தைக் கேட்ட மாயை "இஃது என்ன புதிய ஒலி" என்று வியந்தாள். உடனே ஏவல் மகளிரை யழைத்து "இதுபோன்ற மத்தள முழக்கத்தை யாம் இதுகாறும் காதால் கேட்டிலேம்; இவ்வாறு உண்டென்று பிறர் கூறவுங் கேட்ட தில்லை. இத்தகு வித்தையுடையவன் யாவன்? காண்க"

என்று ஏவினள். மாதர் விரைந்து சென்று தாம் செய்த தவத்தால் அல்லமனைக் கண்களாற் கண்டு திரும்பிவந்து "அவன் கற்ற வித்தையைப்போல அவனுடைய அழகை யும் யாங்கள் எங்கும் கண்டதில்லை" என்றுரைத்தனர். உடனே மாயை அவனை அழைமின் என்றாள். அவ் வண்ணமே அழைத்துவந்து மாயையின் முன்னர் அல்லமனை விடுத்தனர். அம்மகளிர் அல்லமனைக் கண்ட பொழுதே மாயை மயக்குற்றாள்; அசைவற்றிருந்தாள்.

அவ்வமயம் மகளிர் அல்லமனை நோக்கி, "நின் தேயம் யாது? நின் பெயர் யாது? எங்கு நீ தங்கி யிருப்பது?" என்று வினவினர். அதற்கு அவன் "என் தேயமோ பரதேயம்; என் பெயர் அல்லமன் என்பது; என்பால் அன்புள்ளவரிடத்துத் தங்கியிருப்பேன்" என் றான். அங்ஙனம் உரைத்தலைக் கேட்ட அம்மகளிர் "எம்பிராட்டியிடத்துக் கலைஞர்கள் பலர் உள்ளனர். அவருடன் நீயும் இருக்கலாம்" என்றனர். இவ்வாறு உரைத்தலைக் கேட்ட மாயை இது மதுகைநாதன் பூசனைப் பயனேயாகும் என்று மகிழ்வுற்று ஒன்றும் பேசாமலிருந் தாள். பின்னர் மாயை வெற்றிலை பாக்கு அளித்தாள். கொண்ட கோலத்திற்கேற்ப நடிக்கும் அல்லமன் அவற்றை இழிந்தவன்போல் ஏற்றுக்கொண்டான். மாயை சிவிகையி லமர்ந்து தன் தந்தையை யடைந்து, தனது நடனத்திற் கேற்ப மத்தள முழக்குந் திறன்வாய்ந்த அல்லமன் தன்னுடன் இருப்பதற்கு அவனுடைய உடன்பாட்டைப் பெற்றுத், தன் மாளிகையை யடைந்தாள்.

### மாயையின் மயக்கம்

மாயை அல்லமனை அழைத்து அவனுடன் கலையுணர் பவள்போல் உரையாடினள். அவள் மனம் நிலைகுலைந்தது. அவனுடன்கூடி யனுபவிக்கும் இன்பத்தை விரும்பினள். மன்மதன் மலர்க்கணையை யெய்தான். காமம் மீதூரப் பெற்றாள்; ஆற்றாதவளானள். மனையினுள்ளே சென்று கூந்தல் சோர, துகில் விலக, அணையின்மீது பெருமூச்சு விட்டுக் கிடந்தாள். மாயை அல்லமன்பால் மோகங்

கொண்டு உள்ளம் நிறையழிந்திருப்பதை மகளிர் அறிந்தனர். தோழியர்களுள் சகலை என்பாள் மனம், உரை, செயல் இவைகளில் மாயை வேறுபட்டிருத்தலை யறிந்து அதற்குரிய காரணத்தைக் கலாவிலாசி என்னும் தோழியிடம் வினவினாள். அதற்கு அவள் "இனி யான் மறைப்பது எவ்வாறு? இன்று வந்த அல்லமனுடைய பேரழகென்னும் மதுவை மாந்தி உளமழிந்தாள்" என்றுரைத்தாள். அவ்வுரையைக் கூறியபொழுது மாயை முனிவுகொள்ளாமல் உடன்பாட்டினை யறிவிப்பவளாய்ப் புன்னகைகொண்டு முகங் கவிழ்ந்திருந்தாள்.

மாயையின் உள்ளநிலையை அறிந்த மங்கையர் அல்லமனுடைய கருத்தை யறிய எண்ணினர். மதமானி என்பாள் அல்லமன் இயைபினை யறியச் சென்றாள்.

அல்லமன் : (மதமானி வருங் குறிப்பை யுணர்ந்து) அம்மையே! யான் தங்கியிருக்கும்படியான மனையின்கண் சென்றிருப்பேன். நுங்கள் தலைவி என்னைத் தேடினால் எனக்கு அறிவியுங்கள்.

மதமானி : நீ தங்கியிருக்கப் புறத்தே ஒரு வீட்டை நாட வேண்டாம். எங்களுடைய மாளிகை உன்னுடையதே யாகும். இவ்விடத்திலேயே இருப்பாயாக. எங்கள் அரசனுடைய மகள் தனது உள்ளமாகிய பீடத்தில் உன்னை அகலாமல் தங்கவைத்திருக்கின்றாள். எப்பொழுதும் நீ பிரிவின்றி உடன் இருத்தலை அவள் விரும்புகின்றாள்.

அல்லமன் : (சிரித்துக்கொண்டே) யான் ஒன்றுமில்லாதவன் (ஏழை). நீங்களோ செல்வர்கள். நுங்கள் தலைவி அரசர் குலத்துதித்த பெண். யான் இன்ன சாதி என்று அறியாதவன்; அதுவுமல்லாமல் நீங்கள் மகளிர். யான் ஆண்மகன். இவ்வாறிருக்கையில் யான் எப்பொழுதும உங்களுடன் தங்கியிருத்தல் ஒவ்வாதசெயலாகும் அல்லவா?

மதமானி : எங்கள் தலைவி நட்புக்கொண்ட பின்னர் எவரையும் வேறுபாடாகக் கருதுந் தன்மை யில்லாதவள். உயிர்போல் சிறப்பாகக் கருதியுள்ள நின்னை இகழமாட்டாள் என்பது சொல்லவேண்டுமா ? யான் கூறும் சொல்லை நீ அங்குத் தங்கியிருந்த பின்னர் அறிவாய்.

அல்லமன் : யான் புதியன். உங்கள் தலைவியின் கருத்தை யான் அறிவனோ ? உண்மையாயுரைக்கும் உங்கள் வார்த்தையின்படி நடப்பதே எனக்கு நன்மை பயக்கும்.

என்று தன் உடன்பாட்டை உணர்த்தினன். மதமானியின் வருகையை எதிர்நோக்கி யிருந்தனர் மங்கையர். முகமலர்ச்சியுடன் மதமானி வருவதை யறிந்தனர். அவனைக் கண்டவர் "காயோ ? பழமோ ?" என்று வினவினர். "பழமே" என்று குறிப்பில் உணர்த்தினள். அல்லமன் உடன்பாட்டை யறிந்த மாயை களிப்புடன் இருந்தாள்.

மாலைப்பொழுது வந்தது. பகலவன் மேற்றிசையில் மறைந்தான். சந்திரன் உதயமானான். நிலவொளி அவளுக்குத் துன்பந்தருவதாயிற்று. நிலாமுற்றத்தில் தோகையையுடைய மயில்போல் விழுந்து காமநோய் மிகப் பிதற்றலானாள். தென்றல் வீசிற்று. அதனைப் பழித்துரைத்தாள். குயில் கூவிற்று. அவ்வினிய ஒலியை வெறுத்தாள். இத் துன்பத்திற்கெல்லாம் காரணமாயுள்ள மன்மதனையும் நிந்தித்துரைத்தாள். இவ்வாறு மாயை காமத்தால் துன்புறும் நிலையில் மதமானி என்னும் தோழி அல்லமனை அழைத்துச்சென்று பள்ளியறையுள் அமைத்துள்ள மலரணையில் அமர்த்திவிட்டுச் சிங்கத்திற்குத் தேரையை உணவாக இடுதல்போல் அவ்வறையுள் மாயையை விடுத்தாள்.

வேனிற்காலத்தில் நண்பகற் பொழுதில் பாலை நிலத்தில் நீர்வேட்கையுற்றோன் அந்நிலத்துக் காணும் கானல்

நீரைப் பருக ஓடுதல்போல மலரணையில் அமர்ந்திருந்த ஞானச்சுடரைக் கண்களாற் கண்டு நகைப்புடன் முக மலர்ச்சியோடு மேல்விழுந்து புல்லினள். விழுந்து தழுவத் தழுவத் தன் கைக்கு அகப்படாமையால் கண்ணுடியில் தோன்றிய உருவைப் பிடிக்க நீட்டிய கை கண்ணுடியிற் றுக்க அழும் குழந்தையைப்போல மாயை வருந்தினள். தன் கைக்கு அகப்படாமையால் உண்மையான அல்லமனை உருவெளித் தோற்றமென்று ஐயுற்றாள். மிக வருந்தினள்; பெருமூச்சுவிட்டாள். ஆகாயத்தைக் குத்திக் கைசலிப்பவர்போல மாயை அல்லமனைத் தழுவித்தழுவி உடல் வருந்திப் பரவசமடைந்தாள்; உடல் சோர்ந்தாள்; அணையின்மேல் உறங்கினள். அல்லமனைத் தழுவியது போலக் கனவு கண்டெழுந்தாள். இவ்வாறு இராப் பொழுது கழிந்தது. சூரியன் கீழ்த்திசையில் உதயமானன்.

காலையில் தோழியரைக் கண்டு மாயை, "அல்லமன் என் விழியெதிர் தோன்றினன். அவனை யான் நெருங் குங்கால் என் கைக்கு அகப்பட்டிலன். அதனால் மிக நைந்து உறங்கினேன்" என்றாள். இதனைக்கேட்ட அம் மாதர்கள் "இவ்வியத்தகு தன்மையன் தேவர்களுள் ஒருவனுமல்லன்; இவன் பராபரனே யாவன்" என்றனர்.

இவ்வாறு நிகழ்ந்த செயல்கள் யாவற்றையும் மோகினியாகிய தாய் சிலர் கூற அறிந்தாள். தாய், மாயை வாழ்கின்ற மாளிகையை யடைந்தாள். அவளை நோக்கி, மணம்புரிவதற்கு முன்னர் மங்கையர் நடந்து கொள்ளும் ஒழுகலாற்றினை அறிவித்தாள். தந்தை மமகாரன் மிக்க மானமுடையவன; அவன் இச்செயலை யறிந்தால் என்னும்! என்று கடிந்துரைத்துச் சென்றாள். சுனே என்பாள் மாயையை நோக்கி, "நம் குரு உனக்குச் சிவபெருமானே தலைவனுவான் என்று கூறியிருக்க நீ இவ்வாறு செய்தாய். இனி அவ்வல்லமனை இங்குத் தங்கவிடாமல் புறத்திருக்கச் செய்வதே தக்கதாம்" என் றுரைத்தாள். அதனைக்கேட்ட மாயை மிக்க துயருற்றாள்.

சகளை அல்லமனிடத்தில் "மாயை நின் மயக்க வலையிற்பட்டு நிகழ்ந்த செயல்கள் யாவற்றையும் அரண்மனையிலுள்ளோர் யாவரும் அறிந்துகொண்டனர். நல்வினைப்பயனால் அரசன் மட்டும் அறிந்திலன். யாங்கள் உன்னை வேண்டிக்கொள்வ தொன்றுண்டு. ஐயனே! நீ புறத்து ஓர் இடத்தே இருப்பாயாக" என்றாள். அல்லமன் "மாயையை யகன்றால் யான் எங்ஙனம் வாழ்வேன்" என்று வருந்தினவன்போ லுரைத்தான். அவன் கூறிய மெய்ப்பொருளை யுணராத சகளை "மாயையை மணக்கும் விதியுளதாயின் நீ எங்கிருப்பினும் அது கூட்டுவிக்கும். இதில் ஐயம் வேண்டாம்" என்று கூறினாள். அல்லமன் மதுகைநாதன் திருமுன்னர் மாயை நடிக்கும் பொழுது தன் செயலைக் காட்டும் முயற்சியுடையவனாயிருந்தான்.

**விமலை வருகை**

உமையம்மையார், மண்ணுலகிற்கு மாயை சென்று நீண்டநாள் கழிந்தும் வாராமையால் அவளை அழைத்து வருவாயென்று விமலையை அனுப்பி வைத்தார். அவள் வனவசை நகரை யடைந்து, மாயைமுன் நின்றாள். மாயை அவளது தோற்றத்தைக் கண்டு, இவள் நிலவுலகத்தவள் அல்லள் என்று கருதி, எழுந்து வணங்கி, இருப்பதற்கு ஓர் ஆசனம் அளித்தாள். பின்னர் அவளை நோக்கி "உன் பெயர் யாது? இங்குவந்தது ஏன்?" என்று வினவினள். அதற்கு விமலை "கைலை, யான் வாழும் இடம்; என் பெயர் விமலை என்பது; உமையம்மையார் உன்பால் அனுப்பினர். உன்னை அல்லமன் வன்மையை அறிந்து வா என்று அனுப்ப, நீ நன்று என்று வந்தாய். இங்கு வந்தபின் நீ கைலையில் கூறிய சூளினை மறந்துவிட்டாய். இவ்வாறிருக்கையில் மனமொழிகளுக்கு எட்டாத அல்லமனை நீ அறிவது எவ்வாறு? நீ உமையம்மையாரின் கலையாக வுள்ளவள் அல்லவா? உன்னை அழைத்துவரவே என்னை உமாதேவியார் அனுப்பினர்" என்றாள். விமலை உரைத்த உரைகளால் மாயை மனந்தெளிவுற்றுச் சிறிது

முன்நினைவு வரப்பெற்றாள். மாயை அல்லமன் இயல் பினைக் கூறுவாய் என்று வணங்கிக் கேட்கவும் விமலை கூறுவாள்.

**அல்லமன் தோற்றம்**

"இவ்வுலகில் பள்ளிகாவை என்றொரு நகர் உண்டு. அந்நகரில் அருள் நிறைந்த நிராங்காரன் என்பான் உளன். அவனுடைய கற்பிற்சிறந்த மனைவி சுஞ்ஞானி என்பாள். அவர்கள் மறைகளிலும் ஆகமங்களிலும் கூறும் நன்னெறி யில் ஒழுகுபவர். அவர்கள் இல்வாழ்க்கையிலிருப்பதால் மக்கட்பேற்றை விரும்பினர். அவர்கள் வீடுபேற்றைக் கருதியவர் ஆதலின் அதற்கு உறுதுணையாகவுள்ள புதல்வனையே நாடினர். "தவத்திற்கு ஒருவர்" என்னும் பழமொழிக்கு மாறாக இருவரும் வனத்திற்குச் சென்று இட்டலிங்க நிட்டை கூடினர். ஒன்பது திங்கள் சிவயோக சமாதியுற்றிருந்த காலத்தில் அவர்களது நெற்றியின்கண் உள்ள பரஞ்சோதி திரண்டு குழந்தை வடிவாகிப் புறத்தே அவர்கள் காணும்படி தோன்றிற்று. அவர்கள் அந்த ஞானக் குழவியைக் கண்கள் திறந்து கண்டனர். அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. பேரானந்தப் பிள்ளையைப் பெற்ற இவர்க்கு உலகினரை ஒப்பாகக் கூறுதல் கூடுமோ! இவ்வாறு அல்லமன் மகவாய்த் தோன்றியகாலத்தில் உலகில் பல நற்குறிகள் தோன்றின. நிராங்காரனும் சுஞ்ஞானியும் உவகைக் கடலிற் படிந்தனர். அக் குழந்தைக்கு அல்லமாப்பிரபு என்னும் திருப்பெயரை யிட்டழைத்தனர். குழந்தையாகிய அல்லமன் தவழ்ந்து, நின்று, நடந்து, தெருக்களில் விளையாடப் புறப்பட்டான். தாய்,

வருக, எங்கள்தம் ஆவியே!
    வருக, கண்ணுக ரமுதமே!
வருக, எங்குல தீபமே!
    வருக, கேடறு செல்வமே!
வருக, பாச விநாசனே!
    வருக, ஞான விநோதனே!

என்றழைக்க வந்து மேல்விழுந்தான். சிறுமியர் இழைத்த சிற்றிலைச் சிதைத்தான். சிறு தேர் உருட்டினான். பம்பரம் ஆட்டினான். இவ்வாறு இளமைப் பருவ விளையாட்டுக்களை உலகில் தோன்றியதற்கேற்பப் புரிந்தான். ஆசிரியரிடம் கல்வி கற்றான்.

இவ்வாறு அல்லமன் என்றோர் இன்புற மைந்தனாக வளரும்காலத்தில், உலகிலுள்ள மக்களுடைய வினைகளைப் போக்க அருளான் எண்ணித் தாய் தந்தையரை நோக்கி, "உங்கள் கருத்து ஒருமைப்பாட்டால் மகனாகத் தோன்றியிங்கிருந்தேன். இனி உலகிலுள்ள மாதவர்களின் எண்ணத்தை நிறைவேற்றுவேன்" என்றான். இவ்வுரையைக் கேட்ட தாய் தந்தையர் "நின்னை யகன்றால் யாங்கள் மூத்தியாகிய கரையை யடையாமல் பிறப்பாகிய கடலில் அமிழ்வோம்" என்று வருந்தினர். அதற்கு "நிராங்கர, சுஞ்ஞானிகளாகிய உங்களைச் சற்றும் அகன்றிடேன். தளரன்மின" என்று கூறித் தேற்றி மலரும் மணமும் போல் எங்குந் தான் நிறைந்திருக்கும் இயல்பினை யுணர்த்தினான். உலகிலுள்ள மக்கள் தாய் தந்தையில்லாத சங்கரனை மைந்தனாகவும் பெற்று ஞானாசிரியனாய் முத்தியளிக்கவும் பெற்றவர் இம் மாதவர்களே யன்றி வேறெவரும் இலர் என்று அவர்களைத் துதித்தனர்" என்று உமையம்மையார்க்கு இறைவன் அருளினான். அப்பொழுது யான் உடனிருந்து கேட்டேன் என்று மாயைக்கு விமலை அல்லமனது இயல்பை விளக்கியுரைத்தாள்.

**என்னைக் காணேன்**

அல்லமன் இயல்பினை விமலை யுரைக்கக்கேட்ட மாயை "அவனை அடைதல் எவ்வாறு? அதனைக் கூறுவாய்" என்றாள். அதற்கு விமலை "சிவபெருமானை வழிபடுவாயாயின் மனத்தில் விரும்பியதைக் குறைவற அருளுவன்" என்றாள். அதற்கு மாயை "யான் முன்னரே மதுகைநாதனை வழிபட்டு வருகின்றேன். அதனால் யாதொரு பயனும் உண்டாகவில்லை" என்றாள். விமலை இவள்

அகநோக்கின்மையால் பரசிவ பூசனையாற் பயனில்லை என்கின்றாள். சிவ நிந்தை பொருந்திய சொல்லைக் கேட்க நேர்ந்ததே! அரகர என்று தன் கையால் காதைப் பொத்திக்கொண்டாள். பின்னர் மாயைக்குச் சிவ வழிபாட்டின் பெருமையையும் அதன் பயனையும் அதனால் உயர்நிலையடைந்தோரையும் உலகிற்பிறந்தோர் சிவபெருமானை வழிபடாததால் உறும் இழிநிலையையும் சிவ வழிபாடு செய்யும் முறையையும் விளக்கியுரைத்தாள். மீண்டும் விமலை "நீ சிவ வழிபாட்டாற் பயனில்லையென்று நிந்தித்தது ஏன்?" என்று வினவினாள். மாயை தான் செய்த வழிபாட்டால் அல்லமன் விழியெதிரே தோன்றிய பயனையுணராதவளாய் மனமுளைந்து, "யான் ஒன்றையும் உணரேன்; எங்குரு உரைத்தவாறு இலிங்க பூசை செய்தேன். அதனால் யாதொரு பயனும் உண்டாகவில்லை" என்றாள். அவ்வுரையைக் கேட்ட விமலை "நீ மன்மதன் மலர்க்கணையால் காமுற்றாய் போலும்! உண்மையைக் கூறுவாய்" என்றாள். மாயை அவளிட்ட ஆணைக்கு அஞ்சி, "சிற்றம்பலத்தில் திருநடனம் புரியும் கூத்தப்பெருமானும் விரும்பத்தக்க மத்தளிகன் ஒருவன் வந்தான். அவன் மிக்க எழிலுடையான். யான அவனைக் கண்டதும் அவன் அழகில் ஈடுபட்டேன். என்னை யான் காணேன். அவன் பெயர் அல்லமன் என்பது. அவனுக்கல்லாமல் என் நெஞ்சம் பிறர்க்கு உருகாது. உன்னைக் காணும் நற்பேறு இருந்ததால் இதுகாறும் உயிர் தரித்திருந்தேன்" என்றாள். இவ்வாறு மனம் உருகிக் கூறிய மொழியைக்கேட்ட விமலை "நீ கூறுகின்ற அல்லமனே யான் கூறும் அல்லமனாவான். அவன் வனத்தில் தவம்புரியும் முனிவர்கட்கு ஞானகுரவனாகப் போதித்து வருகின்றான். உனக்கும் ஞானம் போதிப்பதற்கே மனித வடிவங்கொண்டு வந்தான் போலும்! அவன் ஞான விழியால் காண்பார்க்கு அல்லது தனது உண்மை வடிவைக் காட்டான்" என்றாள். அதற்கு மாயை "நீ கூறும் சச்சிதானந்த சம்புவாகிய அல்லமன் அல்லன்; இவன் மத்தளிகனாகிய அல்லமன். அவனை நடன அரங்கில் காட்டுவேன்" என்றாள்.

**மத்தளத்தை எறிந்துவிட்டோடினன்**

முன்போலவே அன்றும் மதுகைநாதன் கோவிலுக்கு வழிபாடுசெய்ய மகளிர் சூழ்ந்துவர மாயை, விமலையை அழைத்துக்கொண்டு சென்றாள். பூசனை புரிந்தாள்; துதித்தாள்; நிருத்தமண்டபம் புகுந்தாள். அப்பொழுது அல்லமன் "இவன்தான், இவன்தான்" என்று அறியும்படி சொல்லுக என்று அறிவிப்பதுபோல மத்தளத்தைத் தாம் தாமென முழக்கினன். மாயை மனம் ஊசலாட, சிலம்பு அரற்ற ஆடினாள். ஆடும்பொழுது கட்பார்வையை முன்னருள்ள மதுகைநாதன்பால் செலுத்தியும் மனத்தைப் பின்னிருந்து முழக்கும் அல்லமன்பால் வைத்தும் நடித்தாள்; சிந்தை வேறுபட்டாள். மாதர்குழாம் இருத்தலின் அல்லமன் இவன்தான் என்று வாயாற் சொல்ல நாணிக் கடைக்கண்ணால் விமலைக்குக் காட்டினாள். விமலை அவனைக் கண்டு வியப்புற்றாள். நிலவுலகில் இவனைப்போல் அழகுடையானைக் கண்டதில்லை சிவபெருமானே இவள் செய்யும் பூசைக்கு அருள்புரிய வந்தானோ? அன்றி வேறொரு மகனோ? என்று விமலையே தெளியமுடியாதபடி மாயஞ்செய்து நின்றான் அல்லமன். விமலை, தான் கூறிய அல்லமன் இவனே என்பதைத் தன் கடைக்கண்ணால் காட்டினாள். காட்டவும் மாயையின் உள்ளத்திருந்த காமம் மறைந்தது. கைலையில் கூறிய சூள் அவளது நினைவிற்கு வந்தது. சுழன்றாடிப்போய் அல்லமன்மேல் விழுந்து, பற்றியணையச் சென்றாள். அவள் நிலையைக் கண்டவுடனே இவள் கொண்ட காமத்தை உலகறியக் காட்டிச் செல்வேன் என்றெண்ணிக் கைதவறி வீழ்ந்த குடம்போல மத்தளத்தை உடையும்படி கீழே எறிந்துவிட்டு விரைந்து ஓடினன் அவ்வீரன்.

**பின்தொடர்ந்தனர்**

அச் செயலைக்கண்ட மாதர்கள் இவன் பைத்தியங் கொண்டானோ? என்று கன்னத்தில் கைவிரல் வைத்து வியப்புடன் நின்றனர். மாயை கைலையில் செய்த சபதம் தவறிவிட்டதே என்று மனம் நைந்தாள். அதனை யறிந்த

விமலை "தடங்கண்ணாய்! வருந்தற்க, நின் நாயகன் செல்லும் இடத்தைத் தேடிக் காண்போம்" என்றாள். மாயை ஆண்மானைத் தொடர்ந்து செல்லும் பெண்மான் போல் அவன் செல்லும் காட்டில் தொடர்ந்து சென்றாள். மங்கையர் மலரைத் தொடர்ந்து செல்லும் வண்டுகள் போல மாயையைப் பின்பற்றிச் சென்றனர். பஞ்சின்மேல் மிதிப்பினும் பதைபதைக்கும் மெல்லிய பாதங்களையுடைய மாயை பாலை நிலத்திலுள்ள பரற்கற்களை மிதிக்க அஞ்சாமலும் நீரை அருந்த விரும்பாமலும் சூரியன் வெப்பத்தையும் சகித்துக்கொண்டு தன் மனத்தை அல்லமனாகிய யோகிமேல் இருத்திச் சென்றாள். மாயையைப் பின் தொடர்ந்து சென்ற மகளிர் அப் பாலை நிலத்திற் பட்டபாடு சொல்லுந் தரத்ததன்று. அக் காட்டில் தவஞ்செய்யும் முனிவர்கள் மாயையைக் கண்டதும் வேங்கையைக் கண்ட மான் கூட்டம்போல் மனங்கலங்கினர். அவர்களை அல்லமன் ஒரு முனிவன்போல் நின்று "மாயையைக் கணப் பொழுதில் அகற்றுவேன்; அஞ்சாதிர்கள்" என்றருள் புரிந்தான்.

**மறைந்தோன் வெளிப்படல்**

அல்லமன் பழைய மத்தளிகன் வடிவுடன் மாயைமுன் தோன்றி நகைத்து நின்றான். அவனை அணுகினர் மங்கையர்.

**மங்கையர் :** இளங்காளாய்! சேற்றில் அழுந்தி யெழுபவன் பிடித்த கரத்தை விட்டுவிட்டு அகல்பவன்போல் மன்மதன் மலர்க்கணையால் நையும் எங்கள் மெல்லியலைச் சிறிதும் அருளில்லாமல் விட்டு அகன்றாயே! இது தகுமா?

**அல்லமன் :** நீங்கள்தாம் என்னைப் பற்றி விட்டீர்கள். உங்களை யான் இதுவரையில் பற்றி விடுத்திலேன். உலகில் பிறர் குற்றம் கூறுபவர் உளரே யன்றித் தம் பிழை கூறுபவர் இருக்கின்றார்களா?

**மங்கையர் :** எங்கள் தலைவியின் உள்ளத்தில் காமநோய் வளருவதன் முன்னர் நீ அவளை வெறுக்காமல் இருந்து, இப்பொழுது அவளை வெறுக்கின்றாய். 'ஏற விட்டு ஏணியை வாங்கிவிட்டாயே !

**மாயை :** உன் திருமேனிபோல் உன் உள்ளமும் தூய்மை யுடையதாயிருக்குமென்று நம்பினேன். உன் வஞ்சக நடிப்பை அறிந்திலேன்.

**அல்லமன் :** வஞ்ச நாடகம் நடிப்பது உன் (மாயை) செயலேயன்றி என் (அல்லமன்) செயலன்று. உலக இன்பத்தைக் கருதியவளாக நீ வழிபாடு செய்ததால் யானும் காமிபோல் நடித்தேன். தீய மனத்தால் கைலையிற் கூறிய சூளினை நினைந்தாய். ஆதலின் உன்னைத் தீண்டேன். உன் தோழியருடன் செல்வாய்.

**மாயை :** என் சூளினை முடிக்காமல் உமையம்மையாரின் முகத்தில் எவ்வாறு விழிப்பேன் ! (என்று வருந்தி நின்றாள்.)

**அல்லமன் :** அன்பர் அடைதற்கு எளியனாகிய என்னைச் சூள் கூறி வந்து நின் வன்மையாற் பெற விரும்பித் துன்புற்றாய். முன்னர்க் கசக்கும் கடுகை விதைத்து இனிக்கும் கரும்பை விரும்புகின்றவர்போல் நின் செயல் உளது.

**விமலை :** ஐயனே ! இரச குளிகையானது களிம்பு நிறைந்த செம்பின் இயல்பை நோக்காமல் பொன்னாக்கும் தன்மைபோல இவள் குணம் நோக்காது அருள் புரிக.

**அல்லமன் :** விமலையே ! மண்ணாலாகிய ஓடு இரச குளிகையால் பொன்னாகுமாயின் என்னால் இவள் இன்பம் அடைதல் கூடும்.

என்றிவ்வாறு கூறுவதைக் கேட்ட மாயை செம் புண்ணில் செவ்வேல் பட்டாற்போல உளம் வருந்தினாள். "நின் சொல்வன்மையால் எவ்வாறு தள்ளினாலும் நான்

போகேன்; உன்னைத் தழுவிக் கட்டிக்கொண்டு கைலைக்கு ஏகி எனது சூளினை முடிப்பேன்" என்று செருக்குடன் செப்பினாள். அதற்கு அல்லமன் புன்முறுவல்பூத்து "என்னைப் பிடிக்கவல்லையாயின், பிடிநடையாய்! பிடி" என்று அல்லமன் மறைந்தான். மாயை அல்லமனைக் கண்ணாற் பார்ப்பதையும் இழந்து மதிமயங்கி நின்றாள்.

**மாயையின் பிரிவும் பெற்றோர் துயரமும்**

மாயை, அல்லமனைத் தொடர்ந்து காட்டிற்குச் சென்றாள் என்பதைக் கேட்ட பெற்றோர் உள்ளத்தை நாணமும் துன்பமும் தின்றிடப் பித்தர்போல் பின்தொடர்ந்தனர். அந்நகர மக்களும் தொடர்ந்து சென்றனர். அல்லமன் பிரிவால் சோர்ந்து நிற்கும் மாயையைக் கண்டு தந்தை "யான் தவம்புரிந்து உன்னைப் பெற்றதற்கு நல்ல பயனைத் தந்தாய்" என்று கடிந்தான். தாய், "என்னை விடுத்து இழிவான தொழிலைச் செய்யும் மத்தளிகனை விரும்பி உன் உயர்வை இழந்து இக்கொடிய காட்டை யடைந்தாயே!" என்று ஓலமிட்டு அழுதாள். இவ்வாறு அரசனும் அரசியும் அரற்றுவதைக் கேட்ட விமலை, "அவ் வல்லமன் மகனும் அல்லன்; மாயை நும் மகளும் அல்லள்; நீங்கள் அகலுங்கள். தாம் செய்த வினையின் பயனை அனுபவிக்க ஓரிடத்திற் பிறந்த அளவில் எனக்கு இவர் இன்னவர் என்ற அபிமானத்தால் அறிவற்றவர் உளம் வருந்துவர். மக்களாகவும் தாய் தந்தையராகவும் நுங்களை யடையாத உயிரில்லை; ஆதலின், இவர் உறவினர், இவர் அயலார் என்று எண்ணற்க" என்று விமலை கூற, மாயை, "உமையம்மை ஏவ யான் இந் நிலவுலகிற்கு வந்தேன்; என் கருத்தை நிறைவேற்றிலேன்; யான் கைலைக்கு விமலையோடு செல்வேன்; நீவிர் என்னை நினைந்து வருந்தற்க" என்று தாய் தந்தையரிடம் கூறி விமலையுடன் மாயை தன்னைப் பிரிந்தோர் அழுகின்ற குரல் பின் தொடரக் கைலையை நோக்கிச் சென்றாள்.

மாயை இவ்வாறு கூறி நிலவுலகை நீத்துச் செல்வதைக் கண்ட மமகாரன் வாய்விட்டு அரற்றலால் உளம்

னைந்து எழுதிய ஓவியம்போல அசைவற்று நின்றான். மோகினித் தாய் கீழே விழுந்தாள்; அழுதாள்; கையால் நிலத்தை உழுதாள்; பெருமூச்சு விட்டாள்; இறப்பேன் என்றெழுந்தாள்; கையை நெரித்துக்கொண்டு ஏங்கினாள்; மாயையின் தோழியர் கடல்ஒலிபோல் ஓலமிட்டுக் கதறினர். துன்பம் சூழ்ந்த இந்நிலையில் மன்னனுடைய ஞானாசிரியர் அங்கு வந்தார். அவர் "உங்களுடைய மகளின் பெருமையை யான் முன்னர்க் கூறவில்லையோ? நீவிர் துன்பத்தில் மூழ்கி மனம் வருந்துதல் கூடாது. அரிய தவத்தைச் செய்தோரும் அடைதற்கரிய கைலைக்கு நும் மகள் சென்றதை யறிந்தும் வருந்துதல் மிக்க மடமை யாகும். உமையின் கலையாகவுள்ள மாயையை நீங்கள் மகளாகப் பெற்றது உங்கட்குப் பெருஞ் சிறப்பாகும். உங்களை ஒப்பார் இந் நிலவுலகில் எவரும் இலர்" என்று அறிவுரை கூறித் தேற்றினர். துன்பம் நீங்கி மன்னன் மனைவியுடன் மாளிகையை யடைந்தான்.

**மீண்டும் கைலையில்**

விமலையுடன் கைலை சென்ற மாயை, இறைவனையும் இறைவியையும் வணங்கி நின்றாள். சூள் செய்து சென்று உலகில் மயக்குற்று வருந்திய செயல்கள் யாவற்றையும் நாணத்துடன் குறிப்பால் அறிவித்தாள். மலைமகள் நாணி முகங்கவிழ்ந்தாள். சிவபெருமான் அதனைக் கண்டும் உமையின் செருக்கு மாளப் புன்னகை புரிந்தார். பின்னர் உமையை நோக்கி, "அல்லமனுடைய பெருமைகள் யாவற்றையும் உலகோர் யாவரும் அறியச் செய்தாய் என்று சொல்வார்களே யல்லாமல் நின்னை நிந்திப்பவர்கள் இல்லை" என்று கூற, உமையம்மையார் "அறிவில்லாத யான் செய்த தீமையைப் பொறுத்து அருள் புரிந்து, மெய்ப்பொருளை யுணர்த்தவல்ல ஞானாசிரியனாகும் அல்ல மனைக் காணும் நன்னெறியை அருளுக" என்று வேண்டிக் கொண்டார். அதற்குச் சிவபெருமான், "நீ தமோ குணத்தையுடைய மாயையை விடுத்ததால் அல்லமனைக் காண முடியவில்லை. சத்துவகலை மடந்தையை அனுப்பு

வாயானல் காண்பாய்" என்றார். வறுமை துன்புறுத்த அதனால் இறப்பேன் என்று சென்ற இடத்தில் செம்பொற் குடத்தைக் கண்டு களிப்புற்றவன்போல் தன்னைத் துன்புறுத்தும் நாணத்தை விடுத்து மகிழ்வுற்றுச் சிவ பெருமானை வணங்கித் தொழுது, சத்துவகலை மடந்தையை "உலகில் அல்லமனைக் காணச்செல்வாய்" என்று உமை யம்மையார் ஏவினர். அப்பொழுது பக்கத்தில் நின்ற நந்திதேவர் "தாயே! பத்தி என்னும் அஞ்சன மையால் அல்லமனாகிய புதையலைக் காணுதல் எளிது" என்றார். நந்தியின் உரையைக் கேட்ட இறைவன் "அல்லமன் என்னும் யானையை அகப்படுத்த ஏற்ற பார்வைமிருகம் நீயேயாவாய்; ஆதலால், நீ மண்ணுலகிற் சென்று அன்பர்களுக்கு இன்பத்தை யருள்க" என்றார். உலகில் நந்திதேவருடன் பல சிவகணத் தலைவர்களையும் செல்ல அருள்புரிந்தார் சிவபெருமான். அச் சிவகணத் தலைவர் களும் அவரவர் விரும்பிய இடங்களில் மனித வடிவங் கொண்டு தோன்றினர். அவர்கள் சித்தராமர், மடிவால மாச்சிதேவர் முதலிய பெயர்களையுடையவராய் உலகில் செயற்கருஞ் செயல்களைச் செய்து கொண்டிருந்தார்கள்.

### அக்கமாதேவி யுற்பத்தி

மதுவை மழைபோல் சொரிகின்ற மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்துள்ள உடுநடை என்றோர் நகர் உண்டு. அந் நகரில் நின்மலன், சுமதி என்ற இருவரும் தவவாழ்க்கை யிலும் இல்வாழ்க்கை சிறந்தது என்று உலகோர் சொல்லும்படி மனைவாழ்க்கையிலொழுகும் மாண்புடையரா யிருந்தனர். அவர்பால் சத்துவ கலை மடந்தை மகவாகத் தோன்றினள். சந்திரனைப் பெற்ற கடல்போலப் பெற்றோர் பேருவகை யுற்றனர். குழந்தைக்குத் திருநீறு இட்டனர்; அஞ்செழுத்தோதி, இட்ட லிங்கத்தைத் தரித்து, மாதேவி என்று பெயரிட்டனர். அறிவு, அருள், அன்பு, அடக்கம், வாய்மை, மெய்த்துறவு, நல்லொழுக்கம், தூய்மை ஆகிய நல்லியல்புகள் உடன்வளர மாதேவியை வளர்த்தனர்.

## வரலாற்றுச் சுருக்கம்

### வசவண்ணர் தோற்றம்

நான்கு மறைகளையும் உணர்ந்த அந்தணர்களுக்கு உறைவிடமாகவுள்ளது இங்குளாபுரி என்னும் நகரம். அந் நகரிலுள்ள மறையோர்களுக்குத் தலைவனாக வுள்ளவன் மாதரசன் என்பான். அவன் வேதப் பயிற்சியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவன். இல்வாழ்க்கையி லுள்ளவனாயிருப்பினும் துறந்தோர்க்குச் சமமானவன். அவன் மனைவி மாதாம்பிகை என்பாள். அருந்ததி முதலிய மகளிர் தம் கற்புநிலை தவறாதிருக்க நாள்தோறும் அவளை நினைந்து வணங்கிப் பின்னர் பாயலிற் படுப்பரெனின் அவளது கற்பின் திறத்தை என்னென்றுரைப்பது! இத்தகு மாதாம்பிகை வயிற்றில் இவ்வுலகம் செய்த புண்ணியத்தால் நந்தியம்பெருமான் வந்து உதித்தார். அவர் பிறந்த நாளில் கொலை, களவு முதலிய தீமைகள் யாவும் மறைந்தன. சமணர்கள், வைணவர்களுடைய உள்ளத்தில் சங்கரனே இறைவன் என்ற அறிவும் தோன்றிற்று.

நந்தியம்பெருமான் தாய் வயிற்றினின்று தரையில் எழுந்தருள்வதற்கு முன்னமே கூடல சங்கமேசன், தாய் அறியாதபடி குழந்தையின் நெற்றியில் திருநீறு அணிந்து, சிற்கன லிங்கத்தை உடலில் தரித்து, வசவன் என்ற பெயரிட்டுச் சென்றான். பெற்றோர் குழந்தைக்குச் செய்யும் சிறப்புக்கள் யாவற்றையும் செவ்வனம் செய்தனர். குழவிப் பருவங் கடந்ததும் வசவன் ஆசிரியன் முன்னர்ப் பல கலைகளையும் கற்றுணர்ந்தான். வசவன் அரனடியாரிடத்து மிக்க அன்புடையவனா யிருந்தான்.

### வசவண்ணர் அமைச்சராதல்

அந்நாளில் சமணமதத்தைச் சார்ந்த விச்சலமன்னன் கல்யாணபுரியில் இருந்து அரசுபுரிந்தான். அவன்பால் வசவண்ணர் அடியார்களுடன் சென்றார். வசவண்ணரைத் தன் அரண்மனைக்குள் அழைத்துச் சென்றான். அம் மன்னன். சிம்மாசனத்தில் அமரச்செய்தான். அப் பொழுது ஓர் ஓலைச்சுருள் அந்தரத்தினின்றும் அப்பேரவை

யில் விழுந்தது. அதனை ஏவலர் எடுத்துக்கொடுக்க மன்னன் விரித்துப் பார்த்தான். அதன்கண் எழுதியுள்ளதை உணர்ந்திலன். வசவண்ணர் கையில் கொடுத்தான். அதனை யுற்று நோக்கிய அவர் "உனது அரியணையின்கீழ் ஒரு பொற் புதையல் இருப்பதாக இவ் வோலை கூறுகின்றது" என்று ஆங்கு அகழும்படி செய்தார். அகழ்ந்ததும் அவ்விடத்தில் ஒரு பொன்மலை புறப்பட்டதைப் போலப் புதையல் காணப்பட்டது. மன்னன் வசவண்ணரைக் காண நேர்ந்தபொழுதே உண்டான பெரும்பயனைக்கண்டு மனமகிழ்வுற்றான். அவர்க்கு அமைச்சர் பதவியைக் கொடுத்துத் தன்னைக் காக்கும்படி வேண்டிக்கொண்டான். வசவண்ணருக்குச் சிறப்புறத் திருமணமும் செய்வித்தான். அத் திருமணம் நிகழ்ந்த அந் நாளிலிருந்தே விச்சல நகரம் எனப் பெயரிய அந் நகர்க்குக் கல்யாணபுரம் என்னும் பெயர் உண்டாயிற்று எனின் அத் திருமணத்தின் சிறப்பை எங்ஙனம் விரித்துரைத்தல் கூடும்!

வசவண்ணர் கல்யாணபுரத்திலிருந்து சிவனடியார்கள் வேண்டியவற்றை யெல்லாம் கொடுத்துதவி அவர்களைத் தாய்போல் ஓம்பினார். அரனடியார்களைப் புரக்கும் இயல்பால் வசவண்ணருடைய புகழ் எங்கும் பரவிற்று. தவத்தினர் யாவரும் கல்யாணபுரியை யடைந்தனர். அடியார்களைச் சிவமாகப் பாவித்து, அவர்களுடைய திருவடிகளை வணங்கி அன்புடன் உபசரித்தார். இவ் வண்ணம் அடியார் பூசனை செய்துகொண்டிருக்குங் காலத்தில் வானோக்கும் இளம்பயிர்போல அல்லமதேவருடைய வருகையை நோக்கிக் கல்யாணபுரத்தில் இருந்தார் வசவண்ணர்.

**கௌசிக மன்னன் மாதேவியாரைக் காணல்**

நிருமலன், சுமதி யாகிய நற்றவத்தோர் பெற்ற மாதேவி மங்கைப் பருவமடைந்தாள்; அவள் பேரழகினளாயிருந்தாள். யாவரும் அவள் வனப்பிற்கு இணை கண்டி

லோம் என்று வியந்தனர். அவள் உலக இன்பத்தை விரும்பாதவளாய் வீட்டின்பத்தை யடையும் அவாவினளா யிருந்தாள்.

ஒருநாள் அந்நகரத்து அரசனாகிய கௌசிகன் என்பான் யானைமீது இவர்ந்து உலா வந்தான். வருகையில் அவனது அழகைக்கண்ட அரிவையர் காமத்தால் தமக் குரிய நாணும் இழந்தனர்; ஆடையும் இழந்தனர்; வளையல் முதலிய அணிகலங்களையும் இழந்தனர்; ஆனால் உயிர் மட்டும் துறக்காமல் அகத்தே சென்றனர். இவ்வாறு கண்ட மங்கையர் காமமுறத் தெருவில் வருகின்ற அம் மன்னன், மாதேவியைக் கண்டான். கண்டதும் அவளது பேரழகில் ஈடுபட்டான்; ஆவி சோர்ந்தான்; தன்வய மிழந்தான். "இம்மாது என் எதிரே வந்து எனக்கு மயக்கத்தை உண்டாக்கினாள். மனம் தளர்ந்தேன், என்னை அவள் அணையாவிடின் அனலிற்பட்ட பஞ்சு படும் பாட்டினை மன்மதன் மலர்க்கணையால் படுவேன்" என்று வருந்தினான். தீயிலிட்ட வெண்ணெய்போல் மனம் உருகினான். ஆங்கிருந்த ஒருவனை நோக்கி "திருமகள் போல் அவ்வாயிலினின்று சென்ற பெண் யார் என்று அறிவாய்" என ஏவினான். அவன் நிருமலனுடைய மகள் என்று அறிந்துவந்து கூறினான். அதைக் கேட்டவன் அவளை எவ்வழியானும் பெறவேண்டுமென்னுங் குறிப் புடன் அரண்மனையை யடைந்தான்.

அரசன் அறிவுமிக்க அரிவையரை அழைத்தான். நிருமலன் மகளைத் தனக்கு மனைக்கிழத்தியாக்கத் தூது போகும்படி பணித்தான். அவர்கள் நிருமலனிடம் சென்று அரசன் கருத்தை அறிவித்தனர். நிருமலன் உடன்பட் டிலன். அம்மகளிர் வற்புறுத்த, "என் மகள் பேதை யல்லள்; அறிவு நிறைந்தவள்; நுங்கள் கருத்தை அவள்பால் கூறுங்கள். அவள் மனம் இசைவாளாயின் நன்று" என்றான். பின்னர் அம்மங்கையர் மாதேவியை யணுகி, "மன்மதனால் துன்புறும் எங்கள் மன்னனுடைய உயிரை அருள் கூர்ந்து காத்தல் வேண்டும். அவ்வாறு

செய்தால் இவ் வுலகத்து உயிர்க்கெல்லாம் நீ அன்னை யாவாய்" என்று குறிப்பால் கருத்தை யுணர்த்தி வேண்டினர். மாதேவியார் மன்னனை ஒரு காரணமாகக் கொண்டு இல்வாழ்க்கையைத் துறக்க எண்ணி, அரசன் எனக்கு ஒரு சூள் கூறுவானாயின் நீங்கள் கூறியது நன்றே என்றாள். அங்ஙனம் உரைத்த சொல்லால் காதலுற்றாள் என எண்ணிய அம்மங்கையர் அரசனிடம் சென்று மாதேவியின் கருத்தை அறிவித்தனர். அரசன் மகிழ்வுடன் மாதேவி யிருந்த இடத்திற்குச் சென்றான். அவளைத் தன் கருத்திற்கு எளிதில் இணங்குபவளாக எண்ணினான். மாதேவியை யணுகி "அருள்புரிந்து என்னைக் காப்பாற்று வதற்கு யான் செய்யத்தக்கதை உரைப்பாய்; யான் அதனைச் செய்வேன்" என்றான். மாதேவியார் ஒருபக்கம் ஒதுங்கி நின்று "என்னை வலிந்து அணைவதில்லை யென உறுதி கூறுவாய்" என்றாள். உடனே அரசன் "உன் உடன்பாடில்லாமல் நின்னை யான் வலிந்து அணையேன்; நீ கூறியதைச் செய்யாமல் நின்னை விழைவேனாயின் யான் பல கொடிய பாதகச் செயல்களைச் செய்தவனாவேன்; இஃது உண்மை" என்று அவளுக்கு உறுதிமொழி உரைத்தான். மாதேவி அங்ஙனமாயின் போவோம் என்றாள். அரசன் உவகையுடன் அரண்மனையை யடைந்தான். மாதேவி, மங்கையர் சிவிகையிலேற்றி அழைத்துக்கொண்டு செல்லச் சென்றாள்.

### மாதேவியார் துறவு

மாதேவியாரை மாளிகையில் கண்டான் மன்னன். நெருப்பில் இட்ட அரக்குப்போல் உள்ளம் உருகினான். "பூங்கொம்பே! யான் காமக் கடலைக் கடக்க அருள்வாய்" என்றான். காவலனுடைய காமங்கலந்த உரையைக் கேட்ட மாதேவியார் புன்னகை புரிந்து "யான் இடும் கட்டளையை நிறைவேற்றிய பின்னர் என்னுடன் உரையாடுக" என்றாள். "யான் செய்யத்தக்கது யாது? சொல்லுக" என்றான். மாதேவியார் "தூய்மையுடையவனாய்ச் சிவ லிங்கத்தைக் காதலத்தில் வைத்து மலர்கொண்டு அருச்

சித்த பின்னர் என்னைத் தீண்டுவாய்" என்றாள். அணைய ஆசைகொண்ட அவனை அவ்வுரை தடுத்தது. பாலை நிலத்தில் நீரை முகந்து வாய்க்குக் கொண்டு செல்லும் கரத்தை விரைந்து பற்றியதை யொத்திருந்தது. தான் சொன்ன சூளினை நினைந்தான் மன்னன். மாதேவியைத் தீண்டிலன். "உங்கள் முதல்வன் வழிபாட்டினை யாங்கள் எப்பொழுதும் செய்யத்தக்கதன்று" என்றான். அதற்கு மாதேவி "இணையற்ற உனது தோளும் யாங்கள் தொடத் தக்கதன்று" என்றாள். அம் மொழியைக் கேட்டவன் ஒன்றும் உரையாடாமல் வாளா இருந்தான். அவனது காமம் விறகில்லாத தீயைப்போல் அவிந்தது.

மாதேவி மன்னனை விட்டகல எண்ணினாள். ஆபரணங்கள், ஆடைகள் யாவற்றையும் அகற்றினாள். மைக் குழம்பால் மறைவுற்ற அழகிய பொற் பாவையைப்போல் கூந்தலை அவிழ்த்து உடல் மறையவிட்டாள். அரசன் இவள் என்ன பைத்தியங் கொண்டாளோ! என்று மயங்கி நின்றான். அங்கையில் கொண்ட சிவலிங்கத்துடன் கருதிய பொருளை யடைந்தாற்போல மகிழ்வுற்று மன்னனை விட்டு நீங்கி நகர்த் தெருவழியே நடந்தாள்.

இந் நிலையைத் தாய் தந்தையர் கண்டனர்; வருந்தினர். அவர்களை நோக்கி மாதேவி "நீவிர் வருந்தாதீர்கள். என்னை யான் அறியவேண்டி அறிவாசானைத் தேடிச்செல்வேன்" என்றுரைத்து அயலார்போல அவரை நீத்து அகன்றாள். பேறிவுவாய்ந்த அப்பெற்றோர் 'இவள் நினைந்தது நன்று. நமது மரபிற்கெல்லாம் புகழ் இவளால் நிலைத்திடும்' என்றெண்ணித் தங்கள் நற்பெயரை நிலை நாட்டினர். மாதேவியைக் கண்ட நகரமாந்தர் மனம் இரங்கினர். மாதேவி காடுகளைக் கடந்தும், மலைகளில் ஏறியும், நகர்களில் புகுந்தும் அறிவாசானை நாடுபவளானாள்.

**கொக்கிதேவர்**

நிராங்காரன், சுஞ்ஞானி ஆகிய பெற்றோரை விட்டகன்ற அல்லமதேவர் மேகத்தை நோக்கி நிற்கும் மயில்

போலத் தன்னையே கருதிவாழும் அடியார்களுக்கு அருள் புரிய உலகில் உலாவினர். அங்ஙனம் செல்லுங்கால் ஒரு திசையில் அவர் எதிரே ஒரு மலர் வனம் தோன்றிற்று. அவ்வனம் எக்காலத்தும் மலர்கள் மலரப்பெற்று மணம் வீசும் தன்மையுடையது. ஆங்கு மலரிலுள்ள மதுவை அருந்தும் வண்டுகளின் ரீங்காரம் ஓயாது ஒலிக்கும். அந்நந்தவனத்தை வைத்துக் காப்பவர் கொக்கிதேவர் என்பார். அவர் அங்கு நின்றார்.

அல்லமதேவர் இவனுக்கு மெய்ப்பொருளை யுணர்த்துவோமென்று உளத்தில் எண்ணி அவரை யடைந்து "ஐய! சரணம்" என்று வணங்கினர். அவரும் தன்முன் எதிர்ப்பட்ட அமலனைச் சரணம் எனத் தொழுது "நின் செயல் யாது? நின் பெயர் யாது?" என்று வினவினர். அதற்கு அல்லமதேவர் "உத்தம! அன்பர்களுடைய இல்லங்கள்தோறும் சென்று அன்பாகிய பிச்சையை ஏற்பவன்; எச்செயலும் இல்லாதவன்; என் பெயர் அல்லமன் என்பது" என்று கூறினர். அம்மொழியைக் கேட்ட கொக்கிதேவர் "அடைதற்கரிய யாக்கையை அடைந்தால் அதனல் செயற்கரிய பல அறங்களைச் செய்து, துன்பமிக்க பிறவியினின்றும் நீங்க இறைவனோடு ஒன்றுபடக் கருதாமல் உலகில் உழல்பவனுடைய உடலானது பொற்கலத்தில் ஊற்றுதற்குரிய பாலைக் கமரில் ஊற்றியதை யொக்கும். மின்னலைப் போலத் தோன்றி விரைவில் அழியும் உடலால் நற்செயல்களைச் செய்து நிலைத்த புகழுடைமையைப் பெறல்வேண்டும். உடல் வருந்துமென்று கருதி அறச் செயல்களைச் செய்யாமல் வீணே காலத்தைக் கழிப்பவன்போலப் பித்தர் எவரும் இல்லை" என்றார். அதனைக் கேட்ட அல்லமதேவர் கைகொட்டிச் சிரித்து, நல்வினையைச் செய்து அழியாத இன்பத்தை ஒருவன் அடைவானயின் துன்புறுத்துகின்ற மும்மலங்களுள் ஒன்றாகிய ஆணவமலத்தாலும் பேரின்பம் அடைதல் கூடும்! என்று நகையாடினர். மேலும், நல்லறங்களைச் செய்வதால் பேரின்

பத்தை யடைதல் முடியாது. அதனால் சிறிது காலம் அனுபவிக்கும் விண்ணின்பமே உண்டாகும். பொறிவழியே மனத்தைச் செலுத்தினால் உலக இன்பமே தோன்றும். அகத்தே மனத்தைச் செலுத்தினால் சிவந் தோன்றும்; அதனால் பிறவியாகிய துயரக் கடலைக் கடந்து பேரின்பத்தை யடைதல் கூடுமென்று ஞானநெறியை உணர்த்தினர்.

**சிவயோகி - அநுமிடன்**

மீண்டும் அவருக்கு நேரில் காட்டித் தெளிவிக்கத் திருவுளங்கொண்டார் அல்லமதேவர். கொக்கிதேவரை நோக்கி "இங்கே அகழ்வாய்" என்றார். அவ்வாறே தோண்ட ஆங்குச் செய்யுளில் பொதிந்துள்ள பொருள் போல ஒரு பொற்சிகரம் தோன்றிற்று. பின்னரும் அகழ்ந்து பார்க்க அந் நிலத்துள் வழியவன்கண்ட புதையல்போல ஒரு சிவயோகி இலிங்க நிட்டையில் அமர்ந் திருக்கக் கண்டனர். அந்த யோகியின் கரத்தில் சிவ லிங்கம் இருந்தது. அவ் விலிங்கத்தின்மீது தன் கட் பார்வையைச் செலுத்தி உடல் அசையாமல் அவர் இருந்தார். உடலில் எலும்பன்றித் தசை யொன்றும் இல்லை. அல்லம தேவர் "இச் சிவயோகியைக் கண்டாயோ" என்றார்.

அவ்வமயத்தில் காந்தங் கண்ட இரும்புபோல அநுமிடனாகிய அச் சிவயோகி ஏந்தியிருந்த சிவலிங்கம் அல்லமதேவருடைய கரத்தில் வந்துற்றது. அநுமிடனுடைய சீவகலையும் அச் சிவலிங்கத்தோடு வந்தடைந்தது. இதனால் கொக்கி தேவருக்கு குரு-இலிங்க-சங்கமம் ஆகிய முப்பொருளும் ஒன்றே என்பதை விளக்கி யருளினார் அல்லமதேவர்.

கொக்கிதேவர் "தங்கள் பேரருளால் சிவலிங்க நிட்டை புரியும் சிவயோகியைக் கண்டேன்; முன்னர் புரிந்து வந்த செயல்களை விடுத்தேன். ஞானநெறியில் நின்றேன்" என்று தொழுதார். மற்றும் எனக்கு அறிவித்ததுபோல் இட்டலிங்கம் அகத்தும் புறத்தும் பொருந்தியிருக்கும் நிலையை

ஏனைய அடியார்களுக்கும் அருளுதல் வேண்டுமென வேண்டிக்கொண்டார். அப்பொழுது அல்லமதேவர் கொக்கி தேவரைக் கரத்தால் தீண்டித் தழுவி யருள்புரிந்தார். பின்னர் கொக்கிதேவர் சிவயோக நெறியில் நின்றார்.

**முத்தாயி அம்மை**

அல்லமதேவர் அடியார்களுக்கு உண்டான மனத் துயரை ஆடையிழந்தவன் கை உதவுதல்போல விரைந்து அணுகிப் போக்கிவந்தார். அந்நாளில் அசகணன் என்னும் சிவஞானி உடலை வெறுத்துச் சிதாகாச ரூபமானர். அவருடன் பிறந்தாளாகிய முத்தாயியம்மை என்பாள் இறந்து போனன் என்றெண்ணி உளங் கவன்று புலம்பினள். அப்போது அல்லமதேவர் கரத்தில் சிவலிங்கம் திகழ ஆங்குச் சென்றார். அவரை அவ்வம்மை கண்டாள். திருவடியில் வீழ்ந்தாள்; அரற்றினள்; "என் முகம் பார்க்கக் கூடாதென்று என் உயிரனைய அசகணன் சென்றான். என் துயரத்தைப் போக்கி யருளாய்" என்று வணங்கி வேண்டினள்.

அப்பொழுது அல்லமதேவர் "அசகணன் தன்மையை அறியாமல் வருந்துதல் அறிவுடையார்க்கு ஒவ்வாது. அழிவில்லாத அவனை அழிந்தானென்று நீ கண்ணீர் பெருக்கினய். உலகில் அருளுருக் கொண்டுவந்த அறிவாசானுடைய கருணையால் தன் உண்மை நிலையை யுணர்ந்தவர் உடலை உணவு உண்ட பின்னர் எடுத்தெறியும் இலையைப்போல் துறப்பர். அவ்வாறே அசகணன் உடலை நீத்தான். அவன் உண்மை நிலையை யுணராமல் தாயே! நீ அழுதாய்" என்றறிவிக்கத் தன் அவலம் நீங்கினள்.

பின்னர் வணங்கி நின்று தனக்கு அருள் புரியுமாறு வேண்டினள். அவளுக்கு அல்லமதேவர் "புறக்கருமங்கள் பல செய்தாலும் ஆணவ இருள் நீங்கினலன்றி முத்தி யடையார். எங்கும் ஓடுகின்ற மனத்தை அடக்குதலே வீடு; அதனைப் புறத்தே விடுதலே பந்தம்" என்பனவாகிய மெய்ப்பொருளை உணர்த்தி யருளினர். அப்பொழுது

முத்தாயி அம்மை "யான் வீடுபேற்றை விரும்பி உடலை வெறுத்திலேன்; ஞானாசிரியனைத் தேடி யடைந்திலேன்; யான் உய்ய என்னைத் தேடி யடைந்து அருள்புரிந்தாய்" என்று வணங்கினாள். பின்னர் அவள் சிதம்பரத்தை யடைந்து பேரின்ப நிலையிலிருந்தாள்.

**சித்த ராமர்**

முத்தாயி அம்மைக்கு அருள்புரிந்த அல்லமர் சொன்னலாபுரியை அடைந்தார். அங்குச் சித்தராமருடைய பணியாளர் குளம் வெட்டுதல், ஆலயங் கட்டுதல், நந்த வனம் வைத்தலாகிய தொழில்களை அவருடைய கட்டளை யால் செய்து கொண்டிருந்தனர். குளம் வெட்டும் ஒட்டர் களிடம் சென்று "உங்கள் ஒட்டராமனுடைய விருப்பம் யாது? உமியைக் குத்துதல் போலவும் விழலுக்கு நீர் இறைத்தல் போலவும் பயனற்ற இத்தொழிலைச் செய் கின்றான்" என்றார். தம் குருவை ஒட்டராமன் என்று இழிவாக உரைத்த அம்மொழி அவர்களுக்குக் காய்ச்சிய வேல் இரு காதிலும் புகுந்தாற்போன்றிருந்தது. அவர்கள் மிக வெகுண்டனர். மேலும், அல்லமர் "கல்வியில்லாத மூடர்களாகிய நீங்கள் கற்றறி மூடனாகிய அவனுக்குச் சொல்லுங்கள்; அவன் இங்கு வந்தானாயின் அவனது அறிவையும் அவன் சொல்லால் உணர்வோம்" என்றார். ஆதிசேடனும் புகழத்தக்க சித்தராமரை மூடன் என்றுரைத்த அச்சொல் குளந்தோண்டும் தொழிலாளரது சீற்றமாகிய நெருப்பில் நெய்யைச் சொரிந்தது போலிருந் தது. உடனே தங்களுடைய அழுக்கு உடைகளை இறுகக் கட்டினர்; பற்களைக் கடித்தனர்; அதட்டினர்; அதிர்த் தனர்; பெருமூச்சு விட்டனர்; மீசையை முறுக்கினர்; சிரித்தனர்; தங்கள் முரட்டுக் கைகளால் கற்களைப் பொறுக்கினர். அல்லமர் மீது கற்களை மழைபோல் கை சலிப்பச் சொரிந்தனர். அக்கொடியவர்கள் எறிந்த கற்கள் மலைபோல் குவிந்தன. அதன் முடிமேல் அல்லமர் நின்றார். கோபங்கொண்டிலர்; தாமரை மலர்போல் முகம் பொலிவுற நின்றார்.

கல்லெறி படா திருத்தலைக் கண்ட ஒட்டர்கள் இவன் ஒரு மந்திரவாதி. இவனைப் பிடித்துக் கொல்வோம் என்று பக்கத்தில் சென்றனர். சென்றவுடன் அல்லமர் பல வடிவங்களைக் கொண்டார். இன்னான் என்று அறிந்து அவர்கள் பற்ற முடியாமல் மயங்கினர். உடனே உடல் இளைக்கச் சித்தராமரிடம் ஓடினர். யாங்கள் வேலை செய்யும் இடத்தில் ஒரு காரணமும் இன்றி ஒரு புதியன் வந்தான். அவன் தீங்கள் புகழை அறிந்திலன். சொல்லக் கூடாத இழிவான சொற்களைச் சொன்னான். அதைக் கேட்ட யாங்கள் உடல்மீது கொண்ட ஆசையால் இறந்திலோம் என்றனர். அவ்வுரையைக் கேட்ட சித்தராமருக்குக் கோபம் வந்தது. "என்னை இகழ்ந்தவன் யாவன்? அவனுடைய நாவினை அரிந்திடுவேன்" என்றெழுந்து சென்றார். நெருப்புப்போல் சினந்து அமலன் முன் அடைந்தார்.

அல்லமர் அவருடைய கோபத்தை யறிந்து சிரித்துக் கொண்டே சித்தராமர் பொறுமை யடைதற்குரிய நீதி மொழிகளைப் புகன்றார். அம் மொழிகளால் அவரது சினந் தணியவில்லை. மேலும் சினங் கொண்டார். நெருப்புப் போல் கொதித்தெழுந்தார். 'வெறுக்கத்தக்க எச் செயலும் செய்யாத என்னை வைதாய். ஆதலின், நின் பிழையைப் பொறுப்பேனல்லன்; உன்னை என் நெற்றி விழித் தீயால் வறுப்பேன்" என்று நெற்றிக் கண்ணைத் திறந்தார். அந் நுதலினின்றுந் தோன்றிய தீ யோகியாகிய அல்லமரை அழிக்குமோ? விரைந்து வந்து அல்லமருடைய திருவடியில் பணிந்தது. ஒரு வீரன்மேற் பாயத் துணிந்து சென்றவன் அவனுடைய ஆற்றலை அறிந்து ஆற்றல் குன்றிய ஒரு பேடிமேற் பாய்வதுபோல அத் தீ சித்தராமருடைய நகரிற் போய்ப் பற்றியது. ஊர் எரிந்தது. நகரமாந்தர் பெரிதும் அல்லலுற்றனர்.

அணியெ ரிந்தன, மென்றுகி லெரிந்தன, ஆரத்
துணியெ ரிந்தன, கலவைக ளெரிந்தன, சுதையின்
பணியெ ரிந்தன, மனைவள மெரிந்தன, பகரு
மணியெ ரிந்தன, எரிந்தன கண்டவர் வயிறு.

இவ்வாறு அந்நகர மாந்தர் படுந் துயரினைக் கண்ட அல்லமர் அவருடைய துயரத்தைப் போக்கத் திருவுள்ளங் கொண்டு அந் நெருப்பை ஓர் இமைப்பொழுதில் ஒழித்தார். மற்றும் அந்நகரம் முன் இருந்ததைக் காட்டிலும் மூன்று மடங்கு பொலிவு பெறும்படி செய்தார். அந் நகர மக்கள் மகிழ்வுற்றனர். ஒருவன் தான் அறிந்த விதமாகச் செய்த ஒரு பொன்னாபரணத்தை நன்கு அமைக்கத் தெரிந்தவன் அதனை அழித்துத் திருந்த வேலைப்பாடுகளுடன் செய்ததுபோல அச்சோணலாபுரம் அழகுற விளங்கிற்று.

இவ் வியத்தகு செயலைக்கண்ட சித்தராமர் "என்னுடைய நெற்றி விழித்தீ இவனை வணங்குவதால் அருளால் என்னை ஆட்கொள்ள வேண்டிச் சிவபெருமானே இத்திருவுருவுடன் வந்திருக்கின்றார்" என்றெண்ணித் தீயவனாகிய யான் அறிவிலாமற் செய்த பிழையைப் பொறுத்து ஆட்கொள்வாய் பேய் போன்ற ஒருவன் செய்த பிழையை அவனுடைய தாயே யல்லாமல் பொறுப்பார் யாவர்?" என்று விண்ணப்பித்து அல்லமருடைய திருவடிகளை இரு கைகளாற் பற்றிப் பணிந்தார்.

அவ்வாறு பணிந்த சித்தராமரை அருளால் நோக்கி "ஐய! எழுக. அஞ்சற்க" என்று கூறித் திருக்கரத்தால் எடுத்து அணைத்து "கல்வியையும் தவத்தையும் அழிக்கும் கொடிய கோபத்தை விட்டிடுவாய்" என்று கூறிச் சினங்கொள்ளாமையாகிய நன்னெறியை விளக்கினார். அல்லமர் அருளிய மொழிகளைக் கேட்ட சித்தராமர் "எந்தாய்! என் பிழையை நினையாமல் திருவுளம் இரங்கி வீடுபேற்றினை யடையும் ஞானநெறியை அருளுக" என்று வணங்கி வேண்டினார். அப்பொழுது "இவனுக்கு முத்தியடையும் நெறியை அருள்வோம்" என்றெண்ணி, "சிவஞானம் ஒன்றே முத்திக்கு ஏதுவாகும். சரியை - கிரியை - யோகமாகிய மூன்றும் ஞானமடைதற்குத் துணையாகும். செய்யும் நற்செயல்களும் யோகம் புரிதலும் அந்தக்கரணத்தைத் தூய்மைப்படுத்தும். தெளிவுற்ற அந்தக்கரணத்தால் நிமலனாகிய ஈசன் நித்தியன் என்ற அறிவுண்டாம்.

அவ்வறிவு பெற்றவன் ஞானாசிரியனை அடைவான்; அவனருளால் மெய்யறிவினைப் பெறுவான்" என்றிவ்வாறு அவருளங்கொள உணர்த்திச் சொன்னலாபுரத்தில் அல்லமர் இருந்தார்.

**வசவண்ணர் திருமடத்தை யடைதல்**

சொன்னலாபுரத்தில் அல்லமர் இருக்குங் காலத்தில் கல்யாணபுரியில் வாழும் வசவண்ணருடைய புகழ் உலகெங்கும் பரவியிருந்தது. சித்தராமருக்குத் தாம் அருளிய உண்மைப் பொருளாகும் இலக்கணத்திற்கு வசவண்ணராகிய இலக்கியத்தை ஐயமற உணர்தற்கு உதாரணமாகக் காட்ட நம் அல்லமதேவர் எண்ணினர். சித்தராமரை அழைத்துக்கொண்டு கல்யாண புரத்திற்குச் செல்லப் புறப்பட்டார்.

செல்லும் வழியில் மணமிக்க பழங்கள் நிறைந்துள்ள இடத்தை அடைவதற்குச் செல்லும் எறும்புகளின் வரிசையைப் போல அரனடியார் கூட்டம் அந் நகரை நோக்கிச் சென்றது. வசவனுடைய அறச்சாலைக்கு வாசநீர் முதலிய பொருள்களைச் சுமந்து செல்லும் அடியவர் வழியில் மலர் நிறைந்த வனத்தில் இளைப்பாறிச் செல்லுதலைக் கண்டார்கள். மற்றும் பல சிறந்த அடியார்கள் பலவகைப் பட்ட ஊர்திகளில் இவர்ந்து வருவதைக் கண்டு மகிழ்ந்து கல்யாணபுரத்தை யடைந்தார்கள். அப்பொழுது அந் நகரைச் சார்ந்துள்ள பொழில், மருதநிலம் முதலியவற்றின் வளங்களையும் சமணர்கள் உறையும் இடம், அரனடியார்கள் தங்கியுள்ள நிலையங்கள், மாளிகைகள் முதலியவற்றின் சிறப்புக்களையும் சித்தராமருக்குக் காட்டிக்கொண்டு வசவநாயகனுடைய திருமனையின் முன்னருள்ள குன்றுபோல் உயர்ந்த கோபுரவாயிலை அல்லமர் அடைந்தார். சிவபெருமான் கொலைத் தொழிலைக் கருதிக் கையில் எடுக்காத மழுவாயுதத்தையொப்ப என்றும் சாத்தப்படுதலைக் குறித்து அமைக்கப்படாத கதவுகள் பொருந்திய (திறந்தேயுள்ள) வாயிலில் அடியவர் கூட்டம் சென்று அடைதலை இருவரும் கண்டனர்.

அறுசுவை பொருந்திய உணவை உண்ண வருபவர் பலர்; உண்டு தெருவில் வருபவர் பலர்; சான்றோர் வாழும் இடங்களை நாடிப் பல்வகைக் கறிகளோடு சோற்றுக் காவடி கொண்டு செல்பவர் பலர். மணம் பொருந்திய மலர்களைச் சுமந்துகொண்டு வசவண்ண ருடைய பூசைக்குப் போவார் பலர். பாதங்களை வணங்கிக் கொடுக்கும் துகிலைக் கிழித்துக் கோவணம் அணிந்து கொண்டு மீதியாகவுள்ளவற்றைப் போட்டுச் செல்லும் துறவிகள் பலர். மணி, பசும்பொன், நல்ல ஆடைகள், மலர் மாலைகள், மணச்சாந்தம் முதலியவற்றைத் தம் மனைவிமார்க்கு அளிக்கக் கொடுப்பீராக என்று வாங்கிச் செல்வார் பலர். சிவ நிந்தை செய்து தம்முடன் வாது புரிந்த சமணர்களின் வல்லமையை அறியுமாறு வசவ ருக்குச் சொல்வோம் என்று செல்பவர் பலர். வசவரை வணங்கப் பல நகரங்களிலிருந்து வந்து யானை, குதிரை, சிவிகையாகியவற்றினின்றும் இறங்கிச் செல்வார் பலர். வசவருடைய புகழைப் பாடி யாழ்கொண்டு செல்வார் பலர். இவ்வாறாகவுள்ள அரனடியார்கள் செல்லும் வாயிலைப் பார்த்து உவகையுடன் அல்லமரும் சித்தராமரும் நின்றார்கள்.

இவ் விருவர்களது வருகையை அப்பணன் என்னும் அடியார் வசவண்ணரிடம், "ஐய! இரு மாதவர் உமை யொருபாகன் இரண்டு உருவம் பெற்று வந்தாற்போல வாயிலில் வந்துள்ளனர்," என்று அறிவித்தார். வசவண் ணர், "கன்றை நினைந்து மனம் உருகி வந்தடையும் தாய்ப் பசுவிற்குத் தடை யுண்டோ? அழைத்து வருக," என்றார். அப்பணன் அவ் விருவரையும் வணங்கிப், "பரசிவலிங்க பூசை செய்த பயனே நுங்கள் வர"வென்று வசவன் உளமகிழ்ந்தார். "வருக," என்றழைத்தார். அப்பொழுது அல்லமர் கோபிப்பவர்போலப் புன்னகை புரிந்து, "அரசியலில் உள்ளவர்பால் பிச்சையேற்று உண்பவர் வருதல் மேன்மையாகாது; நீ செல்க," என்றார். உடனே. அல்லமர் கூறிய உரையை அப்பணன் சென்று சொல்லவும்

உள்ளம் அச்சுற்று, சொல் குழறி, உடல் வியர்த்து, "தன்னை வந்தடையும் தாய்ப் பசுவின் முன்னர்த் தும்பை அறுத்துக்கொண்டு செல்லும் நல்ல இளங் கன்றுபோல் நான் செல்லாமல் இருந்துவிட்டேன்!" என்று உளம் நைந்தார். உடனே விரைவாக அருந்தவத்தினருடன் அல்லமர் இருக்கும் இடத்திற்கு வந்தார். "அறிவற்ற மகவின் குற்றத்தைப் பொறுத்து அருள்புரியாது விலக்கும் தாய் உலகில் உண்டோ! என் குற்றத்தைப் போக்கி அருள்வாய்" என்று அல்லமருடைய திருவடியில் பணிந்தார். மற்றும் சென்னவசவர், மாச்சிதேவர், கின்னரப் பிரமர், பிற அடியார்கள் யாவரும் பணிந்து குற்றம் பொறுக்க வேண்டினர். அதற்கு அல்லமர் "நீங்கள் நன்கு பேசக் கற்றிருக்கிறீர்கள். கூறிய நெறியில் நிற்கும் நல்லியல்பு உங்கள் பால் இல்லை. இவ்வாறு சொல்வேறு செயல் வேருக இருப்பவர்களில் பல வாத்தியங்களுடன் நடிக்கும் கூத்தரே பெரியோராவர்.

ஆதர வுடையான் செய்யும் அல்லவும் நல்ல வாகும்
ஆதர விலாதான் செய்யும் நல்லவும் அல்ல வாகும்
ஆதர வதனல் ஆவிக் கருந்துணை இன்ப முத்தி
ஆதர வலாது வேறென்(று) அளித்திடக் கண்ட துண்டோ?
(ஆதரவு=அன்பு)

என்பனவாக அடியார் அன்பின் பெருமையை எடுத்து விளக்கியருளினர். அதற்கு அவர்கள் "உன் அருளால் அன்றி வேறு எதனல் யாங்கள் நல்லவராவோம்" என்று தொழுது நின்றார்கள். வசவர், "அண்ணலே! அடைக்கலமாக என்னை ஆட்கொள்வாய்," என்று மீண்டும் பணிந்தார். அப்பொழுது அல்லமர் அருட் பார்வையால் நோக்கி, "ஐய! எழுந்திரு," என்று இரு கரங்களாலும் எடுத்தணைத்து அருள்புரிந்தார். அளவற்ற அடியார்கள் சூழ்ந்துவரத் திருமடத்திற்குள் அல்லமர் எழுந்தருளினர்.

**மருளசங்கரர்**

வசவண்ணர் அழைத்துக்கொண்டு செல்ல அல்லமர் பல வாயில்களையுங் கடந்துசென்றார். பிரசாத குண்டத்தை

யடைந்தார். அதன் கரையில் மருளசங்கரர் என்னும் சிவஞானி பித்தர்போல் இருக்கக் கண்டார். அப் பரம் யோகியின் தன்மையை அறிந்தார் அல்லமர். மருள சங்கரர், தன் முன்னர்க் கண்ட அமுதத்தை வறியவன் வாரியுண்டாற்போல மகிழ்வுடன் விரைந்தோடி அல்ல மரைப் பணிந்தார். அவர் அருள்புரிந்து அணைத்துக் கொண்டார். சித்தராமரைப் பார்த்து மருளசங்கருடைய குணங்களை வியந்து கூறத் தொடங்கினர். "இப்பிரசாத குண்டத்தை யடைந்து அடியவர் உண்டு எஞ்சியதை உண்டு வாழ்கின்ற இம் மாதவனுடைய தன்மையை வசவண்ணர் முதலிய சரணர்களே அறிந்திலர்; இனி அறிய வல்லார் யாவர்? எச் செயலும் புரியாது வாழும் அரிய ஞானியை அறியக்கூடுமோ?

வல்லனென் றிருப்பினும் இருக்கும், வன்மையொன்(று)
இல்லனென் றிருப்பினும் இருக்கும், எள்ளுறப்
புல்லனென் றிருப்பினும் இருக்கும், புண்ணிய
நல்லனென் றிருப்பினும் இருக்கும் ஞானியே.

என்று பலவாருகச் சிவஞானியின் இயல்பை எடுத் துரைத்தார்.

சித்தராமர் வணங்கி, "இவர் பித்தர்போல் இவ்வாறு இருந்தது என்?" என்று வினவினர். அதற்குக் "குணத்திற் சிறந்த இவர் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்து அதனல் உண்டு வாழ்வோமெனில் பிறவுயிர் களுக்குத் துன்பம் உண்டாகும் என்று கருதிச் சரமூர்த்தி கள் உண்டு எஞ்சியதை (பிரசாதத்தை) உண்போமாயின் அதனற் பழி சிறிதும் உண்டாகாது; பிறப்பும் நீங்கும் என்று இவ்விடத்தைவிட்டு அகலாமலிருக்கின்றார். இத்தகு பெருமை இம் மருளசங்கரர்க்கேயன்றிப் பசியைப் போக்கக் கருதி உண்ணும் மனிதர்க்கு எக்காலத்தும் பொருந்தாது" என்றார் அல்லமர். அதைக்கேட்ட சித்த ராமர் "பாம்பே பாம்பின்கால் அறியும்; தங்கள் பெருமையை அறிபவர் மருளசங்கரரே, அவரை யறிபவர் தாங்களே, பிறர் எவர் அறிவார்!" என்று வணங்கினர். வசவர்,

"பொற்புதையலின் மீதிருந்தும் அதனை அறியாமல் வறுமையால் துன்பப் படுபவரைப்போல மருள சங்கரரின் பெருமையை அறியாமல் இருந்தேன்! தாங்கள் அவர் பெருமையை எனக்குக் காட்டினீர்கள்" என்றார். அப்பொழுது அல்லமர் "காமமுடையார்க்கு ஊடுதலால் இன்பம் உண்டாகும்; அடியார்கள் பிணங்குதல் முத்தியை விரும்பினவர்க்குப் பேரின்பந் தரும் என்பதை அறிவிக்கவே உன்னை முன்னர்க் கோபித்தோம். உனக்கு ஒப்பாக இந்நிலவுலகில் உளரோ! நீயே பரசிவ பத்திக்கு இருப்பிடமாவாய். உன் பெருமையைக் கூறத்தக்கார் எவர்!" என்று வசவண்ணரைப் புகழ்ந்துரைத்தார். அப்புகழ்ச்சியுரையைக்கேட்ட வசவர் "தாங்கள் புகழ்ந்துரைத்தனவெல்லாம் சென்ற காலத்தில் என்பால் இல்லை. தங்கள் திருவடியைத் தொழப்பெற்ற இன்று தொடங்கி அவையுளவாகும்" என்று பணிமொழி பகர்ந்தார். அடியார்கள் யாவரும் அகமகிழ்வு கொண்டனர்.

பின்னர் வசவண்ணர் அம் மாளிகையின் நடுவே ஓர் ஆசனம் அமைத்தார். கண்டோர் கண்கள் களிப்புற அதன்கண் அல்லமர் அமர்ந்திருந்தார். அவருடைய திருவடியை மலர்தூவி வணங்கித் "தாங்கள் இவண் வந்தருளியது எனது மாதவத்தின் பயனாகும்" என்று பணிந்து எழுந்த வசவர், "யான் சிவபத்தி நெறியை அறிந்தது ஊமன் கண்ட கனாப்போல் இருக்கின்றது, அச் செந்நெறியை நன்கனம் விளக்கி அருள்புரிக" என்று வேண்டிக்கொண்டார். அப்பொழுது வசவண்ணரும் ஆங்குள்ள சிவனடியார்களும் அறிந்துகொள்ளும் வண்ணம் இட்டலிங்கத்தின் இயல்பையும் அடியார்களின் தன்மையையும் பெருமையையும் விளக்கியருளினார். இவ்வாறு சிவநெறியை யாவரும் நன்குணர உணர்த்திக் கல்யாணபுரியில் தங்கியிருந்தார் அல்லமர்.

**அக்கமாதேவியார்க்கு அருள்புரிதல்**

வனத்திலும் பெரிய மலைகளிலும் அறிவாசானைத் தேடிக் காணாதவராய் அலைந்த மாதேவியார் அல்லம

தேவர் இருப்பதை அறிஞராற் சொல்லக்கேட்டுக் கல்யாண, புரத்தை யடைந்தார். வசவண்ணர் திருமடத்துள் சென்றார். வசவண்ணருடன் பலரும் சூழ்ந்திருக்க ஆதனத் தில் அல்லமர் வீற்றிருத்தலைக் கண்டு மாதேவியார் வணங் கினார். யாவரும் வெற்றரையாக வந்துள்ள மாதேவி யாரைக் கண்டு என்றும் அடையாத பெருவியப்புற்றனர். காம நோயினை யறியாத மாதேவியார் தீயிற்பட்ட அரக்கைப் போல மனம் நெக்கு நெக்குருக, வாயில் சொற் கள் தடுமாற்றமடைய, கண்களில் நீர்பெருக, மலர்க் கரங் களால் தொழுது, "பிறவிப் பிணிக்கு அஞ்சினேன்; அதனைப்போக்கியருள்க," என்று அழுதார். அம்மையார் அடைந்துள்ள சத்திநிபாத நிலையை யறிந்த அல்லமர், "வீடுபேற்றினை விரும்புபவர் ஆண் என்றோ பெண் என்றோ இல்லை. இவர் உமையின் சத்துவகலை மடந்தையே யாவார். ஞானம் அடைதற்குரியவர் இவர்போல் பிறர் இல்லை" யென்று மனத்துட் கொண்டார். "ஆங்காங்கே யாம் சென்று தேடி மெய்ப் பொருளை யறிவிக்கத்தக்க மாணவ ரைக் கண்டேனே யன்றி, ஞானாசிரியன் உளனோ என்று தேடி இன்று அடைந்த மாதேவியாரைப் போல் கண்ட தில்லை" என்று யாவரும் அறிய உரைத்து, மாதேவியார்க்கு ஞானம் அடைதற்குரிய நன்னெறியை உணர்த்தத் திருவுளங்கொண்டார்.

அம்மையார்க்குத் தன்னை யறியும் நிலையையும் இறைவனோடு இரண்டறக்கலக்கும் ஐக்கிய முத்தி நிலையையும் உணர்த்தினார். பின்னர் அம்மையாரை நோக்கி, "அன்னையே! இனிக் கதலி வனத்தையடைந்து நிட்டை கூடுவாய்," என்று கட்டளையிட்டார். மாதேவியார் அல்லம தேவரையும் அங்கிருந்த மாதவர்களையும் வணங்கி விடை பெற்றுக்கொண்டு பருப்பதத்தை (ஸ்ரீசைலம்) யடைந்தார். ஆங்குள்ள கதலி வனத்தை அம்மையார் அடைந்து முனிவர்கள் போற்றத் தனித்திருந்து ஒருபால் பசுமை நிறம்பொருந்திய செங்கனியை (உமையொருபாகனை) விரும்பிய உள்ளத்துடன் நிட்டை கூடியிருந்தார்.

வசவண்ணர் திருமடத்திலிருந்த அல்லமர் வசவண்ணர்க்கு மனத்தின் இயல்பையும் மன அடக்கம் பெறுதற்குரிய வழிகளையும் அதனை அடக்குபவன் பிறவிக் கடலை நீந்திச் சிவமயமாவான் என்பதையும் விளக்கியருளினர். பின்னர் ஞானக் கடலாகிய அல்லமர் நடந்து உலகிலுள்ள ஏனைய தவத்தினர்க்கும் இன்பம் நல்க உளத்து எண்ணினர். "யான் கூறிய நெறியில் நில்லுங்கள்; பின்னர் இங்கு வருவேன்" என்று கூறி மின்னலைப் போல் அவ்விடத்தை விட்டு மறைந்தார்.

**கோரக்கர்**

அல்லமரது பிரிவால் வசவர் முதலிய பத்தர்கள் மனம் வருந்தி நின்றனர். அல்லமர் ஓர் அழகிய திருவுருவங் கொண்டு பருப்பதத்தை யடைந்தார். அம் மலையின் மேன்மையை விண்ணவரும் முனிவர்களும் கூறமுடியாமல் மயங்குவரெனின் பிறர் எவ்வாறு கூறுதல் கூடும்! அத்தகு வளமிக்க திருச்சயிலத்தையடைந்து காயசித்தி பெற்றுள்ள கோரக்கன் வாழும் இடத்தை யடைந்தார்.

கோரக்கன் அல்லமரைத் தன்னைப்போன்ற ஒரு சித்தனைக் கருதிப் பாதத்தில் பணியாமல் கைகூப்பி வணங்கி "ஞானசித்த! வருக" என்றழைத்து ஓர் ஆதனத்தில் அமரச் செய்தான். பின்னர் "பெருந்தகையே! நீ யார்?" என்று வினவினன். அதற்கு "ஆணவ மலத்தினின்றும் நீங்கித் தன்னைக் கண்டவன் என்னையும் அறிவான். இறந்துபோம் உடலில் பற்றுக்கொண்டுள்ளவரை மதித்துச் சொல்லத்தக்கது யாதுளது!" என்றார் அல்லமர். அதற்கு ஐம்பூதச் சேர்க்கையாலாகிய உடம்பையே தான் என்று கருதிய கோரக்கன் "குருவின் அருளால் இரசமணி முதலியவற்றால் காயசித்தி பெற்றவன் எக்காலத்தும் அழியான்; அவ்வாறு பெறாதவன் அழிவான்" என்றான். அல்லமர் "காயசித்தி யாக்கவல்ல மருந்தால் உடல் என்றும் நிலைத்திருக்கும் என்று நீ கூறினாய். அதனால் வாழும் நாள் அதிகமாவதே யன்றி வேறில்லை. உடல் எக்காலத்

தும் அழியாதென்பது பொருந்தாது. இனி நீ அழியாத வீட்டினை விரும்புவாய்" என்றார் அல்லமர். அதற்குக் கோரக்கன் "என்ன கூறினாலும் என் உடல் அழிவுறாது. உன்னுடன் தருக்கம்புரிவது ஏன்? நேராகக் காட்டுவேன். எங்கள் ஆதிநாதனுடைய அருளால் என் வலிமையைக் காட்டுவேன்" என்று கருணையங்கடலாகிய அல்லமருடைய கையில் இந்திரனுடைய வச்சிராயுதம் போன்ற கூர்மையான ஒரு வாளினைக் கொடுத்தான். "என்னை உன் தோள் வன்மையால் வெட்டுவாய். என் உடலிலுள்ள தோல் ஈச்சிறகு அளவு அற்றாலும் யான் சித்தனல்லேன்" என்று முன் நின்றான். அல்லமர் அவனுடைய செருக்கை ஒழிக்க உள்ளத்தில் எண்ணி அவ்வாளை வாங்கி மலைமேல் எறிந்தாற்போல அவன் உடம்பில் தாக்கக் கிண் என்ற ஓசை ஆகாயத்தில் ஒலித்தது. அத் திருப்பருப்பதமே நடுங்கியது. ஆனால் அவனது உடலில் எவ்வித ஊறும் உண்டாகவில்லை. முன்னர் அவன் அடைந்திருந்த செருக்கிலும் மும்மடங்கு உடையவனாய் 'என்னை ஒப்பவர்' இல்லையென்று வியந்திருந்தான்.

அவ்வாறு இருத்தலைக் கண்ட அல்லமர் உன்னை ஒப்பவர் இல்லையென்று கைகொட்டிப் புன்னகை புரிந்து தன் கையிலிருந்த வாளினை அவன் கையில் கொடுத்து "இவ்வாளினால் உன்வலிமையுடன் மற்றச் சித்தர்களுடைய வலிமையையுங் கொண்டு நீ என்மீது எறிவாய்" என்று கூறி நின்றார் அல்லமர். அவனும் அவ்வாள் கொண்டு வீசினான். அவ் வாளின் வீச்சு அல்லமருடைய உடலில் தாக்கப்படாமல் வாளா சென்றது. வெறு வெளியில் வாளை ஓச்சிச் சலித்த கோரக்கன் மிகவும் வியப்புற்றான். இவன் யான் வணங்கும் இறைவனே என்று உடல் நடுக்குற்றுத் தன் செருக்கழிந்து திருவடியில் பணிந்தான். தான் செய்த பிழையைப் பொறுத்துக்கொள்ள வேண்டினான். "செய்த பிழை போகட்டும்; இனிப் பிழை செய்யாமல் உடம்பிலுள்ள பற்றினை நீக்கி உனது உண்மை நிலையை யறிவாயாயின் எனக்கு நீ நல்லன் ஆவாய்"

என்று கருணையங் கடலனைய அல்லமர் அறிவித்தார். மற்றும் "நீ குகேசனை யறிவாயாயின் உனது பிறவி நோய் நீங்கிப் பேரின்பம் அடைவாய்" என்றார். "அவ்வாறாயின் குகேசன் என்னும் மொழியின் பொருள் யாது?" என்று வினவினன். "குகை என்பது இதயத்தைக் குறிக்கும். அதன்கண் இருக்கும் இறையே ஈசன்; அம் மொழிக்குப் பொருளாகவுள்ளவன் யானே" என்றார். சித்தன் "குகேசன் நீயேயானால் கரத்தில் சிவலிங்கங் கொண்டுள்ளது ஏன்?" என வினவினன். "உலகினர்க்குப் பிறந்த பயனை யடையும் நெறியை அறிவிக்கவேண்டி எனது வடிவமாகவுள்ள சிவலிங்கத்தைக் கையில் நீங்காமல் கொண்டேன். அன்றியும் மறைகள் அறிவாசான் உடம்போடு உள்ள வரையில் நற்கருமங்களை விடாது செய்தல் வேண்டுமென்று கூறும்; ஆதலின் யாவரும் உணரும்படி இவ்வாறுள்ளேன்" என்று தனது இயல்பினை யுணர்த்தினார்.

அறிவாசான் அருளிய செந்நெறியைக் கேட்ட கோரக்கன் உடலையே ஆன்மாவின் வடிவம் என்றெண்ணியிருந்ததை விடுத்து உண்மை நிலையை யுணர்ந்து சோகம் பாவனை புரிந்து இருந்தான். பின்னர் அல்லமர் திருப்பருப்பதத்திற்கு அப்பால் வடதிசைக்கண் உள்ளவர்க்கு அருள்புரியச் சென்றார்.

### முனிவர்களுக்கு அருள்புரிதல்

செல்லும் வழியில் ஒரு கொடிய காட்டில் ஒரு வேடனைக் கண்டார். கொலைபுரிதலையே தன் தொழிலாகக் கொண்ட அவன்பால் இரக்கங்கொண்டு, அவன் உள்ளம் ஏற்றுக்கொள்ளுமாறு நன்னெறிகளை யுணர்த்தி அவனை யுய்வித்தார். அப்பால் ஒரு வனம் தோன்றிற்று. ஆங்கு முனிவர்கள் இருந்தனர். அவர்கள் மறையோதுதல், வேள்வி யியற்றுதல், நூல்கள் கூறிய நெறியில் கடவுட் பூசனை புரிதல், மூச்சை யடக்கி யோகஞ் செய்தல் ஆகிய செயல்களை யுடையரா யிருந்தனர். அவர்களைக் கண்டு "மலைபோல் குவித்த தருப்பைப் புற்களைச் சுட்டு எரிப்ப

தால் பிறவி சுடப்படாது. புலன்களை அறிவாகிய நெருப்பால் சுடுவதால்தான் பிறவி சுடப்படும். சங்குமணியை வறியவர் வாங்கி அணிவதுபோல மறையிற் சொல்லப்பட்ட கிரியைகளை அறிவிற் சிறியவரே செய்வர்; விலையுயர்ந்த இரத்தினுபரணங்களைச் செல்வர்கள் பெற்று அணிவது போலத் தத்துவமசிப் பொருளை அறிஞர்கள் கொள்வர்" என்று உணர்த்தினர்.

அம் முனிவர்கள் அன்புடன் அல்லமருடைய திருவடியில் வணங்கித் "தாங்கள் இங்கு வர யாங்கள் என்ன தவம் செய்தோமோ!" என்று வாழ்த்தி வணங்கினர்கள். மாயை தோன்றிய காலத்தில் நம் உள்ளத்தை மறைத்த மோகம் நீங்கத் துருவாசரால் சொல்லப்பட்ட ஞான குரவனே இவன் என்று யாவரும் துதித்தனர்.

**சூனிய சிங்காதன பீடம் அமைத்தல்**

கல்யாணபுரியில் அல்லமர் அருளிய செந்நெறியில் ஒழுகிவரும் வசவண்ணர் அறிவாசான் வருகையை நாடினர். 'அவர் எவ் வுருவுடன் வருவாரோ? அறியேன்; ஒரு செம்மையான ஆதனத்தை அமைப்போம்; அதன்மேல் வந்து வீற்றிருப்பவரையே அல்லமர் என்றறிவோம்' என்று உளத்துட் கொண்டார். ஏழு நிலைகளையுடைய ஒரு சூனிய சிங்காதன பீடத்தைப் பொன்னாலும் மணிகளாலும் பளிங்குக் கற்களாலும் செய்வித்தார். அதனைக் கண்டோர் 'இதற்குப் பூசலார் நாயனர் இறைவனுக்கு மனத்துள் அமைத்த ஆலயத்தையே யன்றிப் பிறவொன்றை ஒப்பாகக் கூறமுடியாது என்று வியந்தனர். இப் பீடத்தின்மீது ஏறி அமர்வதற்குரியவர் என் மனத்துள் இருப்பதற்கேற்ற அல்லமரே' என்றெண்ணி வசவண்ணர் அவர் வருகையை நோக்கி யிருந்தார்.

**சூனிய சிங்காதனத்தில் அல்லமர் வீற்றிருந்தருளல்**

வசவண்ணர், 'பொன்னொளி வீசுகின்ற இப் பீடத்தை யான் செய்வித்து இருபத்து நான்கு மாதங்களாகின்றன, யான் செய்த இச்செயல் குழந்தைகள் செய்யும் செயல்

போல் ஆகிவிட்டது! என்னை ஆட்கொள்ளும் அல்லமர் எந்நாள் வருவாரோ?' என்று உளம் வருந்தினார். அச்சமயத்தில் வசவருடைய உள்ளத்தில் அல்லமதேவர் வருவதாக ஓர் எண்ணம் உண்டாயிற்று. மற்றும், அவருடைய வலக்கண்ணும் வலத்தோளும் துடித்தன. அவற்றை அல்லமர் வருவதற்குரிய நற்குறிகளாகக் கருதினார். உடனே ஏவலாளர்களை அழைத்து, "அல்லமர் இன்று வருவார், கல்யாணபுரத்தை அலங்கரியுங்கள்" என்று கட்டளையிட்டார்.

அவ்வாறே வேலைக்காரர்கள் மாளிகையின்மேல் வானிற்பறக்கின்ற கிளிகளின் வரிசையைப் போலப் பச்சிலைத் தோரணங்களைக் கட்டினார்கள். கொடிகளை உயர்த்தினர். நிலைத்தேர் நிறுத்தினர். மணம் பொருந்திய பன்னீர் சந்தனம் முதலிய மணப் பொருள்களைத் தெருக்களில் தெளித்தனர். மணமாலைகளைத் தொங்கவிட்டனர். வாழை, கரும்பு, கமுகம்பாளை முதலியவற்றை மாளிகை வாயிலில் கட்டினர். மங்கையர் நிறைகுடங்கள் வைத்தனர். திருவிளக்கு ஏற்றிவைத்தனர். நகரெங்கும் மிக அலங்காரமாக இருந்தது.

இவ்வாறு அலங்கரிக்கப்பட்டுள்ள தெருவின் வழியே விச்சல மன்னனுக்கு அமைச்சராகவுள்ள வசவண்ணர் அறிவாசானை எதிர்கொண்டழைக்கச் சென்றார். அவருடன் சென்னவசவர், மடிவாலமாச்சையர், கின்னரப் பிரமர் முதலியவர்களும் மற்றும் சிவசரணர்களும் சென்றனர். நாற்படைகளும் அமைச்சராகிய வசவண்ணரைச் சூழ்ந்து சென்றன. இவ்வாறு செல்லுதலைக் கண்ட சமணர்கள், புத்தர்கள் விச்சல மன்னனை யடைந்து "மன்னனே! ஓர் அதிசயம் கேள். வசவன் நன்னிமித்தம் நிகழ்ந்ததைக் கொண்டு தன்பால் ஒருவன் வருவான் என்று கடல் போன்ற படைகளுடன் எதிர்கொண்டழைக்கச் செல்கின்றான். இச்செயல் கனவிற்கண்ட உணவினை உண்டு போமாறு விருந்தினரை யழைப்பதை யொத்துளது! இவனை ஒப்பற்ற மந்திரியாக்கிய உன்னைப்போல் உலகில்

எவருமிலர்" என்றனர். அவ்வுரையைக் கேட்ட மன்னன் "அடிகளே! அறிவுமிக்க வசவண்ணர் எப் பயனைக் கருதி இவ்வாறு செய்கின்றாரோ? முற்றிலும் காண்போம்; நீங்கள் இருங்கள்" என்றான்.

வசவண்ணரை இகழ்ந்துரைக்கும் சமணர்களுடைய செருக்கை ஒழிக்கக் கருதினர் அல்லமர். தான் எக்கோலத்துடன் சென்றாலும் வசவர் தன்னை அறிதல் கூடுமென்ற கருத்தால் கோவணத்துடனும் விரித்த குஞ்சியுடனும் பிறர் பித்தன் என்றெண்ணும்படி வந்தார். ஆங்கு நின்றவர் பித்தன் என்று இவ்விடத்தை விட்டு அகல், அகல் என்று அகற்றினர். உருவு கண்டு இகழும் அவர் அல்லமரை அறியவல்லரோ? அல்லமர் அவ்விடத்துத் திருவிளையாடல் புரிய எண்ணினர். பல் முளைத்தெழும் பாலனைப்போல் ஆனார். கொல்லேறு போன்ற குமரன் வடிவங் கொண்டார். வில் போல் உடல் வளைந்த விருத்தரானார். கையில் வீணைகொண்டு பாடுவார். நடனமாடுவார். யானைமேல் ஏறுவார். குதிரைகளைச் செலுத்துவார். இவ்வாறு பல இடங்களிலும் காணப்பட்டார்.

ஆடுநர் தம்முடன் ஆடும்; நல்லிசை
பாடுநர் தம்முடன் பாடும்; மென்மலர்
சூடுநர் தம்முடன் சூடும்; வாள்விதிர்த்(து)
ஓடுநர் தம்முடன் ஓடும் அல்லமன்.

என இவ்வாறு பலவிதத் திருவிளையாடல்களைப் புரிந்தார். கண்டோர் யாவரும் இவ்வாறு செய்பவன் ஒருவனோ பலரோ அறியேம் என்று பெரு வியப்பும் அச்சமும் கொண்டனர்.

மண்ணில் மறைந்துள்ள புதையலைக் கண்ணில் அஞ்சன மை யிட்டுள்ளவன் காணுதல் போல மெய்யறிவினையுடைய வசவர் அல்லமரைக் கண்டார். உடம்பெல்லாம் உள்ளமா யுருகக் கண்ணீர் உகுத்தார். மெய் நடுக்குற்றார். "அன்பால் எல்லா வுயிர்களையும் ஆட்கொள்ளும் பெருந்தகையே! அருள்புரிவாய்" என்று பணிந்தார்.

பின்னர் அடியவர் யாவருங் கண்டு தொழுதனர்; பேருவகையுற்றனர். அவ்வடியவர் கூட்டத்துடன் அல்லமர் தெருவழியே சென்று வசவண்ணருடைய மாளிகையை யடைந்தார். வசவண்ணர் அமைத்துள்ள சூனியசிங்காதனத்தைப் பார்த்தார். அறிவுருவாகவுள்ள அவர் வசவருடைய புகழ் உலகில் ஏற அப் பீடத்தின்மேல் ஏறி அமர்ந்தார். அக்காட்சி, வேறு ஓர் இரத்தின மயமான மலையில் • சூரியன் ஏறியமர்ந்ததுபோல் இருந்தது. பல வாத்தியங்கள் முழங்கின. அடியவர் கூட்டம் கைகுவித்து அரகர என்று ஒலிக்கும் ஒலி ஆகாயமளவும் சென்றது. ஆறு ஆதாரங்களையுங் கடந்து நெற்றியில் விளங்கும் நிட்கள சிவத்தைப்போல சூனியபீடத்தின் ஆறு நிலைகளையுங் கடந்து ஏழாம் நிலையாகவுள்ள அப்பீடத்தில் அல்லமர் அமர்ந்தருளினர்.

**அடியவர் சீற்றம்**

அவ்வாறு அல்லமர் சூனிய பீடத்தில் அமர்ந்துள்ள காலத்தில் வசவண்ணர் அவர்பால் ஐம்புலன்களையும் செலுத்தி வேறு எச்செயலையும் செய்யாமல் எழுதிய ஓவியம்போல் அசைவற்றிருந்தார். சென்னவசவர் முதலிய பெரியோர்களும் அவ்வாறே அப் பீடத்தைச் சூழ்ந்திருந்தனர். வசவண்ணரது திருமடத்திற்கு வந்த சிவசரணர்கள் அவர் நினைவெலாம் அல்லமர்பால் செலுத்தித் தங்களை நோக்காமல் இருத்தலைக் கண்டனர். அவர்கள் சிவனடியார்களில் பெரியவர் என்றும் சிறியவர் என்றும் கருதுபவன் சிறியனேயாவன். வந்தவர், வருகின்றவர், வருபவர்களாகிய அளவற்ற அடியார்களுக்குச் செய்யும் பணிவிடையை இவர் மறந்தார். அடியார் வழிபாட்டினின்றுந் தவறிய இவனிடமிருந்து உண்டு உடலோம்புவதைக் காட்டிலும் நீங்குவதே நன்று என்று யாவரும் அகன்றனர். அத் திருமடம் மணம்செய்து முடித்த மறுநாள் காணப்படும் மனையைப்போலப் பொலிவற்றிருந்தது.

அவ்வாறு இருத்தலை வசவண்ணர் கண்டார். 'யான் அடியார்க்குச் செய்யும் அன்பினின்றுந் தவறினேன்.

அவர்களுக்காக அட்ட அடிசில் யாவும் அருந்தப்படாமல் வீணாகிவிடுமே, என் செய்வேன்!' என்று வருந்தினர், அதனை அறிந்த அல்லமர் வசவரது எண்ணத்தை நிறைவேற்ற அவ்வுணவுகள் யாவற்றையும் உண்டு, அடியார் பசி முழுவதையும் அகற்றத் திருவுளங் கொண்டார். வசவண்ணரிடம், "ஒருவன் யான்; கொஞ்சம் பசியுடையேன்; சிறிது உணவு விரைவாக இடுங்கள். பின்னர் நீங்கள் அளவற்ற அடியார்க்கு அளியுங்கள்," என்று கேட்டார்.

### ஊண் விளையாடல்

உடனே வசவண்ணர் அல்லமரை மனையினுள் அழைத்துச் சென்று ஆசனத்தில் அமரச் செய்தார். இரு பாதங்களையும் மலரிட்டுப் போற்றினர். உணவினைப் பரிமாறச் செய்தார். "உணவு உண்க," என்று திருவடியில் தொழுதார். உடனே அல்லமர் ஓர் அவிழும் இல்லாதபடி ஓர் இமைப்பொழுதில் உண்டார். அவ்வாறே பின்னரும் இட, இட உண்டார். அவ்வாறு உண்ணுதலைக் கண்ட வசவர் வியப்புற்றார். உடனே ஏவலரை அழைத்துச் செய்த உணவுகள் யாவற்றையும் இடுமாறு கட்டளையிட்டார். அவர்கள் அளவற்ற அடியார்களுக்கு ஆக்கிய சோற்றைக் கூடைகள் ஒன்றோடொன்று மோதும்படி கொண்டுவந்து கயிலை மலைபோல் குவித்தனர். பருப்பை மலைபோல் இட்டனர். நெய்யைக் கவிழ்த்தனர். கறியமுதுகளையும் பழங்களையும் வடை முதலிய உணவு வகைகளையும் கொண்டுவந்து குவித்தனர். அவற்றையெல்லாம் இமைப் பொழுதில் உண்டு இருந்தார். திருமடத்தில் சமைத்த உணவுகள் யாவற்றையும் இட்டுவிட்டனர். இவ்வாறு ஊண் விளையாடல் புரிவதைக் கண்டவர் தத்தம் இல்லங்களிலுள்ள உணவுகளைச் சுமந்து வந்து படைத்தனர். அவற்றையும் கணப்பொழுதில் உண்டு "எனது வயிற்றுத் தீயை வளர்த்தீர்கள்" என்றார். பின்னர் அவரை, துவரை முதலிய தானியங்களையும் கொண்டு வந்து குன்றுபோல் குவித்தனர். அவற்றையும் உண்டு

போக்கினர். உணவினை இடுதல், உண்ணுதல் ஆகிய இச் செயலில் இருவரும் தோல்வியுற்றாரில்லை. படைக்குந் தொழிலில் முயற்சியுடையவராயிருந்த வசவண்ணரது இயல்பையும் அவற்றை உண்ணுந் தொழிலில் முற்பட்டிருந்த அல்லமரது தன்மையையுங் கண்டு யாவரும் வியப்புற்றனர். சென்னவசவர் இவர்க்கு உயிரையே உணவாக இடின் அதனை உண்டு அமைவார் என்று வசவரிடம் உரைத்தார். அதுவே செய்யத்தக்கது என்று கருதிய வசவர் பொறிகள், கரணங்கள், பூதங்கள், புலன்கள் ஆகியவற்றைக் கறியமுதாகவும் தம் உயிரையே திருவமுதாகவுங் கொண்டு உண்க என்று திருவடியில் பணிந்தார். "யான் பசியால் வந்தேனல்லேன். உனது அன்பைக் காணவே வந்தேன்" என்று கூறி மகிழ்வுடன் வசவரை எடுத்து அணைத்துக்கொண்டார்.

### எங்கும் நிறைந்தோன்

பின்னர் அல்லமர் வசவரை நோக்கி, "நீ வருந்த நின் திருமடத்தை விட்டகன்ற அடியார்களை வணங்கி அழைத்து வருக" என்றார். அவ்வாறே வசவர் அவ்வடியார்கள் தங்கியுள்ள இடத்திற்குச் சென்றார். அவர்களைக் கண்டார். அவர்கள் அருட்குரவன் மேனியில் அணிந்திருந்த மலர் மாலையும் சந்தனமும் விளங்க, வயிறு புடைத்திருக்க, அருந்திய பல்வகைய கறிகளின் மணம் வீச, ஏப்பம் விடுத்து முகமலர்ச்சியுடன் இருந்தனர். அவ்வரனடியார்களைப் பார்த்து "என் பிழை பொறுத்து எழுந்தருள்க" என்று வேண்டினர். அவர்கள் "அண்ணலே! நின் பெருமை சொல்லுந் தரத்ததன்று. முன்போல் வாயும் கையுந் தொழிற்படாமலே உண்டு மகிழ்ந்தோம். தேவர்கள் உண்ண வேள்வித் தீயில் அவியுணவு இடுதல் போல நாங்கள் எல்லோரும் அருந்த அல்லம தேவருக்கு அருத்தினை நின்னை ஒரு நாவால் எங்ஙனம் புகழ்வது! சிவயோகி ஒருவர் உண்டது உலகிலுள்ள எல்லாவுயிர்களும் உண்டதற்கு ஒப்பாகும் என்று மறைமொழி கூறுவதைக் காட்சியால் அறியச் செய்தார் அல்லமர்.

"அவரைப் பணிதல் எம்மைப் பணிதலாகும்; அவரை உண்ணச் செய்தல் எமக்கு அளித்தலாகும்" என்று கூறினர்.

அங்ஙனம் உரைத்த மொழியைக்கேட்ட வசவண்ணர் மீண்டு அல்லமரை யடைந்து "சிவனடியார்கள் அன்னை உண்ட உணவினைக் கருவிலுள்ள மகவும் அருந்துதல் போல் தாங்கள் உண்ட உணவுகள் யாவற்றையும் அருந்தி, தாங்கள் புனைந்தன வெல்லாவற்றையும் புனைந்து, மகிழ்ச்சியோடிருந்தனர்" என்றார். இவ்வாறு பரமயோகி செய்த ஊண் விளையாட்டைக் கண்டோர் "அல்லமன் எங்கும் நிறைந்தவன் என்று கூறும் மொழி உண்மை, உண்மை" என்று புகன்றனர்.

பின்னர் பரமயோகியாகிய அல்லமர் ஐம்புலன்களை யும் அவித்த வசவண்ணருக்குச் சைவ ஆகமங்களும் நான்கு மறைகளும் உணர்த்தும் பொருளை அறிவிக்க எண்ணங்கொண்டார்.

**வீட்டு நெறியருளல்**

வசவண்ணரும் முத்தியடையும் நெறியை யருளுமாறு வேண்டிக் கொண்டார். உலகோர் பற்றினை நீக்கி ஞானக் கண்பெற இவன் வினவுகின்றான் என்றெண்ணி அல்லமர் சொல்லத் தொடங்கினர்:

"யான் - எனது என்னும் செருக்கு இருக்கும் வரையில் மெய்யறிவினை ஒருவன் அடையான். யான் இது செய்வேன், என் பொருட்டு இது செய்வர் என்னும் கருத்துடையவன் வீடுபேற்றினை விரும்புதல் இருளால் சூரியனை யடைய விரும்புவதை யொக்கும். யான் என்னும் அகங்காரத்தால் நல்வினை, தீவினைகள் உண்டாகும். அவ் விரு வினைகளால் இன்பமும் துன்பமும் உண்டாகும். இருவினைகள் யான் என்னும் அகங்காரம் இல்லையானால் இல்லை யாகும். இருவினை இல்லையெனில் பிறப்பும் இல்லை யாம். மனத்தை யடக்க மனமே துணையாகும். அதற்கு

வேறொன்றும் துணையாகாது. மன அடக்கத்தைப் பெற்றானாயின் அவனுக்கு ஒப்பற்ற சிவமே தோன்றும்," என உண்மை நிலையை உணர்த்தியருளினார்.

### இறைவியின் உள்ள மகிழ்ச்சி

இவ்வாறு அருளிய அல்லமர், வசவண்ணர் மற்றுமுள்ள சிவசரணர்களையும் விட்டுப் பிரிந்து உலகிலுள்ளோர் யாவர்க்கும் அருள்புரியப் புறப்பட்டார்.

கயிலையில் உமையம்மையார் இறைவனை நோக்கி, "நந்தியும் அவருடன் சென்ற சிவகணத் தலைவர்களும் என்னுடைய சத்துவகலை மடந்தையும் உலகிற் சென்று செய்தது என்? விளம்புக" என்றார். "நந்தி, வசவண்ணர் என்னும் நாமங்கொண்டு என் அடியார்களை என்னைப் போலவே (சிவமாகவே) கருதி அவர்களுக்கு வேண்டியன உதவியும், சமணமதம் அழிவுறச் செய்தும் சிறப்படைந்தான். உன்னுடைய சத்துவ கலை மங்கை, மாதேவி என்னும் பெயர் பூண்டு மன்மதனுடைய வலிமையை அழித்து அறிவாசானைத் தேடிச் சென்றாள். எம் கணநாதர்களும் எம்மைக் காணவேண்டி உலகிற் பற்பல இடங்களில் நற்செயல்களைச் செய்துகொண்டு தங்கினர். தூயனாகிய அல்லமன் அழியாப் பேரின்பத்தை அவர்கள் பெற்று அனுபவிக்கவேண்டி உலகில் வீர சைவத்தை விளக்கியருளினான். ஆதலால் மாதேவியார்க்கு வீர சைவநெறியை யறியும்படி செய்தான். அறிவு சான்ற வசவர் முதலிய சிவசரணர்களுக்கும் முனிவர், யோகர், சித்தர் முதலியோர்க்கும் அவரவர்களது அறிவின் நிலையை யறிந்து அல்லமன் ஞானநெறியை யருளி ஆட்கொண்டான்" என்றார். இதைக் கேட்ட அம்மையார் அல்லமனுடைய பெருமையைக் கேட்டு மகிழ்ச்சியுற்றார்.

### மலர்மிசை யேகினான்

இவ்வாறு அல்லமதேவர் உலகில் யாவர்க்கும் வீட்டு நெறியை யருளும் நெறியில் நின்றார். அவர் மூத்தோர்,

இளையோர், நோயாளிகள், மாதர்கள், நல்லவர், தீயவர் என்றும் பாராமல் யாவரையும் அருண்மாரிபெய்து காத்தார். இவர் உறவு, இவர் அயலார் என்றெல்லாம் கருதாமல் அன்னைபோல் யாவர்க்கும் அருள்புரிந்து என்னை அடிமையாகக் கொண்டருளும் இரு திருவடிகளை யுடைய குருகுகேசன் மாதவத்தோரின் நெஞ்சத் தாமரை மலர்தோறும் வாழ்கின்றான்.

---

## உ. இதில் வரும் கூற்றுக் குரியவர்களும் அவர்களைப் பற்றிய குறிப்புகளும்

1. அல்லமாப் பிரபு தேவர் : ஒரு காப்பியம் "தன்னே ரில்லாத் தலைவனை யுடைத்தாய்" இருத்தல் வேண்டு மென்பர் தண்டியலங்கார நூலாசிரியர். அவ்வாறே அல்லமாப் பிரபு தேவர் பிரபுலிங்க லீலை என்னும் காப்பியத்தின் ஒப்பற்ற தலைவராவர். இவர் பிரபு தேவர், அல்லமர், மாயைகோலாகலன் என்றும் அழைக்கப் படுவார். இவர் வீர சைவசமய குரவர்களுள் ஒருவராவர். இவர் உலகப் பற்றை நீக்கிய சங்கமர். (சங்கமர் = உலக விசாரத்தை விட்டவர்) உலக மாயையை வென்றவர். இளமைப் பருவத்திலேயே ஞானத்தின் திருவுருவாகவும் பொறையின் வடிவாகவும் பொறி யடக்க முடையவராயும் திகழ்ந்தார். உலகில் தமக்கென வாழாது பிறர்க்காகவே வாழ்ந்தார். மக்களுடைய நன்மைக்காகவே பல இடங் களுக்கும் பல வடிவங்கொண்டு சென்று அவர்களுடைய பிறவித் துன்பத்தைப் போக்க முயன்றார். கருதியதை உலகில் நடத்திக் காட்டும் ஆற்றலையும் பெற்றிருந்தார். ஞானம் ஒன்றினாலேயே வீட்டின்பத்தை யடைய முடியும் என்பதை நல்லோர், தீயோர் என்று பாராமல் யாவர்க்கும் உணர்த்தித் தம் அருளுரையால் அவர்களை நல்வழிப் படுத்தினர். உலகில் கர்ம மார்க்கத்தைக் கண்டித்து ஞான மார்க்கத்தை நிலைநாட்டினர். குரு, லிங்கம், சங்கமம் என்ற முப்பொருளாகவும் விளங்கினர். வசவண்ணர், சித்தராமர், அக்கமாதேவி முதலிய சிவ சரணர்கள் இவர் அருளால் ஞானமெய்தினர். இவருடைய காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டாகும். இவருடைய அருட் செயல்களை அறிவிக்கும் சீரிய நூலே பிரபுலிங்கலீலை யாகும். இவர் வழிவந்த ஞானசிரியர்கள் சித்தர துர்க்கம், ஹுப்ளி, உருவகொண்டா ஆகிய இடங்களில் திருமடங் கள் அமைத்துக்கொண்டுள்ளனர்.

**2. வசவண்ணர் :** இவர் வசவேசர்—பசவர்—இரண்டாஞ்சம்பு என்றும் அழைக்கப் பெறுவர். இவர் பீஜாபூரிலுள்ள பாகவாடியைச் சேர்ந்த இங்குளேஸ்வர கப்படி (இங்குளாபுரி) என்னும் ஊரில் பிறந்தவர். இவருடைய தந்தையார் மாதரசர்; தாயார் மாதாம்பிகையார். கருநாட தேசத்தை ஆட்சிபுரிந்த விச்சலன் என்னும் அரசனுக்கு வசவண்ணருடைய மாமனாராகிய பலதேவர் அமைச்சராக இருந்தார். அவருக்கும் பின்னர் வசவண்ணர் அப் பதவியைப் பெற்றார். அம் மன்னன் இவருக்குத் தண்ட நாயகன் என்ற பட்டப் பெயரை அளித்துச் சிறப்பித்தான். இவர் கலியாணபுரியில் இருந்து வந்தார். இந் நகருக்கு முன்னர் விச்சல நகரம் என்ற பெயர் வழங்கப் பட்டிருந்தது. இவர் அமைச்சராயிருந்து நாட்டில் நீதியை நிலைநாட்டினார். அருள் நிறைந்த உள்ளத்தவராயும் ஏழை பங்காளராயும் தாழ்ந்தோரை உயர்த்தும் முயற்சியுடையவராயும் இருந்தார்.

மற்றும், இவர் வீர சைவசமயத்தை வளர்க்கும் நெறியில் பெரிதும் ஈடுபட்டிருந்தார். கர்ம மார்க்கத்தை அனுசரியாமல் ஞான மார்க்கத்தையே அனுசரித்தார். வீர சைவ சமயத்தில் இலிங்காங்க சாமரஸ்யமே மிகச் சிறந்த நிலையென்று கண்டார். குரு, லிங்க, சங்கம பத்தியிற் சிறந்து விளங்கினார். அல்லமாப் பிரபு தேவரை ஞானாசிரியராகப் பெற்றார். அவர்க்குச் சூனிய சிங்காதன பீடம் அமைத்து அதில் வீற்றிருக்கச் செய்து அவரை அகத்தும் புறத்தும் கண்டு ஆனந்தங் கொண்டார். இவர் கலியாணபுரியில் நிறுவியிருந்த வீர சைவ நிலையத்திற்குச் சிவானுபவ மண்டபம் என்று பெயர். இவரை நாடி வருகின்ற சிவனடியார்களுக்கு வேண்டுவன கொடுத்துக் காப்பாற்றிவந்தார். இவர் பல வசன நூல்களைக் கன்னட மொழியில் இயற்றியுள்ளார். அவை எளிய நடையும் ஆழ்ந்த கருத்தும் உடையவை. ஒவ்வொரு வசனப்பகுதியிலும் கூடல சங்கமதேவரை வைத்துக் கூறியுள்ளார். இவர் கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் இருந்தவர். இவரு

டைய வரலாற்றை விருஷபேந்திர விஜயம் என்ற கன்னட நூல் விளக்கமாக அறிவிக்கின்றது. தமிழிலுள்ள வசவ புராணம் என்ற நூலும் இவருடைய வரலாற்றை அறிவிப்பதாம்.

**3. சென்ன வசவேசர் :** இவர் வசவண்ணருடைய தங்கை நாகாம்பையின் புதல்வர். துறவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தவர். சிறந்த ஞானி. அடியார்கள் ஞானமும் ஒழுக்கமு முடையராய் இருத்தல் வேண்டுமென்ற கட்டுப்பாட்டை நிலைநிறுத்த முயன்றவர். வசவண்ணரைத் தமக்கு ஞானகுரவராகக் கொண்டவர். இறைவனின் இயல்புகளையும் உயிரின் தன்மைகளையும் தெளிவுற விளக்கிய ஞானாசிரியர். இவருடைய வாலாற்றைச் சென்ன பசவ புராணம் என்ற கன்னட நூல் அறிவிக்கும். "பங்கவளற்று வழிமாற்றி யொருநல் வழியைப் பகர்வார்போற், றங்கண் மதியிற் பலபிதற்றுஞ் சமயருரைகள் தமைநீக்கி, அங்க நிலையிற் றிலிங்கநிலை யிற்றென் றருளும் வீரசைவ, சிங்க நிலைத்த அருட்சென்ன வசவன் திருத்தாள் சிரத்தணிவாம்" (துதிகதி செய்யுள், எ) என்பதாலும், "பதியும்அப் பதியாற்காணும் பசுவுமப் பசுவின்ஞானம், பொதியுமைம் பாசந்தானும் பொருளென வழக்கிற் கூறும், விதியுமப் பாசம் பொய்யாய் வேறறும் வீடுமோதி, மதிமயக் கறுத்த சென்ன வசவனு மருங்கு சென்றான்" (சூனிய-இருந்தகதி. செய்யுள், கஅ) என்பதாலும் இவருடைய சிறப்பு நன்கு விளங்கும்.

**4. மமகாரன் :** விளவலதேயத்தை வனவசை நகரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த மன்னன். வனவசை நகரம் என்பது இப்பொழுது பனவசை என்று வழங்கப்படுகிறது. இந் நகரம் கார்வார் சில்லாவைச் சேர்ந்தது. முற்காலத்தில் இது பெரிய பட்டணமாயிருந்ததென்றும் இம் மன்னன் வசித்த அரண்மனை சிதைந்து கிடக்கிறதென்றும் கூறுப. இந் நகரில் மதுகை நாதன் கோவில் உளது. அதில் மாயையின் உருவம் சிலையாக அமைத்து வைக்கப்பட்டுளது. மாயை நடித்த அரங்கமும் உளது.

**5.** மோகினி : மமகார மன்னனுடைய மனைவி ; மாயையின் தாய்.

**6.** மாயை : மமகாரனுக்கு மோகினியால் தோன்றியவள். இவள் உமாதேவியால் தமோகுண மடந்தையாக உலகிற்கு அனுப்பப்பட்டவள் என்று பிரபுலிங்க லீலை கூறுகிறது.

**7.** அகங்காரன் : மமகாரனுடைய குலகுரு. "சாந்தவாங்காரன்" என்று தமிழ்ப் பிரபுலிங்க லீலை கூறுகிறது. அகங்காரன் என்று கன்னடத்திலுள்ள பிரபுலிங்க லீலை அறிவிக்கிறது. 'சார்ந்த' என்ற சொல் அச்சில் பிழையாக "சாந்த" என்று வந்திருத்தல் கூடும்.

**8.** சங்கமதேசிகன் : இவர் வசவண்ணருடைய புதல்வராவர்.

**9.** நாகாம்பை : இவ்வம்மையார் வசவண்ணருடைய தங்கை. சென்ன வசவருடைய தாயாரும் ஆவர்.

**10.** நிராங்காரன் :
**11.** சுஞ்ஞானி :
} இவர்கள் அல்லமருடைய தந்தை தாயார். வள்ளிகாவை (பள்ளிகாவே) என்ற ஊரில் வசித்திருந்தவர்கள்.

**12.** சகலை : மாயையின் பாங்கியர்களில் சிறந்தவள்.

**13.** கலாவிலாசி :
**14.** மதமானி :
**15.** போகி :
} இவர்கள் மாயையின் தோழிமார்கள்.

**16.** விமலை : மாயைக்கு அல்லமனுடைய உண்மையியல்பினை விளங்கச் செய்தவள். இவள் உமாதேவியால் உலகிற்கு மாயையின் செயலை அறிந்துவர அனுப்பப்பட்டவள் என்று பிரபுலிங்க லீலை கூறுகிறது. இவளுடைய பிறப்பைப்பற்றிய செய்திகள் ஒன்றும் கூறப்படவில்லை.

**17.** நிருமலன் :
**18.** சுமதி :
} இவர்கள் அக்கமாதேவியின் தந்தை, தாயார். இவர்களுடைய

ஊர் உடுதடை. இவ்வூர் ஐதராபாத் சீமையிலுள்ள மகாகாவ் என்ற ஊராக இருக்கலாமென்று கருதுகின்றனர்.

**19.** அக்கமாதேவி : மாதேவி அக்கா என்றும் அழைக்கப்படுவார். இவர் இளம்பருவத்திலேயே நற்குண நற்செய்கைகள் உடையவரா யிருந்தார். சிவபத்தியிற் சிறந்து விளங்கினார். இவ் வம்மையாரைச் சமணமதத்தினனை கௌசிக மன்னன் கண்டு காமுற்று மணந்து கொள்ள விரும்பினன். இவர் அவனை வெறுத்துத் துறவு நிலையுற்றார். வசவண்ணர் கல்யாணபுரியில் நிறுவியிருந்த சிவானுபவ மண்டபத்திலிருந்து தொண்டு செய்தவர். இவர் கன்னட மொழியில் வசனங்கள் இயற்றியுள்ளார். அவை எளிய நடையும் ஆழ்ந்த கருத்தும் உடையவை. ஒவ்வொரு வசனத்தின் ஈற்றிலும் மல்லிகார்ச்சுனரை வைத்துக் கூறுகின்றார். இவருடைய நூல்களை மிகவும் போற்றுகின்றனர். இவர் பிரபுதேவர்பால் ஞான நெறியை யுணர்ந்தார். திருப்பருப்பதம் அடைந்து அங்குத் தவ நிலையில் இருந்தார். இவருடைய காலமும் வசவண்ணருடைய காலமும் ஒன்றே. இவர் சத்துவகுண மடந்தையாக உமாதேவியால் அல்லமரைக் காண உலகிற்கு அனுப்பப்பெற்றவர் என்று பிரபுலிங்க லீலை கூறுகிறது.

**20.** கௌசிகன் : இவன் சமண மதத்தினன். உடுதடை என்ற நகரை ஆட்சிபுரிந்த ஒரு மன்னன். அக்கமாதேவியை மணந்துகொள்ள முயன்றான். ஆனால் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. தன்னுடைய சமயத்தில் மிக்க உறுதியுடையவன்.

**21.** அநிமிடன் : இவர் சிறந்த சிவயோகி. இவர் அடங்கிய சமாதி இன்றுங் காண இருக்கிறது.

**22.** கொக்கிதேவர் : இவர் நந்தவனம் வைத்திருந்தார். உலகில் நற்காரியங்களைச் செய்வதால் வீடுபேற்றை யடையக் கூடுமென்ற கருத்தினரா யிருந்தார். பின்னர் பிரபுதேவரால் ஞானநெறியை விளக்கமாக உணரப் பெற்றார்.

**23.** **அசகணன் :** இவர் ஒரு சிவஞானி. ஞானநிலையை அடைந்ததும் உடலை வெறுத்தவர்.

**24.** **முத்தாயி அம்மை :** அசகணன் உடன்பிறந்தாள். அல்லமரால் உண்மை யுணர்ந்து ஞானநிலையை அடையப் பெற்றவள்.

**25.** **சித்தராமர் :** இவர் சொன்னலாபுரத்தி லிருந்தவர். இந்நகர் இப்பொழுது ஷோலாப்பூர் என்று வழங்கப் படும் நகரமேயாகும். இது முன்னர்க் கன்னட தேசத்தைச் சேர்ந்திருந்தது. இப்பொழுது மகாராஷ்டிரத்தைச் சேர்ந்துளது. இவருடைய தந்தை முத்து கௌடர்; தாய் முத்தவ்வை இவர் கர்மயோகியாக விளங்கினர். இவர் அமைத்த கோவிலும் குளமும் இன்றும் இவருடைய பெயரால் வழங்கப்படுகின்றன. இவர் எண்பதாயிரம் சிவதலங்களை அமைத்தவர் என்றும், இவருக்கு நெற்றிக் கண் உண்டென்றும் இவருடைய கால் நிலத்தில் தோயாது என்றும் வசவபுராணம் கூறும். சித்தராமேஸ்வரர் என்று இவரை மிகவும் போற்றுகின்றனர்கள். இவர் பிரபு தேவர்பால் வீட்டுநெறியை யறிந்தவர். பிரபுதேவர் இவரை நட்புமுறையிற் கொண்டிருந்தார்.

**26.** **மருளசங்கரர் :** இவர் சிறந்த சிவஞானி. கல்யாண புரத்தில் வசவண்ணருடைய திருமடத்தில் இருந்தவர்.

**27.** **மடிவாலமாச்சையர் :** இவர் இப்பரிகபுரி என்னும் ஊரினர். வண்ணார்மரபைச் சார்ந்தவர். சிவசரணர்கள் தம்மிடம் வந்து ஆடைகளைக் கேட்பார்களாயின் மனமகிழ்ந்து அவர்களுக்குக் கொடுத்து ஆடைகளின் சொந்தக்காரர்கள் வந்து கேட்கின்றகாலத்தில் அவ் வாடைகளையே கொடுக்கவல்ல பெரிய வரத்தைப் பெற்றிருந்தார். உலகப் பற்று அற்றவர். சீவன் முத்தர். அடியார்களின் பெருமையை வசவண்ணருக்கு விளக்கியவர்.

**28.** **மோளிகைமாறன் :** இவர் ஒரு துறவி. விறகு வெட்டிவந்து விற்று அதன் ஊதியத்தால் சிவசரணர்

களுக்கு உணவு படைத்தவர். மடிவாலமாச்சையருடைய குமாரர்.

**29.** அப்பணன்: வசவண்ணருடைய திருமடத்தி லிருந்த சிவசரணர்களில் ஒருவர்.

**30.** கோரக்கர்: இவர் காயசித்தி பெற்றவர். இவர் இருந்த இடம் திருப்பருப்பதமாகும். தமிழ்நாட்டுச் சித்தர் களில் ஒருவர் கோரக்கர் என்ற பெயரினரும் இருக்கிறார்.

**31.** விச்சல மன்னன்: இவன் சமண மதத்தைச் சார்ந்தவன். காலசூரிகளின் அரசன். மேற்குச் சாளுக்கிய மன்னரான இரண்டாம் ஜகதேகமல்லன், மூன்றாம் தைலப்பன் இவர்கள் ஆதீனத்துக்கு உட்பட்டிருந்தவன். இவன் வசவண்ணரை மந்திரியாகக் கொண்டிருந்தான். வசவண்ணருடைய உபதேசத்தால் பின்னர் வீரசைவனானன். இவனுடைய காலம் 1156—1167.

**32.** கின்னரப் பிரமையர்: திருப்பொண்டூர் என்னும் பதியில் வாழ்ந்தவர். தமது செல்வ மெல்லாவற்றையும் சிவனடியார்களுக்குக் கொடுத்துச் செலவழித்து விட்டார்; வறுமை யடைந்தார். சிவபெருமானது சந்நிதானத்தில் இசையுடன் வீணை வாசித்துத் துதித்தார். சிவபெருமான் "நீ ஒரு பொற் காசினைப் பெற்றுக்கொள்வாய்" என்று அருள் செய்தார். அவ்வாறு பெற்றுவந்தார். பின்னர் வசவண்ணர் திருமடத்தை யடைந்திருந்தார்.

## ௩. முதனூல்

பிரபு லிங்க லீலை யென்னும் விழுமிய நூலை முதன் முதலில் இயற்றித் தமிழுலகுக்கு அளித்தவர் கவிஞர் திலகராகிய சிவப்பிரகாச அடிகளாரே யாவர். என்றாலும் தமிழில் இந்நூல் இயற்றப்பெறுவதற்கு முன்னரே இக் காதையைத் தமிழ்நாட்டிலுள்ளோர் கேள்விவாயிலாக அறிந்திருத்தல் கூடும். ஏனெனில், கன்னட நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வீரசைவத் துறவிகள் பலர் வந்து ஆங்காங்கே சமய நிலையங்களை நிறுவி வீரசைவ சமயத்தைப் பரப்பியுள்ளனர். அவர்கள் இந்நூலில் வருகின்ற அல்லமதேவர், வசவண்ணர் முதலிய வீரசைவ சமய குரவர்களுடைய செயற்கருஞ் செயல்களைத் தமிழ்நாட்டு மக்களுக்கு அறிவியாம லிருந்திரார். இதற்குச் சான்றாக இந்நூலைப் பற்றிச் செவிவழியாகக் கூறிவரும் ஒரு செய்தியும் உண்டு. அஃதாவது :

தல யாத்திரை செய்வதற்கு வந்த கன்னட வீர சைவத் துறவிகள் சிலர், புதுவைக்கு அண்மையிலுள்ள பொம்மபுர மடத்தில் தங்கியிருந்தனர். அவ்வமயம் அத் திருமடத்தில் சிவப்பிரகாச அடிகளாரும் அவருடைய உடன்பிறந்தார்களும் இருந்தனர். இரவில் உறங்குவதற்கு முன்னர் அவர்களிடம் ஏதேனும் ஒரு நல்ல அடியார் சரிதையைக் கூறும்படி சிவப்பிரகாச அடிகளார் கேட்டுக் கொண்டார். அப்பொழுது அவர்களில் ஒருவர் பிரபுலிங்க லீலையிலுள்ள வரலாறுகளைக் கூறினர். அவற்றைக் கேட்ட அடிகளார் அவ் வரலாற்றின் சுவையை யுணர்ந்து அகமகிழ்ந்தார். பின்னர் அத் துறவிகள் தாம் செல்ல வேண்டிய திருத்தலங்களுக்குச் சென்று, திரும்பி வருவதற்குள் தமிழ் மொழியில் பிரபுலிங்க லீலையை இயற்றி முடித்து, அவர்கள் மீண்டு அத் திருமடத்தை யடைந்து தங்கியகாலத்து அவர்களிடம் தாம் இயற்றிய நூலைப் படித்துக் காட்டினர். அவர்கள் அந் நூற் செய்யுள்களில் பொதிந்துள்ள சிறந்த கருத்துக்களை யுணர்ந்து, ''தமிழ்

மொழியில் இவ்வளவு நன்றாக இந் நூல் அமைந்து விட்டதே!" என்று வியப்புற்றனர். அவர்களுள் ஒருவர் இரவில் அடிகளார் அறியாவண்ணம் அவ் வேட்டினை எடுத்துச் சென்று கடற்கரை மணலில் புதைத்து மறைத்துவிட்டு அகன்றார். அச் செயலை அடிகளார் அறிந்திலர். சில நாட்களுக்குப் பின்னர் அடிகளார் காலையில் பல் துலக்கிவிட்டுப் பல் தேய்த்த குச்சியை மணலில் புதைக்கச் சற்று மணலைத் தோண்டியபொழுது ஆங்கோர் ஏட்டுச்சுவடி இருக்கக் கண்டார். அதை எடுத்துப் பார்த்தார். தாம் புதிதாக இயற்றிய அரும் பொருள் நிறைந்த அல்லமன் லீலையாக இருக்கக்கண்டார்; வியப்படைந்தார். இஃது இறைவன் திருவருளே யென எண்ணி இழந்த தனத்தைப் பெற்றவர்போல் பெரு மகிழ்ச்சியுற்றார்.

இவ்வாறு வழங்கிவரும் செவிவழிச் செய்தியால் இக் காதை பலரால் சொல்லப்பட்டு வந்தது என்ற அளவில் கொள்ளவேண்டுமேயன்றி அடிகளார் ஒருநாள் கேட்ட தையே ஆதாரமாகக்கொண்டு இந் நூலை யியற்றிமுடித் தார் என்று கூறுதல் சிறிதும் பொருந்தாது. நூல் இயற்றும் நெறியினை நன்குணர்ந்த அடிகளார் என்றும் நிலைத்திருக்கும் இலக்கியப் பெரு நூலாகவும் சமய நூலாகவுமுள்ள இக்காவியத்தைத் தக்கவாறு ஆராயாமல் இயற்றத் துணியார். கன்னட மொழியிலுள்ள பிரபுலிங்க லீலையை நன்கு படித்தறிந்து அதனை முதனூலாகக் கொண்டே தமிழில் இந் நூலை இயற்றினார் என்பதற்குப் பல அகச் சான்றுகள் உள்ளன. இனி அவற்றைக் காண்போம்.

1. இந் நூலின் பாட்டுடைத் தலைவர் அல்லமாப் பிரபுதேவர். இவர் கன்னட நாட்டில் இருந்தவர். ஆதலின், அம் மொழியில் இவருடைய சரிதம் முதன்முதலாக "பிரபுலிங்க லீலை" என்னும் பெயரால் வெளிவந்தது. அதுவே முதனூலாகும். அம் முதனூலின் பெயரையே அடிகளாரும் தாம் இயற்றிய வழி நூலுக்கும் பெயராக

அமைத்துள்ளார். ஆகவே இது முதனூலாற் பெயர் பெற்றதாகும்.

2. தமிழ்மொழியில் நூலின் உட்பிரிவிற்கு "படலமே சருக்கங் காண்டம் பரிச்சேதம் அத்தி யாயம், இடராறும் இலம்ப கங்க ணூல்முடி பிருமுப் பேரே" என்ற பெயர்களுண்டென்று சூடாமணி நிகண்டு கூறுகிறது. அதன்படியே படலம், சருக்கம், காண்டம், பரிச்சேதம், அத்தியாயம், இலம்பகம் என்று தமிழ் நூலாசிரியர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். மற்றும் பால், இயல், அதிகாரம், ஓத்து என்னும் பெயர்களாலும் பகுத்துள்ளனர். கன்னடப் பிரபுலிங்க லீலையின்கண் நூற்பகுப்பிற்கு "கதி" என்ற பெயர் இடப்பட்டுள்ளது. கதி என்ற சொல் அத்தியாயம் என்ற பொருளில் கன்னட மொழியில் வழங்கப்படுகிறது. அப் பெயரையே தமிழ் நூலிலும் அடிகளார் புதியதாகப் புகுத்தி ஆட்சி செய்துள்ளார். கதி என்று வழங்குதல் தமிழ் மொழியிலுள்ள பிரபுலிங்க லீலையில் மட்டுமன்றிப் பிற தமிழ் நூல்களில் காணப்படா திருத்தலும், அடிகளாரும் தாம் இயற்றிய பிற நூல்களில் எடுத்தாளா திருத்தலும் ஈண்டறியத்தக்கன.

3. கன்னட மொழியிலுள்ள பிரபுலிங்கலீலை இருபத்தைந்து கதிகளைக் கொண்டது. அடிகளாரும் அவ்வாறே இருபத்தைந்து கதிகளில் பாடி முடித்துள்ளார்.

4. துதிகதி முதலாக மான்மிய கதி ஈறாகவுள்ள கதிகளின் பெயர்களையே தமிழ்நூலிலும் அமைத்துள்ளார்.

5. கன்னடச் செய்யுள்களிலுள்ள பொருள் சிதையா வண்ணம் தமிழில் பல செய்யுள்களை இயற்றி அமைத்துள்ளார். அவ்வாறுள்ளனவற்றுள் ஈண்டுச் சிலவற்றைச் சான்றாகக் காண்போம்.

துதிகதியில் சென்னவசவேசர் வணக்கமாயுள்ள "பங்க வளற்று" என்ற செய்யுள், சம்பந்தம் என்ற

தலைப்பில் உள்ள "கன்றிய வைரிகள்" என்ற செய்யுள், உற்பத்தி என்ற தலைப்பிற் காணப்படும் (1) "பரசிவம் பிரமம்" (செய்யுள், கஅ) (2) "சாற்றுமச் சிவனுக்கு" (செய்யுள், கக) (3) "அத் திருமாலும்" (செய்யுள், உ0) (4) "ஆக்குறுஞ் செயல தொன்றே" (செய்யுள், உக) என்ற செய்யுள்கள், பிரபுதேவர் வந்த கதியில் (1) "செல்லுறழ் குழலீர்" (செய்யுள், கக) (2) "பொழிந்திழி மழையால்" (செய்யுள், எக) (3) "மாயையை யகன்றால்" (செய்யுள், அக) முதலிய செய்யுள்கள் கன்னடப் பிரபுலிங்க லீலையில் உள்ள பொருளையே கொண்டுள்ளன.

இவ்வாற்றால் கன்னடப் பிரபுலிங்க லீலையே முதனூல் என்பதும் அடிகளார் அம் முதனூலை யறிந்தே தமிழில் வழிநூலாக இயற்றியுள்ளாரென்பதும் தெளிவாம். ஆனால், அடிகளார் யாண்டும் கன்னடச் செய்யுள்களையே மொழி பெயர்த்துத் தமிழில் யாத்துள்ளார் என்று கூறுவதற் கில்லை. முதனூலிலுள்ள விழுமிய கருத்துக்களையும் ஏற்ற இடங்களில் கொண்டு, தம் கற்பனைத் திறத்தாலும் பல கலைப் புலமையாலும் அழகுறப் படைத்துள்ளார். தமிழ்ப் பிரபுலிங்க லீலையிலுள்ள வருணனைகளையும் இலக்கியச் சுவை நிறைந்த செய்யுள்களையும் கூறக் கேட்ட கன்னடப் புலவர்கள் "சிவப்பிரகாசர் சிறந்த கவி" என்று உளமாரப் போற்றுகின்றார்கள்.

## ௩. முதனூலாசிரியர்

கன்னடப் பிரபுலிங்க லீலை நூலாசிரியர் சாமரசர் என்பவர். இவர் தாம் இந் நூலாசிரியர் என்று கூறத்தக்க அகச் சான்றுகள் நூலின்கண் காணப்படவில்லை. ஆனால், தற்காலத்துள்ள கன்னட நூலாராய்ச்சியாளர்கள் புறச் சான்றுகளால் பிரபுலிங்க லீலையை இயற்றியவர் சாமரசர் என்று முடிவுசெய்துள்ளனர். இவர் வீர சைவர்; கடவுளன்புடையவர். இவருடைய காலம் கி. பி. 1400 அல்லது 1430 என்று கூறுவர். இவர் இந் நூலை யியற்றியதற்குக் காரணம் ஒன்று கூறப்படுகிறது.

இவர் காலத்திருந்த அரசனாகிய இம்மடி பிரபுட தேவராயர் (கி. பி. 1419—1446) கன்னட மொழியில் பாரதத்தை யியற்றும்படி வேண்டிக்கொண்டார். அவர் விருப்பிற்கிணங்கிப் பாரதத்தைச் சாமரசர் இயற்றிமுடித்தார். அந் நூல் அரங்கேற்றிய காலத்தில் யாவராலும் புகழப்பட்டது. ஆனால், அந் நூல் ஒரு புலவரால் உலகில் வெளிவரா வண்ணம் சிறிது காலத்தில் அழிக்கப்பட்டது. இறைவனைப் பற்றிப் பாடாமல் அரசர்கள் ஒருவரோடொருவர் தாயபாகங் குறித்துப் போரிட்ட வரலாற்றைக் கூறும் நூலை யியற்றியதால் அச் செயல் இறைவனுக்கே ஏற்புடையதாக இல்லை. ஆதலின் அது மறைந்துவிட்டதென்று சாமரசர் மன அமைதிகொண்டு பின்னர் இறைவனது திருவிளையாடலாகவுள்ள இந் நூலை யாவரும் புகழ இயற்றிப் பெருமை யடைந்தார். இச்செய்திக்குக் குறிப்புத் தருவதுபோல் இந் நூலுள் "கன்றிய வைரிகள் காதுங் காதையும்.......அன்று அருள் அல்லமன் அமல லீலையே" (துதிகதி. செய்யுள், கச) என்ற செய்யுளடி அமைந்துள்ளதும் பொருத்தமாயிருக்கிறது.

இந் நூல் கன்னட மொழியிலுள்ள சிறந்த காவியங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. கவியின் நடையழகையும் வருணனைகளையும் உண்மை நூற் கருத்துக்களையும்

அறிந்து போற்றுகின்றனர். இந் நூலாசிரியரும் சிறந்த கவிஞராகக் கன்னட மொழி அறிஞர்களால் போற்றப்படு கின்றார். இவர் நாளொன்றுக்கு நூற்றொரு (101) கவி களாகப் பதினொரு நாட்களில் ஆயிரத்து நூற்றுப் பதினொரு (1111) செய்யுள்களால் பாடி நிறைவேற்றினார் என்பர். சாமரசர் நூலில் தம் பெயரைக் குறிப்பிடாத தற்குக் காரணம் இறைவன் அருள்வழிப்பட்டுச் செய்யும் செயலைத் தாம் செய்ததாகக் கூறுதல் தவறு என்ற கருத்தினராய்க் கூறாது விடுத்தார் என்பர்.

சிவப்பிரகாச அடிகளாரும் சாமரசருடைய பெயரைத் தம் நூலில் அறிவித்திலர். தமிழ்ப் பிரபுலிங்க லீலையிலுள்ள,

"தண்ணிலவு புனைசடிலத் திறைபுகழல்
லமதேவன் சரிதத் தீம்பால்
புண்ணியரஞ் செவிவாயிற் றமிழ்ச்சங்கத்
தான்முகந்து புகட்டி னுறல்
எண்ணரிய புகழ்மலயத் திருந்தவனோர்
வடிவெடுத்தா னென்று கூறப்
பண்ணியமுத் தமிழ்க்கவிதைச் சிவப்பிரகாசப்
பெரும்பேர் படைத்து ளானே."

என்ற சிறப்புப் பாயிரச் செய்யுளும் சிவப்பிரகாசர் தமிழாற் செய்தார் என்ற குறிப்பு மட்டுமே தருகின்றது. அடிகளார் தாம் பிறமொழியிலிருந்து தமிழில் புதுப்பிக்கும் நூலின் வரலாற்றை நன்கு அறிவித்தே நூலைக் கூறத் தொடங்கும் நெறியினையுடையவர். அங்ஙனம் அறிந்திருந்தால் இவ் வரிய நூலை இயற்றிய சாமரசரைத் தமிழுலகுக்கு அறிவிக்காமல் இருந்திரார். ஆதலின், அடிகளார் காலத் தில் முதனூலாசிரியர் இன்னார் என்று அறியப்படவில்லை யென்பது தெளிவாம்.

சாமரசர் இயற்றிய காலத்திற்குப் பின்னர்த் தெலுங்கு மொழியில் பிடுபர்த்தி சோமநாதர் என்பார் ஈரடிகளைக் கொண்ட பாடல்களால் பிரபுலிங்க லீலை என்ற நூல்

இயற்றியுள்ளார். பாலஸூர்ய புத்திரநாத பிடுபர்த்தி பசவகவி என்பார் தெலுங்கில் உரைநடையாக இந் நூலை இயற்றியுள்ளார். இவர்களுடைய காலம் சுமார் கி. பி. 1520 என்பர். பிரமதாசன் என்பார் மகாராஷ்டிர மொழியில் லீலா விஸ்வம்பா என்ற பெயரால் இந் நூலை யியற்றினர். வடமொழியிலும் இந் நூல் இயற்றப்பட்டுள்ளது. வடமொழியிலுள்ள பிரபுலிங்க லீலை பௌஷ்யத் புராணத்தி லிருந்து செய்யப்பட்டதாகக் கூறுகிறது. ஆனால் இவ் வரலாறு அப் புராணத்துள் இல்லை என்பர். வடமொழியிலுள்ள பிரபுலிங்க லீலையின் காலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டு. இந் நூலாசிரியர் சென்னபசவ புராண ஆசிரியராகிய ஹம்பைய விருபாக்ஷ பண்டிதராக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

## ரு. வழிநூலாசிரியர் வரலாறு

தமிழ் மொழியிலுள்ள பிரபுலிங்க லீலை வழி நூலாகும். இந் நூலை இயற்றியருளிய கவிஞர் பெருமான் சிவப்பிரகாச முனிவர் என்பது தமிழுலகம் நன்கறிந்ததே. இவர் சான்ேறார் பலரை யீன்றளித்த தொண்டை நாட்டின்கண் உள்ள காஞ்சிப் பதியில் சைவ வேளாண் குலத்தினருக்கு ஞானாசிரியராய்த் திகழ்ந்த குமாரசாமி தேசிகருக்கு அருந்தவப் புதல்வராய்த் தோன்றியவர். இவருடைய உடன்பிறந்தார்கள் வேலையர், கருணைப் பிரகாசர், என்பவ ராவர். இவர்களின் தங்கை ஞானம்பிகை அம்மையார். இவ்வம்மையார் தவச்செல்வராகிய பேரூர் சாந்தலிங்க அடிகளாரை மணந்துகொண்டவர்.

சிவப்பிரகாசர் இளமைப் பருவத்தில் தம் தந்தை யாரிடங் கல்வி பயின்றார். பிற்காலத்தில் தம் இளவல் களுடனிருந்து தருமை ஆதீனம் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளிடம் தொல்காப்பியம் முதலிய பேரிலக்கண நூல்களிலுள்ள ஐயங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டார். இம் மூவரும் இடைக் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் முச்சுடராக விளங்கினர்களெனின் அஃது உயர்வு நவிற்சியாகாது. இவர்கள் அரிய தமிழ்ப் பணிபுரிந்தவர்கள். கலாவிநோதராக வாழ்ந்தவர்கள். நூல்களைக் கற்றலும் நூல்களை யியற்றுதலுமன்றிப் பிற செயல்களில் தம் மனத்தைச் செலுத்தாதிருந்தவர் களாவர்.

சிவப்பிரகாசர் தாம் பிறந்த காஞ்சிப் பதியை விடுத்துப் பொம்மபுரம், துறைமங்கலம், வெங்கனூர், நல்லாற்றூர் முதலிய இடங்களில் வாழ்ந்திருந்தார். தம் வாழ்நாளில் பெரும்பகுதியைத் துறைமங்கலத்திலும் நல்லாற்றூரிலும் கழித்தார்.

பொம்மபுரத்தில் அருள்வள்ளலாய் விளங்கிய சிவ ஞானபாலைய சுவாமிகளைத் தம் ஞானசிரியராகப் பெற்றார்.

அப்பெருமானை அடிகளார் அணுகிய காலத்திருந்து அப்பெருமானால் தாம் அடைந்த மெய்யறிவு நிலையை அடிகளாரே சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத் தமிழ் முதலிய ஐந்து நூல்களில் விளக்கமாக வுரைத்துள்ளார். அச் சிவஞானியால் சிவப்பிரகாசரும், சிவப்பிரகாசரால் அச் சிவஞானியும் உலகில் விளக்கமுற்றனரெனில் அது முற்றிலும் பொருந்தும்.

அடிகளார் வெங்கனூரில் வாழ்ந்த காலத்தில் வெங்கனூர் வல்லகோலாதிபதி அண்ணாமலை ரெட்டியார் அணுக்கத் தொண்டராயிருந்து ஆதரித்து வந்தார். அவரது பெருமையை மறந்தும் மக்களைப் பாடாத அடிகளார் திருவெங்கைக் கோவை, திருவெங்கை யுலா என்ற நூல்களில் இன்றும் நாம் அறிய அமைத்துப் பாடியுள்ளார். அடிகளார் அண்ணாமலை ரெட்டியார்க்குச் செய்த எதிர் நன்றி அழியாமல் இன்றும் நிலைத்து நிற்கிறது.

அடிகளார் தமிழ்மொழியிலும் வடமொழி-கன்னடம்-தெலுங்கு முதலிய பிற மொழிகளிலும் நல்ல புலமை யுடையவராயும், சோதிடம் - தருக்கம் முதலிய கலைகளில் வல்லவராயும் இருந்தாராதலின் அவர்கள் இயற்றிய 34 நூல்களும் பொருட்செறிவுடையனவாய் உள்ளன. ஆதலின் அவை புலவர் பெருமக்களால் பெரிதும் போற்றப் பெற்றன; போற்றப்படுகின்றன. அடிகளாரை **கவிதா சார்வ பௌமர்** என்றும் **கற்பனைக் களஞ்சியம்** என்றும் உயர்ந்தோர் சிறப்பித்துக் கூறி வருகின்றனர்.

அடிகளார் தமிழ்மொழியிலுள்ள சங்கநூல்களையும் சைவத் திருமுறைகளையும் ஆய்ந்தாய்ந்து கற்றுணர்ந்தவர். ஆதலின் இந் நூல்களின் மணம் அவருடைய நூல்களில் யாண்டும் விரவியுள்ளது. தமிழகத்தில் சைவமும் தமிழும் நிலைத்திருக்குமளவும் தமிழ்மக்கள் தம்மை மறவாதவண்ணம் தமிழ்ப்பணிபுரிந்துள்ளார் அடிகளார். சைவசித்தாந்த சாத்திர நுட்பம் அறிய

விரும்புவார்க்கு அவர் இயற்றிய சிவப்பிரகாச விகாசம் என்னும் நூல் பேருதவியாகும். வீரசைவ சித்தாந்தம் விரும்பிக் கற்பார்க்குச் சித்தாந்த சிகாமணி என்னும் செந்நூல் துணையாகும். வடமொழி ஆகமக் கருத்து யாதென ஆராய்வார்க்குச் சதமணி மாலை சாதகமாகும். தருக்க நூலுணர்ச்சியில் அவாவுடையார்க்குத் தருக்க பரிபாஷை என்னும் மொழிபெயர்ப்பு நூல் தக்கதாகும். காவியச் சுவை நுகர விழைவார்க்குக் கற்பனை நலங் கனிந்த பிரபுலிங்க லீலை காவியரத்தினமாக விளங்கும். வேதாந்தம் விழைவார்க்கு வேதாந்த சூடாமணி மேன்மையான நூலாகும். நீதியுணர்வார்க்கு நன்னெறி நாற்பது நந்தா விளக்காகும். அகப்பொருள் நூற் சுவையை எண்ணுவார்க்குத் திருவெங்கைக் கோவை செந்தேனென இனிக்கும். சைவ சமய குரவர்களின் பெருமையை நால்வர் நான்மணி மாலை நலமுற அறிவிக்கும். இவ்வாறு அடிகளார் அருளிய நூல்கள் மதுரஞ் செறிந்த செந்தமிழ்ப் பனுவல்களாக மிளிர்கின்றன.

இவருடைய மொழிநடை [1]திராக்ஷா பாகம் போன்றதாகும்; நாவிற்குத் தட்டுப்படாமல் விழுமிய இன்னோசை பெற்றுச் செல்லும். இவருடைய நூல்களைக் கற்பார் உள்ளம் புதிய புதிய கருத்துக்களை விருந்தாகப் பெறும். நூல்களில் உலகியற் பொருள்கள் ஆங்காங்கே துலங்கும். பிற்காலத்திய புலவர்கள் இவருடைய நூல்களை மிகமிகப் போற்றிப் பயின்றனர்; பயின்று வருகின்றனர். சென்ற நூற்றாண்டில் தமிழகத்தில் கவியரசராய்த் திகழ்ந்து ஆயிரக்கணக்கான தமிழ்ச் செய்யுள்களை யியற்றித் தந்த [2]மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள்

---

1. திராக்ஷா பாக மென்பது மேற்பாகமும் உட்பாகமும் இனிமை பெற்றிருக்கும் திராக்ஷையைப் போலச் செய்யுளின் நடையும் அதன்கண் அமைந்துள்ள பொருளும் சுவையுடையனவாயிருத்தலாம்.

2. "என் இளமையிலேயே சிவப்பிரகாச சுவாமிகளிடத்தில் மதிப்பு இருந்தாலும் பிள்ளையவர்களிடம் பழகிய பிறகு அது வரம்பு கடந்ததாயிற்று. வெங்கைக் கோவை முதலிய நூல்களைப்

அடிகளாருடைய நூல்களைத் தம் மாணவர்க்குப் பாடஞ் சொல்லுங் காலத்து அடிகளாரின் புலமைத் திறத்தை வாயினிக்கச் சொல்லிச் சொல்லி இன்புறுவரெனில் நம்மனோர் புகழுந்திறம் யாதோ !

இத்தகு வித்தகப் புலமைவாய்ந்த அடிகளார் தம் இறுதிக்காலத்தை நல்லாற்றூரில் கழித்தார். அடிகளார் பருவுடல் அடக்கமுற்ற இடம் பொம்மபுரம் ஆதீனத்தாரால் நல்லாற்றூரில் கோவிலாக அமைக்கப்பெற்று யாவராலும் பூசிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்துள்ள புலவர்கள் ஆங்குச் சென்று வணங்கி அரிய புலமையையடைந்து வருதல் கண்கூடு. அடிகளார் பருவுடல் நீத்துத் திருவருளிற் கலந்த நாளைப் பெருவிழாவாகக் கொண்டாடி வருகின்றனர். அடிகளார் திருவுருவம் வெங்கனூர் ஆலயத்துள்ள ஒரு தூணில் அமைக்கப்பெற்றுள்ளது. அவ்வுருவம் அடிகளார் காலத்திருந்த சிற்பியால் அமைக்கப் பெற்றதால் அதுவே ஏறக்குறைய அடிகளாரின் உருவ அமைப்பைக் காட்டுவதாகும்.

---

பாடங் கேட்டபோது என் ஆசிரியர் அவருடைய புலமைத் திறத்தை வியந்து பாராட்டுவதைக் கேட்டுக்கேட்டு அத் துறவியர் பெருமானைத் தெய்வம்போலப் பாவிக்க ஆரம்பித்தேன்.”

“என் சரிதம்”—டாக்டர். உ. வே. சாமிநாதையர்.

## ௯. நூலின் காலம்

பிரபுலிங்க லீலை தமிழில் இயற்றப்பெற்ற காலம் யாதோ என்று மலைவுருவண்ணம் நூலின் இறுதியில் நூல் செய்த காலம் இஃது என்பதை,

"பார்கெழு சகாத்த மூவைஞ்
ஞூற்றெழு பானான் காவ
தாகிய கரநா மங்கொள்
ஆண்டுறு விடைஞா யிற்றில்
சீர்கெழும் அல்ல மன்றன்
திருவிளை யாடற் காதை
கார்கெழு மிடற்றெங் கோமான்
கருணைகொண் டியம்பி னானே"

(மான்மிய கதி. செய்யுள் - ௨௩)

என்ற செய்யுள் அறிவிக்கின்றது. இச் செய்யுளிற் கண்ட வாறு நூலின் காலம் சக ஆண்டு 1574, தமிழ் கர ஆண்டு வைகாசித் திங்களாகும். அஃதாவது கி. பி. 1652-ஆம் ஆண்டாகும். ஆதலின் இந் நூல் இயற்றப்பெற்று முந்நூற்று நான்கு ஆண்டுகளாகின்றன என்று துணிந் துரைக்கலாம். இச் செய்யுளில் "கார்கெழு மிடற்றெங் கோமான் கருணைகொண் டியம்பினான்" என்று ஆசிரியர் தம்மைப் படர்க்கையாக வைத்துக் கூறியுள்ளார். இவ் வாறு நூலாசிரியர்கள் தம்மைப் பிறர்போல் வைத்துக் கூறுதல் நாந்தி எனப்படும். இவ்வாறு வடநூலார் கூறுதல் உண்டு. அம் முறையினை மேற்கொண்டு அடிக ளார் இச் செய்யுளை இயற்றியுள்ளார்.

## ௫. நூலின் பெயர்க் காரணம்

பிரபு லிங்க லீலை என்ற சொற்றொடர் பிரபு+லிங்க+லீலை என்று பிரிக்கப்பெறும். இது வடமொழித் தொடர். பிரபு என்ற சொல் எல்லாமாய் அல்லவுமா யிருக்குந் தன்மை என்ற பொருளைத் தரும். இறைவன் இயங்கியற் பொருள், நிலையியற் பொருள் ஆகிய எல்லாவற்றிலும் அத்துவிதமாய்க் கலந்திருத்தலின் யாவுமாக வுள்ளான். இதனை இந் நூலுள் "யாவுமாகி யிருக்குஞ் சிவத்தொடு" (முத்தாயி - செய்யுள், ௧௬) என்று வருதலானும் அறிக. அவ்வாறிருப்பினும் அவற்றில் தொடக்குறாமல், அப் பொருளாகவே ஆகிவிடாமல், பொருள் தன்மையால் அவற்றின் வேறாகவும் உள்ளான். இவ்வியல்பே எல்லாமாய் அல்லவுமாயிருக்குந் தன்மை. இக் கடவுள் தன்மையைத் திருவாதவூரடிகளும் "யாவையுமாய் அல்லவுமாஞ் சோதியனே" என்று சிவபுராணத்துள்ளும், "பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப், பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையன்" என்று கண்டபத்துள்ளும் அருளியுள்ளார். மற்றும் இச் சொற்கு யாவர்க்கும் மேலாயிருக்குந் தன்மை என்றும் பொருள் உரைப்பர். இலிங்கம் என்பது பரசிவம், பிரமம் என்னும் திருப்பெயர்களாற் குறிக்கப்பெறும் பெரும் பேரியவுள். லீலை = திருவிளையாடல். இஃது அவன் பெருங்கருணைத் திறத்தால் ஆன்மாக்களை உய்விக்கச் செய்யும் திருவிளையாடல். அவனது அளவிலாற்றலுக்கு இச் செயல் மிகச் சிறியதோர் காரியமாகக் காணப்படுதலின் விளையாட்டாயிற்று. இதனை "விளையாட்டென்பது ஐங்கலப் பாரம் பொறுத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பது போல அத்துணை எளிதிற் செய்யும் ஆற்றலுடைமை பற்றியே" என மாதவச் சிவஞான யோகிகள் கூறுதலானும், திருவாதவூரடிகள் "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" (திருவெம்பாவை) என்றருளுதலானும் அறிக. மற்றும், பிரபு என்னும் சொல் உலகிற் செல்வமுடையார்க்கு வழங்குதலை

யும் காண்கின்றோம். "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்" (திருக்குறள், உசஉ) என ஆன்றோர் உரைப்பாராதலின் அத்தகு அருட் செல்வம் நிறைந்துள்ளவனாகிய இறைவனுடைய திருவிளையாடல் என்று கூறுதலும் பொருந்தும். "அருளாவது உயிர்கட்குப் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவம் அளித்தற்கண் உளதாகிய இரக்கம்" (சிவஞானபாடியம்) எனவே எல்லாமாய் அல்லவுமாயிருக்குந் தன்மையுடைய அல்லது யாவர்க்கும் மேலாயிருக்குந் தன்மையுடைய அல்லது அருட் செல்வராகிய சிவத்தினது திருவிளையாட்டை யுணர்த்தும் நூலெனப் பொருள்பட்டு ஆறும் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் இந் நூலுக்குக் காரணக் குறியாயிற்று.

## அ. வீட்டு நூலுள் அறிவு நூல்

"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" (நன்னூல்) என்பர் இலக்கண நூலார். ஆதலின், எந் நூலும் இந்நாற் பொருள்களுள் ஒன்றையேனும் பலவற்றையேனும் உணர்த்துதல் வேண்டும். அவ்வாருயின் இந் நூலால் உணர்த்தப்படும் பொருள் யாதெனப் பார்ப்போம்.

துதிகதியில்,

"கன்றிய வைரிகள் காதுங் காதையும்
வன்றுயர் மதனநோய் வளர்க்கு மாற்றமும்
புன்ருெழி லினர்வறும் பொழுது போக்கலும்
அன்று,அரு ளல்லமன் அமல லீலையே"

(செய்யுள், கசு)

(அருள் நிறைந்த அல்லமனது குற்றமற்ற இத் திருவிளையாடலானது வெறுப்புற்ற பகைவர்களைக் கொலை செய்து அழித்ததை யுணர்த்துங் காதையும் அன்று; மிக்க துயரத்தைச் செய்யும் காம நோயை வளர்க்கும் சரிதமும் அன்று; இழிசெயலினர் வீண்பொழுது கழித்தற்காகப் படிக்கும் நூலும் அன்று) என்ற இச் செய்யுளில் எதிர்மறைப் பொருளில் இந்நூல் நாற்பொருள்களில் பொருளையும் இன்பத்தையும் உணர்த்துவதன்று என்ருர்.

மற்றும்,

"மயலளற் றூன்றுகோல், மல்கும் அன்பெனும்
இயலெழுத் தெழுதுகோல், அங்க லிங்கமாம்
வியனிலத் தளவுகோல், மதிவி ளக்கினை
அயர்வறத் தூண்டுகோல் அமல லீலையே"

(செய்யுள், கரு)

(அமல லீலையாகிய இந் நூல் மயக்க வுணர்வாகிய சேற்றுக்கு ஊன்றுகோலாகும்; குரு இலிங்கம் சங்கம பத்தி யென்னுஞ் செஞ்சொல்லை எழுதும் எழுது

கோலாகும் ; அங்கத்தலம் - இலிங்கத்தலம் என்னும் அகன்ற நிலத்தை அளக்கும் அளவுகோலாகும் ; அறிவாகிய விளக்கை ஒளி குன்றுவண்ணம் தூண்டுங் கோலாகும்.)

என்னும் செய்யுளில் உடன்பாட்டுப் பொருளில் இந் நூற்பயனை உணர்த்துகின்றார். இதனால் மறுபிறப்பும் இருவினைப் பயனும் கடவுளும் இல்லை யென்னும் மயக்க வுணர்வை நீக்கி, குரு, இலிங்க, சங்கமபத்தியை உண், டாக்கி, உயிர், (பசு) இறைவன் (பதி) இலக்கணங்களை யுணர்த்தி, மெய்யுணர்வை யுண்டாக்கும் நூலென்பது பெறப்படும் ஆதலின், இந்நூல் வீட்டு நூலாகும். வீட்டு நூலுள்ளும் அறிவு நூல் சிறந்தது ; ஏனைய சரியை, கிரியை, யோகத்தை யுணர்த்துவன; அத்துணைச் சிறப் புடையன அல்ல என்பர். இந் நூலுள் யாண்டும் வீடடைதற்கேதுவாகிய மெய்யறிவு பயக்கும் நெறியினையே உணர்த்தப்படுதலின் இந்நூல் வீட்டு நூலுள் சிறப்புடைய அறிவு நூலாகும். மற்றும், தீயோரை அழித்து நல்லோ ரைக் காக்க அவ்வப்பொழுது கடவுளர் உலகில் தோன்றி நடத்திய திருவிளையாடல்களென அறிவிக்கும் காதைகள் பல உண்டு. அவ்வாறு அருளின்றி உயிர்களை அழித்தல் முதலிய மறச்செயல்களைச் செய்யாமல் அல்லமர் அருள் நெறியாலும் அறிவுரையாலும் மக்களை நன்னெறியிற் செலுத்தி வீடடையச்செய்த திருவிளையாட்டை அறிவித்த லின் இந் நூல் அமலலீலை யாயிற்று.

## சு. நூலின் பொது இயல்பு

இந்நூல் துதிகதி, கைலாச கதி, மாயையினுற்பத்தி கதி, மாயை பூசைகதி, பிரபுதேவர் வந்த கதி, விமலை கதி, மாயை கோலாகல கதி, வசவண்ணர் வந்த கதி, அக்கமாதேவி யுற்பத்தி கதி, அக்கமாதேவி துறவு கதி, கொக்கிதேவர் கதி, முத்தாயி அம்மை கதி, சித்த ராமையர் கதி, வசவண்ணர் கதி, மருளசங்கரதேவர் கதி, இட்ட லிங்க கதி, கதலிவன கதி, சாதகாங்க கதி, கோரக்கர் கதி, முனிவரர் கதி, சூனிய சிங்காதன கதி, சூனிய சிங்காதனத்திலிருந்த கதி, ஆரோகண கதி, மனோலய கதி, மான்மிய கதி என்கிற இருபத்தைந்து கதிகளையுடையது. இவற்றுள் இட்ட லிங்க கதி, சாத காங்க கதி மனோலய கதி, மான்மிய கதி ஆகியவை சமய நூற் கருத்துக்களையே நுவல்வன. இந்நூல் 1159 செய் யுள்களைக் கொண்டுள்ளது. செய்யுள்கள் பாவினங்களே யாகும்.

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்"
(தொல். செய். உ௩௪)

என்னும் நூற்பா பழைய கதைமேற் கூறுதலும் தோல் என்னும் வனப்புடையது என்றுரைத்தலான் இந்நூல், நூலிற்குரிய எண்வகை வனப்புள் தோல் என்னும் அழகினை யுடையதாம். இந்நூலின் தலைவராகிய அல்லமரும் வசவண்ணர் முதலிய வீரசைவ சமயப் பெரியோர்களும் உலகில் இருந்தவர்கள்; அவர்களுடைய காதையையே அறிவித்தலின் உள்ளோன் தலைவனாக உள்ளது புனைதல் என்னும் வகையில் யாத்ததாகும் இந்நூல்.

இந் நூலின்கண் பல வருணனைகள் நிரம்பியுள்ளன. கயிலைச் சிறப்பு, கயிலையில் சிவபெருமான் திருவோலக்கங்

கொண்டு வீற்றிருத்தல், சிவபெருமானுடைய தோற்றம், உமாதேவியின் தோற்றம், மோகினித்தாய் மாயையை வளர்க்கும் சிறப்பு, மாயை வளர்தற் சிறப்பு, மாயையைத் தோழியர் அலங்கரித்தல், அல்லமன் உருவச் சிறப்பு, அல்லமன் புரிந்த பருவ விளையாட்டுக்கள், மாயையுற்ற காம மயக்கம், மாயை சென்ற பாலைநிலம், கொக்கிதேவர் அமைத்த நந்தவனம், திருப்பருப்பதம்; அல்லமர் வருகையை நோக்கிக் கல்யாணபுரத்தை அலங்கரித்தல், அல்லமரை எதிர்சென்றழைக்க வசவண்ணர் தங்குழாத்துடன் போதல், அல்லமருக்கு உணவு படைத்தல் ஆகிய இடங்கள் பல செய்யுள்களால் அணிநலங்கள் தோன்றப் புனைந்துரைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள வருணனைகள் மிகை என்றும் குறைவென்றும் சொல்லமுடியாதவாறு திட்டமாக அமைந்துள்ளன. மனக்கிளர்ச்சியைப் படிப்போர்க்கு உண்டுபண்ணுவனவாகவும் உள்ளன. மேலும் இதுபற்றிக் கூறுவாரோ என்றெண்ணும் அவாவையும் எழுப்புகின்றன.

ஆங்காங்கு வரும் உவமை, உருவகம், வேற்றுப் பொருள் வைப்பணி முதலிய பொருளணிகள் நூற்பொருளை அழகுபடுத்துகின்றன. உலகில் வழங்கிவரும் பழமொழிகளை ஆசிரியர் ஏற்ற இடங்களில் ஆள்வதால் அரிய பொருள்களும் மனத்திற்குச் சலிப்பைத் தராமல் விளக்கமாகின்றன. சிவப்பிரகாசருடைய பொன்னனைய செஞ்சொற்களில் திருவள்ளுவருடைய குறள் மணிகள் ஆங்காங்கே மிளிர்ந்து அழகுக்கு அழகு செய்கின்றன. பிற நூல்களில் காணாத புத்தம் புதிய கற்பனைகள் ஆசிரியருடைய நுண்மாண் நுழைபுலனை வெளிப்படுத்தி இறும்பூது அடையச் செய்கின்றன. உலகமக்களுக்கு வேண்டிய பொது நீதிகளும், அறங்களும் தக்க இடங்களில் கூறுவதால் உண்மை நூற் கருத்துக்களை உணர விரும்பும் மேலோரேயன்றி ஏனையோரும் கேட்டுப் பயனுறும் பான்மையைப் பெற்றுள்ளது. சமயநூல் என்பதற்கேற்பப் பிறன்கோள் மறுத்தலும் தம்கோள் நிறுவுதலும் நனிநாகரிகமாக எடுத்துக்காட்

டுடன் விளக்கப்படுகின்றன. உண்மை நூற் கருத்துக் களைச் சுருங்கச் சொல்லல் என்னும் அழகமையத் திட்ப மாக நூற்பாவைப்போல் விளங்கவுரைத்தல் சிவப்பிரகாச முனிவருக்கே யமைந்த தனிப்பண்பாகும். இந்நூலின் தலைவராகிய அல்லமர் இறைவனுடைய அவதாரம் என் பதை யாண்டும் நிலைநாட்டிச் செல்கின்றார். அல்லமதேவர் நித்தியமாக எங்கும் நிறைந்து விளங்குகின்றார் என்ற கருத்துத் தோன்ற,

"இன்னவா றருளி னாலே
இவருற விவர்வே றென்னாது
அன்னைபோ லுயிர்கட் கெல்லாம்
ஆரருள் ஒருங்கு செய்தே
என்னையா ளெனக்கொண் டாளும்
இணையடிக் குருகு கேசன்
மன்னுமா தவர்கள் நெஞ்ச
மலர்தொறும் வாழா நின்றான்"

(மான்மிய கதி. செய். உ0)

என்று மங்கல முடிபாக இந்நூலை நிறைவேற்றியிருக்கும் அழகு மிகமிகப் போற்றுதற்குரியது. இந் நூலில் பல பெரியோர்களுடைய வரலாறுகள் விரவிவரினும் அல்லமர் மாயையைத் துறந்தவர், பல அன்பர்களுக்கு ஞானசிரிய ராகி அருள்புரிந்தவர், எங்கும் நிறைந்தவர் என்ற முப் பெரும் பொருளைத் தன்பாற் கொண்டுள்ள விழுமிய நூல் என்று கூறுதல் பொருந்தும்.

## கo. நூலாராய்ச்சி

துதிகதி

துதிகதி முதலாவதாக வுள்ளது. இக் கதியில் ‘பூவாய்’ என்று தொடங்கும் செய்யுள் முதல் “பரவை கேள்வன்” என்பது ஈருகப் பத்துப் பாட்டுக்களில் கடவுள் முதலியோரைத் துதித்து, அதற்குமேல் அவையடக்கம் முதலியனவும் கூறப்பட்டிருப்பினும் தலைமைபற்றித் துதிகதி எனப் பெயரிடப்பட்டுள்ளது. கன்னடப் பிரபு லிங்க லீலையிலுள்ள துதிகதியில் குரு, வசவண்ணர், சென்னவசவேசர், அல்லமாப்பிரபு தேவர், சித்தராமேஸ் வரர், அக்கமாதேவி, மடிவாலமாச்சையர், சிவசரணர் ஆகியவர்களுக்கு வணக்கம் கூறப்பட்டுள்ளது. சிவப்பிர காச அடிகளார் தமிழ்நாட்டில் தமிழ்ப்புலவர்கள் சைவ சமய நூல்களை இயற்றிவரும் முறையை யனுசரித்துப் பின் வருமாறு செய்துள்ளார். சைவசமய நூல்களில் முதலில் விநாயகர் காப்புக் கூறுதல் வழக்கமாகவுளது. அதன்படி காப்புச் செய்யுள் பாடியுள்ளார். பின்னர் சிவபெருமான், உமாதேவி, விநாயகர், முருகன் ஆகிய கடவுளருக்கு வணக்கம் கூறுகின்றார். அதன்பின்னர் அல்லமாப் பிரபு தேவர், வசவேசர், சென்னவசவேசர், மடிவாலமாச்சையர் ஆகிய வீரசைவ சமய குரவர்களுக்கு வணக்கம் கூறி யுள்ளார். அடிகளார் தமிழ்நாட்டில் சைவ சமயத்தை நிலைநாட்டிய சைவ சமய குரவர்கள் நால்வரிடம் பேரன்பு பூண்டவர். ஆதலின், அவர்களுக்கு வணக்கம் கூறு கின்றார். பின்னர்ச் சிவனடியார்கள் என்ற தலைப்பில் தமிழ் நாட்டில் திகழ்ந்த சைவ சமயப் பெரியோர்களையும் சிவ சரணர்களையும் ஒருங்கே வைத்து ஒரு செய்யுளில் பாடித் துதித்துள்ளார்.

அடிகளார் கடவுளர் துதியாகக் கூறும் பாக்களில் அவர்களைப் பற்றிய புராண வரலாறுகளையும் அவர்களு டைய ஊர்திகள், அவர்கள் உடலில் அணிந்துள்ள அணி

கலங்கள் ஆகியவற்றையுங் கொண்டு கற்பனை யமைத்து அழகுறப் பாடுவர். அவ்வாறே காப்புச் செய்யுளில், இந்திரன் சீகாழியில் நந்தவனம் வைத்தது, அகத்தியர் கடலை யருந்தியது, அகத்தியருடைய கமண்டல நீரை விநாயகர் காக வடிவங்கொண்டு கவிழ்த்துக் காவிரியாகப் பெருகும்படி செய்தது ஆகிய மூன்று புராணக் கதைகளை யடக்கி,

"சுரகு லாதிபன் றூய்மலர் நந்தனம்
பெருக வார்கடற் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளுந் தலைக்கணி யாக்குவாம்"

என்று பாடியுள்ளார்.

சிவபெருமானுடைய துதியில் "எங்கர தலத்தின், மேவா வமர்ந்த மாமணியைத் தொழுது வினைக்கு விடை கொடுப்பாம்" என்று தம் கரமாகிய திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இட்டலிங்கப் பெருமானைத் துதிக்கின்றார். வீர சைவர்கள் ஞானசிரியரால் தரிக்கப்பெற்ற இட்டலிங்கத்தைத் தம் கரதலத்தில் வைத்து வணங்குவர்; பிற தெய்வந் தொழார். அத்தகு தூய்மை நெறியை முதற்கண் புலப்படுத்துகின்றார். அவ்வாறு வணங்குவது இம்மைப்பயன் கருதியன்று; வினையறுதற்கே யாம் என்பார் "வினைக்கு விடை கொடுப்பாம்" என்ற தொடரால் விளக்குகின்றார்.

உமாதேவியார் வணக்க முழுவதும் அடிகளாரின் கற்பனை. உமையம்மையார் சிவபெருமானிடம் ஊடல் கொண்டிருக்கிறார். அவ்வூடலை நீக்கவேண்டும். அதற்கு உமையின் திருவடியில் தனது முடிபடப் பணிந்து வணங்குகின்றார் சிவபெருமான். அப்பொழுது உமையம்மையார் ஊடல் தணிந்து மனமகிழ்ச்சி யடைந்தார். எதனால் மகிழ்ச்சி யுற்றார்? இறைவன் தன் பாதத்தை வணங்கியதற்கும் அன்று; தனது நெற்றிவனப்பிற்குப் பகையாகவுள்ள சிவபெருமானது முடியிலுள்ள பிறைச் சந்திரனும் அல்குலுக்குப் பகையாகவுள்ள பாம்பும் தன் பாதத்தில்

விழுந்ததற்கும் அன்று; ஆனால் தனக்குச் சக்களத்தியாக வுள்ள கங்கை தன் பாதத்தில் வணங்கியதற்காக மன மகிழ்ச்சி யடைந்தாராம் உமையம்மையார். அத்தகைய உமையை வணங்குவாம் என்று கூறுகின்றார். இது சிவ பெருமான் முடியிலுள்ள சந்திரன், பாம்பு, கங்கை யாகிய வற்றைக் கொண்டே உண்டாக்கிய கற்பனை.

முருகனுக்குக் கூறிய வணக்கச் செய்யுளைப் பார்ப் போம். முருகன் சிவபெருமானைக் காண மயில்வாகனத்தி லேறிச் செல்கிறார். சிவபெருமானுடைய திருமேனியில் அணியாக விளங்குவது பாம்பு. அப்பாம்பு மயிலைக் கண்ட தும் அஞ்சி இறைவன் திருமேனியிலுள்ள தலைமாலையி னுள்ளே புகுந்துகொண்டது. பிறகு மயில் போய்விட்டதா என்று பார்க்க மெல்லத் தலையோட்டிலுள்ள துவாரத்தி னின்றும் தலையை நீட்டுகிறது. இன்னும் போகாததால் தலையை உள்ளே இழுத்துக் கொள்கிறது. இவ்வாறு பாம்பு, துளையுள் போகவும் மெல்லத் தலையை நீட்டி வாங்கவும் செல்லும்படியான மயில் வாகனத்தை யுடைய முருகப் பெருமானது இணையடிக் கமலங்களைத் தொழு வோம் என்று துதி கூறுகின்றார். இது முருகப் பெருமா னுடைய வாகனத்தையும் சிவபெருமானுடைய திருமேனியி லுள்ள பாம்பையும் தலைமாலையையுங் கொண்டு அமைத்த கற்பனை. இதன்கண் பாம்பு மயிலைக்கண்டு அஞ்சுதலாகிய இயற்கைத் தன்மையையும் பாம்பு பகையைக் கண்டு அஞ்சித் தலையை நீட்டுதலும் உள்வாங்குதலுமாகிய தன்மையையும் அமைத்துள்ள அழகு போற்றத்தக்கது.

அல்லமாப்பிரபு தேவர் வணக்கத்தில் அவருடைய பெருமையை முதற்கண் கருத்துப் பொருளாக அமைத் துக் காட்டுகின்றார். அல்லமர் மாயையை வென்றவர். இச்செயலே இந் நூலில் கூறப்படும் தலையாய பொருள். அறுபத்து நான்கு கலைகளை யுணர்ந்த புலவர்கள், சித்தர்கள், தேவர்கள், முனிவர்கள், பிரமன், திருமால் இவர்கள் யாவரும் மாயையால் கட்டுண்டவர்கள். ஆதலின் அவர்களை விழுங்கி யுமிழாத வலிமைபொருந்திய

மாயையினுடைய தலையை மிதிக்கும்படியான அல்லம ருடைய செந்தாமரை மலர்போலுந் திருவடிகளைத் தலைக்கு அணிவோம் என்று கூறுகின்றார்.

அச் செய்யுள் :

"கலையை மதிக்கும் புலவர்தமைச்
சித்தர் குழாத்தைக் கடவுளரை
நிலையை மதிக்கு முனிவரரைத்
திசைமா முகனை நிரைவளையாச்
சிலையை மிதிக்கு நெடியோனை
விழுங்கி யுமிழாத் திறன்மாயை
தலையை மிதிக்கும் அல்லமன்செங்
கமல மலர்த்தாள் தலைக்கணிவாம்."

என்பது. ஈண்டு மமகாரன் புதல்வியாகிய மாயையைக் குறிப்பதாகக் கொள்ளுதல் பொருந்தாது; அவளுக்கும் புலவர், சித்தர் முதலியோர்க்கும் யாதோர் இயைபுமில்லை யாதலின். இங்குக் குறிக்கப்படும் மாயை உலகை மயக்கும் மாயை. இப் பெயர் ஒற்றுமையால் இந் நூலில் விரவி வரும் இடங்கள் பல உண்டு. அவற்றை ஆராய்ந்தறிதல் வேண்டும். சிவஞானிகள் மாயை வயப்படாதவர்கள்; ஆதலின் அவர்களை விடுத்து ஏனையோரைக் கூறி மாயை யின் ஆற்றலையும் மாயையை வென்ற அல்லமரது பெருமையையும் புலப்படுத்தியிருத்தல் காண்க.

வசவண்ணர் வணக்கத்தில், வசவண்ணர் செய்த செயற்கருஞ்செயலை அமைத்துப் பாடியுள்ளார். வசவண்ண ருடைய திருமடத்தில் நாள்தோறும் எண்ணிறந்த அடியார்கள் உணவு உண்பர். வசவண்ணருடைய திரு மடத்தில் திருட எண்ணிய சில கள்வர்கள் வழுதுணங்கா யைத் துணியில் முடிந்து இலிங்கம்போல் கழுத்தில் தரித்துக்கொண்டு சிவசரணர்கள் போல் மடத்துள் புகுந் தனர். உணவு உண்ணுங் காலத்தில் இலிங்க அர்ப்பணம் செய்த பின்னர் உண்ணுதல் வீர சைவசமய மரபு. இதனை அத் திருடர்கள் அறியார்கள். அடியார் வழிபாட்டைச்

செய்ய வசவண்ணர் வந்தார். சிவசரணர்கள் யாவரும் இலிங்கத்தை எடுத்துக் கரத்தில் வைத்துக்கொண்டு வழிபாட்டினை ஏற்றுக்கொள்ள இருந்தனர். கள்ளவேடம் புனைந்து வந்திருந்தவர்கள் ஒன்றும் அறியாமல் அஞ்சி யொருவரை யொருவர் பார்த்து விழித்தனர். அதனை அறிந்துகொண்டார் வசவண்ணர். அவர்களையும் தூய அடியவராக்கத் திருவுள்ளங்கொண்டார். அப்பொழுது இறைவனை எண்ணி "சிவபெருமானுக்கு யாம் செய்கின்ற தொண்டு உண்மையாகவேண்டி இங்குப் பொய் வேடம் பூண்டு வந்துள்ள கள்வர் யாவரும் தூய உள்ளத்துடன் மெய்யடியர் ஆவாராக" என்று தம் உள்ளத்துக் கருதினர். அவர்கள் ஒவ்வொருவருடைய கரத்திலிருந்த வழுதுணங்காயும் சோதி இலிங்கமாக விளங்கிற்று. அத் தகு அருள் வள்ளலாகிய வசவேசருடைய தாமரை மலர் போலும் திருவடியை வணங்குவாம் என்று துதி கூறு கின்றார். இதன்கண் கள்வரை மெய்யடியராகத் தம் அருளால் வசவர் ஆக்கிய அருளாற்றலை விளக்கும் வரலாறு பொதிந்துள்ளது. இவ் வரலாறு வசவபுராணத் துள் "கள்ளர்க்கருளிய திருவிளையாடல்" என்ற தலைப்பில் உளது.

மடிவால மாச்சையர் என்பவர் சிவசரணர்களின் ஆடைகளை மாசுபோக்கித் தூய்மைப்படுத்திக் கொடுக்குந் தொண்டினை மேற்கொண்டிருந்தார். அவர் அவ்வாறு செய்துவரும் ஒரு நாளில், அவர் மாசு போக்கிக் கொண்டு வந்த ஆடைகளை ஒரு வீரன் அழுக்குப் படியச் செய்தான். அவர் வெகுண்டு அவனுடைய கரத்தைத் துணித்தார். அதனை அறிந்த விச்சலமன்னன் அவரைக் கொல்லப் படைகளை ஏவினன். அப் படைகளையும் தம் கரத்திலிருந்த வாளால் சின்ன பின்னமாகக் கொன்று குவித்துநின்றார். இவ் வரலாற்றை அமைத்து மடிவால மாச்சையரைத் துதிக்கின்றார். அடியார்க்குச் செய்த இன்னலால் வரும் பிறப்பில் துன்புறுவண்ணம் இப் பிறப்பிலேயே அக் குற்றத்திற்குரிய தண்டனையை மடிவால மாச்சையர்

செய்து விட்டதால் "கருணை மடிவால மார்ச்சன்" என்றும் புகழ்கின்றார்.

நால்வர் துதியில், திருஞானசம்பந்தர் மைலாப்பூரில் சிவநேசருடைய மகளார் பூம்பாவையின் எலும்பைப் பெண்ணாக்கிய வரலாற்றையும், திருநாவுக்கரசருக்கு மகேந்திரவர்மனால் இடப்பட்ட நீற்றறை தாமரை மலர் களையுடைய பொய்கைபோல் அமைந்த வரலாற்றையும், சுந்தரர்க்குச் செங்கல் பொன்னாகிய வரலாற்றையும், மாணிக்கவாசகர் பொருட்டு நரிகளைப் பரிகளாக்கிய வரலாற்றையும் அமைத்துள்ளார். இவ்வாறு செய்தற் குரிய தமிழ்ப் பாசுரங்களைப் பாடும் நால்வரையும் பணிகுவாம் என்று துதிக்கின்றார்.

ஏனைய அடியார்கள் யாவரையும்,

"பரவை கேள்வன் திருத்தொண்டத்
தொகையு ளடியார், பத்தியெலாம்
உருவ மாகும் நம்சோம
நாதன் துதியு ளுறுசரணர்,
அரவ அணியா னடியார்கள்,
மற்றை யவர்க ளனைவருந்தாம்
விரவி நாளும் இருப்பஇடங்
கொடுக்கும் உள்ளம் விரிந்தன்றே."

என்ற பாசுரத்தில் துதிக்கின்றார். சுந்தரர் திருத் தொண்டத் தொகையைப் பாடியருளினார். அதில் தில்லை வாழந்தணர் முதலிய அடியார்களைக் கூறியுள்ளார். அவ் வடியார்களும், சோமநாத ஆராத்திரியர் என்பவர் கணசாத்திர நாமாவளி என்ற நூலில் கூறியுள்ள சிவ சரணர்களும், மற்றும் இவருள் அடங்கப்பெறாத சிவனடி யார்கள் யாவரும் கலந்து எந்நாளும் தங்கியிருக்கத் தம் உள்ளம் விரிந்து இடங்கொடுக்கும் என்று கூறுகின்றார். இதனால் அடிகளார்கொண்டுள்ள அடியாரன்பு தெற்றென விளங்குகின்றது. முதற்கண் சைவ அடியார்களைக் குறித் தார். அடுத்தாற்போல் சிவ சரணர்களைக் கூறினார்.

பின்னர் "அரவ அணியான் அடியார்கள், மற்றையவர் எனைவருந்தாம், விரவி நாளும் இருப்ப இடங்கொடுக்கு உள்ளம் விரிந்து" என்று அவ்விரு வகையுள் அடங்கா மற்ற அடியார்களையும் சேர்த்துக் கூறினர். அடியார்கள் யாவருங் கலந்து தம் உள்ளத்துள் வாழவேண்டுமென்ற பெருவிருப்பால் அணுத் தன்மையான தம் மனம் விரிந்து அவர்கள் தங்க இடங்கொடுக்கும் என்றார். அடிகளார்க்கு அரனடியவரிடத்து எத்துணையன்பு! பாருங்கள். அடிகளாருடைய விரிந்த மனப்பான்மையை இச் செய்யுள் நன்கு விளக்குகின்றது. சைவம், வீரசைவம் என்ற வேறுபாடு கருதாமல் அரனடியார்கள் யாவரையும் ஒப்ப நோக்குகின்றார். அடியார் என்று கூறுதல் சைவசமய மரபு. சரணர் என்று கூறுதல் வீரசைவ மரபு ஆதலின் அம் மரபுச் சொற்களையே எடுத்தாள்கின்றார்.

இந் நூலில் அல்லமதேவர் இறைவனாகவே கருதப் படுகின்றார். இறைவனுக்குரிய எல்லா இயல்புகளும் இவர்பால் வைத்துச் சொல்லப்படுகின்றன. **உற்பத்தி** என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ள செய்யுள்கள் உலக உற்பத்தியை அறிவிப்பதோடு அல்லமருடைய சிறப்பை யும் விளக்குவனவாக வுள்ளன; யாவர்க்கும் தலைவன் அல்லமனே என்ற பொருளை இறுதிச் செய்யுள் அறிவிக் கின்றது.

**உற்பத்தி கூறுமாறு:** பரசிவம், பிரமம் என்று சொல்லப்பட்டு, எவ்வித விகாரமும் இல்லாததாகி, வாக்கு மனங்களுக்கு எட்டாத ஒப்பற்ற சிவலிங்கத்தினின்றும் சதாசிவன் தோன்றுவன்; அவனை ஞானசக்தி பொருந் துவாள்; அவர்களால் சிவன் உதிப்பன்.

அச் சிவனுக்குச் சத்தி இச்சாசத்தியாவாள். அவ் விருவரினின்றும் உருத்திரன் தோன்றுவன். அவ் வுருத் திரனுக்குச் சத்தி கிரியாசத்தியாவாள். அவ் விருவரி னின்றும் திருமால் உதிப்பன்; அவனுக்குச் சத்தி திருமகள் ஆவாள்.

அத் திருமால், திருமகள் இருவரினின்றும் பிரமன் தோன்றுவன்; அவனுக்குச் சத்தி நாமகள் ஆவாள். அவ் விருவருங்கூடிப்படைக்க உலகத் தோற்றம் உண்டாகும்.

இவை யாவும் என்றும் அழியாமல் (நித்தியமாய்) உள்ளவனும் நம் ஞானசிரியனுமாகிய குகேசனுடைய நினைவளவிலே (சங்கற்ப சிருட்டியால்) உண்டாகும்.

## உலகத் தோற்ற விளக்கம்

பரசிவம்—பிரமம் என்று கூறப்படும்
சிவலிங்கம்
↓
சதாசிவன் + ஞானசத்தி[1]
↓
சிவன் + இச்சாசத்தி
↓
உருத்திரன் + கிரியாசத்தி
↓
அரி + திருமகள்
↓
நான்முகன் + கலைமகள்
↓
உலகத் தோற்றம்.

குகேசன் என்னும் சொற்குப் பொருள் கோரக்கர் கதியில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. அல்லமர் கோரக்கனிடம்,

"இருந்தபடி குகேசனை நீ அறிவையெனில்
நின்பிறவி யெனுநோய் தீர்ந்து
பொருந்துறுவை பேரின்பம்."

என்றார். அதற்கு அவன்,

---

1. இறைவன் சத்தி ஒன்றுதானே தொழில் வேறுபாட்டால் இச்சை - ஞானம் - கிரியை என்று மூன்று வகைப்படும். அவற்றுள் இச்சாசத்தி உயிர்கள்மாட்டு வைத்த இரக்கமாம். ஞானசத்தி அவ்வுயிர்கட்கு அறிவை எழுப்புதலாம். கிரியை அவற்றை ஐந்தொழிலில் விட்டு நடத்துவதாம்.

"எந்தாய்! பரிந்து அருள்செய் குகேசனெனு மொழிப்பொருள் ஏது? அது கூறப்படுவன் யாவன்? தெரிந்துணர அருள்செய்வாய்" என்றான். அதற்கு அல்லமர்,

"குகையிதயம் அதன்கண் அமர் இறையீசன் என்று பொருள் குறித்துக் கொண்மோ, நிகழனைய குகேச மொழியுடையன் யான்" என்று கூறுகின்றார். அஃதாவது இதயமாகிய குகையில் அமர்ந்துள்ள இறை ஈசன். அவனே குகேசன் (குகை + ஈசன்) அப்பொருளாக வுள்ளவன் தானே என்றுங் கூறுகின்றார். ஆதலின் "நித்தனங் குருகுகேசன்" (துதிகதி. செய்யுள், உ0) என்னுந் தொடர் அல்லமரைக் குறிக்கின்றது. இதன் பொருள் ஊன்றிப் பார்க்குங்கால் "மலர்மிசை யேகினான்" (குறள்) என்ற பொருளையே தருகின்றது. மற்றும், இத் தொடரால் இறைவனை உயர்ந்த மலைச் சிகரத்தில் கோவில் அமைத்து வழிபடுதல்போலப் புலன்கள் வெளியுலகிற் செல்ல ஏதுவாக ஒன்றுமின்றிக் குறித்த ஓரிடத்திற் செலுத்த ஏற்றதாகவுள்ள குகைகளிலும் ஈசனை வைத்து வழிபடுதல் பண்டைய வழக்கமென்பதும் பெறப்படும். எல்லோரா குகை முதலிய இடங்களிலும் இறைவனை அமைத்து வழிபட்டிருத்தலும் யாம் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கதாம்.

மேலும் முத்தேவர்களுக்குரிய தொழில்களும் கூறப் பட்டுள்ளன. நான்முகனுக்குப் படைப்புத் தொழில் ஒன்றே. திருமாலுக்குப் படைத்தலோடு காத்தற் றொழிலு மாகிய இரண்டாம். உருத்திரனுக்குப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றுமாம். இவர்களுக்கு இத் தொழில்களைக் கொடுத்து அப் பதவியில் வைத்தான் நம குகேசனாகிய அல்லமன் என்பதால் அல்லமன் மூவர்க்கும் தலைவனாகிய முதல்வன் என்பது பெறப்படும்.

**கைலாயகதி**

கைலாய கதி இந் நூற்குத் தோற்றுவாயாக அமைந் துள்ளது. இடைக்காலத்தில் தோன்றிய புராணங்களுள்

பல ஒரு முனிவர் மற்ருேர் முனிவருக்கு உரைப்பது போலக் கூறுவனவாகவும், கயிலேயில் நிகழ்ந்ததையறிவிப்பதாகக் கதையைத் தொடங்குவனவாகவும் இருக்கக் காண்கின்ருேம். மற்றும், உலகில் பிறந்து அரிய செயல்கள் செய்தவர்களுடைய வரலாற்றுடன் முன் நிகழ்ச்சியாக அவரைக் கயிலாயத்தோடு தொடர்பு படுத்துவதையும் அறிகின்ருேம். இதற்குப் பெரிய புராணத்துள் சுந்தரர் வரலாற்றை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். சுந்தரர் திருமுனேப் பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவர் குலத்தில் சடையனுர்க்கு இசைஞானியார் என்னும் கற்பரசியாரிடம் தோன்றினுர். அவருடைய திருமணக் காலத்தில் சிவபெருமான் கிழ அந்தணராக வந்து தடுத்தாட்கொண்டார். ஆட்கொண்ட அப்பொழுதே தேவாரப் பாசுரங்களேப் பாடத் தொடங்கினுர். பரவையார், சங்கிலியார் என்னும் மங்கையருடன் கூடி வாழ்ந்தார். இவ்வாறு நிலவுலகில் நடைபெற்ற வரலாற்றிற்குக் காரணம் கயிலேயில் சிவபெருமானுடைய அடியார் கூட்டத்துள் ஒருவராகிய ஆலாலசுந்தரர் உமையம்மையாரின் சேடியர்களாகிய கமலினியார், அநிந்திதையார் என்பாரைக் கண்டு காதலித்தார்; அதனுல் சிவபெருமான் இட்ட ஆணேயால் இவர்கள் உலகில் ஆலாலசுந்தரராகவும், கமிலினியார் அநிந்திதையார் முறையே பரவையார், சங்கிலியாராகவும் பிறந்தார்கள் என்று கூறப்படுகிறது. அதுபோல் மாயையானவள் உலகில் தோன்றியதற்குச் சிவபெருமானுக்கும் உமையம்மையாருக்கும் கயிலேயில் நிகழ்ந்த வாக்குவாதத்தைக் காரணமாகக் கொண்டு இவ் வரலாறு தொடங்கப் பெறுகின்றது.

கயிலேயில் தேவசபை கூடியிருந்தது. சிவபெருமான் உமையம்மையாருடன் வீற்றிருந்தார். அப்பொழுது உமையம்மையார் "தலேவ! இப் பேரவையில் உள்ளவர்கள் கொடிய பிறவியை அடையாதவராய் என்றும் நிலேத்த வீட்டின்பத்தை அடைவார்களா? அல்லது நிலேயற்றவரா?" என்று வினவினுர். அதற்குச் சிவபெருமான்

"திருமால் அயன் முதலானவரும் பெயர், உரு, செயல்கள் உடையவராயிருத்தலால் வீட்டின்பத்தை யடையார். போக பூமியில் இன்பம் அனுபவித்தற்குரிய உடலால் பேரின்பப்பேற்றை அடைதல் முடியாது. கருமபூமியின்கண் மக்களுடம்பை எடுத்து யோகநெறியில் நின்றவர்கள் மெய்ஞ்ஞானத்தை யடைவர். அவ்வாறு ஞானநெறியை அறிவிக்கும் ஆசான் அல்லமன் ஆவான்; அவன் எமது வடிவமே யாவன்" என்றார். இறைவன் சுட்டியறியப் படாதவனாதலின் அவன் ஒருவனே பெயர், உருவம், சாதி, குணம், செயல்கள் இல்லாதவனாய் வாக்கு மனங் களுக்கு எட்டாதவனாய் எங்கும் நிறைந்து உயிர்க்குயிராய் ஆனந்த வடிவமாயிருப்பவன். இதனை "ஒருநாமம் ஓருரு வம் ஒன்றுமில்லாற் காயிரந், திருநாமம் பாடிநாம் தெள் ளேணங் கொட்டாமோ" என்று திருவாதவூரடிகள் அருளுதலுங் காண்க. இதன் கருத்து அசத்தோடு தொடர்பில்லாதவன் என்பது. பெயர், உருவம் முதலியன உடையோர் உயிர்க்கூட்டத்தைச் சார்ந்தவரே யாவர். அவர்கள் மாயையால் பிணிக்கப்பட்டவர்கள். திருமால் அயன் முதலான தேவர்களுக்கு நாமம், உருவம், செயல்கள் உண்டு. ஆதலின் அவர்கள் நிலைத்த இன்பத்தை யடையார் என்றார்.

போகபூமி என்பது "பதினாறு வயதுடைய நாயகனும் பன்னிரண்டு வயதுடைய நாயகியும் பத்துக் கற்பகத் தருக்களும் வேண்டிய புதிய போகங்களைக் கொடுக்கப் பெற்றுப் புணர்ந்து இன்பமனுபவித்துப் பிரியாது வாழும் பூமி" என்பர் நிகண்டாசிரியர். கரும பூமி என்பது வரைவு, தொழில், வித்தை, வாணிகம், உழவு, சிற்பம் என்ற அறுவகைத் தொழில்கள் செய்வதற்குரிய மண் ணுலகம். போகபூமியில் அனுபவிக்கும் இன்பம் நிலைத்த இன்பமாகாது. அங்கு அனுபவித்தற்குரிய நல்வினைப் பயன் முடிவுற்ற பின்னர் மீண்டும் பிறத்தல் நேரிடும். இவ்வாறு பிறப்பு, இறப்பு மாறிமாறி வரும். பிறவாத இன்பப்பேற்றை யடைய விரும்புவோர் மக்களுடம்பெடுத்து

மண்ணுலகிற் பிறந்து ஞானசிரியனால் மெய்யறிவினைப் பெறல் வேண்டும்.

உமாதேவியார் தமோகுண வடிவமாகும் மாயையை அழைத்து அல்லமனைக் கண்டு அடையும்படி ஆணையிட்டார். சாத்துவிகம் - இராசதம் - தாமதம் என்ற முக்குணங்கள் உயிர்களுக்குண்டு. தாமத குணத்தால் உண்டாகும் செயல்கள் பேருண்டி, ஒடுங்கல், சோம்பல், மூரி, காமம், நீதிகேடு, நித்திரை, மறதி, தணியாக் கோபம், வஞ்சம் என்பர். ஆதலின், ஆராய்ந்தறியும் இயல்பு இல்லாதவளாகிய மாயை அல்லமனை எளிதாக எண்ணினாள். 'அவன் இயல்பினை யறிந்து அடைவேன்; முடியாதாயின் அவனை வலிந்து இழுத்து இங்குக் கொண்டு வருவேன்' என்று தருக்குற்றுச் சபதங் கூறினாள்.

கயிலையில் சிவபெருமான் உமையம்மையாரிடம் அல்லமன் நிராங்காரன், சுஞ்ஞானி என்போர் புரிந்த அளவற்ற தவத்தால் உலகில் எமது வடிவமாகத் தோன்றியுள்ளான் என்றதால் மாயையானவள் உலகில் மமகாரன், மோகினியாகியவரிடத்துத் தோன்றுவதற்கு முன்னரே உலகில் அல்லமர் அவதரித்துள்ளாரென்பது புலப்படும்.

சிவபெருமானையும் உமையம்மையாரையும் முடிமுதல் அடியீறாக ஆசிரியர் இந் நூலில் அணிந்துரைக்கின்றார். சிவபெருமானுடைய முடியின்கண் உள்ள பிறைச் சந்திரனும் கங்கையும், முக்கண்களும், காதிலுள்ள தோடும், நீலமணிமிடறும், கரங்களிலுள்ள மான் மழுவும், கையில் அணிந்துள்ள ஆதிசேடனாகிய கங்கணமும், மார்பில் மதாணிபோலுள்ள பன்றிப் பல்லும், இடையில் பட்டாக அணிந்துள்ள புலித்தோலும், காலில் அணிந்துள்ள வீரக் கழலும் ஆகிய இவைகள் அலங்கரித்துக் கூறப்பட்டுள்ளன.

சிவபெருமானுடைய செவியில் காதணியாக விளங்குவது தோடு என்று கூறப்படுகிறது. அவ் வருணனை,

"எண்ணும் அன்பர் இதயமென் புட்படு
கண்ணி போன்றுவார் காதிடைத் தோடுற"

என்பது. இதன்கண் காதிற்குப் பறவைகள் படுதற்கு வைக்கப்படும் மயிர் முடியை உவமானமாகக் கூறியுள்ளார். ஆதலின் மயிர்முடி மத்தியில் இடம்விட்டு முடிச்சு இடப் பட்டதாக இருக்கும். அதைப்போலுள்ள காது என்பதால் முற்காலத்தில் ஆடவர்களும் காதில் பெரிய துளையையிட்டு அதில் அணியை அணிவதுண்டு என்பது பெறப் படும். அதில் அணியப்படும் அணிகலன் தோடு என்ற பெயர் பெறும். இந்நாளில் ஆடவர் காதில் அணியும் அணியைத் தோடு என்று கூறும் வழக்கமில்லை. காதணி, கடுக்கன் என்றே கூறுகின்றனர். பழங்காலத்தில் தோடு என்றே வழங்கினர் என்பதற்குச் சிவபெருமானைச் சுட்டிக் காட்டுமிடத்துத் திருஞான சம்பந்தர் "தோடுடைய செவியன்" (தேவாரம்) என்று கூறியிருத்தலும் ஈண்டு ஒப்பிடத் தக்கது. இக்காலத்தில் தோடு என்ற சொல் மகளிர் காதணிக்கே பெயராக இருக்கிறது. காதினிடையே பெரிய துவாரம் உண்டாக்கி ஆண்மக்கள் அணி அணிவதுண்டென்பதைப் பழங்காலத்திய கோவில்களிலுள்ள சிற்பங்களில் இன்றுங் காணலாம். பறவை அகப்படும்படி வைக்குங் கண்ணியைக் காதிற்கு உவமைப்படுத்தி யிருக்கும் சிறப்புப் போற்றத்தக்கது.

சிவபெருமான் அரவை ஆபரணமாக அணிந்துள்ளார் என்று பொதுவாகக் கூறினும்,

"சொற்றெ ரிந்த சுடர்மணிக் கங்கணம்
உற்றிலங்க" (கைலாச. செய்யுள், கச)

(வியாகரண முணர்ந்த ஒளி விளங்குகின்ற இரத்தினத்தையுடைய ஆதிசேடனாகிய கங்கணம் கையின்கண் பொருந்தி விளங்க.)

"படிகொண் மாமுடிக் கங்கணத் திறை"
(கைலாச. செய்யுள், சஐ)

(பூமியைக் கொண்ட பெரிய முடியையுடைய ஆதிசேடனாகிய கங்கணத்தையுடைய சிவபெருமான்.)

என்பனவற்றால் ஆதிசேடனைக் கங்கணமாக அணிந்துள்ளாரென்பது தெரியவரும்.

உமையம்மையாருடைய கூந்தல், நெற்றிச்சுட்டி, திருக்கண்கள், புன்னகை, காது, மார்பிலணிந்துள்ள மங்கலநாண், முத்தாரம், கரங்களிற் கொண்டுள்ள நீலமலர், கிளி, இடையில் அணிந்துள்ள பட்டாடை, மேகலாபரணம், சிலம்பொலிக்கும் திருவடி ஆகியவை புனைந்துரைக்கப் பட்டுள்ளன. அப் புனைந்துரைகள் யாவும் சிறப்புடையனவாய்ப் புதிய கற்பனைகளுடன் விளங்குகின்றன. அவற்றுள் திருவடியின் சிறப்பில்,

"புத்த னிச்சம் படினும் பொறுமையை
யெய்த்து மற்றை யிருமணத் தம்மியில்
அத்தன் வைத்த அடிக்கம லங்களின்
முத்தரிச் செஞ்சிலம்பு முழங்குற"

(கைலாச. செய்யுள், உகு)

(புதிய அனிச்சமலரில் படினும் வெம்மை பொறுக்காத இயல்பினையுடையதென் றறிந்திருந்தும் திருமணக் காலத்தில் அம்மிமீது சிவபெருமான் எடுத்து வைத்த திருவடித் தாமரையில் முத்துக்களை உள்ளிடுபரலாக வுடைய சிலம்பு முழங்காநிற்க.)

என்று திருமணக் காலத்தில் மணமகள் காலைத்தூக்கி மணமகன் அம்மிமீது வைத்தல் என்ற பிற்கால வழக்கத்தையும் ஆசிரியர் ஏற்றிக் கூறியுள்ளார்.

கயிலாயத்தில் தேவசபை கூடியிருக்கும் சிறப்பை இந் நூலில் வருணித்துள்ளது போல் பிற நூல்களில் நாம் கண்டதில்லை. அப் பேரவையை நம் கண்முன் படம் பிடித்தாற்போல் காட்டுகிறது. இந்நாளில் படம் பிடிப்பாரும் இந் நூலிற் கூறியுள்ள அழகைக் கண்டு இவ்வாறு

அமைக்குந் திறனைக் கையாளவில்லையே! என்று எண்ண வேண்டியிருக்கிறது.

திருச்சபையில் கலைமகளிர் வீணைகொண்டு உமையம்மையாரின் சிறப்பைப் பாட்டில் அமைத்துத் துதிக்கின்றனர். அவர்கள் பாடுங்கால் வீணையினின்றுண்டாகின்ற நரம்பின் ஒலி இது, பாடுகின்ற குரலொலி இஃது என்று •அவர்களுக்கு நாயகர்களாகவுள்ள பிரமர்களும் அறிய முடியாதவாறு அவர்கள் பாடினராம். இது பாடும் முறை. இதனைச் சிந்தாமணி ஆசிரியரும்,

"கருங்கொடிப் புருவமேறா கயல்நெடுங் கண்ணும் ஆடா
அருங்கடி மிடறும் விம்மா(து) அணிமணி எயிறுந் தோன்றா
இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடி னாளோ?
நரம்பொடு வீணை நாவில் நவின்றதோ? என்று நைந்தார்"

(கொடி = ஒழுங்கு. கடி = விளக்கம்.)

என்று கூறுகின்றார்.

சபைக்கு ஒரு சதகோடி இந்திரைகள் (அளவற்ற திருமகளிர்), கோடி சசிகள் (அளவற்ற இந்திராணிகள்), கலை மடந்தையர் பலர், உருத்திர கணிகையர், உருத்திர குமாரங்கள், அரிக்கணங்கள், பிரமர்கள் அளப்பிலர், இந்திரர் எண்ணிலர் வந்தனர் என்று கூறுவதால் திருமகள், இந்திராணி, கலைமகள், உருத்திரகணிகை, உருத்திரர், பிரமன், இந்திரன் ஆகிய இவர்கள் தனித்தனி ஒருவரல்லர் பலர் உளரென்றறிதல் வேண்டும். அண்டங்கள் பல ஆதலின் அவ்வவ் வண்டங்களிலிருந்து முத்தொழில்களைப் புரியும் பிரமன், திருமால், உருத்திரர்களும் பலராவர். ஆதலின் அவர்களைப் பன்மையாகக் கூறியுள்ளாரென்பது பெறப்படும்.

தக்கன் என்பான் உமையின் தந்தை. அவனுக்கு ஆட்டுத்தலை வீரபத்திரரால் அமைக்கப்பட்டது என்பது புராண வரலாறு.

"ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி யுந்தீ பற"

என்று மணிவாசகரும் அருளுகின்றார். அதற்குக் காரணம் இங்குக் கூறப்படுகிறது. அவன் செருக்கொடு சிவநிந்தனை செய்தான். எல்லாப் பாவங்களுக்கும் கழுவாய் உண்டு. ஆனால் சிவநிந்தனைக்குக் கழுவாய் எந் நூலிலும் கூறப்படவில்லை. அதனைக் கருதி வீரபத்திரர் சிவபெருமானை இழித்துரைத்த தக்கனுடைய தலையை வெட்டித் தீயிலிட்டார். அவ்வாறு நிந்தனை செய்யாத ஆட்டுக்கடாயின் முகத்தை அவன் கழுத்தோடு பொருத்தினார். இதனால் சிவ நிந்தனையாலுண்டாகும் பாவம் தீர்வற்றது என்பதும் வீரபத்திரருடைய பெருமையும் விளங்கப்பெறும்.

அல்லமனைக் காணுதல் அரிது என்று சிவபெருமான் கூறும்பொழுது உமையம்மையார் "இங்குள்ளோர் யாவர்க்கும் எளிது" என்கின்றார். அப்பொழுது சிவபெருமான்,

"முனிவுறேல் வழிய வுன்றன் மொழியள வல்லன் மாதே!
வினைதபும் அன்பர் அன்பால் வேண்டிய வடிவனாகி
யனையவர் விழியில் தோன்றி யருளுவன் அலம தேவன்
தனதியல் பியாவ ராலும் சாற்றிடற் கரிய தென்றான்"

என்பதால் இறைவன் யார் யார் என்ன வடிவுடையவனாகக் கருதி வழிபடுகின்றார்களோ அவர்களுக்கு அந்த அந்த வடிவுடையனாக வந்து காட்சியளிப்பான் என்பது தெரிய வரும். இது,

"மூவராலும் அறியொணா முதலாய ஆனந்த மூர்த்தியான்
யாவ ராயினும் அன்பர்அன்றி அறியொணா மலர்ச் சோதியான்"
(திருவாசகம்)

என்ற திருவாசகக் கருத்தை ஒட்டி வருதல் காண்க.

**மாயை உற்பத்தி கதி**

உமாதேவியின் பக்கலில் இருந்த தமோகுணமாதாகிய மாயை உலகில் மமகாரன், மோகினி ஆகியவர்க்கு

மகவாகத் தோன்றி வளர்ந்ததை இக்கதி யுணர்த்து கிறது.

மமகாரனும் மோகினியும் தங்களுக்கு மகப்பேறின் மையால் பல நோன்புகள் நோற்றனர். அதன் பயனாக உமையருளால் மோகினி வயிற்றில் மாயை கருவாகவுற்றுப் பிறந்தாள். அவளது பிறப்பின் சிறப்பு "சலஞ்சலம் ஒன்றிங் கின்னொளி முத்தினை யீன்றதை யொத்து மோகினி பெண்மக வீன்றாள்" என்று கூறப்படுகிறது. சங்குகளில் வலம்புரிச் சங்கு சிறந்தது; அதினும் சிறந்தது சலஞ்சலம். அச் சலஞ்சலம் முத்தினை யீன்றால் அது மிக அருமையாகப் போற்றி மதிக்கப்படும். பிறக்கும் இடமும் அவ்விடத்தில் தோன்றிய பொருளும் சிறப்புடையனவா யிருத்தல் அரிது. பிறப்பின் சிறப்பை அறிவிக்குமிடத்து "வலம்புரி முத்தில் குலம்புரி பிறப்பும்" (ஆத்திரையன் பேராசிரியன்) என்றார் ஆன்றோரும். அவ்வாறே யாவரும் போற்றுமாறு மாயை பிறந்தாள் என்பதை இச் சிறந்த உவமை புலப்படுத்துகின்றது.

இங்ஙனம் மாயை தோன்றவும் மன்மதன் மிக மகிழ்ச்சியுற்றான். அவன் மலர்க்கணைகளையும் மலர்களையும் எங்கும் சொரிந்தான். அதனால் "கங்கைக் கரையிலும் குகைகளிலும் நைமிச முதலிய வனங்களிலும் இருந்து மேலே புற்றுமூடவும் மேலே மரம் வளரவும் யோகநிலையி லிருந்தும், பனிக்காலத்தில் குளிர்ந்த நீரிலும் வேனிற் காலத்தில் ஐந்தீ நாப்பணும் சேர்ந்து உணவு, உறக்கம் முதலியவற்றைத் துறந்தும் செய்யும் தவத்தையுடைய முனிவர்களின் மனங்களும் மயக்கத்தில் மூழ்கிப் பதைத்தன" (செய்யுள், ௩உ) என்றும் அம் முனிவர்கள் "ஐம்பெரும் பூதங்களும் தத்தம் நிலைகுலைந்து நிற்கும் பேரூழிக்காலத்துச் சலனமில்லாத மனம் இன்று கலக்க மடைந்த காரணம் யாதோ?" (செய்யுள், ௩௩) என ஐயுற்றனர் என்றும் கூறுதலால் மாயை உலகை மயக்கும் பேராற்றல் பெற்றவள் என்பதை எளிதில் புலப்படு மாறு உயர்வு நவிற்சியணிபடக் கூறுகின்றார் ஆசிரியர்.

அந் நிலையிலிருந்த முனிவர்கள்பால் துருவாசர் வந்தார். அவரிடம் அம் முனிவர்கள் முன்னிருந்த தம் உள்ளத்தின் நிலையையும், தற்போது தங்கள் உள்ளம் மாறுபட்டுள்ள நிலையையும் கூறினர். அதனை விளக்கு மிடத்து, சலனமற்ற உள்ளம் இருந்த நிலையை "எழுதிய விளக்குப்போல" என்ற உவமையாலும், உள்ளம் நிலைதடு மாறிய நிலையை "தென்றல்முன் இருந்த செய்ய சிறுசுடர் போல" என்ற உவமையாலும் விளக்கிக் கூறுகின்றார். இவ்வுவமைகள் மிகப் பொருத்தமுடையனவாகவுள்ளன.

பின்னர் மாயையின் பிறப்பால் உண்டான மனமயக் கத்தைப் போக்கத் துருவாசர்,

> "மாரண விடங்கலந்த மயக்கம் அல்லமன் என்றிட்ட
> பேரணி கலுழன்றன்னை நினைந்திடிற் பெயரும் அன்றே."

என்று கூறினார். அவர் உரையால் முனிவர்கள் கருட மந்திரத்தால் விடமயக்கம் நீங்குவதுபோல அல்லமன் என்ற திருநாமத்தைத் தியானிப்பதால் மாயை நீங்கும் என்பதை உணர்ந்தனர். அவ்வாறே தம் அகத்தில் அல்லமனாகிய சுடரை ஏற்றி மாயையாகிய இருளைப் போக்கி யிருந்தனர். இதனால் அல்லமன் மாயையின் நீங்கியவன், பிறரை மாயையினின்றும் நீக்க வல்லவன் என்பன பெறப்படும்.

உலகில் இத்தகு வேறுபாடுண்டாகத் தோன்றிய மாயையை மோகினித் தாய் வளர்த்த சிறப்பை ஆசிரியர் நான்கு பாட்டுக்களில் (சகூ-சகூ) அறிவிக்கின்றார். அரிதிற் பெற்ற மகவை அன்னைமார் உலகில் எவ்வாறு சீராட்டிப் பாராட்டி வளர்ப்பர் என்பதைச் சொற்சித்திரமாகக் காட்டு கின்றன அப் பாட்டுக்கள். அவற்றின் பொருள் :

மோகினித் தாய் மாயை என்னும் பெயரிய மகவிற்கு மணமுள்ள மஞ்சளைப் பூசினாள்; தனது கணைக்கால்களின் மேல் கிடத்தினாள்; நீராட்டினாள்; இருகண்களிலும் நீரில்லாதபடி நீவினாள்; உச்சியில் படிந்திருந்த நீரினை

வாயால் ஊதிப் போக்கினாள்; பின்னர் மென்மையான ஆடையால் உடலைத் துடைத்தாள். ஈன்றணிமையள் ஆதலின் மென்மைத் தன்மை பெற்றுள்ள தனது நகில்களோடு பொருந்தும்படி தழுவிக்கொண்டாள். தனது நகிலிற் கறந்த பாற்றுளியை வாயிற்படியிலிட்டு விரலால் தேய்த்து நுதலில் பொட்டணிந்தாள்; திருநீற்றுக் காப்பும் இட்டாள்.

இரு கண்களுக்கும் ஏற்ப மையைத் தீட்டினாள். கால்களுக்குச் சதங்கையையும் பொற்றண்டையையும் புனைந்தாள். பொன் அரை ஞாணை இடையில் பூட்டினாள். புலியின் நகம் சேர்ந்த அணியை மார்பில் அணிந்தாள். கைகளில் சிறிய வளையல்களை யிட்டாள். மகவின் அழகிய நுதலாகிய பொன்னிறத்த பிறைமேல் சுட்டி என்னும் அணியைச் சூட்டினாள்.

பின்னர்ச் செஞ்சோற்று நீராலாத்தி, கற்பூராலாத்தி, வெண்கடுகு முதலிய பொருள்களால் கண்மிச்சிலைப் (கண் திருஷ்டி) போக்கினாள். அன்போடு தன் முலைப்பாலை ஊட்டினாள். பவளக்கால்களையுடைய பசிய பொன்னாலாகிய தொட்டிலில் படுக்கவைத்தாள். பின்னர்க் "காண்பதற்குரிய தேவாமுதமே! உலக மன்னனுக்கு அணியாய் விளங்குபவளே! என் துயரம் தீர்க்கும் கரும்பே! என் கண்மணியே திருவே!" என்று அன்பளைந்த மொழிகளால் பாராட்டினாள்.

இவ்வாறு வறிஞனாகிய ஒரு செய் நிலமுடையோன் அவ்வயல் விளையுமாறு காப்பாற்றும் செயல்போலவும் உலகில் கல்வியை விரும்பிய மாணவன் கற்ற பாடத்தை மறவாமல் காப்பதுபோலவும் செங்கோலினையுடைய மனுநெறிப்படியாளும் மன்னன் நாட்டைக் காக்கும் முறை போலவும் மோகினித் தாய் வளர்த்தாள்.

என்றிவ்வாறு கூறுவதில் சிவப்பிரகாச முனிவர் துறவு வாழ்க்கையினராக இருந்தும் குழந்தை வளர்ப்பு

முறையை எவ்வளவு நன்முக அறிந்திருக்கின்ருரென்பது தெற்றென விளங்கும்.

இவ்வாறு வளர்ந்த மாயை மங்கைப் பருவம் அடைந்தாள். இதுகாறும் தன் அரண்மனையில் வைத்து வளர்த்த மகளைத் தனியே கன்னிமாடம் அமைத்து அவளை ஆங்கிருக்கச் செய்தான். இவ்வாறு பருவப் பெண்களை இருக்கச் செய்தல் பண்டைய மரபாகத் தெரிகிறது. முற்காலத்திய மன்னர்களும் செல்வர்களும் தம் மகளிரைக் கன்னிமாடத்தில் வைத்து வளர்த்து வந்திருக்கின்றனர். சீவகசிந்தாமணியில் கூறப்படும் காந்தருவதத்தை, சுரமஞ்சரி ஆகியவரும் பெரியபுராணத்துள் வரும் சிவநேசர் மகள் பூம்பாவையும் கன்னிமாடத்தில் இருந்ததாக அந் நூல்கள் கூறுகின்றன. மாயை யிருந்த கன்னிமாடத்தில் பணிபுரிவோர் யாவரும் மகளிராகவே யிருந்தனர். அவர்கள் கலையுணர்ச்சியுடையவர்களாக இருந்திருக்கின்றனர். யாழ் இயக்குவோர், தண்ணுமை முழக்குவோர், இசைபாடுவோர் யாவரும் மகளிரேயாவர். அவர்கள் விளையாடும் விளையாட்டு பந்தடித்தலாகும். இது பண்டைநாளில் மகளிர் விளையாடும் விளையாட்டாகவே இருந்ததென்பது பெருங்கதை, சிலப்பதிகாரம், சிந்தாமணி, குறவஞ்சி முதலிய நூல்களால் அறியப்படும். கிளியைக் கூட்டில் வைத்து வளர்த்தல் மகளிர்க்கு ஓர் உவந்த செயலாகும். அதனைத் தாங்கள் கூறுவதைக் கூறும்படி பழக்கல் அவர்களுக்கின்பப் பொழுதுபோக்காகும்.

மகள் மங்கைப் பருவம் அடைந்திருந்ததால் மமகாரன் தன் அரசநிலைக் கேற்பப் பாண்டியன், சோழன், சேரன் கொங்கண மன்னன், மாளவன், மகதநாட்டரசன் இவர்களில் எவர்க்குத் தலைவி யாவாளோ என்று தான் எண்ணிக்கொண்டிருந்தான். அவனுடைய மரபாசிரியராகிய ஆங்காரன் என்பவர் வந்தார். மாயை அவரை வணங்கினுள். அவளுடைய உடல் உறுப்புக்கள் சிறந்த நல்லிலக்கணமுடையவாயிருந்தன. அவள் வனப்பைக் கவிஞர் பெருமான்,

"மாந்தளிர் ஆலிலை வயங்கு கோங்கரும்பு
எந்தெழில் மரைமலர் எய்தி அற்புதப்
பூந்துணர் வல்லிநேர் பொன்னைக் கண்டவன்
ஓர்ந்தனன் காரண மாதென் றுன்னியே."
(செய்யுள், கூஅ)

என்ற பாட்டால் அறிவிக்கின்றார்.

மாந்தளிரையும் ஆல் இலையையும் கோங்கினது அரும்பையும் தாமரைமலர்களையும் கொண்ட அற்புதமான பூங்கொத்தையுடைய கொடிபோல் விளங்கினாளாம் மாயை. மாந்தளிர் செந்நிறமேனியையும், ஆலிலை வயிற்றையும் கோங்கரும்பு நகிலையும் தாமரைமலர் முகம், உள்ளங்கை, பாதம் ஆகிய உறுப்புக்களையும் ஆகுபெயரால் உணர்த்து கின்றன. இவற்றையெல்லாம் கொண்ட அற்புதமான பூங்கொத்தினையுடைய கொடிபோல் விளங்கிய அப் பொன்னனாளைக் கண்டார். கண்டு இவள் ஒரு காரணத் தால் உலகில் தோன்றியவள் என்று மனத்துட் கொண் டார். ஈண்டு அவளுடைய உடல் வனப்பைச் சுருங்கவும் குறிப்பாகவும் உணர்த்தியுள்ள அழகு பாராட்டத்தக்கது. இப் பாட்டு "திருவளர் தாமரை" என்ற திருக்கோவையார் முதற்செய்யுளை நினைப்பூட்டுகின்றது.

உடலின் இலக்கணத்தைக் (சாமுத்திரிகா லக்ஷணம்) கொண்டே ஒருவரது எதிர்காலச் செய்தியை உணர்தல் கூடும். ஆங்காரன் அக் கலையில் தேர்ச்சியுடையார் போலும். ஆதலின், அரசன் "கோதை தன் மணந்தனக்கு உரியவர் ஒருவரைக் கருத்திற் றேர்ந்து நீ இயம்புக" என்றதற்கு "மங்கையை அணைபவர் மனிதரல்லர்; நம் சங்கரனே இவள் தலைவன்" என்று உறுதியாகக் கூறு கின்றார். அரசன், மரபாசிரியர் கூறிய மொழியை அப் படியே நம்பிவிடவில்லை. "திருமாலும் நான்முகனும் காண முடியாத சங்கரன் என்மகளுக்கு எளியன் ஆவானோ?" என்றான். அதற்கு அவர் "சிவபெருமான் அன்பர் வேண்டிய கோலமாய் வருவான். இஃது உண்மை" என்று நிச்சயமாகக் கூறினர். மாயையை அழைத்து நன்னெறி

களை உபதேசித்துச் சென்றுர். ஆசிரியர் மொழியையே துணையாகக்கொண்டு சிவபெருமானைத் தன் கணவனுக அடையக் கருத்திற்கொண்டு மதுகை நாதனை வழிபாடு செய்யத் தொடங்கினுள் மாயை. தமிழ்நாட்டில் சூடிக் கொடுத்த நாச்சியாராகிய ஆண்டாள் திருமாலை மணக்க விரும்பினுற்போல மாயை சிவபெருமானை மணக்க விரும் பினுள். இதனைக் கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் என்பர் இலக்கண நூலார்.

**மாயை பூசைகதி**

இக்கதியில் மாயை சிவபெருமானைக் கணவனுக அடையவேண்டுமென்ற காதலுடன் மதுகை நாதனை வழிபாடாற்றிய முறை கூறப்படுகிறது.

மாயையினுடைய அலங்காரச் சிறப்பு இந் நூலில் கூறப்பட்டிருத்தல் தனிச் சிறப்புடையது; தமிழ் நூல் களில் காணப்படாதது. சாமரசர், மாயைக்குப் பல பணிப் பெண்கள் ஒவ்வோர் அணியை அணிந்து அலங்கரித்த தாக அரச மகள் என்ற பெருமிதந்தோன்ற வருணித் துள்ளார். அம் முதனூலாசிரியரை யொட்டியே அடி களாரும் கற்பனைத் திறமையுடன் பல அணிநலந் தோன்றப் பாடியுள்ளார். அடிகளாரின் கற்பனைத் திறத்தைக் காண இஃதொரு சிறந்த இடமாக இலங்குகின்றது. பிறமொழிக் கவிஞரிடத்துக் கண்ட புலமைத் திறத்தை நல்லதெனக் கொண்டு தமது தமிழ்க் காவியத்தை அழகு படுத்து கின்றுர் அடிகளார்.

மாயை நீராடி அலங்கார மண்டபத்தை யடைகிருள். அணி அணிந்திடு மங்கையர் பலர் வருகின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஆபரணத்தை மாயைக்கு அணிகின்றனர். ஒருத்தி மாயைக்குச் சடைபின்னி விட்டாள். நுதலில் சூரியபிறை, சந்திரபிறை என்னும் ஆபரணங்களை அணிந்தாள் ஒருத்தி. மணிச்சுட்டி யொன்றை மயிர் வகிரில் பொருந்தும்படி அணிந்தாள் ஒரு நங்கை. கருங்குவளை மலரைக் காதின்மீது ஒருத்தி அணிந்

தாள். ஒருத்தி பொன்னோலையைக் காதில் அணிந்தாள். மூக்கணியை ஒருத்தி புனைந்தாள். கழுத்தில் பொன்னாலான தகட்டணியை அணிந்தாள் ஒருத்தி. கையில் பொற்கடகத்தையிட்டாள் ஒரு பெண். பொற்கடகத்தின் முன் செம்பவளக் கோவையைப் புனைந்தாள் ஒரு மங்கை. கழுத்தில் இரத்தின மாலையை ஒரு பெண் அணிந்தாள். மேகலாபரணத்தை இடையில் அணிந்தாள் ஒருத்தி. ஒரு நங்கை காலில் சிலம்பைப் புனைந்தாள். ஒருத்தி கண்ணாடி எடுத்து அலங்காரத்தைக் காணும்படி காட்டினாள்; என்றிவ்வாறு கூறும் பகுதி சுவை மலிந்து விளங்குகின்றது. இவ்வாறு கூறுமிடத்து மகளிர் அணியும் அணிகலங்களாக அறியப்படுபவை சூரியபிறை, சந்திர பிறை, மணிச்சுட்டி, பொன்னோலை, மூக்கணி, பொற்றகட்டணி, பொற் கடகம், செம்பவளக் கோவை, இரத்தின மாலை, மேகலாபரணம், சிலம்பு முதலியனவாம்.

மாயை மதுகைநாதனை வேதாகம நெறிகளை யுணர்ந்தோர் எவ்வாறு பூசனை புரிவார்களோ அம் முறையில் நீராட்டி, அலங்கரித்து, துதித்து வழிபாடு செய்தாள். இங்கு அடிகளார் இறைவனுக்கு நீராட்டும் நெறியினை விளக்கியுள்ளார். எண்ணெய், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, பலவித பழச்சாறு, இளநீர், சந்தனம், தபன கலசநீர் ஆகிய இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக அபிடேகித்தாள் மாயை என்பர். இம் முறையையே அடிகளார் இட்டலிங்க அபிஷேகமாலை என்னும் நூலில் "நல்ல தில நெய்யாடி" என்ற பாசுரத்திலும் கூறியுள்ளார். இஃதோர் நன்முறையாகக் காணப்படுகிறது. பிறர் வேறு விதமாகவும் உரைப்பர்.

மாயை கோவிலிலுள்ள மதுகைநாதனைப் பூசித்தாள் என்பதால் பொது மக்களும் கோவிலிலுள்ள இறைவன் திருமேனியைத் தொட்டு வழிபடுதல் அந்நாளில் உண்டென்பது தெரியவருகிறது. மற்றும், ஆடவரேயன்றிப் பெண்களும் கோவிலில் வழிபாடு செய்யும் வழக்கம்

இருந்ததாலேயே மாயையும் மதுகைநாதனை நீராட்டி, மலரிட்டுப் பூசனைபுரிய அனுமதிக்கப்பட்டாள். இப்பொழுதும் காசி முதலிய திருத்தலங்களில் யாவரும் கோவிலில் உளங்கனிந்து தாமே வழிபாடு செய்வதற்குரிய ஏற்பாடு இருத்தல் ஈண்டு நாம் அறியத்தக்கதாம். பல்வகையான உபசாரங்களைச் செய்த பின்னர் மாயை நடன அரங்கில் நடித்தாள். நடனம் ஆடுதலும் இறைவனுக்குச் செய்யும் ஓர் உகந்த செயலாகும். இதனால் அந்நாளில் வழிபாட்டில் ஓர் அங்கமாக நடனக்கலையும் இருந்து வளர்ச்சியடைந்து வந்ததென்பதை அறியலாம். திருஞானசம்பந்தர்,

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல்என்
றருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவை யாறே"

(ஐ - கோழை. அலமந்த போதாக - மனச் சுழற்சியடையும் நிலையில்; முகில் - மேகம்.)

என்று அருளுதலும் இதனை வலியுறுத்தும். பின்னாளில் இந் நடனக்கலை ஒரு குழுவினரே கற்கத்தக்கதென்னும் இழிநிலையை யடைந்து விட்டது. இப்பொழுது அக் கருத்து மாறி யாவரும் விரும்பிக் கற்றுவருதல் போற்றத் தக்கதாகும். மாயையின் நடனம் முடிவுற்ற பின்னர் அருந்தவன் இறைவனை அருச்சித்து இறைவனுக்கு அணிந்திருந்த மலர்மாலையை மாயைக்கு அளித்தான் என்பதால் கோவிலில் எப்பொழுதும் இருந்து வழிபாடு செய்பவர் உண்டென்பதும் அவர்கள் அருந்தவத்தினராக இருந்தனரென்பதும் பெறப்படும். மாயை இவ்வாறு வழிபாடு செய்த மதுகைநாதன் திருக்கோவிலும் அவள் நடித்த அரங்கும் இன்றும் காணத்தக்க நிலையில்

உள்ளன. அக் கோவிலில் மாயையினுடைய உருவச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது ஈண்டறியத்தக்கது.

**பிரபுதேவர் வந்தகதி**

பிரபுதேவர் மனித வடிவங்கொண்டு வந்து மாயையின் விருப்பத்திற்கு இணங்குபவன்போல் செய்த மாயத்தை இக்கதி யுணர்த்துகிறது.

நிராங்காரன், சுஞ்ஞானி யாகிய இருவரும் மகப் பேறில்லாதிருந்தனர். அவர்கள் இவ் வுலக இன்பமும் மறுமையில் அனுபவிக்கும் விண்ணுலக இன்பமும் நிலையற்றன வென்றறிந்தவர்கள்; மெய்யறிவு பெற்றவர்கள்; ஆயினும், இல்வாழ்க்கையி லிருத்தலால் மகப்பேற்றை விரும்பினர். அவர்கள் மக்களில்லாத வாழ்க்கை "நினையுந் தியானமில்லாத நெஞ்சத்தையும் ஞானமில்லாத வினையையும் ஒக்கும்" என்று எண்ணியதாக நூலாசிரியர் கூறுதல் அவர்களது உள்ள நிலைக்கு மிகப் பொருத்தமானது. அவர்கள் பரமுத்தி காட்டும் புதல்வன் வேண்டுமென்றே நோற்றனர். ஆதலின், அன்பர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றும் இறைவன் அவர்முன் அல்லமனுகத் தோன்றிக் காட்சியளித்தான். மாயை, மோகினி வயிற்றில் கருவாகத் தோன்றிய காலத்தில் மன்மதனுக்கு வலப்புயம் நற்குறியாகத் துடித்தது. பிறந்தவுடன் கங்கைக் கரையிலும் குகைகளிலும் நைமிச முதலிய வனங்களிலும் இருந்த தவத்தோர் மனங்கள் மயலின் மூழ்கிப் பதைத்தன. அல்லமன் தோன்றிய காலத்தில் சங்கும் தெய்வ துந்துபியும் முழங்கின; கற்பகமலர் மழைபோல் சொரிந்தன. எல்லாத் திக்கும் களங்கமற்றிருந்தன. மலடாயிருந்த பசுக்களும் கன்றை யீன்றன. பட்டுப் போயிருந்த மரங்களும் தளிர்த்தன. சேற்றுடன் கலந்திருந்த நீர்நிலைகளும் தெளிவுற்றன. கொடியோர் உள்ளங்களும் ஞானத்தை அடைந்தன. அருள் மிக்க துறவிகள் மனங்களும் மகிழ்வுற்றன. இவ்வாறு மாயை, அல்லமன் ஆகிய இருவருடைய பிறப்பின் வேறுபாட்டை அவ்வக் காலத்தில்

தோன்றிய நிகழ்ச்சிகளால் ஆசிரியர் புலப்படுத்துந் திறங் காண்க.

நிராங்கார, சுஞ்ஞானிகள் தம் மகவிற்கு அல்லமன் என்று பெயரிட்டு அழைத்தனர். "மயக்கம் பொருந்திய மனத்துடன் தம் அறிவால் ஒன்றைக் கூறி இது மெய்ப் பொருள் என்றும், அதை வேதாகமங்கள் கூறுமென்றும், தம் உத்தியால் உரைத்து அதற்கு எதிராகக் கூறும் ஒரு பொருளைப் பழித்துரைக்கும் சமயவாதிகளுடைய மயக் கத்தை அல்ல என்று கூறும் பொருளமைந்த அல்லமாப் பிரபு என்னும் பெயர் இட்டனர்" (விமலை. செய்யுள், ௩௭) என்று கூறிய காரணம் அறிக.

அல்லமரை நோக்கி மாயையின் தோழியர் "நின் பெயர் யாது?" என்று வினவியதற்கு "சபதத்தால் வல்லவர் என்று வந்தவருடைய ஆற்றல் நிலைத்ததல்ல" என்னும் அல்லமன் என் பேர் என்று அவ்விடத்திற் கேற்பத் தன் பெயர்க்குக் காரணம் கூறுகின்றார் அல்லமர்.

இவ்வாறு கூறப்படும் காரணங்கள் "அல்" என்ற முதனிலையடியாகவே பிறத்தல் நோக்கத்தக்கது. கன்னட நூலார் அல்லமன் என்பதற்கு நிர்மாயை என்று பொருள் கூறுவர்.

விமலையிடம் மாயை "தன்னிகர் அலமன் சச்சிதானந்த சம்பு என்றாய், அன்னவன் அலன் இவன்றான் மத்தள அல்லமன் காண், முன்னொடு பின்மயங்க மொழிந்தனை" என்று கூறுவதால் சச்சிதானந்த சம்புவாகிய சிவபெரு மான் அல்லமன் என்ற பெயரால் அழைக்கப்படுவதோடு மக்களுக்கும் அல்லமன் என்ற பெயரிட்டு முன்னாளில் வழங்கியது உண்டு என்பது பெறப்படும். இக்காலத்தும் இப் பெயரை மக்களுக்கு இட்டு அழைக்கப்படுதல் ஈண்டறியத் தக்கதாம்.

சிவப்பிரகாசர் அல்லமரிடம் பேரன்பு பூண்டவராதலாலும் அல்லமர் இந்நூலின் பாட்டுடைத் தலைவராக

இருப்பதாலும் அவருடைய பருவ விளையாட்டை நன்கு அமைத்துப் பாடியுள்ளார்.

" அல்லமன்
நினையுமாறு தவழ்ந்து பின்னின்று மெல்ல நடந்துபோய்
வனையு மாமணி மாளிகை மறுகின் ஆடல் பயின்றனன் "

என்று தவழ்தல், நிற்றல், நடத்தல் ஆகிய பருவங்களைச் சுருங்கக் கூறினார். பின்னர்,

" வருக எங்கள்தம் ஆவியே! வருக கண்ணுகர் அமுதமே!
வருக எங்குல தீபமே! வருக கேடறு செல்வமே!
வருக பாசவி நாசனே! வருக ஞான விநோதனே!
வருக என்றனை மகிழ்தர வந்து மேல்விழும் அல்லமன்."
(செய்யுள், ௩க.)

என்று பிள்ளைக் கவியில் வரும் வருகைப் பருவப் பாடல் போல் அமைத்துக் கூறுகின்றார். மற்றும், சிற்றில் சிதைத்தல், சிறுதேர் உருட்டல், பம்பரம் ஆட்டுதல், கல்வி பயிறல் ஆகியவற்றையும் காவியத் தலைவராகிய அல்லமரது இயல்பிற்கேற்ப ஆசிரியர் கூறுந் திறங்கண்டு இன்புறத்தக்கது.

சிற்றில் சிதைத்தலை "மாயையாலுண்டாகிய நாம ரூபங்களைக் கெடுத்து என்றும் அழியாத பிரமப் பொருளை அறியும் விதமாய் அறிவித்தல்போல் பேதைப் பருவப் பெண்கள் மணலிற் செய்த சிறு வீடுகளைத் தன் பாதங்களால் அழித்துவிட்டுப் போய் உலவுவன்" (விமலை. செய்யுள், சO) என்றும்,

சிறு தேர் உருட்டுதலை "உலகமானது யான் அசைத்தால் அசையும் என்றறிவித்தல் போல் அழகிய வீதியில் பொன்னினாற் செய்யப்பட்ட சிறு தேரை யுருட்டுவன்" என்றும்,

பம்பரம் ஆட்டுதலை "யான் செல்லாத உள்ளம் இதைப்போல் சுழன்று கொண்டிருக்கும் என்று உலகத்

தார்க்குக் காட்டுவதுபோல் பம்பரம் ஆட்டினான்" (விமலை. செய்யுள், சுக) என்றும்,

கல்வி பயின்றதை "பெருமை மிக்க தொன்மையான மறைகளும் சொல்லுதற்கரிய புகழினையுடைய அல்லமன், எதிரேயிருக்கிற கண்ணாடியைக் கொண்டு தம் முகத்தைப் பார்த்துக் கொள்பவர்போல ஞானத்தையுடைய குருவைச் சார்ந்து அவனை எதிரே வைத்துக்கொண்டு தனது பெரிய வித்தைகளை யாராய்ந்து நல்ல நூல்களைக் கற்றல் போலப் பல கூத்துக்களைச் செய்தான்" (விமலை. செய்யுள், சுஉ) என்றும் கூறும் உரைகள் தலைவனுக்கேற்ற பொருள் பெற்றுள்ளன.

அல்லமர் தக்க பருவம் அடைந்ததும் உலகில் சேவை செய்யுங் கருத்துடையவரானார். அதனைப் பெற்றோரிடம் "உங்கள் கருத்தொருமையால் உருவமுடைய சிறந்த மகனாகி யான் இங்கு இருந்தேன்; இனி நடந்து உலகெங்குமுள்ள மாதவத்தோர் எண்ண முடிப்பேன்" என்று புறப்பட்டார். அவர்கள் ஞானப்புதல்வனை விட்டுப் பிரிய வருந்திய காலத்தில் அவர்களுக்கு உடலபிமானம் நீங்குதற்குரிய ஞானநெறியை ஞானாசிரியனாக இருந்து உணர்த்தி அவரைவிட்டு நீங்கி அன்பர்கள் இருக்கும் இடங்களை நாடிச் செல்வாரானார்.

முதலில் மாயை நடிக்கும் இடத்தை நாடிச் சென்றார். மாயை இம்மைப் பயனைக் கருதி வழிபாடு செய்து வருகின்றாள். அவளோ பேரழகுடையவள். யாவரையும் மயக்கும் இயல்பை அவளது வனப்புப் பெற்றுள்ளது. அவளது உள்ளத்தைத் தான் கவர வேண்டுமாதலின் அல்லமர் பேரழகுவாய்ந்த திருவுருவினைத் தாமும் கொண்டார். கண்டோர் புவியில் உற்ற இரவி எனவே அவருருவத்தை மதித்தனர். இத்தகு இயற்கை யழகுடன் ஆடை அணிகலங்களாலும் மேலும் தம் உருவை அழகுறச் செய்துகொண்டு அவள் கற்றுள்ள நடனக் கலையோடு தொடர்புடைய மத்தளங் கொட்டுந் தொழிலாளனாக அங்குச் சென்றார். மத்தளத்தை மதுகைநாதன் கோவில்

முன்னர் முழக்கினர். அம் முழக்கமே மாயையினுடைய உள்ளத்தை முதலில் கவர்ந்தது. அவர் மத்தளம் முழக்கிய திறமையை "மீன் குத்திப்பறவை மீனைக் கவரும் போது அதனுடைய இரு பக்கத்து இறகுகள் மட்டுமே படபட என்று அடித்துக்கொள்ளும்; அதன் உடல் அசைவுறாது; அதுபோல அல்லமர் மத்தளத்தை யடிக்கும்போது அவருடைய இரு கைகளின் விரல்கள் மட்டுமே 'தொழில் புரிந்தன; உடல் அசையவில்லை" என்று ஒரு சிறந்த உவமையால் விளக்குகின்றார் ஆசிரியர். பின்னர் அல்லமரைத் தோழியர் அழைத்து வந்தனர். கண்டாள் மாயை. செந்நிலத்தில் பெய்த நீர்போல மாயை அல்லமருடைய பேரழகில் ஈடுபட்டு மயங்கிவிட்டாள்.

மாயை அல்லமனுடைய வனப்பில் மயங்கியிருத்தலைக் குறிப்பாலுணர்ந்த தோழியர் "எங்கள் பிராட்டியிடமுள்ள கலைஞர்களோடு நீயும் தங்கியிருக்கலாம்" என்று அல்லம ரிடம் கூறியதைக்கேட்ட மாயை மகிழ்ச்சியடைந்து, 'இது மதுகைநாதன் பூசனைப் பயன்' என்றெண்ணினள். அவன் அழகில் ஈடுபட்டு மணந்துகொள்ள விரும்பினளே யன்றி அவனால் வீடுபேற்றை அடையக் கருதவில்லை. அது கரும்பிலுள்ள இனிய சாற்றை விடுத்து அதன் சக்கையை விரும்பினாற் போலவும், புழுகுபூனையினிடத்துள்ள மணப் பொருளை விடுத்து அதன் மலத்தை விரும்பினாற் போலவும் அவளுடைய விருப்பம் இருந்தது என்று கவிஞர் கூறுதல் பொருந்தும். மதமானி அல்லமனைக் கன்னி மாடத்தில் தங்கியிருக்கக் கூறியதற்கு அல்லமர் "நான் ஒன்றுமில்லாதவன் (ஏழை) நீங்கள் மிகச் செல்வர்கள். நுங்கள் தலைவி அரசர் குலமடந்தை; யான் சாதி யறியாதவன். அன்றியும் நீங்கள் மகளிர்; யான் ஆண் மகன். ஆதலின், எக்காலத்தும் உங்களுடன் சேர்ந் திருத்தல் தகாது. மேலும் ஒருவர்பால் தொழில் செய் பவர் தூரத்திலிருந்து குறித்த காலத்தில் வந்து அப் பணியைப் புரிதலே நல்லது" என்று கூறும் இவ்வுரைகள் சிறந்த உலகியலை அறிவிப்பனவாகவுள்ளன.

அல்லமனை நோக்கி மதமானி "நல்ல சகுனம் என்ன எதிர்கண்டு வந்தாய் நம்பி நீ" என்று கூறுகின்றாள். இது நற்சகுனம் கண்டு வருவோர் நல்ல பலனையடைவர் என்னும் சகுனசாத்திர உண்மையைப் புலப்படுத்துகின்றது.

தூது சென்ற மதமானி வருவதற்குள் மகளிர், "கருங்கண் இடனுகைக் குறிகள் நல்ல விளங்குதலாற், கன்னிக் குவகை கைகூடும்" என்று கருதினர்கள். ஆதலின் பெண்களுக்கு இடக்கண் துடித்தல் நற்குறியாகுமென்பது தெரியவரும். அவ்வாறே ஆடவர்க்கு வலக்கண், வலதுதோள் துடித்தல் நற்குறியாகுமென்பது "வலமாடின விழிதோள் அருள் வசவற்கு" (சூனிய - இருந்தகதி - செய்யுள், ரு) என்று இந் நூலுள் உணர்த்தப்படுகிறது. அல்லமனை அழைத்து வந்து பள்ளியறையுள் விடுத்தாள் மதமானி. மாயை அவனை அணையச் சென்றாள். பலவாறு முயன்றும் அவன் அகப்பட்டிலன். அதனால் அவள் மிகவும் வருந்தினாள். அதனை அறிந்த மகளிர் "அரிய தவத்தை யழிக்கும் அழகுடைய இவ் வணங்கிற்கு அகப் படாத ஆற்றலுடையவனாகிய அல்லமன் இந்திரன், பிரமன், திருமால், தேவர், முனிவர், கிம்புருடர், வித்தியாதரர் ஆகிய இவர்களுள் ஒருவனல்லன். இவன் பராபரனேயாவன்" என வியந்துரைத்தனர். ஆதலின் அல்லமர் புலனடக்கமுடையவ ரென்பதும் இறைமைத்தன்மை யுடையா ரென்பதும் அறியவரும். அல்லமனைக் கண்டு காமுற்றுக் கன்னியர்க்குரிய நெறியிற் பிறழ்ந்தொழுகுதலை அறிந்த தாய் மோகினி "பெற்றோருடைய ஆணையின்படி யொழுகும் மகளிர் பெற்றோர் உடன்பட்டுக் கொடாவிடில் முருகனை யொத்த அழகுடையவராயிருப்பினும் அவரை விரும்பார். அழகில்லாதவராயிருப்பினும் பெற்றோர் உளமகிழ்வுற்றுக் கொடுப்பாராயின் அவரைக் கடவுளாகவே நினைந்து அவருடன் இனிமையுடன் பழகுவர்; எக் காலத்தும் பெண்கள் தம்வயமிலர்" என்று கூறும் உரையாக (செய்யுள், எஎ, எ௯)க் கூறப்பட்டுள்ளது.

இங்ஙனம் கூறுதல் கொடுப்போரும் அடுப்பாருமின்றி ஊழ்வயத்தால் உருவுந் திருவுமுடைய தலைமக்கள் ஒருவரை யொருவர் கண்டு காதலித்து உள்ளம் இயைந்து வாழும் வாழ்க்கையைச் சிறப்புடையதாகக் கூறும் தமிழ் அகப்பொருள் இலக்கணத்திற்கு மாறுபட்டதே யாகும். ஆயினும் பிற்காலத்தில் மகளிரைத் தம் வயமிலராக வைத்திருந்த வாழ்க்கை நிலையை அறிவிக்கின்றதெனக் கோடல் சாலும். பின்னர்த் தாய் மோகினி "என் தவப் பயனும் பாகெனு மொழியாள் தவறு செய்திலள். கந்தருவ மணம் அரச மரபினர்க்குரியதென்பர். ஆகலின் இவளுக்கு அல்லமன் அருமணத் தலைவனுவன்; அவன்பால் இன்பம் துய்ப்பாளாக" என்று கூறுகின்ருள். ஆதலின், கந்தருவ மண முறையில் அரச மகளிர் காதல் பூண்டொழுகுதல் பண்டைநாளிலிருந்த வழக்கமென்பதும் அறியப்படும்.

[1]விமலை கதி

உமையால் உலகிற்கு அனுப்பப்பெற்ற விமலை அல்லமன் இயல்பினை மாயைக்கு விளக்கியுரைத்ததை இக்கதி யுணர்த்தும்.

விமலை கயிலையிலிருந்து உமாதேவியார் அனுப்ப வந்தவள். இவளை மாயை இன்னுள் என்று அறிந்திலள். ஆனால் இவள் நிலவுலகத்தவள் அல்லள் என்று மட்டும் அறிந்தாள். இவ்விருவரும் ஒத்த தன்மை யமைந்த உருவினைப் பெற்றிருந்தனர். அதனை இரண்டு கரங் களிலும் ஏந்திய இரு மணிகள்போல் இருந்தனர் என்று கண்டோர் கூற்ருக ஆசிரியர் கூறுகின்ருர். விமலை மாயையை நோக்கி, "நீ உமையின் தமோகுணக் கூருக உள்ளவள் அல்லையோ? ஓட மருந்துண்டு உறங்குதல் போல் நீ கூறிய சூளினை மறந்து இவண் இருத்தலால் உன்னை அழைத்துவர என்னை உமை ஏவினுர்," என்ற பொழுது மாயை முற்பிறப்பின் நினைவு சிறிது வரப்

1. இக் கதியின் ஒரு பகுதி இயைபு நோக்கிப் பிரபுதேவர் வந்த கதியில் ஆராயப்பெற்றது.

பெற்ருள். உலகில் தன்னை அறியாதிருந்த மாயை, "உலகிற்கு மூலகாரணன் என்று சிலர் சொல்லும்படியான திருமாலும் இராமஞக மண்ணுலகில் தோன்றிய காலத்தில் தன் இயல்பினை அறிந்திலன் என்ருல் சிறிய பேதையாகிய யான் இவ்வுலகில் மயங்குதலைச் சொல்ல வேண்டுமோ?" என்கின்ருள். இதனுல் உலகில் தோன்றியவர் முற்பிறப்பின் செய்தியை உணர்த்தவும் சிறிதளவே உணர்வர் என்பது பெறப்படும். இந் நூலாசிரியர் சூரியன் விளங்குகின்ற பகல்போல் தெளிவுருமல் சந்திரன் விளங்குகின்ற இரவுபோல் விமலையின் சொல்லால் சிறிது முன் உணர்வு வரப்பெற்ருள் என்று கூறுதல் இதனை வலியுறுத்தும்.

**மாயை கோலாகல கதி**

மாயை "அல்லமனைப் புல்லுவன்" என்றெழுந்த பொழுது அல்லமன் அகன்றதை இக்கதி யுணர்த்தும்.

விமலையிடம் அல்லமனை அடையும் வழி யாது? என்று மாயை வினவினுள். அதற்குச் "சிவபெருமானை நீ வழிபடுவாயாஞல் அவன் உன் எதிரே தோன்றி உன் விருப்பத்தை நிறைவேற்றுவான்" என்ருள். அதற்கு "யான் நீ கூறுவதற்கு முன்னரே மதுகைநாதனை வழிபட்டேன். அதனுல் யாதொரு பயனும் உண்டாகவில்லை" என்றுரைத்தாள். இவ்வாறுரைத்த மொழிகளைக் கேட்ட விமலை, இவள் அகவிழியில்லாமையால் இவ்வாறுரைத்தாள் என்று வருந்தி அரகர என்று காதைப் பொத்திக்கொண்டாள்.

இவ்வாறு சிவபூசை செய்தல் முதலிய சரியை, கிரியைகளாற் பயனில்லை என்று விவர்த்தனவாதிகள் கூறுவர். அவர்களை விமலையின் கூற்ருக வைத்து 6—15 பாடல்களால் மறுத்துக் கூறுகின்ருர் ஆசிரியர். அவற்றின் பொருள்:

"பிரமன் திருமால் முதலிய தேவர்களாயிருப்பினும் அன்புடன் செய்யும் சிவவழிபாட்டால் அன்றிப் பிறவற்ருல் அவர்களுடைய எண்ணம் நிறைவேறுமோ? இந்திரன்,

திருமால், பிரமன், தேவர்கள், முனிவர்கள் பலரும் உலகில் விதிப்படி வழிபாடாற்றிய சிவாலயங்கள் இருத்தலை நீ காணவில்லையோ? பார்வதி, திருமகள், கலைமகள், தெய்வ மகளிர், முனிவர்களின் மனைவியர் யாவரும் சிவ வழிபாட்டால் உயர்ந்த நிலையை அடைந்ததை நீ அறிந்திலையோ? முழுமுதற் கடவுளை வழிபடுவதால் அட்டமாசித்திகளையும் உயர்வையும் இம்மைப்பயனை எண்ணியவர் அடைவர்; அதனை விரும்பாதவர் முத்தியை யடைவர். இஃது உண்மை உண்மை. பெருமை மிக்க மனிதப் பிறப்பை அடைந்தும் மலர்களால் இறைவனைப் பூசியாதவர் தங்கள் வாழ்நாளை வீணாகக் கழிப்பவராவர். அவர்கள் மூடரை எண்ணுங்கால் முந்தி நிற்பவர். சிவபெருமானுடைய திருவடிகளை மலரிட்டு வணங்குபவரைச் சிவபெருமானாகவே எண்ணி அவர்களுடைய திருவடிகளை உலகத்தோர் போற்றுவர். பிணியும் பிறப்பும் இல்லாத இறைவனைப் பூசித்துச் சிவசாரூப்பியத்தை யடையாத மனிதப் பிறப்பிலும் அறிஞர்களால் இகழப்படாத நாய்ப்பிறப்பு மிகவும் நன்று நன்று. ஒப்பற்ற ஆகமம் கூறியவாறு மந்திரங்களும் கிரியைகளும் குற்றமில்லாமல் குருபரன் அருளால் அறிந்து செய்பவர்கள் பரசிவ பூசனையின் பயனை அடைவர். சிவ பெருமான் ஐந்து முகங்களாலும் அருளிய ஆகம முறைப் படி சிவபூசை செய்தாலும் உள்ளத்தில் அன்பு இல்லையேல் அவ்வாறு செய்த வழிபாடு பயன் தராது. பூசை செய்கின்ற தன்னையும் பூசிக்கப்படும் ஈசனுடைய இயல்பையும் பூசை செய்வதற்குரிய பொருள்களையும் அறிவால் உயர்ந்த ஆசிரியன் அருளால் தெரிந்துகொள்ள வேண்டும். நீ செய்த பூசையில் மந்திரங்கள் கிரியைகள் ஆகியவற்றில் குற்றம் நேர்ந்ததோ? உன் மனம் உலக விடயத்திற் சென்றதோ? யாது காரணத்தாலோ நீ பூசனையின் பயனைப் பெற்றிலை. அதனால் சிவவழிபாட்டாற் பயனில்லை என்று நிந்தித்தாய்.''

என்னும் இவ் வுரையில் விமலை சிவ வழிபாட்டால் உயர்வுற்றோரை எடுத்துக் காட்டுகின்றாள். இம்மைப்

பயன், மறுமைப் பயன், வீட்டின்பம் ஆகியவற்றையும் சிவபூசை தரும் என்று சத்தியம் கூறி வற்புறுத்துகின்றாள். சிவபூசனை புரியாத மனிதப் பிறப்பிலும் நாய்ப் பிறப்பு நன்று என்று வழிபடாதோரை இழித்துரைக்கின்றாள். சிவபூசை செய்யும் முறையைக் குருவின் மூலமாக அறிந்து கொள்ள வேண்டுமென்று வழி கூறுகின்றாள். இவை யாவற்றினும் சிவ பூசையின் பயனை அடைய அன்பு வேண்டு மென்பதை,

"அண்ணல்ஐம் முகங்களும் அருளும் ஆகம
நண்ணிய விதிமுறை நன்கு செய்யினும்
எண்ணரும் அன்புளத்(து) இல்லை யேஎனில்
பண்ணிய பூசனை பயன்த ராதரோ"

என்று அழுத்தமாகக் கூறுகின்றாள். மாயை தான் செய்த பூசனையின் பயனைப் பெறவில்லை என்றதற்கு விமலை,

"மந்திர தந்திர வழுக்கள் வந்தவோ?
சிந்தனை புறவிட யத்திற் சென்றதோ?"

என ஐயுறுகின்றாள். இவற்றால் மந்திரங்களிலும் செய்யும் செயல்களிலும் (கிரியை) குறைவு நேரிடின் வழிபாட்டின் பயனைப் பெறார்; வழிபாடு செய்யுங் காலத்தில் மனத்தை ஒருநிலைப்படுத்தி அன்புடன் செய்தல் வேண்டும்; அவ்வா றின்றி மனத்தைப் புறத்தே செலுத்தி ஏனைய கரணங் களால் வழிபடுவோர் பயனுறார் என்பன தெளிவாம். மாயை செய்த பூசனையின் பயனே அவள் கண்காண அல்லமர் உருவுடன் தோன்றினர். அவள் அதனைத் தன் அறியாமையால் உணர்ந்திலள். உணராதவளாய், "எங்குரு உரைத்தவாற்றால், இன்றளவு இலிங்க பூசை இயற்றியும் பயனென்றில்லை" என்று மேலுங் கூறினாள்.

மாயை, சச்சிதானந்த சம்புவாகிய அல்லமனும் மத்தளிகனைத் தன்கண் காண வந்துள்ள அல்லமனும் வேறு வேறுவர் என்று எண்ணினாள். ஆதலின், விமலை வேண்டிய வடிவங்கொண்டு வேண்டியவாறு செய்யும்

அல்லமனுக்கு இவ்வுருவம் பொருந்தும், இது பொருந்தாது என்றில்லை. அவன் எவ் வுருவமும் கொள்வான் என்றாள். மாயை நடன அரங்கில் அல்லமனைக் காட்ட விமலையை அழைத்துக்கொண்டு சென்றாள். அல்லமன் தான் என்றறிவிப்பதுபோல மத்தளத்தைத் தாம் தாம் என்று முழக்கினான். மாயை நெஞ்சு ஊசலாடக் காம மயக்கத் துடன் நடித்தாள். செந்நிறம் சேர்ந்த பளிங்கு செந்நிறம் பெற்றுக் காணப்படுதல்போல அல்லமன் மாயையினது உள்ளத்தில் உள்ள காமம் தன்னிடத்தில் காணும்படி நின்றான். இதனை ஆசிரியர் வேற்றுப்பொருள் வைப்பணி நலம்பட மாயையினிடத்தில் பொருந்திய தாமத முதலிய குணங்கள் சேர்ந்து பிரமத்தினிடத்தில் காணப்படும் என்று கூறுவதும் உண்மையல்லவா? என்று உண்மை நூற் கருத்தை இவண் புலப்படுத்தும் அழகு போற்றத் தக்கது. விமலை இவன் சிவபெருமானாகிய அல்லமனே என்று கண்ணுற் காட்டவே மாயை கயிலையில் தான் கூறிய சபதத்தை நிறைவேற்றவேண்டி அல்லமன் மீது விழவும் பற்றிப் புல்லவும் நினைந்தாள். அப்பொழுது அல்லமன் மத்தளத்தை எறிந்துவிட்டு ஓடினான். இப்பால் மாயை தன் சூளினை நிறைவேற்றவே முயல்கின்றாள். மாயை அல்லமனைப் பின்தொடர்ந்து சென்றாள். செல்வதைக் கண்டோர் "மகள்தனை அந்தோ ஆண்டு, பத்தின்மேல் வைத்திருத்தல் பாவம் என்றிகழ்ந்தார்" இதனால் அந் நாளில் மங்கைப் பருவம் அடைவதற்கு முன்னரே மகளிர்க்கு மணம்புரிதல் நன்று என்ற கருத்து மக்க ளிடையே யிருந்ததென்பதை யறியலாம்.

பிரிவொழுக்கம் பாலை நிலத்திற்குரியது. ஆதலின் தமிழ்நூல் மரபிற்கேற்ப அல்லமன் மாயையை விடுத்துச் சென்ற நிலத்தைப் பாலையாகக் கொண்டு அந் நிலத்திற் குரிய நண்பகலும் வேனிலும் ஆகிய பொழுதுகளும் நாய், யானை முதலிய கருப்பொருள்களும் விரவிவர நூலாசிரியர் எட்டுப் பாட்டுக்களால் (சஅ-ருரு) அந் நிலத்தை மிக அழகுற வருணிக்கின்றார். அப் பாடல்கள் கவிச்சித்திரங்க

ளாகக் கற்பனை நலங்கனிந்து விளங்குகின்றன. அவற்றின் பொருள் கீழ் வருவன :

"காமமாகிய கொடிய நெருப்பில் உடல் வெந்து உளம் கரிந்துள்ள மாயையே யல்லாமல் கடலிற் றோன்றிய குளிர்ந்த தண்ணிய செந்தாமரை மலர்மேல் வாழ்கின்ற திருமகள் அப் பாலைநிலத்தில் செல்வாளானால் நீரில் தாவும் இளங் கயலானது சுடுகின்ற மணலில் வீழ்ந்தாற் போல் தளர்வாள்." (செய்யுள், ௪அ)

"நீலோற்பல மலர் போலும் கரிய கண்ணிணையுடைய மாயை சென்ற கொடிய பாலைநிலத்தில் யானையினுடைய துதிக்கையை நிகர்த்த துளி இடைவிடாமல் மேகத்தி னின்று பெய்தாலும் நெருப்பில் காய்ச்சிய வலிய இரும் பின்மேல் நகத்தின் நுனியினின்று தெறித்த நீர்த்துளி யைப் போல விரைவில் சுவறிவிடும்." (செய்யுள், ௪௯)

"திருமால் உலகை யுண்டபொழுது இத்தகைய கொடிய பாலைநிலம் என்று கருதித் தன் வயிற்றின்கண் இல்லாமல் உடல் பதைத்து உடனே உமிழ்ந்திலனாகில் அவன் திருப்பாற்கடலில் வீழ்ந்ததனாலும் உண்ட வெண்ணெயாலும் கொடிய வெப்பம் தணிந்து உயிர் பிழைப்பானல்லன்." (செய்யுள், ௫0)

"(அந்நிலத்திலுள்ள) நாயினது நாவினின்று சொட் டும் நீரை (தன்னைக் கொல்லுமென்றுங் கருதாது நீர் வேட்கையால்) சிறிய முயற் குட்டிகள் நக்கும். அத்தகு கொடிய பாலைநிலத்தில் தன்னை மறந்து பரவசத்திற் சென்ற மாயையைத் தொடர்ந்து பின் சென்ற தாமரை மலர்போலும் முகமுடைய மாதர்களுடைய வாயிலுள்ள நீர் அற்றுக் கண்களினின்று நீர்த்தாரைகள் வந்து பெருகின." (செய்யுள், ௫க)

"கானலை நீர் என்று கருதிக் கொஞ்சதூரம் விரைந்து சென்று மெய்சோர்வுறுவர். மான் போன்ற நோக்குடை யோர் சிலர் வாயின்கடைசியை நாவினால் வருடியும்

முன்றானையை ஒருகையால்கொண்டு முகத்தெதிரே யசைத்தும் மெய்சோர்வார். வேனிற்காலம் ஆ! கொடிது என்று தம் விதியினை வெறுத்துக் கொள்வார்.'' (செய்யுள், ரு௨)

"இவ்வாறு பெண்கள் தொடர்ந்து பின்னே வர அழகிய மாயையினுடைய தாமரை மலர்போலும் பாதங்கள் பாலைநிலத்தில் நடந்து வருந்தின. அந்த ஆதிநாயகனாகிய அல்லமனைத் தடுத்து இவளுக்கு உதவி செய்து கருமணல் போலுங் கூந்தலையுடைய மாயையோடு நாம் (நம்மைக் கண்ணால் வெல்லும்பகை நீங்க) நட்புக் கொள்வோம் என்று கருதி ஓடுதல்போல மான்கள் முன்னர் ஓடும்.'' (செய்யுள், ருங)

"மாயையின் கூந்தல் ஆகாயத்தில் படர்ந்துள்ள மேகம்போல் காணப்பட, அவளது உதடு இந்திர கோபம் போல் காணப்பட, உயர்ந்துள்ள கொங்கைமேல் அணிந்துள்ள முத்துமாலை மலையினின்று விழும் அருவியை யொத்திருக்க, அவளுடைய அழகிய கை காந்தள் மலர் போலிருக்க, தோகையையுடைய மயில்கள் வருகின்ற கார்காலம் என்று கருதி மகிழும்படி பெரிய வனத்தில் வந்தாள் மாயை.'' (செய்யுள் - ருச)

"சிங்கங்களும் யானைகளும் பணிவிடை செய்யத் தவஞ்செய்து அங்கு வாழும் அரிய தவத்தினர் மாயையினுடைய நகில், இடை எனப்படும் யானையையும் சிறிய சிங்கத்தையுங்கண்டு உள்ளம் தளர்ந்து மிக்க துயரத்துடன் எழுந்து வேறிடத்திற்குச் சென்றனர்.'' (செய்யுள், ருரு)

என்றுள்ள இவ்வருணனைப் பகுதி படிப்போர் உள்ளத்தைக் கவராமல் இரா. இவற்றுள்,

"நாயின் நாவில்நீர் சிறுமுயற் குருளைகள் நக்கும்.''

(செய்யுள், ௬க)

"கானல் நீரெனச் சிறிதிடங் கடிதுசென் றிளைப்பார்
மானனுர் சிலர் வாய்க்கடை நாவினல் வருடித்
தானை யோர்கர முகத்தெதிர் அசைத்துமெய் தளர்வார்.''

(செய்யுள், ௬௨)

என வருகின்ற செய்யுளடிகள் கவிச் சித்திரங்களாக விளங்குவதைக் காண்க.

அப் பாலைநிலத்தில் மத்தளிகன் வடிவங்கொண்டு மீண்டும் மாயை முன்தோன்றிய அல்லமனுக்கும் மாயைக்கும் நிகழ்ந்த வாக்குவாதத்தில் உண்மை நூற் கருத்துக்கள் பலவற்றை வைத்து ஆசிரியர் உரைக்கின்றார். மாயையின் இயல்பை மமகாரன் மகளாகிய மாயையினிடத்தும் பதியின் இயல்பை அல்லமனிடத்தும் சார்த்திக் கூறும் இடங்கள் சுவை பயப்பனவாக வுள்ளன.

மாயை,

"தொல்லை நின்றிரு மேனிபோல் உள்ளமுந் தூய்தாய்
நல்லை யென்றுனை நம்பினேன்; வஞ்சக நடிப்பு
வல்லை என்பதை அறிந்திலேன்."

என்று அல்லமனை நோக்கிக் கூறுகின்றாள். அழகுமிக்க உடலைப் பெறுவதும் ஒரு நற்பேறேயாகும். சிந்தாமணியாரும் "உருவின் மிக்கதோர் உடலது பெறுதலும் அரிதே" என்றார். புற உடல் அழகு பெற்றிருந்தால் அகத்தேயுள்ள உள்ளமும் நல்ல எண்ணங்களுக்கு உறைவிடமாக அமைந்திலங்கும் என்பது இக் கூற்றால் விளங்கும். மற்றும் மாயை அல்லமனை நோக்கி, "வஞ்சக நடிப்பு வல்லை என்பதை யறிந்திலேன் நான்" என்று கடுஞ்சொல் உரைத்தாள். அதற்கு அல்லமன், "வஞ்ச நாடக நடிப்பது மாயை தன் செயலோ? அன்றி அடியார்க்கு எளியனாகிய அல்லமன் செயலோ? இதனைத் தேவர்களையும் மாதவர்களையும் கேட்டறிவாய்" என்றான். அதற்கு மாயை தற்பெருமையாகக் கூறத் தொடங்குகின்றாள். மாயை எளனக் குறிப்புடன் புன்னகை புரிந்து, "நின்னைப்பற்றித் தேவர்களைக் கொண்டும் முனிவர்களைக் கொண்டும் நீ சொல்விப்பது ஒரு திருடனானவன் தன் மனைவியைத் திருடப்பட்ட பொருளைக் கண்டறியும்படியாகிய நல்ல குறிகளைச் சொல்விப்பதற் கொப்பாம். நீ கூறும்படியான தேவர்களுள் சிறந்தோராகிய (திருமகளை மார்பில் கொண்

டுள்ள) திருமால் நெஞ்சம் யாதினால் என்னை அகன்றிட நினைப்பான்! (கலைமகளை நாவில் கொண்டுள்ள) பிரமன் மாயை யில்லாதவன் என்று சொல்ல அவனுக்கு வாயுண்டோ! (உடல் முழுவதும் ஆயிரங்கண்களையுடைய) இந்திரன் என்னை எவ்வுடலால் விடுவான்!'' என்று பெருமிதமாகக் கூறுகின்றாள். இவ்வுரையில் தநு, கரண முதலாயின மாயையின் காரியம் ஆதலின் உடலைப் பெற்றுள்ள இத் தேவர்கள் மாயையின் வயப்பட்டவர்களே யாவர் என்னும் மெய்ந்நூற் பொருள் புலப்படுத்தப்படுதல் காண்க. மற்றும், மாயை, "எனக்கு அஞ்சிக் கொடிய மிருகங்கள் வாழ்கின்ற காட்டில் வாழும் தவத்தினர் என்னை வெல்ல வல்லவர் ஆவரோ? ஆகார்; பின்னர் என்னை வெல்லத் தக்கவர் எவர்?'' என்றாள். அதற்கு அல்லமன், "என்னுடைய ஆணையைக் கடப்பவர் இல்லை என்று கூறினாய்; அவர்நிற்க, உயிர்களால் கூறப்பட்ட வார்த்தைகளால் அல்லாமல் இறைவன் அருளிய மறை, ஆகமங்கள் மூலமாக அறிவாய்'' என்றான்.

அதற்கு மாயை, "சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற நான்கு வாக்குகளையும் ஆராய்ந்து பார்த்தாலும் நான் அவற்றினுக்கு மூலகாரணமாவேன். இவ்வாறு யான் கூறிய உரையை எல்லா உண்மை நூல்களும் உரைக்கும்,'' என்று செருக்குடன் உரைத்தாள். இங்ஙனம் கூறிய மாற்றத்தால் மறைகளுக்கும் ஆகமங்களுக்கும் சுத்த மாயையே முதற்காரணமென்னும் உண்மையைப் புலப்படுத்துதல் காண்க.[1] "சுத்த மாயையினின்றும் பஞ்ச கலைகளும் நால்வகை வாக்கும் சிவதத்துவம் ஐந்தும் சுத்தகால முதல் சுத்தநிலம் ஈறாகிய முப்பத்தொன்றும்'' என்னும் உரையும் ஈண்டு அறியத்தக்கது.

மாயை சிவபெருமானையே தலைவனாகக் கொள்ள விரும்பி வழிபாடாற்றினாள். ஆனால் அப்பயனைப் பெற்றிலள். அதற்கு அல்லமன்,

---

1. சிவஞானபோதச் சிற்றுரை. இரண்டாம் சூத்திரம், இரண்டாம் அதிகரணம்.

"காமி யாகிநீ அருச்சனை கடைப்பிடித் தமையால்
நாம வேல்நெடுங் கண்ணிணுய்! காமிபோல் நடித்தேன்
தீமை நெஞ்சினுல் சூள்நினைந் தனைநினைத் தீண்டேன்."

என்று கூறுவதால் காம இன்பத்தையே கருதி மாயை பூசனை புரிந்தாள். அதற்கு இறைவன் அழகிய மகனுக (அல்லமனுக) வந்து அவள் முன்னர்த் தோன்றிக் காமி போலவே நடித்தான். "வேண்டிய வடிவங்கொண்டு வேண்டியவாறு செய்யும், ஆண்டருள் அல்லமன்" என்பதும் இதனை வலியுறுத்தும். பின்னர் மாயை அல்லமனைப் புல்லுதற்கு எளியன் என்று கருதியதால் அவளைத் தீண்டாமல் அகன்ருன். மாயை மனங்கலங்கி நின்றதைக் கண்ட விமலை அல்லமனை நோக்கி, "இரச குளிகையானது களிம்பினையுடைய செம்பின் இயல்பு நோக்காமல் பொன்னுக்குவதுபோல இவள் இயல்பு நோக்காது அருள்புரிவாய்" என்று வேண்டிக் கொண்டதற்கு "வெறுமையாகிய ஓடு இரச குளிகையால் பொன் னுருவானுல் என்னுல் இம் மாயை இன்பமடைவாள்" என்று கூறிய விடை மிகப் பொருத்தமாக வுள்ளது. அல்லமர் சிவயோகியானதால் அவளுடைய கைக்கு அகப் படாமல் அகன்ருர்.

[1]மாயை அல்லமனைப் பின் தொடர்ந்து சென்றதை யறிந்த தாய் மோகினி எண்ணுங் கருத்தாகக் கூறப்பட் டுள்ள செய்யுள்கள் தாயன்பினை வெளிப்படுத்துகின்றன; மனத்தை உருக்குகின்றன. "காய் பசிக்கு" "கண்டுவார் சிலை" (செய்யுள் சு, எ) என்ற செய்யுள்களின் பொழிப்பு இங்குத் தரப்படுகின்றது. அதனை நோக்குக.

"வருத்துகின்ற பசியைப் போக்கும் பொருட்டு மிருகங்களைப் பிடித்து ஊனைத் தின்ன வாய் பதைத்துக் கொண்டிருக்கும் வேடர்களுடைய வலையில் இளமான் கன்று போய்ப்பட, தாய்மான் அவ்விடத்தை யடைந்து, பதைப்பதைத் தன் முன்னர் என்மகள் காண்பாளோ!"

---

1. வசவண்ணர் வந்த கதியிலுள்ள ஒரு பகுதி இயைபு பற்றிச் சேர்க்கப்பட்டுள்ளது.

"நீண்ட வில்லினையுடைய வேடர் குஞ்சுகளைக் கண்டு எடுத்துச் செல்ல, குஞ்சுகள் இல்லாத கூட்டினைப் பார்த்து ஏக்கங்கொண்டு தன் குஞ்சுகளுக்காகக் கொண்டுவந்த இரை அலகினின்று சோரத் தாய்ப் பறவையானது மிக்க துன்பத்தால் மயக்குறுதலை என்மகள் காண்பாளோ !"

என்றிவ்வாறு தாய் மானும், தாய்ப் பறவையும் முறையே கன்றுக்கு நேர்ந்த துன்பத்தையும் குஞ்சுகளின் பிரிவையுங் கண்டு இரங்குவதைப் பார்த்து என் மகளும் இவ்வாறுதான் நம்மைப் பிரிந்த நம் அன்னையும் வருந்துவா ளென்று எண்ணியாவது இல்லத்திற்குத் திரும்பிவர மாட்டாளா ! என்ற கருத்துப்பட மோகினித்தாய் கூறுவ தாகப் புனைந்திருக்கும் செய்யுள்கள் அவலச் சுவை மிக்குள்ளன.

மாயை காட்டிற்குச் சென்றதை யறிந்த தந்தை மமகாரனும், தாய் மோகினியும் உற்ற நிலையைக் கூறுந்திறம் நோக்கத்தக்கது. மமகாரன் ஆண்மையுடையோனாதலின் மகளது இழிசெயலால் நேர்ந்த துயரத்தையும் அடக்கிக் கொண்டு அழுதல், அரற்றுதல், புரள்தல் ஆகிய அவலத் தைப் புலப்படுத்தும் செயல்களைச் செய்யாமல் எழுதிய ஓவியம் போல அசைவற்று நின்றான். தாய் மோகினி பெண் இயல்பிற்கேற்ப் விழுதல், எழுதல், மெலிதல், நைந்தழுதல், கையால் நிலத்தை உழுதல், பெருமூச்சு விடுதல், இறப்பேன் என்றெழுதல், கைந்நெரித்தல், ஏங்குதல் ஆகிய அவலத்தைப் புலப்படுத்தும் செயல் களைச் செய்தனள். இவ்வாறு இருபாலரின் இயல்புகள் தோன்றப் புனைந்துள்ள கவித்திறத்தைக் காண்க.

இக்கதியுடன் கயிலையிலிருந்து உமையின் ஆணையால் அல்லமனைப் பற்ற உலகிற்கு வந்த மாயையைப் பற்றிய செய்தி முடிவுற்றது.

ஈண்டு இதுகாறும் ஆராய்ந்த ஆறு கதிகளின் பிண்டப் பொருளையும் அவற்றின் உள்ளுறைப் பொருளையும் உள்ளத்து உணர்ந்து கோடல் நன்றாம்.

பிண்டப் பொருள்: மாயை தமோகுணமாது; ஞானம் அற்றவள்; ஞானத்தால், அன்பால் பெறற்கெளியனாகிய அல்லமனை வலிந்துபற்றி ஈர்த்து வருவேன் என்று செருக்குடன் சூள் உரைத்துக் கயிலையினின்று வந்தாள். உலகில் உதித்த பின்னர் தான் எச் செயலுக்காக வந்தவள் என்பதை மறந்தாள். காமியப் பயன் கருதி இறைவனை வழிபட்டாள். இறைவன் அல்லமனுக்த் தன்முன் தோன்றியும் தனது காமத்தால் அவனது உண்மை நிலையை அறிந்திலள். விமலை உணர்த்தத் தன் முன்னிலையை உணர்ந்தாள். சூளினை நிறைவேற்ற முயன்றாள். மாயை வயப்படாத அல்லமன் அவளைத் துறந்தகன்றான். மாயை தன் சூளினை நிறைவேற்ற முடியாதவளாய் வறிதே மீண்டு விமலையுடன் கயிலையை அடைந்தாள்.

இங்ஙனம் உள்ள வரலாற்றில் தமோகுணச் செயலால் இறைவனை அடைதல் முடியாது; இறைவன் ஞான வடிவினனாகவுள்ளவன்; மாயையைத் துறந்தவன்; மாயையால் பற்றப்படாதவன் என்னும் பொருள்கள் உள்ளுறையாக அமைந்துள்ளன.

மற்றும் இவ்வரலாற்றின் கூற்றுக்கு உரியவர்களாகவுள்ள மமகாரன், மோகினி, மாயை, அகங்காரன் என்றவரின் பெயர்களும்; நிராங்காரன், சுஞ்ஞானி என்பவரின் பெயர்களும் சில உண்மைகளை விளக்கி நிற்கின்றன. மமகாரம் என்பது தனதல்லதைத் தனதாகக்கோடல்; மோகம் என்பது பிரியமல்லாததைப் பிரியமாகக் கோடல்; மாயை என்பது பொருளல்லதைப் பொருளாகக் கொள்ளும் மருள்; அகங்காரம் என்பது யான் என்னும் செருக்கு; நிரகங்காரம் என்பது அகங்காரம் இன்மை; சுஞ்ஞானம் என்பதும் மெய்யுணர்வு என்பர். மமகாரன் மோகினியாகிய இருவர்பால் மாயை பிறந்தாள் என்பதால் மமகாரமும் மோகமும் மிக்க நிலையில் உண்டாவது மாயை என்பதும், அவர்களுக்கு மரபாசிரியனாக இருந்தவன் அகங்காரன் என்பதால் மமகாரத்துடன் அகங்காரமும் ஒன்றுபடும் என்பதும், நிரகங்காரன், சுஞ்ஞானி ஆகியவரிடத்து

அல்லமன் பிறந்தார் என்பதால் நிரகங்காரமும் சுஞ்ஞான மும் பொருந்திய காலத்தில் மாயையை வெல்லும் ஆற்றல் பிறக்கும் என்பது ஆகிய பொருள்களும் குறிப்பால் உணரத்தக்கனவாக வுள்ளன.

**வசவண்ணர் வந்த கதி**

கயிலையிலிருந்து சத்துவ கலை மடந்தையும் நந்தி தேவரும் சிவகணத் தலைவர்களும் உலகிற்கு வந்ததை இக்கதி யுணர்த்தும்.

அல்லமனை அடைய முடியாமல் வறிதே மாயை மீண்டதை யறிந்த உமையம்மையார் நாணமுற்றுச் சிவபெருமானிடம் அல்லமனைக் காணும் நெறியருளுமாறு வேண்டினார். அதற்குச் சிவபெருமான், "நீ சத்துவ குண மடந்தையை அனுப்பினுயானல் காணுதல் கூடும்" என்றார். அதனைக் கேட்டுக் கொண்டிருந்த நந்தியம் பெருமான் "ஒப்பற்ற பத்தி என்னும் அஞ்சனமை ஒன்றிருந்தால் அறிவானந்த வடிவனாகிய அல்லமன் என்னும் புதையலைக் காணக்கூடும்" என்று மகிழ்ச்சியுடன் உரைத்தார்.

அப்பொழுது சிவபெருமான், "பூமியிலுள்ள புதை யிலை அஞ்சனமை கொண்டு காணும் கண் உடைய வனைப் போல ஞானாசிரியனாகிய அல்லமனைக் கண்டு பிற அன்பர்களுக்குக் காட்டுபவன் இவனேயாவன்" என்று நந்தியைப் புகழ்ந்தார். மேலும், "எனது மாயாசத்தியால் யான் பிணித்த பந்தத்தைத் தனது தூயபத்தியால் அவிழ்க்க வல்லவன் இந்நந்தியே யாவன், அல்லமன் என்னும் ஞான யானையைப் பிடிக்கத்தக்க பார்வை மிருகம் நந்தியே யாவன்" என்றும் உரைத்தார்.

இதனால் சத்துவ குணத்தால் உண்டாகும் ஞானத் தால், அன்பால் இறைவனை அடைதல் கூடும்; உலக பந்தத்தை சிவபத்தியால் போக்குதல்கூடும் என்பன விளங்கும். இதனை,

"சத்தியால் யான்பிணித்த
தளைதனைத் தனது தூய
பத்தியால் அவிழ்க்க வல்லோன்
பார்க்கின்இங் நந்தியே தான்."

என்ற செய்யுளடிகள் தெரிவிக்கும். இவ்வடிகள் இந்நூலில் வரும் பல வரலாற்றிற்கு உயிர்நிலையாக வுள்ளன. வசவண்ணர் பத்தியால் உலகபந்தத்தைப் போக்கினர். பிற அடியார்களையும் இறைவன் அருளுக்கு உரியவராகச் செய்தார். இவற்றை மேல் வரும் வரலாறுகள் விளக்கும்.

இறைவனுடைய ஆணையின் வண்ணம் சிவபத்தியை விளக்க நந்திதேவர் வசவண்ணராக உலகில் தோன்றினர். அவரது பத்திநெறியை நேரில் கண்டுகளிக்கச் சிவகணத் தலைவர் எழுநூற்றெழுபதின்மர் ஆங்காங்குத் தோன்றினர். உமை, சத்துவ கலை மடந்தையை இறைவன் அருளியபடி உலகிற்கு அனுப்பி வைத்தார். அவரே நம் அக்கமா தேவியார்.

**அக்கமாதேவி யுற்பத்தி கதி**

சத்துவகலை மடந்தையும் நந்திதேவரும் சிவகண நாதரும் உலகில் தோன்றியதை இக்கதி யுணர்த்தும்.

உடுதடை என்றோர் நகர் உண்டு. அதனை உடுகணை என்றும் வழங்குவர். தற்போது ஐதராபாத் சீமையிலுள்ள மகாகாவ் என்ற கிராமம் என்று கூறுகின்றனர். இந் நகரில் நிருமலனுக்குச் சுமதி இடத்துச் சத்துவகலை மடந்தை மகவாகத் தோன்றினள். நன்மக்கள், நற்குண நற்செயல்களையுடைய தாய் தந்தையர்க்குத் தோன்றுவர். இதுவே பொது விதி. அவ்வாறே சத்துவகலை மடந்தையின் தந்தை தாயரும் தக்கவர்களே யாவர். ஆசிரியர் நிருமலனைப்பற்றிக் கூறும்பொழுது,

"நன்மையென் பனவெலாம் உடையன் நான்மறைப்
புன்மையென் பனவெலாம் பொருந்து முன்எனும்
தன்மைதன் பெயரினல் அறியத் தக்கவன்"

என்று கூறுகின்றார். அஃதாவது: அவன் நான்மறையில் நன்மை என்று விதித்தன யாவற்றையும் தம் ஒழுக்கத்தில் கொண்டவன்; புன்மை என்று விலக்கியன யாவற்றையும் தள்ளியவன் என்று சொல்லும் இயல்பினை அவன் பெயரினாலேயே பிறர் அறியத்தக்கவனாக வுள்ளவன். நிர்மலன் என்ற சொல் குற்றமற்றவன் என்ற பொருளைத் தருதலால் அதனைத் தனக்கு ஏற்புடையதாக ஆக்கிக் கொண்டவன் என்பது அதன் கருத்து.

சுமதியைப் பற்றிக் கூறும்பொழுது,

“அவன்எழில் மனையவள் ஆடகத் தினைச்
சுவணமென் குதலெனச் சுமதி யென்பவள்
தவநிலை தன்னினுந் தலைமைத் தென்னவே
உவமையில் இல்லறத் தொழுகு நீர்மையாள்”

என்று கூறுகின்றார். அஃதாவது: அவனுடைய அழகிய மனைக்கிழத்தி பொன்னை சுவணம் (நல்ல நிறமுடையது) என்று உலகோர் உரைப்பதுபோல சுமதி (நற்குண முடையவள்) என்ற பெயருடையவள். தவநிலைக்குரிய துறவறத்தினும் சிறப்புடையது என்று சொல்லுமாறு இல்லறத்தில் ஒழுகும் தன்மையுடையவள் என்றார்.

இங்ஙனம் பெற்றோர்களுடைய இயல்பினை எடுத்துரைப்பதால் அம் மகவின் பிறப்பின் உயர்வு புலனாம்.

அங்ஙனம், தோன்றிய புதல்விக்கு நிருமலன் திருநீறு அணிந்தான்; அறிதற்கரிய ஐந்தெழுத்தினை யோதி இட்ட லிங்கத்தைத் தரிப்பித்தான் என்பதால் அவன் வீர சைவ சமய ஒழுக்கமுடையவன் என்பதும் சமயச்சடங்குகளை அம்மகவிற்கு ஒழுங்குறச் செய்வித்தான் என்பதும் பெறப் படும். மேலும் நிருமலன் தன் புதல்விக்கு மாதேவி என்று பெயரிட்டான்.

இத் தாய் தந்தையர் மகவு ஆகியவர்களின் பெயர்கள் இவ்வாறு நற்பொருள் பொருந்த அமைந்திருத்தலை நோக்

கும்போது தமிழ்நாட்டில் தோன்றிய சைவசமய குரவ ராகிய அப்பருடைய தந்தை தாயார் பெயர்கள் முறையே புகழனார் மாதினியார் என்றும் அப்பருடைய பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார் என்றும், அழைக்கப்படுதலை யொப்ப இருத்தல் நம் நினைவிற்கு வராமல் இரா.

சத்துவ குணம் ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மோனம், மேன்மை, ஐம்பொறி யடக்கல் ஆகிய எட்டு இயல்புகளாகும் என்பர். மாதேவியார் சத்துவ குண மடந்தையாதலின்,

> "அறிவருள் ஆதர வடக்கம் வாய்மைமெய்த்
> துறவுநல் லொழுக்கமே தூய்மை என்றிவை
> யுறவொடு குழவியா யுடன் வளர்ந்திட"

வளர்ந்தார் என்று ஆசிரியர் கூறுகின்றார். மாதேவியார் இளம் பருவத்திலேயே நல்லறிவும், உயிர்களிடத்துக் கருணையும், அன்பும், அடக்கமும், உண்மையும், மெய்த் துறவினுக்குரிய நல்லொழுக்கமும், புறத்தூய்மையும் உடையவராக இருந்தார் என்பது பெறப்படும். "விளையும் பயிர் முளையில் தெரியும்" என்பதற்கொப்ப அவர் பிற் காலத்தில் வீட்டின்பத்தை யடைவதற்கேதுவாய நல்லியல் புகள் குழவிப் பருவத்திலேயே காணப்பட்டனவாம்.

மாயை தோன்றிய காலத்தில் கருப்பு வில்லை வளைத் துக்கொண்டு தவத்தைக் குலைக்கத் துறவினர்பால் ஓடிய மன்மதன், மாதேவி தோன்றி வளர்ந்த நாளில் அச் சிலை யைக் கையினின்று கீழே போட்டுவிட்டு வருந்தினான் என்று இருவரது பிறப்பிலுள்ள மாறுபாட்டியல்புகளைக் கவிஞர் புலப்படுத்துகின்றார்.

மாதேவி இவ்வாறு வளர்ந்து கொண்டிருக்க, சிவ கணத் தலைவர்கள் ஆங்காங்கே அவரவர் விரும்பிய பதி களில் நற்றவம் புரிந்தோர்க்கு நன்மக்களாகத் தோன்றிச் சித்தராமர், மாச்சிதேவர் முதலிய பெயர்களைக் கொண்டு நற்காரியங்களைச் செய்து கொண்டிருந்தனர்.

நந்திதேவர் வசவண்ணராக உலகில் தோன்றினார். வசவண்ணருடைய வரலாறு இந் நூலின் ஒரு பகுதியாக இருத்தலின் அவருடைய தோற்றத்தை ஆசிரியர் சிறிது விரிவாக இயம்புகின்றார்.

அவர் பிறந்த ஊர் இங்குளாபுரி. இவ்வூர் பீஜாப்பூரி லுள்ள பாகவாடியைச் சேர்ந்த இங்குளேசுவர கப்படி என்று இப்பொழுது வழங்கும் ஊராகும். இவ் வூரில் வாழ்ந்த அந்தணர் குலத்தவரான மாதரசன், மாதாம் பிகை என்னும் தந்தை தாயர்க்கு வசவண்ணர் தோன்றி னார். வசவண்ணர் விச்சல மன்னனுக்குத் தலைமை அமைச்சராகவும் சிறந்த சமயத் தலைவராகவும் பிற்காலத் தில் விளங்கியவர் ஆதலின் அவருடைய பெற்றோர் எத்தகு இயல்பினராயிருந்தார் என்பதை அறிய ஆவல் உண்டாதல் இயல்பு. ஆதலின் அவர்களுடைய இயல்பினை அறிவிக்கின்றார் ஆசிரியர்.

மாதரசன் அந் நகரிலுள்ள அந்தணர்களுக் கெல்லாம் தலைவன். அவன் மனம், வாக்கு, காயங்கள் யாவற்றையும் சிவபெருமானுக் குரியவையாகச் செய்தவன். அவன் மனம் இறைவன் திருவடியையே எண்ணும்; அவனுடைய நா இறைவனுடைய துதியையே நுவலும்; அவன் செய்யும் செயல்கள் யாவும் இறைவழிபாட்டைப் பற்றியனவாகவே இருக்கும். வேதப் பயிற்சியில் தேர்ந்தவன்; ஒழுக்கத்தி லும் சிறந்தவன். இல்வாழ்க்கையிலுள்ளவனாகி இருப் பினும் துறந்தோர்க்குச் சமமானவன் என்பர்.

இங்ஙனம் கூறியவாற்றால் மாதரசன் மிக்க சிவபக்தி யுடையவர்; கல்வியறிவு நிறைந்தவர்; கற்ற கல்விக்கேற்ற ஒழுக்கமுடையவர் என்பன போதரும். தந்தை யறிவு மகனறிவு ஆதலின் இத்தகு தந்தையையுடைய வசவண்ண ரும் பிற்காலத்தில் சிறந்த குரு, லிங்க, சங்கம பக்தி யுடையவராகவும், சிறந்த கல்வியறிவு நிறைந்தவராகவும் சிறந்த ஒழுக்கமுடையவராகவும் ஒழுக்கத்தை உலக மக்களுக்கு எடுத்துரைப்பவராகவும் விளங்கினார்.

"மாதரசனுடைய மனைவியாகிய மாதாம்பிகை கற்பில் சிறந்தவர். அருந்ததி முதலிய கற்புடைய மாதர் தம் பெறற்கரிய உயரிய நிலைக்கு ஊறுபாடின்றி யிருக்க நாள் தோறும் அவனை எண்ணிக் கைகூப்பி வணங்கிய பின்னர் பாயலிற் படுப்பர் என்றால் அவருடைய கற்பின் திறத்தை என்னென்றுரைப்பது! இவ் வம்மையாருடைய வயிற்றில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை நடாத்தும் அபரசிவம் என்னும் நந்திதேவர் (வசவண்ணராகத்) தோன்றினார்; ஆதலால் பெரியோர் "தக்கார் தகவிலர் என்பது அவரவர், எச்சத்தாற் காணப் படும்" (குறள். ககச) என்பர். மாதாம்பிகையார் கணவனைத் தொழுது துயிலினின் றெழும் செயலினை யுடையவர்; தன் இல்லத்தை நாடிவரும் விருந்தினருடைய வயிற்றிலுண்டாகும் பசித் தீயை அவிப்பவர். இவருடைய பெருமை, நான்முகன் நாமகளிருக்கும் தன் நாவினாலும் எடுத்தியம்ப முடியாதது" என்பர். இதனால் மாதாம்பிகையார் மனைமாட்சிக்குரிய நல்லியல்புகளெல்லாம் பெற்று விளங்கினார் என்பது போதரும்.

இவ் வம்மையாருடைய திருவயிற்றினின்றும் வசவண்ணர் பிறந்ததை ஆசிரியர்,

"மன்னுமார் அளிகள் விருந்துணக் காமர்
வல்லியின் மலர்மலர் வதுபோல்
என்னையா ளுடைய நந்திவா னவன்முன்
எய்திவந் துதித்தனன்" (அளிகள்—வண்டுகள்)

என்று சிறந்த உவமையால் விளக்குகின்றார். அவர் உலகில் தோன்றிய காலத்தில் பல நற்குறிகள் காணப் பட்டனவாம். அவை பிற்காலத்தில் வசவண்ணரால் உண்டான நிகழ்ச்சிகளை முன்னர் அறிவிப்பனவாக வுள்ளன. நல்லோர் உலகில் தோன்றும்பொழுது பல புதுமைகள் காணப்பட்டனவாகப் புலவர்கள் கூறுதல் மரபு. வசவண்ணர் தோன்றிய காலத்தில் நேர்ந்த நற்குறிகள் பல.

பிற மதத்தவரைக் கண்டகாலத்துக் கண்டுமுட்டு என்பர் சமணர்கள். இங்ஙனம் கூறுதல் அவர்கள் பிற மதத்தவர்பால் கொண்ட வெறுப்பினை வெளிப்படையாகக் காட்டும். அவ்வாறு கூறும்படியான சமணர்களுடைய உள்ளத்தில் சிவபெருமானுடைய திருவேடமுடைய அடியார்களைக் கண்டு வணங்கும்படியான அன்பு உண்டாயிற்று. திருமால் அடியவர்களாகிய வைணவர்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுள் என்று கொள்ளார். அவர்கள் உள்ளத்தில் சங்கரன் இறைவன் என்று கருதும்படியான மெய்யறிவு அவர்களை அறியாமலே உண்டாயிற்று.

இவை சைவத்துக்குப் புறம்பான சமண மதத்தினரிடத்தும் வைணவ மதத்தினரிடத்தும் உண்டான உள்ளத்தின் வேறுபாடு. வசவண்ணர் சைவப் பயிர்க்கு மழையாகவும் பிற மதங்களாகிய யானைகளுக்குக் கோளரியாகவும் பிற்காலத்தில் விளங்கினாராதலின் அதனை முன்னர் அறிவிப்பனவாக இவ்வாறு கூறியிருத்தல் பொருத்தமுடையதே.

மற்றும் "உலக மக்களிடத்திருந்த கொலை, களவு, அழுக்காறு, அவா, வெகுளி, கொடுஞ் சொல், பொய், பயனில கூறல், செய்ந்நன்றி மறத்தல், பிறரை நிந்தித்தல், வஞ்சனை, பிறர்மனை விழைதல் ஆகிய தீமைகள் யாவும் நீங்கின" என்பர்.

இவை அறநூல்களில் கூடாத இயல்புகளாக விலக்கப்பட்டவை. வசவண்ணர் அமைச்சராயிருந்து நாட்டில் நீதியை நிலைநாட்டினவர். பொய்ம்மையைக் கண்டித்து மெய்யை நிலைநிறுத்தினவர். நல்லோர்க்குத் துணைவராயிருந்து அவர்களுக்கு இன்னல் நேராதபடி பாதுகாத்தவர். பெண்களின் உரிமையை நாடினவர். அருள்நிறைந்த உள்ள முடையவராய் விளங்கினவர். ஆதலின் இத்தகைய சான்றோராகிய வசவண்ணருடைய தோற்றத்தால் உலகில் தீமைகள் யாவும் நீங்கின என்று கூறுதல் ஏற்புடையதே யாகும்.

நந்திதேவர் உலகில் தாய் வயிற்றினின்றும் தரையில் படிவதன் முன்னமே கூடல சங்கமேசன் குருவடிவாக வந்து அத் தாய் அறியாவண்ணம் நெற்றியில் திருநீறிட்டு, கழுத்தில் இலிங்கத்தைத் தரித்து நந்தி என்ற பெயரை மாற்றி வசவன் என்ற பெயரிட்டுச் சென்றார். கூடல சங்கமேசர் என்னும் திருநாமம் கூடல சங்கமம் என்னும் திருத்தலத்திலுள்ள சிவபெருமானின் திருப்பெயர். இத் தலம் பீஜாப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த • பாகவாடி தாலூகாவிலுள்ள கப்படி என்னும் ஊரிலுள்ளது. குருவைச் சிவனைக் கருதவேண்டுமென்பது சைவநூற்றுணிபு. அங்ஙனம் கருதவேண்டியதில்லாதபடி சிவபெருமானே அருட் குருவாக வசவண்ணருக்கு வந்து இலிங்கத்தைத் தரித்தார். இவ்வாறு பிறந்த குழந்தையின் நெற்றியில் திருநீறும், கழுத்தில் இலிங்கமும் தரித்திருத்தலைக் கண்டோர் வியப்புற்றனர். இறைவன் பிறர் அறியாவண்ணம் குருவாக வந்து இவற்றைப் புனைந்து மகவிற்கு வசவன் என்ற பெயரும் இட்டான் என்பதைப் பெற்றோரும் மற்றையோரும் இறைவன் அவர்தம் அறிவுள் இருந்து அறிவிக்க அறிந்தனர்; என்று இங்ஙனம் கூறுவதால் வசவண்ணர் குழவிப் பருவத்திலேயே இறையருளுக்குரியவராக விளங்கினர்; இறைவனே இவருக்கு ஞானகுருவாகக் காட்சி யளித்தார் என்பன பெறப்படும்.

வசவண்ணர் ஆசிரியர் முன் தாம் அறியவேண்டிய கலைகள் எல்லாவற்றையுங் கற்றுக்கொண்டார். அதற்கு "சான்றதா மதியம் இரவி வந்திறுப்பத் தன் கதிர் தானடைகுதல் போல்" என்ற உவமானம் கூறப்படுகிறது. இதனால் சூரியனிடமிருந்து சந்திரன் தனக்குரிய ஒளியைப் பெறுகிறான் என்ற உண்மை புலனாகின்றது. வசவண்ணர் தக்க கலையறிவும் உலகியலறிவும் பெற்றிருந்தார்.

அவ்வமயம் விச்சல மன்னன் கருநாட தேசத்தைக் [1]கலியாணபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். அந்நாட்டிலும் அந்நகரிலும் சமணர்கள் நிறைந்

1. இந்நகரம் பீஜாபூர் மாவட்டத்திலுள்ளது.

திருந்தார்கள். மன்னனும் சமணமதத்தைத் தழுவியவனாகவே யிருந்தான். வசவண்ணருடைய மாமனார் பலதேவர். அவர் அம் மன்னனுக்கு அமைச்சராக இருந்தார். அப்பதவியை ஏற்றுக்கொள்ள வசவண்ணர் கலியாணபுரத்திற்குச் சென்றார். அம் மன்னன் வசவண்ணரை நன்கு மதித்து வரவேற்றான். அவனுடைய வரவேற்பைப் பெற்று வசவண்ணர் அரச அவையில் அமர்ந்திருந்தார். அப்பொழுது ஆகாயத்திலிருந்து ஓர் ஓலை விழுந்தது. அவ்வோலையில் எழுதியிருந்த எழுத்து இன்ன மொழி யென்று எவர்க்கும் விளங்கவில்லை. அதை அரசன் கொடுக்க வாங்கி வசவண்ணர் "உன் தவிசின்கீழ் ஒரு பொற் புதையலிருப்பதாக இவ்வோலை கூறுகிறது" என்றார். அப் புதையல் விச்சலனுடைய தந்தையால் வைக்கப்பட்ட எண்பத்தெட்டுக்கோடி பொன் உடையது என்று வசவபுராணம் கூறும். அவ்விடத்தை அகழ்ந்து பார்க்க அப்புதையல் இருக்கக்கண்டு மகிழ்ச்சியுற்றான் மன்னன். இதனால் வசவண்ணர் பிறமொழிகளையுங் கற்றிருந்தார் என்பது புலனும். வசவண்ணரைக் கண்ட முதல் நாளிலேயே அரசனுக்குப் பெரிய நன்மை ஏற்பட்டதால் அதனை நற்குறியாகக் கொண்டு வசவண்ணரிடம் பேரன்புடையவனாக மன்னன் இருந்தான். வசவண்ணருக்குச் சிறப்புறக் கலியாணமும் செய்வித்தான். அந்நகரில் வசவண்ணருக்குக் கலியாணம் நிகழ்ந்த காரணத்தால் விச்சல நகரம் என்று மன்னன் பெயரால் வழங்கப்பட்ட அந்நகருக்குக் கலியாணபுரம் என்று அந்நாளிலிருந்து வழங்கப்பட்டது என்று அந்நகர்ப் பெயரின் வரலாற்றை இச் செய்தி அறிவிக்கிறது.

வசவண்ணர் அமைச்சராயிருந்து அரசாங்க அலுவல்களைச் செவ்வனம் நடத்தியதோடு சைவ சமயப் பணியும் புரிந்து வந்தார். விச்சலன் சைவ சமயத்துக்கு மாறுபட்ட சமணக் கொள்கையை உடையவனாயிருந்தும் அவருடைய சமயப் பணியைத் தடுத்திலன். இஃது அவனுடைய பரந்த மனப்பான்மையைக் காட்டுகின்றது. ஆனால் சூழ்ந்திருந்த

சமண குழாத்தினர் வசவண்ணருடைய செயலில் அழுக்காறு கொண்டு பலவாறு மன்னனிடம் குறை கூறி வந்தனர். அதையும் அவன் கேளாமல் வசவண்ணரிடத்து மிக்க நம்பிக்கையுடையவனாக இருந்தான். வசவண்ணர் அரனடியார்களிடத்தில் பேரன்புடையவராக விளங்கினர். தனது உயரிய நிலையையும் கருதாமல் அடியார் எவர் வரினும் அவர்களைக் கண்டு எதிர்கொண்டழைத்து நிலமிசை வணங்கி அவர்க்கு வேண்டிய பணிகளைச் செய்து வந்தார். அரனடியவரிடத்துச் சாதி வேறுபாட்டைச் சிறிதும் கருதவில்லை. இனிய கற்கண்டால் செய்யப் பெற்ற கரும்பும் வேம்பும் அவற்றின் பெயர் வேறுபாடு கருதாமல் கொள்ளுதல் போலச் சிவசரணர்களையும் அவர்களுடைய சாதி, ஒழுக்கம் இவைகளால் வேறுபாடு கருதாமல் அவர்களைச் சிவமாகவே எண்ணி வணங்கி அன்பு பூண்டொழுகினர். இவ்வாறு வசவண்ணர் இயற்றிய அரிய தொண்டினால் வீர சைவசமயம் பன்னிரண்டாம் நூற்றாண்டில் புத்துயிர் பெற்றது என்னலாம்.

"சாதியுங் குறியும் நீத்துச் சரணரைச் சிவனே யென்று
பாதபங் கயம் இறைஞ்சிப் பத்திசெய் குவன்அங் நந்தி."

என்ற இக்கொள்கை அன்பின் பெருக்கால் உலகில் உண்டானதாம். இதுவே சமரசநெறி; பொதுநெறி. பிறப்பாலுண்டாகும் சாதிவேற்றுமையைக் களைந்து யாவரையும் சிவமாக நோக்கும் சமயத்தினும் சிறந்த சமயம் யாதுளது!

### அக்கமா தேவி துறவு கதி

தன்னைக் கண்டு விரும்பிய மன்னனை விட்டகன்று அறிவாசானை மாதேவியார் நாடிச் சென்றதை இக்கதி யுணர்த்தும்.

மாதேவியார் மங்கைப் பருவம் அடைந்திருந்தார். அவர் உள்ளம் உலக இன்பத்தை நாடவில்லை; பாதிப் பெண் மேனியனாகிய இன்பப் பதியை அடையும் சாதனை

யில் ஈடுபட்டிருந்தது. அவர் சத்திநிபாதம் உடையவராய் விளங்கினார். இருவினை யொப்பும் மலபரிபாகமும் உளதாய காலை உயிரினது அறிவின்கண்ணே திருவருள் பதிதலே சத்திநிபாதம் எனப்படும். (சத்தி = திருவருள் ; நிபாதம் = பதிதல்) இவ்வருட்பதிவு நான்குவகைப்படும் என்று மெய்ந்நூல்கள் கூறும். இறைவனுடைய திருவருளை நாடி உலகப் பயன் நாடாமல் வீடுபேற்றை அவாவி நின்று தற்செயலற்றிருத்தல் முதற்படி. இறைவனை அடையும் நெறியாதென்று ஆராய்ந்து மேற்சேறல் இரண்டாம் படி. உள்ளத்துறவு பூண்டு திருவருள் வழிநின்று புறத்தே உலக வாழ்க்கை நடத்துதல் மூன்றாம்படி. அகத்தும் புறத்தும் துறவு பூண்டு அறிவாசான் ஒருவனையே தேடியடைய முயலும் நிலை நான்காம்படி. இவ்வகையில் அம்மையார் மூன்றாம் நிலையை அடைந்திருந்தார்.

இந்நிலையினராக விருக்கையில் அந்நகரத்து மன்னன் கௌசிகன் யானைமீது இவர்ந்து தெருவில் உலா வந்தான். மாதேவியரைக்கண்டு காமுற்றான். அதனைத் தமிழ் நூன் மரபிற்கேற்ப அடிகளார் காட்சி, ஐயம், துணிவு என்ற துறைப் பொருள்களை (செய்யுள் க0, கஉ, கரு) அமைத்து அழகுறக் கூறுகின்றார். மாதேவியை மணந்து கொள்ள மாதர்களைத் தூது விடுத்தான். நிருமலன் வீரசைவன் ஆதலின் தன் மகளாகிய மாதேவியைச் சமண சமயத்தைச் சார்ந்த கௌசிகனுக்கு மணம் புரிந்து கொடுக்க இயைய வில்லை. அவனுடைய அரச செல்வத்தையும் மதித்திலன். அரசன் தனக்கு மருகனாயின் தனக்கும் தன் மகளுக்கும் உண்டாகும் உயர்வையும் ஒரு பொருளாகக் கருதினா னல்லன். தனது சமயநெறி யொன்றையே சிறப்பாக எண்ணினான். தூது வந்த மாதரிடம் நிருமலன், "எங்கள் மாதேவி பேதையோ அல்லள் ; நும் கருத்தைச் சென்று கூறுங்கள் ; அவள் மனம் இயைந்து உரைத்தால் நன்று ; போமின்," என்று கூறுகின்றான். அவன் உரையின் படியே அம் மாதர்கள் மாதேவியை யடைந்து அரசன் விருப்பத்தை அறிவிக்கின்றனர். நிருமலன் தன் மகளாகிய

மாதேவி பேரறிவினளாயிருந்ததால் அவள் கருத்தின்படி யொழுகும் உரிமையை அளித்தான்.

மன்னன் மாதேவியிடம், "நின் கருத்திசைவால் அன்றி நின்னை யான் வலிந்து புல்லேன்" என்று சூளுரை பகர்கின்ருன். சூள் கூறுபவர் இன்னது பிழைப்பின் இவ்வாருவேன் என்று கூறுதல் மரபு. அவ்வாறு கூறுங்கால் தாம் பூண்டொழுகும் சிறந்த சில நன்னெறிகளை எடுத்துக் கூறி அவற்றினின்றும் வழுவினவர் அடையும் இழிநிலையை யடைவேனுக என்று கூறுவர். இவ்வாறே புறநானூற்றில் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் (புறம் - எக) பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் (புறம் - எஉ) சோழன் நலங்கிள்ளி (புறம் - எங) பாட்டுக்களும் தகடூர் யாத்திரையில் "செவ்விக் கடாக்களிற்றின்", "கலிமா ஞேயே," என்ற பாட்டுக்களும் சீவகசிந்தாமணியில் சீவகன் கூறும் சூளுரையும் (கோவிந்தையாரிலம்பகம்—செய்யுள், ரு) அமைந்துள்ளன. இந்நூலில் நாற்பத்தாறு நீதிகளை ஒருங்கே எடுத்துக்கூறி அவற்றினின்றும் தவறியவன் ஆவேன் என "உண்மை நீ யாது அறைந்தனை அது செய்தன்றி, மேவுவேனுயின்" என்று மாதேவிக்குக் கௌசிக மன்னன் உறுதி கூறுவதாகச் சூளுரை பகரப்பட்டுள்ளது.

அந்நீதிகளை ஈண்டு அறிதலும் நன்ரும்.

(க) தனது மனையை நாடி வந்த அறிவொழுக்கங்களானுயர்ந்த விருந்தினர் தனது இல்லின் புறத்தே யிருக்க, இல்லின் அகத்தே சென்று தனித்து உண்கின்றவனும், (உ) பந்தியில் உணவு பரிமாறும் பொழுது வேறுபாடாக இடும் பாதகனும், (ங) தாயும் தந்தையும் கூட இருந்து புசிக்கத் தானும் உண்ணுத சழக்கனும், (ச) நண்பகற் பொழுதில் பசியால் நொந்தவரைப் பார்த்து அவரது பசியைப் போக்க எண்ணுமல் தனது பசியைத் தணிக்க உணவருந்துங் கொடியவனும், (ரு) நூலோர் பழித்துரைக்கும் ஊன் முதலிய உணவினை யுண்பவனும், (சா) இறைவனை

வழிபடாமல் உணவருந்துபவனும், (எ) நூலோரால் விலக்கப்பட்ட ஊனைப் பிறர் உண்ணும்படி செய்பவனும், (அ) தத்தம் முற்பிறப்பிற் செய்த நல்வினைப் பயனால் செல்வம் அடையப் பெற்றிருப்பவரைக் கண்டு மனம் பொறாது துன்புற்று அப்பொருள் அவரினின்றும் நீங்கிய காலத்தில் மகிழ்ச்சி யடைபவனும், (கூ) கன்று உண்ணுதற்கு வேண்டிய பாலினை விடாமல் பசுவின் மடியிலுள்ள பாலைக் கறந்து கொள்பவனும், (க௦) பிறர் தமக்குச் செய்த நன்றியை மறந்தவனும், (கக) அவையில் நடுவுநிலையினின்று மாறுபட்டு நீதி கூறுபவனும், (கஉ) ஓர் உயிரைக் கொன்று அதன் உடல் பதைப்பதைப் பார்க்கும் கொடியவனும், (கங) போர்க் களத்தில் தன் தலைவனை விட்டு விட்டுப் புறங்காட்டிச் செல்லும் பேதையும், (கச) அபயம் என்றடைந்தவனைக் காப்பாற்றாமல் விலக்குபவனும், (கரு) ஒரு பொருளைக் கொடுப்பேன் என்று உறுதி யுரைத்துப் பின்னர்க் கொடாதவனும், (கசு) பிறர் கொடுப்பதைக் கொடாதவாறு விலக்குபவனும், (கஎ) பாவமான காரியங்களைச் செய்ய உதவியாயிருப்பவனும், (கஅ) ஆராய்ந்து நேசித்த பின்னர் வஞ்சிப்பவனும், (ககூ) தாய் தந்தையர் ஞானாசிரியன் இவர்களுடைய வார்த்தையைக் கேளாத கொடியவனும், (உ௦) துறவிகளின் வருகையை எதிர் கண்டு எழுந்து மரியாதை செய்யாத கொடியவனும், (உக) யாவும் அறிந்தவன்போல் நடித்து மறைவாக அரிய நூல்களைக் கற்க முயலும் கயவனும், (உஉ) விருந்தினராய் இரவில் தம் இல்லத்தை நாடி வந்த நல்லோர்க்குத் தங்கியிருக்க இடங்கொடாமல் அகற்றுபவனும், (உங) முன்னர்ப் புகழ்ந்து பேசிப் புறத்தே சிரித்து இகழ்ந்து பேசுபவனும், (உச) தன்னுடைய உறவினர் வறுமையுற்று வாடத் தான் மட்டும் வாழ எண்ணுபவனும், (உரு) அன்புடன் ஒருவன் தேடி வைத்திருந்த அரிய பொருளை அவன் அறியா வண்ணம் கவர்ந்து கொள்பவனும், (உசு) கடினமான வேலையைச் செய்யும்படி ஏவிப் பின்னர்க் கூறிய கூலிப் பொருளை இல்லை யென்று சொல்பவனும், (உஎ) கற்பழிந்த மனைவியுடன் கூடி வாழ்பவனும், (உஅ) பிறனுடைய

அழகிய மனைவியைப் புணர்வதற்கு எண்ணுபவனும், (உகூ) கல்வி கற்பித்த நல்லாசிரியனை வணங்க நாணுபவனும், (௩௦) விற்கத்தகாத கள், ஊன் முதலிய பொருள்களை விற்று அதனால் உடலை யோம்பி அழிபவனும், (௩௧) நலமிக்க வயல், ஆறு, நந்தவனம், ஆலயம் ஆகிய இடங்களில் சலம், மலம் கழித்து அசுத்தம் செய்பவனும், (௩௨) யாவரும் செல்லுதற்குரிய பாதையை அடைப்பவனும், (௩௩) பொய்யான விலையைக் கூறி விற்குங் கொடிய வாணிகனும், (௩௪) தாழ்வான குலத்தில் தோன்றியவனிடம் கூலி பெற்றுக்கொண்டு அவன் ஏவிய தொழிலைச் செய்பவனும், (௩௫) நேசமாயிருந்த போது மறைவாகக் கூற அறிந்த சொல்லைப் பகையானபோது உரைப்பவனும், (௩௬) பிறருடைய குற்றத்தையே ஆராய்ந்து பார்த்து அவற்றைப் பிறரிடம் தூற்றுபவனும், (௩௭) கோபமுண்டான காலத்தில் முறையற்ற கொடிய சொற்களைப் பேசுபவனும், (௩௮) தீயொழுக்கமுடைய மனைவி கூறிய சொற்படி நடக்கும் பேதையும், (௩௯) நேசம் பூண்டிருப்பவரைப் பிரித்துக் கலகம் உண்டாக்க வல்லவனும், (௪௦) அறிவு நூல்களில் உரைக்கப்படாத பொருள்களைத் தாமே புனைந்து கூறுபவனும், (௪௧) பிறருடைய நன்மையைக் கண்டு பொறாமைப்பட்டு அவர்மீது பழிகூறிப் பிறர்பால் சிரித்து இகழ்கின்றவனும், (௪௨) தன்னினும் எளியவர்பால் மிக்க கோபத்தை மேன்மேலும் அதிகரிப்பவனும், (௪௩) புண்ணியமான காரியங்களைப் பிறர்பால் பொருளைப் பெறும் பொருட்டுச் செய்பவனும், (கோவில் வழிபாடு முதலியன கூலி பெற்றுச் செய்தல்) (௪௪) இவ்வுலகில் அனுபவிக்கும் இன்பத்திற்காக மறுமையிலடையும் இன்பத்தைப் பெறுதற்கேதுவான தவ முதலிய நற்காரியங்களைச் செய்யாது விடும் நல்லறிவில்லாதவனும், (௪௫) தவமுடையாரை இகழ்ந்துரைப்பவனும், (௪௬) செய்யும் செயல்களில் எப்பொழுதும் பாவமுண்டாகவே செய்பவனும் எத்தகு இழிநிலையை இம்மை மறுமைகளில் அடைவார்களோ அந்நிலையை அடைவேன் என்று கௌசிக மன்னன் சூளுரை பகர்கின்றான். இவ்வாறு அடிகளார் பல நீதிகளை

ஏற்ற இவ்விடத்தில் விளக்கி யுரைத்தல் உலக மக்களுக்கு நல்லறிவு புகட்டும் நோக்கத்தாலேயாம் என்பது தெளிவாம்.

மாதேவியார், கௌசிகன் உரைத்த காமமிக்க வார்த்தைகளைத் தடுத்து என்னை மணக்க விரும்பினால்

"அயன்மால் தேடும்
"சோதிமா சிவலிங் கத்தைத் தூயையாய்க் கரபீடத்திற்
பேரினால் அருச்சித் தென்னைப் பொருந்துதி பின்னர்."

என்கிறார். கௌசிகனோ மிக்க காமமுடையவனாயிருந்தும் மாதேவியார் கூறியவாறு செய்ய ஒருப்படாதவனாய்,

"உங்கள் முதல்வன் பூசனைதான் யாங்கள்
எப்பொழு துஞ்செய் தக்க தன்று."

என்கின்றான். அதற்கு மாதேவியார்

"இணையி லாநின்
துப்புறு தோளும் யாங்கள் தொடுவ தன்று."

எனக் கூறுகின்றார்.

ஈண்டு இவ் விருவருக்கும் நிகழ்ந்த உரையாடல் விறுவிறுப்பான நடையில் அமைந்துள்ளதைக் காண்க. மற்றும் மாதேவியார் தமது வீரசைவ சமயத்திற் கொண்டுள்ள உறுதியும் கௌசிகன் தனது சமண சமயத்திற் கொண்டுள்ள மனத்திட்பமும் நன்கு விளங்கும். உடனே மாதேவியார் ஆடை அணிகளைக் களைந்தெறிந்தார். கூந்தலை உடல் மறைய அவிழ்த்து விட்டார். அரண்மனையை விட்டகன்றார். இங்கு மாதேவியாரின் மன உறுதியை யாம் அறிதல் வேண்டும். "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்றாற்போல அவ்வரசனை ஒரு பொருளாக மதிக்கவில்லை. அரசனுடைய அரண்மனையில் தனித்திருக்கிறோமென்ற அச்சங்கொள்ளவும் இல்லை. தம் கருத்தைத் தெரிவித்தார். அவன் அதற்கு இணங்காததால் அவனைக் கக்கிய சோற்றைப்போல வெறுத்து அவ்விடத்தை விட்டகன்றார்.

நல்லறிவும் அரசனும் விரும்பத்தக்க கட்டழகும் இளமைப் பருவ முடையவராயிருந்தும் உலக இன்பத்தை வெறுத்துத் துறந்த அம்மையாருடைய துறவே மெய்த்துறவு. தமிழ்நாட்டில் அழகும் அறிவும் பருவமும் பெற்றுத் திகழ்ந்த மணிமேகலை அரசிளங்குமரனாகிய உதயகுமரன் தம்மைக் காதலிப்பதை யறிந்தும் அவனை விரும்பாமல் துறவுநிலையை யடைந்தார்; தவ வாழ்க்கையை மேற் கொண்டார். அவ்வாறே அக்கமாதேவியாரும் அரசனை மணந்து உலக இன்பத்தை நுகர விரும்பாமல் யாவற்றையும் முற்றத் துறந்து அகன்றார்.

பெற்றோர் மாதேவியாரைக் கண்டனர். அவர்களை நோக்கி "என்னை யானறியவேண்டி அறிவாசானை நாடிச் செல்கிறேன்" என்றார். அதற்கு அவர்கள் "இவள் நினைந்தது நன்று; நம் மரபிற்கெல்லாம் இவளால் புகழுண்டாகும்" என்று நிருமலன், சுமதி (நிருமலன் = குற்ற மற்றவன்; சுமதி = நற்குணமுடையவள்) என்ற தங்கள் பெயர்ப் பொருளை உண்மையாக்கினர். முன்னர் மாயையின் பெற்றோர் அடைந்த துயரம்போல் இவர்கள் அடைந்திலர் என்பது ஈண்டறியத்தக்கது.

மாதேவியார் இந் நிலையில் சத்திநிபாதத்தில் நான் காம்படியை அடைந்துள்ளார்.

**கொக்கி தேவர் கதி**

பிரபுதேவர் வீட்டுநெறியைக் கொக்கி தேவர்க்கு அருளியதை இக்கதி யுணர்த்தும்.

இனி, "உலகெங்கும் நடந்து ஆங்காங்கே தங்கியுள்ள மாதவர் முதலியோரின் எண்ணங்களை நிறைவேற்றுவேன்" என்று தாய் தந்தையர்பால் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட பிரபுதேவர் பூனையானது ஈன்று வைக்கப்பட்ட குட்டிகளுக்கு ஆங்காங்கே சென்று பால் அருத்தி ஓம்புவதுபோல (மார்ஜால நியாயமாக) அன்பர்கள் இருக்கும் இடங்களைத் தாமே வலிய அடைந்து தம்

பெருங் கருணையால் அவர்களுக்கு ஞானத்தை அருளிய திறம் இந் நூலில் கூறப்பெறும். இவ்வாறு அன்பர்கள் இருக்கும் இடங்களை நாடிச் சென்று சமய ஒழுக்கங்களை உணர்த்தும் ஞானாசிரியர்களைச் சங்கமர், சரமூர்த்தி, சரலிங்கம் என்ற பெயர்களால் வீர சைவசமய நூல்கள் அறிவிக்கும். பிரபுதேவர் உலகில் இவ் வண்ணம் சஞ்சரிக்கும்பொழுது இடத்திற் கேற்பப் பலவிதக் கோலங் கொண்டார். இஃது அவரது தெய்வ ஆற்றலை யுணர்த்தும்.

பிரபுதேவர் ஓர் இடத்தில் வளப்பமுடைய நந்தவனம் வைத்துக் காக்கும் கொக்கிதேவர் என்பவரைக் கண்டார். நந்தவனம் வைத்தலாகிய அறவுள்ளம் உடையவராயிருத்தலின் தம்மால் மெய்யறிவு கொளுத்தத் தக்கவர் என்று கருதி அவரை அணுகினர். அணுகியவர் தாமே முதலில் [1]சரணம் என்று வணங்கினர். கொக்கி தேவரும் சரண் என்று வணங்கி "நின் செயல் யாது? நின் பெயர் யாது?" என்று வினவினர். அதற்கு அல்லமர்,

"பத்தர்தம் மனைதொறும் பத்திப் பிச்சைகொண்
டெத்திற வினையுமின் றிருப்பன்; அல்லமன்
உத்தம! என்பெயர்"

என்று விடையளித்தார். இச் செய்யுளடிகள் "அன்பர்களுடைய வீடுகள்தோறும் சென்று வரிசையாகப் பிச்சையேற்றுண்டு எவ்விதத் தொழிலுமின்றி யிருப்பவன்" என்ற பொருளும், "அன்பர்களுடைய இல்லங்கள் தோறும் சென்று அன்பாகிய (பத்தி) பிச்சையை யேற்றுண்டு எவ்வித வினையுமின்றி யிருப்பவன்; என் பெயர் அல்லமன்" என்ற பொருளும் கொண்டுள்ளன. இறைவன் அன்பையே விரும்புபவன்; வினையில்லாதவன் ஆதலின் அல்லமர் அவ்வாறு விடையிறுத்தார். குறிப்பால் தன் உண்மையியல்பினை அல்லமர் உணர்த்தியதை அறியாத கொக்கிதேவர் எத்தொழிலும் செய்யாமல் பிச்சை யேற்றுண்டு

1. வீரசைவர்கள் ஒருவரை யொருவர் காணும் பொழுது சரணம் என்று கூறிப் பாதத்தைத் தொட்டு வணங்கல் மரபு.

வீணே காலத்தைக் கழிக்கும் சோம்பேறி என்று கருதி அவர்க்கு அறிவுரை கூறத் தொடங்கினர். அவர் கூறிய உரை :

"குரு, லிங்க, சங்கமத்திற்குச் சேவைபுரியும் தொழிலின்றி வீணேயிருப்பவன் உணவு அருந்தும் பிணம் என்று நூல்கள் கூறுவதை நீ அறிந்திலையோ?" (செய்யுள், கக)

"அடைதற்கரிய மனித யாக்கையைப் பெற்றால் அதனால் செயற்கரிய பல அறங்களை உலகில் செய்து துன்பமிக்க பிறவியினின்று நீங்க இறைவனோடு ஒன்றுபடக் கருதாமல் உலகில் உழல்பவனுடைய உடம்பு பொற்கலத்தில் ஊற்றுதற்குரிய பாலைக் கமரில் ஊற்றியதையொக்கும்." (செய்யுள், கஉ)

"மின்னலைப் போல விரைவில் தோன்றி யழியும் உடலைக்கொண்டு நற்செயல் புரிந்து அழியாத உடம்பைப் பெற்றுப் பேரின்பத்திலிருக்க அன்போடு அறஞ்செய்து இளையாமல் உடல் வருந்துமென்று கருதி உண்டு வாளா இருப்பவனைப் போல மூடர் இவ்வுலகில் இல்லை."
(செய்யுள், கங)

இவ் வுரைகளால் கொக்கிதேவர் நல்வினைப்பயனாகிய புண்ணியத்தால் பிறவி நீங்கி நிலைத்த வீட்டின்பமுண்டாகும் என்ற கருத்துடையவர் என்பது விளங்கும். அறிஞர்கள் உலகில் நற்காரியங்களைச் செய்தலால் நன்மையுண்டு. நல்வினையாற்றியவர் விண்ணுலக இன்ப முதலியவற்றைப் பெறுவர்; வீட்டின்பத்தைப் பெறார்; ஆதலின் அவர் கூற்றை மறுத்துக் கூறுகின்றார் அல்லமர். அவ்வுரை :

(அல்லமர் கைகொட்டிச் சிரித்து) நீ உரைத்தவாறு நற்காரியங்களைச் செய்து அழியா இன்பத்தை ஒருவன் பெறுவானானால் உயிரை வருத்துகின்ற ஆணவம், மாயை, கன்மம் என்ற மும்மலங்களுள் ஒன்றாகிய ஆணவ மலத்தாலும் பேரின்பத்தை நாம் அடைதல் கூடும்! (கன்ம

மலமும் ஆணவமலம் போன்றே பிறவியைத் தருமாதலின் அங்ஙனம் உரைத்தார்.) (செய்யுள், கச)

" தான் செய்யும் சற் கருமத்தால் ஒரு பிறப்பிற்ருனே பேரின்ப முண்டாகுமென்ருல் அந்த ஊன் உடல் நீங்க அந்த இன்பமும் உடனே நசிக்கும். அந்த உடல் நசிக்காமல் மேலான வீட்டுலகத்தி லிருக்குமென்ருல் அது மாயாகாரியமாகாது." (செய்யுள், கரு)

"பேரின்பத்தைத் தருகின்ற நற் கருமத்தின் முடிவில் உடலில் மிக்க துன்பத்தை யுண்டாக்குகின்ற தீவினை யுண்டாகும். அத் தீவினையின் முடிவில் முன் செய்த நல்வினை தோன்றும். இவ்வாறு இரண்டும் இரவும் பகலும் போல மாறிமாறி வருமென்மர் உண்மை நூலார்."

(செய்யுள், கசு)

இவற்ருல் நல்வினையால் உண்டாம் இன்பம் நிலையற்றது என்பதை உணர்த்தினர்.

" புறத்தே வேள்வி முதலிய நற்செயல்கள் பலவற்றைச் செய்து மலையைக் கல்லி எலியைப் பிடித்தாற்போல மிகவும் அற்பமாகிய விண்ணின்பம் அடைபவனே? வருந்தாமல் சகல சங்கற்பங்களையும் விட்டுச் சும்மா இருந்தே பேரின்பத்தை அடைபவனே? இவ் விருவருள்ளே மூடன் என்று எவனைச் சொல்லலாம்?"

(கொக்கிதேவர் வாளா இருப்பவன் மூடன் என்றதைச் சுட்டிக் காட்டுகின்ருர்.) (செய்யுள், கஎ)

" மனமானது பொறிவழியாகப் புறத்து விடயங்களிற் செல்லுமாளுல் விடய மயமாகிய உலகமே தோன்றும்; அகத்தே ஒடுங்குமாயின் பேரானந்த மயமாகிய சிவமே தோன்றும்; சிவம் தோன்ற அறிவினிடத்து வியாபித்த விடயமயமாகிய உலகம் காணப்படாமல் துன்பவடிவமாகிய பிறவிக்கடலைக் கடந்து பேரின்பத்தை யடைவர்."

(செய்யுள், கஅ)

இவற்றால் மன அடக்கத்தால் அகத்தே சிவம் தோன்றும்; அதனால் பிறவி நீங்கப் பேரின்பமுண்டாகும் என்று தன் சித்தாந்தத்தை உணர்த்தினார். இது பிறன் கோள் மறுத்துத் தன்கோள் நிறுவுதலாகும்.

மாணவனுக்கு நேரில் காணுமாறு ஒன்றைக் காட்டி அறிவித்தல் கற்பிக்கும் முறையில் சிறப்புடையதாகும். அம் முறையால் கொக்கிதேவருடைய் கருத்தைத் திருத்த எண்ணினார் அல்லமர். ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி "இவண் அகழ்தி" என்றார். அவ்வாறே அகழ்ந்தார். அந் நிலத்துள் அநிமிடன் என்ற சிவயோகி நில அறை அமைத்துக்கொண்டு மனத்தை யடக்கி இலிங்க நிட்டை புரிவதைக் காண்பித்தார். அல்லமர் அந் நிலத்துள் சிவயோகி யிருத்தலைக் கண்டு கூறியது வியப்பைத் தருகின்றது. அவர் தம் அகக்கண்ணால் அறிந்தார் போலும்! சிவயோகிகள் மலைக் குகைகளிலிருந்து தவம் புரிவர். அவ்வாறில்லாத இடங்களில் நிலத்தில் குகை போல் விதிப்படி அறை அமைத்துக்கொண்டு நிட்டை கூடியிருப்பர். அவ்வாறுள்ள இடங்கள் இன்றும் பொம்மபுர மடாலயத்தில் சிவஞானபாலைய சுவாமிகள் நிட்டை கூடியிருந்த இடமும் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் நிட்டைகூடியிருந்த இடமும் காணத்தக்கனவாக வுள்ளன.

பின்னர் அறிவாசானுக்கும் மாணவனுக்குமுள்ள தொடர்பை விளக்கத் திருவுளங்கொண்டார் அல்லமர். அப்பொழுது காந்தங்கண்ட இரும்புபோல அநிமிடன் கையிலிருந்த சிவலிங்கம் அல்லமருடைய கரத்தில் வந்தமர்ந்தது. அநிமிடனுடைய உயிர்க்கலையும் அச் சிவலிங்கத்துடன் போய்ச் சேர்ந்தது. இதனால் அநிமிடனுடைய உயிர் வேறு, இறைவன் வேறாக இல்லாமல் ஒன்றுபட்டு இருந்த நிலையையும் நேரில் விளக்கி இறைவனுக்கும் உயிர்களுக்குமுள்ள தொடர்பை விளக்கி யருளினார். அநிமிடன் அங்கையி லமர்ந்திருந்த சிவலிங்கமானது அல்லமப் பிரபுவின் செங்கையில் தானே வந்தமர்ந்தது கண்ட கொக்கிதவர்,

"ஐய ! நினையும் நின் கரத்தில்
அடைந்த சிவலிங் கத்தினையும்
பொய்யில் குரவன் றனையும்ஒரு
பொருளென் றறிந்தேன் "

என்று உணர்வு தெளிந்து கூறுகின்றார். இதனால் குரு, இலிங்கம், சங்கமம் ஆகிய முப் பொருளுக்கும் உள்ள தொடர்பு தெளிவிக்கப்பட்டதறிக.

**முத்தாயி அம்மை கதி**

தன் உடன்பிறந்தானாகிய அசகணன் துஞ்சினான் என்று வருந்திய முத்தாயி அம்மைக்கு அல்லமர் ஞானம் அருளியதை இக்கதி யுணர்த்தும்.

திருவள்ளுவர் [1] "மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல், உற்றார்க்கு உடம்பு மிகை" (குறள், கூசரு) என்றார். ஆதலின் உலகில் மீண்டும் பிறத்தல் தமக் கில்லாதபடி ஒழித்து முத்தி பெறவேண்டு மென்னுங் கருத்தை மேற்கொண்ட ஞானிகள் பிறப்பிற்குக் காரண மான உடம்பிற்கொண்ட பற்றினை விடுவர். அநாதியாய் வரும் உடம்பின் பற்றினை விடுதற்கு "பற்றுக பற்றற்றான் பற்றினை" (குறள், கூரு0) என்றவாறு இறைவனை யடைந்து வினை வயத்தால் இன்ப துன்பங்களை யனுபவிக்கப்பெற்ற உடம்பினை உவர்த்து விடுவர்.

அவ்வாறே அசகணன் என்னும் பெரியார் அஞ்ஞா னத்தால் மறைப்புற்றிருந்த சிவபத்தியை அறிவாசான் அறிவிக்க உணர்ந்தகாலத்தே தேகபந்தத்தை ஒழித்தார். அழிவில் இன்பம் பயக்கும் சிவத்தொடு இரண்டறக் கலந்தார். பருவுடலை நீத்தார். "பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்றார் இறந்தார்" என்னும் உலகியலுக்கு மாறாக அடைதற்கரிய பேரின்பநிலை யெய்திய தத்துவ ஞானியின் உடல் கிடத்தலைக் கண்டார் மெய்யுணர்

---

1. பிறப்பறுத்தலை மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவி யாகிய உடம்பும் மிகையாம்; ஆனபின் அதற்கு மேலே இயைபில் லனவுஞ் சில தொடர்ப்பாடுளவாதல் என்னும்?

வில்லாத முத்தாயி அம்மை. அவர் தம் உடன்பிறந்தாராகிய அசகணனை உலகில் உண்டு உடுத்திச் செயல் புரிந்து உலகமயக்கத்தில் மூழ்கி வாளா உயிர் துறந்தாரோடொப்பக் கருதி "இறந்தான்" என்று புலம்பினர். அல்லமர், அசகணன் நித்தியப் பொருளாக விளங்குதலை அவ் வம்மையார்க்கு உணர்த்தி யருளினர்.

அவர் அருளிய திறம் 9—16 செய்யுட்களால் உணர்த்தப்படுகிறது. அவற்றின் பொருள்:

"எங்கும் ஒழிவில்லா திருக்கிற ஆகாயம் ஒழிந்து போயிற்றென்று உளம் வருந்துகின்றவர்களைப் போல அழிவில்லாமல் இருக்கும் அசகணனை இறந்துவிட்டானென்று நீ புலம்பினாய். தன்னைச் சிவமாக அறிந்தவன் அற்பமாகிய தோலாற் செய்யப்பட்ட உடலை நான் என்று விரும்பமாட்டான். இவ்வுலகில் அருள் உருக்கொண்ட குருவருளால் தனது உண்மை நிலையை உள்ளபடி அறிந்தவன் உடலைச் சோறுண்ட இலைக்கு நிகராக எண்ணியொழிப்பான். உடலை விடுங்காலத்தில் மட்குட முடைந்த காலத்தில் அந்தக் குடத்திலிருந்த ஆகாயத்தை நிகர்ப்பான். பந்த பாசங்களெல்லாம் நீங்கும்படி கெடுக்கும் சிவஞானி, உலகிலுள்ள மானிடர் உய்யும் வண்ணம் பெற்றுள்ள உடல் அவர்கள் கண்ணுக்கெதிரே வெந்த ஆடையைப் போலக் காணப்படும். எல்லாப் பொருள்களும் தானேயாயிருக்கின்ற சிவத்தொடு பொருந்துதற்குரிய ஞானக்கண் உள்ளவனுக்கு உறவு, பகை என்னும் எண்ணமில்லை. தேகமே நாம் என்றெண்ணியிருந்து அழிகிறவர்கள், அழியாத அறிவே வடிவாகி உடம்போடு கூடியிருந்தும் தாக்கற்றிருப்பவர்களையும் தம்மைப் போலவே பார்ப்பார்கள். அவர்களுடைய உண்மை நிலையை அறியார்கள். கூத்தனது நாடகக் கோலத்தோடு கூடிய நடிப்பை உலகத்தார் பார்த்து உண்மை என்றெண்ணுவர். அதுபோல மிக்க தவத்தினையுடையவர் யாவராலும் துதிக்கப்பெற்றுள்ள ஞானவானுடைய தேக நடிப்பை அனுபவத்தால் அறிந்து அதனை உண்மை என்றெண்ணுவர்."

இங்ஙனம் உரைத்தவாற்றால் உயிர் நித்தியமாக வுள்ளது; அழியாதது. சிவஞானிகள் உடலை நான் என்று எண்ணார். உடலோடு கூடிப் பெறத்தக்க ஞானத்தைப் பெற்ற பின் அதனைத் துறப்பர். சிவத்தொடு இரண்டறக் கலக்கும் சிவஞானிக்கு உலகில் உறவு, பகை என்பன இல்லை. உடலையே தாம் என்று எண்ணியிருப்போர் சிவ ஞானியின் இயல்பை யறியார். அவர்களது இயல்பை அவர்களை யொத்தவர்களே அறிவர்; என்பன பெறப்படும்.

'இவ்வாறு சிவஞானிகளது இயல்பை யுணர்த்தி அவ்வியல்புகளையுடைய அசகணன், அழிவின்றி நித்தியப் பொருளாக விளங்குதலை அறிவிக்க முத்தாயி அம்மை தன் அறியாமை நீங்கப் பெற்றாள். அறிவாசான் அருளுரை அம்மையார்க்கு அகக்கண்ணினைத் திறக்கச் செய்தது; ஞானவிழி பெற்றார். பின்னர் உலகப்பற்று நீங்கிப் பரம் பொருளையடையத் தமக்கு அருள்புரியுமாறு வேண்டினார். அல்லமர் அவர்க்கு,

"மட்டறவோடு மனத்தை நிறுத்திக்
கட்டுதல் வீடு, விடுத்திடல் கட்டு."

என்று சுருங்க மன அடக்கத்தால் வீடுபேறு கிடைத்தலையும் மனத்தைப் புறத்தே செலுத்தலால் உலகபந்தம் உண்டாதலையும் அருளினார். அம்மையார் ஆசான் அருளிய வீட்டுநெறியைக் கடைப்பிடித்தார். பிறவித் துன்பம் நீங்கி எல்லையில் இன்பத்தில் இருந்தார்.

இதனால் அறிவாசானை யடையாத காலத்தில் மக்கள் அறியாமை நிறைந்து நிற்கும் நிலையும், அறிவாசான் அருளுரை பெற்ற காலத்தில் அறிவு விளக்கமுற்று அழிவில் இன்பமெய்தும் நிலையும் புலப்படுவனவாம்.

**சித்தராமர் கதி**

கரும யோகியாயிருந்த சித்தராமர்க்குப் பிரபுதேவர் சிவஞானம் அருளியதை இக்கதி யுணர்த்தும்.

அல்லமர் சித்தராமர் வாழும்படியான சொன்னலாபுரத்தை அடைந்தார். அங்குச் சித்தராமர் ஏவலால் குளந்தோண்டுதல் முதலிய அறச்செயல்கள் நடைபெறுவதைக் கண்டார். இப்பணிகள் சரியையின் பாற்படுவனவாதலின் இவற்றைச் சித்தராமன் இல்வாழ்க்கையைத் துறந்தும் மீண்டும் பிறப் பிறப்புக்களைத் தருதற்கேதுவான கருமயோகத்தைச் செய்து கொண்டே காலத்தைக் கழிக்கின்றானே! இரும்பு விலங்கை விடுத்துப் பொன் விலங்கை உவகையுடன் பூண்டு கொள்வது போலன்றோ இச் செயல் உளது! என்ற இரக்கம், அல்லமருடைய அருள் உள்ளத்தில் எழுந்தது. சித்தராமருக்குப் பிறவித் துன்பத்தை நீக்கி ஞானம் பெறுதற்குரிய அருளுரைகளை வழங்கத் தம் திருவுள்ளத்தில் எண்ணினார். ஆங்கு வேலை செய்து கொண்டிருந்த ஒட்டர்களை அணுகினார். அவர்களை நோக்கி, "ஒட்டராமன் விரும்புவது யாது? உமியைக் குத்திக் கைசலித்தல் போல இவ்வேலைகளைச் செய்ய நுங்களை ஏவியது எதன்பொருட்டு?" என்று வினவினார். அல்லமர், தங்கள் குருவை "ஒட்டராமன்" என்று இழிவுபடவுரைத்த மொழி அவர்களை மிகவும் துன்புறுத்தியது. காய்ச்சிய வேல் இருகாதுகளிலும் புகுந்தாற்போலிருந்தது. அதனால் அவ்வொட்டர்கள் அல்லமரைப் பித்தன் என்றும் துட்டன் என்றும் வெகுண்டுரைத்தனர். சித்தராமர் செய்யும் நல்லறச் செயலில் பொறாமையுற்று இகழ்ந்துரைப்பதாகவும் எண்ணினர். அல்லமர்,

"முற்றிய கல்வியின் மூடர் நீவிர் நுங்
கற்றறி மூடனுக் கறைமின்; அன்னவன்
உற்றனன் எனில் அவன் உணர்வுஞ் சொல்லினால்
இற்றென உணர்வம்." (செய்யுள், கக)

என்று கூறினார். இவ்வுரையில் அல்லமர் அவ்வொட்டர்களைக் "கல்வியில் மூடர்" என்று இகழ்ந்துரைக்கின்றார். இவ்வாறு தம்மை அல்லமர் கூறியதற்கு அவர்கள் சினங் கொண்டாரல்லர். தம் குருவைக் "கற்றறி மூடன்" என்று கூறிய இழிவுரை முன்னரே அவர்கள் கொண்டுள்ள சீற்ற

மாகிய நெருப்பில் நெய்யை ஊற்றியதுபோலாயிற்று. மேலும் கோபம் வளர்ந்தது. "யாவும் வெகுண்டார் முன் தோன்றாக் கெடும்" அன்றோ! உடனே ஆங்கிருந்த கற்களைப் பொறுக்கி அல்லமர்மீது எறியத் தொடங்கினர்; அழிக்கவும் துணிந்தனர். தங்கள் குரவனை இழித்துரைக்கும் அல்லமரைக் கோறல் அறமும் புகழும் ஆகுமென்று கருதினர். இஃது அவர்களுடைய குருநிந்தனை பொறாத இயல்பினை விளக்குகின்றது.

அவ் வொட்டர்களின் வெகுளிச் செயலை ஆசிரியர்,

"இறுக்கினர் அழுக்குடை, எயிறு மென்றனர்;
உறுக்கினர்; அதிர்த்தனர்; உயிர்த்து மீசையை
முறுக்கினர்; நகைத்தனர்; முருட்டுக் கைகளால்
பொறுக்கினர் சிலைகளைப் பொருஞ்சி னத்தராய்."
(செய்யுள், உக)

"கட்டுமின்; அடிமின்;நுங் கரத்திற் கொட்டினால்
வெட்டுமின்; நிந்தைசொல் வாயின் வெண்பலைத்
தட்டுமின்; எறிமின்; வன்றலை குமைந்திடக்
குட்டுமின்; எனஉளங் கொதித்துக் கூடினர்."
(செய்யுள், உங)

(எயிறு—பல். கொட்டு—மண்வெட்டி)

என்ற செய்யுள்களில் சித்திரித்துக் காட்டுகின்றார். இவற்றில் வெகுளிச் சுவை ததும்பி நிற்கின்றது. இறுக்கினர், எயிறு மென்றனர், உறுக்கினர், அதிர்த்தனர், முறுக்கினர், நகைத்தனர், பொறுக்கினர் என வினைமுற்றுக்களை அடுக்கியும்; கட்டுமின், அடிமின், வெட்டுமின், தட்டுமின், எறிமின், குட்டுமின் என ஏவல் வினைமுற்றுக்களை அடுக்கியும் விரைவும் வன்மையுந் தோன்றச் சொற்களை ஆண்டிருத்தல் மொழிநடைக்கு விறுவிறுப்பையுண்டாக்கிச் சுவை பயத்தல் கண்டின்புறுக. இவ்வாறு இடத்திற்கேற்பச் சொற்களை அமைக்குந்திறன் யாவர்க்கும் எளிதில் வாய்ப்பதன்று. இத்தகு புலமை கம்பர் முதலிய சில கவிஞர்களிடத்திலேயே நாம் காணத்தக்கதாம்.

சினம் மேன்மேலுண்டாகவே அவர்கள் அல்லமர்மீது கைசலிப்பக் கற்களை எறிந்தனர். எறிந்த கற்கள் அவர் மீது படவில்லை. இதனைக் கூறுமிடத்து ஆசிரியருக்கு இதுபோன்ற வரலாறு ஒன்று நினைவிற்கு வருகிறது. "சாக்கிய நாயனர் அன்பால் எறிந்த அவ்வொரு கல்லன்றி மெய்நோக்கு (ஞானம்) இலராகிய இவர்கள் நூறுகோடி கற்கள் வீசினாலும் அவை தாக்குறுமோ? அவை தாக்குறா" என்கின்றார். சாக்கிய நாயனர் மனத்துள் அன்பு கொண்டு சிவபெருமான்மீது எறிந்தார். ஆதலின், அக்கல் சிவபெருமான்மீது பட்டது. இவ் வொட்டர்களோ பலர் சேர்ந்து கணக்கற்ற கற்களை வீசியும் அவற்றால் அல்லமர் தாக்கப்படவில்லை; அதற்குக் காரணம் இவர்கள் மெய்நோக்கிலராய் வன்பராய் எறிந்ததே யாகும் என்று பெரிய புராணத்துள் வரும் சாக்கியநாயனர் வரலாற்றை எடுத்துக்காட்டி அன்பிற்கும் வன்பிற்கும் உள்ள வேற்றுமையைப் புலப்படுத்துகின்றார்.

ஒட்டர்கள் எறிந்த கற்கள் மலைபோல் குவிந்தன. கற்கள் குவியக் குவிய அதனதன்மேல் அல்லமர் நின்றார். அக் காட்சியைப் பூமியில் காணப்படும் உடலின் நிழலை மறைக்கவும் அந்நிழல் விரைவில் மேலே தோன்றுதல் போலிருந்தது என்ற உவமையால் விளக்குகின்றார் ஆசிரியர். ஒட்டர்கள் தம்முன் நின்று தமக்குக் கொன்றன்ன தீமை புரிந்த காலத்தும் அல்லமர் முனிவு கொண்டிலர்.

"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று."

என்னும் குறளிற்கு இலக்காக மலர்ந்த இன்முகத்துடன் பொலிவுற அவர்கள் முன் நின்றார். இச்செயல் அல்லமரது பொறையுடைமையைப் புலப்படுத்தா நிற்கும்.

ஒட்டர்கள் செய்த அடாத செயலைப் பொறுத்த இயல்பினை அல்லமரிடத்துக் கண்டோர் "இவன் முத்தேவர்களுள் ஒருவன் அல்லன்; இவன் பிழை செய்பவ

ரிடத்தும் நன்மை புரிபவன்'' என்றே நவின்றனர். ஒட்டர்கள் அறியாமையோடு மிக்க சினமுடையவர்களாயும் இருந்ததால் அல்லமருடைய அரிய பண்பை ஆராய்ந் துணரும் ஆற்றலற்றவராயினர். தாங்கள் எறிந்த கல்லெறி படாததால், மந்திரத்தில் வல்லவன் என்றே தம் மனநிலைக் கேற்ப எண்ணினர். வலிந்து பற்றிக்கொல்லவும் துணிந்தனர். அவ்வாறு குறுகவும் ஒரு நிலவே நீர் நிறைந்த பல குடங்கள் தோறும் பலவாய்க் காணப்படுதல் போல் அல்லமர் பல இடங்களிலும் பலவுருவுடன் அவர் தம் கட்புலனுக்குக் காட்சி யளித்தார். ஒட்டர்கள் இன்னன் என்றறிந்து பற்ற முடியாததால் மருண்டனர். இவ் வருஞ் செயல் அல்லமருடைய வியாபகத் தன்மையை விளக்குவதாகும்.

ஒட்டர்கள் விரைந்து சென்று சித்தராமரிடம் அறிவித்தார்கள். தம்மை இழிவாக வுரைத்ததைக் கேட்ட அவர்க்குச் சீற்றம் உண்டாயிற்று. அச்சீற்றம், அற்பப் பலன்களைத் தரும் செயல்களை விடுத்து, மெய்யறிவினைப் பெறுதற்கேதுவான நன்னெறியினை யருளுகின்ற அல்லமருடைய திருவடியைக் காட்டும் நன்மை பயப்பதாயிற்று என்று ஆசிரியர் கூறுகின்றார். அது முற்றிலும் பொருந்தும். சினமும் ஒரோ இடத்து நன்மை பயக்கும் போலும்!

சித்தராமர் மிக்க சினத்துடன் வந்தார். அவருடைய சினத்தை யறிந்து தலையையுங் கரத்தையும் அசைத்துப் புன்னகை புரிந்து அல்லமர் கூறிய உரைகள் நகைச்சுவை தருவன. அவை:

"தோண்டுகின்றவரைக் கீழே விழாமல் தன்பால் சுமக்கும் அகன்ற நிலத்தைப் போல இகழ்ந்துரைப்பவர்களைப் பொறுக்கும்படியான நல்லியல்பை நீ பெற்றிருக்கின்றாய். ஆதலின், இவ்வுலகிலுள்ள தவத்தினருள் சிறந்த தவமுடைய யோகி யாவாய்'' (செய்யுள், ௩௭)

"சிறந்த யோகியின் மனத்திலுண்டான சினம் முன்னர் தனது (சினங்கொண்டவரது) அறத்தை அழித்

திடும். பின்னர்ப் பஞ்சியிற் பற்றிய தீயைப்போலச் சினத்தால் தண்டிக்கப்பட்டவனுடைய பிறப்பை அழித்திடும். அதனால் எவ்வாற்றானும் பிறர் பிழையைப் பொறுப்பதற்குச் சமமில்லை யென்றுணர்ந்து வெகுளாமையாகிய அறத்தை மேற்கொண்டாய் போலும்!''

"நின் முன்னர் வெகுளிமிக்க எமனும் உன்னைச் சார்ந்ததால் பொறுமையுடையவனானவன். (நினது முன்னர் வெகுளியே தனதியல்பாகவுடைய எமனும் பொறுமை யுடையோனானவன். உனது கோபம் அவனுடைய கோபத்தினும் மிக்கது என்றபடி) இறப்பைத் தரும் கடலிலுள்ள நஞ்சும் தன்னியல்பு மாறி இறப்பைத் தவிர்க்கும் அமுதத்தின் தன்மையை நின்னைச் சார்ந்ததால் அடையும். (நினது கொடிய இயல்பை நோக்கக் கடலிலுள்ள நஞ்சு, அமுதம் போன்றதாகும். நஞ்சினும் நீ கொடியை என்றபடி.)

இங்ஙனம் கூறுகின்ற மொழிகள் சித்தராமர் "குறிப்பில் வைதனை வெளிப்படை இகழ்வினுங் கொடிதாய்" என்று கூறுதற்கேற்பவே அமைந்துள்ளன. ஒருவரை யொருவர் வெளிப்படையாக இகழ்ந்து பேசுவதினும் குறிப்பில் இகழ்ச்சிப் பொருள் தோன்றும்படி கூறுதலும் புகழ்வதுபோலப் பழித்துரைத்தலும் ஆற்றல் மிக்கனவாம்.

இவ்வுரைகளைக் கேட்ட சித்தராமர் மேலும் சினங் கொண்டார். அவ்வாறு அவர் சினங் கொள்ளுதற்கு "வெறுப்பு முன்செயா என்னைநீ ஈண்டிகழ்ந்தமையாற், பொறுப்பன் அல்லன்" என்று காரணங் கூறுகின்றார். உடனே "நுதல்விழித் தீயால் வறுப்பன்" என்றுங் கூறுகின்றார். அப்பொழுது அல்லமர் துறந்தார் கொல்லாமையாகிய அறத்தை மேற்கொள்ளுதல் வேண்டு மென்பதைப் புலப்படுத்துகின்றார். ஈண்டு,

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.'' (குறள், கூ௨எ)

"ஒன்றாக நல்லது கொல்லாமை." ( ,, ௩௨௩)

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்." ( ,, ௩௨௧)

என்ற குறட்பாக்களின் கருத்தைத் தம் செய்யுள்களில் ஆசிரியர் அமைத்து அழகுபடுத்துந் திறங் காணத் தக்கது.

சித்தராமர் நெற்றிக்கண் பெற்றிருந்தார். அதன் ஆற்றலால் அல்லமரை எரிக்க முற்பட்டார். அவர் தவவன்மையால் இத்தகு அரிய ஆற்றல் பெற்றிருந்தார் போலும்! கொங்கணவர் என்ற ஒரு முனிவரும் தம்மீது எச்சமிட்ட கொக்கைக் கண்ணால் நோக்கி எரித்தார் என்பதை "கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா என்றொருத்தி கூறினளே" (தண்டலையார் சதகம்) என்ற பழங்கதை கூறுகின்றது. மற்றும் அகத்தியர் தம்மை எதிர்த்து வந்த வில்வலனைக் கண்களில் தீயெழச் சினங் கொண்டு விழித்து அழித்தார் என்றும் இதிகாசம் கூறுகின்றது. ஆதலின் சித்தராமரும் நோக்கி எரிக்கும் ஆற்றலுடையார் என்பது கோடல் பொருந்தும்.

சித்தராமர் அல்லமரை அழிக்க நெற்றிக் கண்ணைத் திறந்தார். அதினின்றுந் தோன்றிய தீ அல்லமதேவரை ஊறுபடுத்தாமல் அவருடைய திருவடியில் பணிந்து மீண்டது. இவ்விடத்து அடிகளார் நெற்றிவிழிக்கனல் காமனை நீறுபடுத்துமேயன்றிக் காமமில்லாத சிவயோகியை அழிக்கும் ஆற்றலுடையதோ? என்று தம் கருத்தைப் புலப்படுத்துகின்றார். "செல்லா இடத்துச் சினந்தீது" (குறள், ௩0௨) என்பதற்கொப்பச் சித்தராமருடைய சினம் அல்லமர்முன் வலியிழந்தது. மீண்ட அத்தீ நகரைப் பற்றி எரித்தது. அதனால் அந் நகர மக்கள் பெரிதும் அல்லலுற்றனர். அதனைக் கண்ணுற்ற அல்லமர் அருள் நோக்கால் அந் நகரம் முன்னிலும் மூன்று மடங்கு பல்வளங்களுடன் பொலிவுறச் செய்தார். இஃது அல்லமருடைய பெருங்கருணைத் திறத்தை விளக்கும்.

நெற்றிவிழிக்கனல் அல்லமருடைய திருவடியை வணங்கிச் சென்றதையும் எரிந்த நகரம் பின்னரும் பொலிவுபெற அருள்புரிந்ததையுங் கண்ட சித்தராமர் தம்மை ஆட்கொள்ளவந்த சிவபெருமானே அல்லமர் என்று துணிந்தார். "கொடியவனாகிய யான் அறிவில்லாமற் செய்த பிழையைப் பொறுத்து ஆட்கொள்வாய். பேய்போன்ற ஒருவன் செய்த பிழையை அவனை யீன்ற தாயே யல்லாமல் பொறுப்பார் யாவர்?" என்று பணிந்து சரண்புகுந்தார். அப் பணிவுரையைக்கேட்ட அல்லமர், சித்தராமர் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்து அருளால் ஆட்கொண்டார். இதனை யுன்னுங்கால்,

"கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்." (குறள், ௩௧௨)

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்." ( ,, ௩௧௪)

"இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று." ( ,, ௩௦௮)

என்ற வள்ளுவர் வாய்மொழிகள் நம் நினைவிற்கு வருகின்றன.

சித்தராமர், தமக்குச் செய்த தீமையை அல்லமர் கருதாமல் பொறுத்தருளியதை விளக்க ஆசிரியர்,

"உடன்றுவந்து இலங்கை காக்கு
மன்னவன் கவின்கூர் வெள்ளி மலையெடுத் தலைத்து வந்து
பின்னவன் வணங்கி நிற்பப் பிழையுளங் கொண்ட துண்டோ."

என்று சிவபெருமான் இராவணனுக்கு அருள்புரிந்ததை எடுத்துக் காட்டுகின்றார். இராவணன் சிவபெருமானை மதியாமல் அப் பரமன் தங்கியிருக்கும் கயிலைமலையைப் பெயர்த்தெடுக்க முயன்றான். அப்பொழுது சிவபெருமான் மெல்லிய தன் திருவடிவிரலைச் சிறிது ஊன்றினார். தன் ஆண்மையைப் பெரிதாகக் கருதியிருந்த அவ் விராவணன் கயிலையின்கீழ் அகப்பட்டுத் தோள்களும் தலைகளும் கால்

களும் நெரிவுற அரற்றினான். அருள்புரியுமாறு சாம வேதத்தைப் பாடித் துதித்தான். சிவபெருமான் அவனுக்கு அருள்புரிந்தார். இறைவனுடைய அருட்பெருக்கை விளக்கும் இவ் வரலாற்றைத் திருஞானசம்பந்தர் திருப் பதிகங்கள் தோறும் எட்டாவது பாசுரத்தில் வைத் தருளுவர். இதன் நுண்பொருளைச் சேக்கிழார் பெருமான்,

"மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணல்அவற் கருள்புரிந்த ஆக்கப்பா டருள்செய்தார்."

என்று விளக்கியுள்ளார். இத் திருமுறைகளை நன்கு ஓதியுணர்ந்த நம் புலவர்திலகர் சிவப்பிரகாச அடிகளார் சித்தராமர் தாம் செய்த பிழையை யுணர்ந்து அதனைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டிநிற்க அல்லமர் அவர் செய்த பிழையைக் கருதாமல் அருள்புரிந்த திறத்தை விளக்க இவ் வரலாற்றை எடுத்தாளுந் திறம் போற்றத் தக்கது.

பின்னர் அல்லமர் சித்தராமர்க்குத் துறந்தார்க்குரிய வெகுளாமையாகிய அறத்தை விளக்குகின்றார். அவ் விடத்துச் சிவப்பிரகாச அடிகளார் தம்மினும் வலியார் - தம்மையொத்தவர் - தம்மினுந் தாழ்ந்தார் யாவரிடத்தும் சினங்கொள்ளுதல் கூடாது என்பதை விளக்க,

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கால் என்." (குறள், ௩0௧)

"செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனில் தீய பிற." ( ,, ௩0௨)

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்." ( ,, ௩0௩)

என்ற குறட்பாக்களின் கருத்துக்களையும் இப் பாட்டு களுக்குப் பரிமேலழகர் கூறியுள்ள உரைகளையும் எடுத் தாள்கின்றார். இவ்வாறு ஆள்வதால் இக் காவியம்

இலக்கியச் சுவை மலிந்து விளங்குதலை அறிஞர்கள் நோக்குவார்களாக.

சித்தராமர் மிக்க தவ வலிமையுடையவர். சிவபெருமானையொப்ப நெற்றிக்கண் படைத்தவர். அத்தகு அரிய ஆற்றலுடையவரை அல்லமர் அருளால் வலிந்து ஆட்கொண்டார். இதனைச் சித்தராமரே உணர்ந்து "மதயானையை வலிந்துபற்றி அதனை யடக்கிக் காலாலிடுங் கட்டளையைச் செய்யக் கொள்வரேயல்லாமல் அது தானே வந்து உறவுகொண்டு ஒருவரிடத்து அடங்கியொழுகுவதில்லை. அதுபோல யானும் தங்கள்பால் அத் தன்மையுடையனானேன்" என்று கூறுகின்றார். இதனால் அன்பர்களை ஆட்கொள்ள இறைவன் அவரவர் நிலைக்கேற்ப வந்து அருள்புரிவான் என்பது பெறப்படும். சுந்தரரைத் திருவெண்ணெய் நல்லூரில் திருமணக் காலத்தில் இறைவனே வந்து வலிய ஆட்கொண்ட திறமும் ஈண்டு நினைவிற்கொள்ளத் தக்கதாம். மற்றும் "ஒரு வீரனுடைய ஆண்மை அவன் முன்னர் எதிர்த்து நின்றவனுடைய படைவன்மையால் அறியப்படுதல்போலத் தங்களுடைய அருளின் ஆற்றல் என்னுடைய கொடுமையின் மிகுதியால் அறியப்படும்" என்று சித்தராமர் கூறுகின்றார். அவ்வாறே அல்லமருடைய அருளின் ஆற்றலை யறியச் சித்தராமர் தவத்தின் ஆற்றலால் விளைத்த கொடுஞ்செயலே துணையாய் நிற்கின்றது. சுருங்கக்கூறின் சித்தராமருடைய வரலாறு அல்லமருடைய அருள்வன்மையைக் காட்டும் ஆடியாய்த் திகழ்கின்றது.

பின்னர்ச் சித்தராமர் முத்தியடையும் நெறியை யருள வேண்டிநின்றார். அல்லமர் அவருடைய இருவினையொப்பு மலபரிபாக நிலையைக் கண்டு அருள்புரிய எண்ணினர். சித்தராமர் குளம் அமைத்தல், கோவில் கட்டுதல், நந்தவனம் வைத்தல் ஆகிய நற்செயல்களைச் செய்வதால் வீடுபேற்றை யடைதல் கூடும் என்ற கருத்தினராயிருந்தார். இச் செயல்கள் சரியையின்பாற் படுவன. இவற்றால் அடையும்பேறு சாலோக முத்தியாகும். "சாலோகம்

பதியுலகத்தில் வாழ்தல்" என்பர். "அஃதாவது ஒருவர் மனையிற் பணிசெய்யும் அகத்தொண்டர்க்குளதாய உரிமையேபோல அவ்வவ்வுலகத்துள் யாண்டுந் தடையின்றி இயங்கி அவ்வப் போகங்களை நுகர்ந்து வாழ்வது" (சிவஞானபாடியம்) ஆகும் என்பர். ஆகவே சரியையால் வீட்டின்பத்தை யடைதல் முடியாது; வீடுபேற்றினைப் பயக்கும் ஞானத்தை அடைவதற்கே அஃது ஏதுவாகும் ஆதலின்.

"சிவஞானம் ஒன்றுமே முத்திக்கேதுவாகும். மற்றைச் சரியை, கிரியை, யோகங்கள் ஞானமுண்டாவதற்கேதுவாகும் என்று மறைகள் சொல்லாநின்றன. ஆதலால் இந்தச் சரியை, கிரியை, யோகங்களை மேலான பொருளென்றெண்ணிக் களிப்பவர் கீழ்மக்களே யாவர். கருமமும் யோகமும் மனத்தைப் பரிசுத்தமாக்கி விடயங்களிற் செல்லாமல் தடுக்கும். அந்த மனத்தால் ஈசுரன் நித்தியன் என்ற ஞானம் தோன்றும்; ஞானந் தோன்றுதலும் அநித்தியமாய் அழிந்தொழிகின்ற பொய்யுடம்பும் அதற்குரிய பொருள்களுமாகிய இவற்றை வெறுத்துச் சற்குருவைச் சென்றடைந்து தத்துவங்களை யெல்லாங் கடந்து நின்ற ஒப்பற்ற பிரமப்பொருளையே தரிசித்துக்கொண்டிருப்பான். ஐம்புலன்களையும் களைந்தவுடனே பொறிகளும் ஐம்பூதங்களும் கரணங்கள் நான்கும் சுத்த முதலிய ஐந்தும் அடியில் வைக்கப்பட்ட குடம் விழுந்தால் மேலே வைக்கப்பட்டிருக்கும் குடங்களெல்லாம் ஒருங்கே விழுவது போல அழிந்தொழியும். ஐந்து பொறிகளையும் ஒவ்வொன்ருய் விட்டால் அவை ஏனைய விடயங்களிற் சாரும். முதன்மையாகிய மனத்தை யொழித்தால் எல்லாம் ஒழியும். அஃது எதுபோல என்ருல் ஐந்தலை நாகத்தின் தலை ஒன்றை யறுத்தால் மற்றைத் தலைகள் நஞ்சைச் சிந்திக்கொண்டே யிருக்கும். அதன் கழுத்தை அறுத்துவிட்டால் நஞ்சு முழுவதும் நீங்குவது போலாம். மனம் அடங்கினுல் இறை, உயிர் ஆகிய இவைகள் ஒன்றற்கொன்று பேதமோ அபேதமோ என்னும் பித்து நீங்கும்"

(செய்யுள், சுசுசு – எச) என்று அல்லமர் உண்மை ஞானத்தை அருளினர்.

இவற்ருல் சரியையால் வீடுபேற்றையடைதல் கூடு மென்று கருதியிருந்த சித்தராமருடைய கொள்கையை மறுத்துச் சிவஞானம் ஒன்றே முத்திக்கேது என்று உணர்த்தியதால் இது பிறன் கோள் மறுத்துத் தன்கோள் நிறுவுதலாம்.

**வசவண்ணர் கதி**

பிரபுதேவர் சித்தராமருடன் வசவண்ணர் திரு மடத்தை யடைந்ததை இக்கதி யுணர்த்தும்.

வசவண்ணருடைய புகழ் எங்கும் பரவி யிருந்தது. உலகோர் அவருடைய புகழுரைகளையே புகன்றனர்; கேட்டனர். அல்லமர், சித்தராமர்க்கு முன்னர் வீடடைதற் குரிய நெறிகளை உரையால் அறிவித்தார். கற்பிக்கும் முறைகளில் விளங்காப் பொருள்களை உதாரணங் காட்டி விளக்கல் என்பது ஒன்ருகும். அம் முறையில் அல்லமதேவர் தாம் கூறிய இலக்கணத்திற்கு இலக்கிய மாக வசவண்ணரைக் காட்டி விளக்கத் திருவுள்ளங் கொண்டார்.

அல்லமதேவர், சித்தராமரை அழைத்துக்கொண்டு கலியாணபுரியை நோக்கிச் சென்ருர். அவர்க்கு ஆங்காங் குள்ள பொழில், மருதநிலம், நகரிலுள்ள தெருக்கள் ஆகிய இடங்களைக் காட்டிக்கொண்டே சென்ருர். அவ் வாறு காட்டியவற்றுள் நகருள் சமணர்கள் வாழும் படியான இடமும் ஒன்ருகும். அவ்விடம் பெரிய மதிளாற் சூழப்பெற்றது. சமவ சரணர் என்று சொல்லும்படியான பொன்னெயில் வட்டம் போன்றது. பொன்னெயில் வட்ட மென்பது, "அருகதேவருடையது; ஐந்து நூறு யோசனை வட்டமும் நீளமும் உடையது" என்பர் தக்கயாகப் பரணி யுரையாசிரியர். உலகில் இப் பொன்னெயில் வட்டத்துள் வாழும் பயிற்சியால் இறந்து உயிர்போன பின்னர் அருக

தேவர்க்குரிய பொன்னெயில் வட்டத்துள் வாழ வுன்னு வார்களாம். அத்தகு பொன்னெயில் வட்டத்திற்கு எதிரே சைவர்கள் வாழும் தெரு இருக்கிறது. அத் தெரு திருநீறு என்னும் உடற்கவசம் பூண்டு, உருத்திராக்க மென்னும் வெற்றிமாலை புனைந்து, ஐந்தெழுத்தாகிய அம்பினைக்கொண்டு, அரனடியார்கள் ஆகிய வீரர்கள் சமணர்களாகிய பகைவர்கள் கலங்குமாறு தங்கியுள்ள பாசறைபோலுளது என்று புனைந்துரைக்கப்படுகிறது. இவற்றால் சமணர்களும் சைவர்களும் கலியாணபுரியில் நிறைந்து வாழ்ந்தனர் என்பது பெறப்படும்.

அல்லமரும் சித்தராமரும் வசவண்ணருடைய திரு மடத்தையடைந்தார்கள். இவர்களது வருகையைக் கண்ட அப்பணன் வசவண்ணருக்கு அறிவித்தார். வசவண்ணர் "கன்றினை நினைந்து நெஞ்சங் கரைந்துவந் தணையுந் தாய்க்கிங்கு, ஒன்றொரு தடையுமுண்டோ ஒல்லைநீ தருதி" என்றார். வசவண்ணர் அல்லமர் வருகையை அறிந்தும் வந்து அழையாமல் இவ்வாறு உரைத்ததால் முனிவு கொண்டார்போல் புன்னகைபுரிந்து அல்லமர் கூறிய உரையை அப்பணன் அதனை வசவண்ணரிடம் உரைத்தார். கேட்ட வசவண்ணர் உள்ளம் துணுக்குற்று, "புல்லவந் தணையுந் தாய்முன் பொருதுதும் பறுத்திட்டோடு, நல்லிளங் கன்றுபோல் முன் நான் செலா திருந்தேன்" என்றார். இவ்வாறு ஆசிரியர் அன்பின் பெருக்கிற்குத் தாய்ப் பசுவையும் கன்றையும் உவமானமாக ஈரிடத்தும் ஆண்டிருத்தல் இலக்கிய நலங்காண்பார்க்குப் பெரிதும் இன்பம் பயப்பதாம். அன்பின் மிகுதியைப் புலப்படுத்த "கறவைகாண் கன்றின் வெஃகி" (சிந்தாமணி), "ஈன்ற ஆன் கனைப்புக் கேட்ட கன்றுபோல் கதறி" (பெரியபுராணம்) என்று பிற நூலாசிரியர்களும் இங்ஙனம் ஆளுதல் ஈண்டொப்பிடத்தக்கது.

அப்பணன் அல்லமரை அழைத்தபோது அல்லமர், "அமைச்சராகவுள்ள வசவரிடத்து அன்பர்கள் இடும் பிச்சையை ஏற்று உண்ணும்படியான யான் வருதல்

முறையாகாது” என்று கூறுகின்றார். செல்வமும் அதிகாரமும் சிறந்து விளங்குவோரிடம் அவரினுந் தாழ்ந்தோர் செல்வாராயின் அவரை மதியாதிருத்தலை யாம் உலகில் காண்கின்றோம். அவ்வுலகியலைத் தம்பால் வைத்து அறிவிக்கின்றார் அல்லமர். அல்லமருடைய வருகையை அறிந்து எதிர்வந்து அழைத்துச் செல்லாத குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுமாறு அல்லமரை ஒவ்வொருவரும் வேண்டிக்கொள்கின்றனர். அவ்வுரைகள் மனத்தை இளகச் செய்கின்றன. அவற்றை ஈண்டுக் காண்போம்.

வசவண்ணர்,

“என் தந்தை போன்றவனே! என்னுடைய குணம் கொடிதேயாகும். யான் அதினின்றும் மாறுபட்டிலேன். உன்னுடைய குணம் அருளேயாகுமாயின் நீ அதினின்றும் விலகாது நிற்பாயாக. அற்பமான குணத்தையுடைய தம் குழந்தை செய்யும் தீய செயலைப் பொறுத்து அருள்புரிதலென்னும் தனது இயல்பை விடுத்துத் தள்ளும்படியான தாய் உலகில் உண்டோ! யான் சூத்திரப் பாவை போன்றவனாவேன். நீ சூத்திரத்தால் ஆட்டுவிப்பவன் ஆவாய். ஆதலின், யானாகச் செய்யத்தக்கதொன்றில்லை. நீ அருளால் நோக்கி எனது குறையைப் போக்கி என்னைப் பணிசெய்யுமாறு ஏற்றுக்கொள்வாய்,” என்று ஞானகுரவனுடைய திருவடியில் பணிந்தார்.

சென்னவசவர்,

“நிலமகளானவள் பொறுக்காமல் தள்ளினால் அதை நிறுத்துபவர் யாவர்? மிக்க ஓசையையுடைய கடல் கரையைக் கடக்குமாயின் அதைத் தடுப்பவர் யாவர்? எங்கள் தலைவனே! நீ கோபிப்பாயானால் அதைத் தடுப்பவர் உலகில் எவ்விடத்தும் இல்லை. இல்லை. எந்தாய்! அருள் செய்வாய்,” என்று வணங்கினார்.

மடிவால மாச்சிதேவர்,

“சிறு குழந்தைகள் பேசுஞ் சொற்களில் சொல்லிணக்கணத்தின் அமைதியை ஆராய்தல் போல இந்தச் சிறிய

குமரனாகிய வசவர் அன்புசெய்ய அடியிடுவதற்கு முன்னரே அவன் பிழையை நோக்குதல் வேண்டா. சிறிது தங்களுடைய கடைக்கண் பார்வையைச் செலுத்தி அருள் புரிக,'' என்று பணிந்தார்.

கின்னரப் பிரமன்,

"மனம் வாக்குக் காயங்கள் ஒன்றுபட்டு உன் தொண்டினைச் செய்யவல்லவன் உலகில் இவனை யல்லாமல் வேறொருவரையும் யான் கண்டிலேன்; அருள் செய்ய வேண்டும்,'' என்று பணிந்தார்.

அடியார்கள்,

"எம்மையெல்லாம் அடிமையாகக் கொள்ள விரும்பினால் இவ்வசவர் செய்த பிழையைப் பொறுத்துக்கொள்வாயாக,'' என்று பணிந்தார். என வருவனவாம்.

அவர்களது வேண்டுகோளைச் செவிமடுத்த அல்லமர் வசவண்ணர் முதலியோர்க்குச் சொல் ஒன்றாக, செயல் ஒன்றாக இருத்தல் கூடாது. அன்பைக் காட்டிலும் சொல் அகமகிழ்வைத் தராது என்றுரைத்து அன்பின் பெருமையை விளக்கினார். அவர் அருளிய மொழிகளை ஆசிரியர் தெள்ளிய இனிய தமிழ்நடையில் நாம் மனத்திற் கொள்ளத்தக்கனவாகத் தந்துள்ளார். அப் பாசுரங்கள்:

"ஆதர விலையேல் வேண்டும்
அறத்தினில் பொருளோர் செம்பொன்
பூதர வளவ ளித்தும்
பொருளழி வளவே யாகும்
ஆதர வுளதேல் நல்கும்
பொருளணு வளவென் றாலும்
பூதரம் எனவ ளர்ந்து
புண்ணியப் பொருள் அளிக்கும்.''

(ஆதரவு - அன்பு. பூதரம் - மலை)

"துறவறம் மனையறம் சீர்
தூய்மைநற் கல்வி நல்லோர்
உறவொடு மகங்கள் தானம்
ஒண்தவம் விரதம் பூசை
அறிவிவை அனைத்தும் இல்லை
ஆதர வில்லை யாயின்
பெறுவன மெய்வ ருத்தம்
பெரும்பொருள் அழிவு மாதோ."

(மகங்கள் - யாகங்கள்)

"ஆதர வுடையான் செய்யும்
அல்லவும் நல்ல ஆகும்;
ஆதர விலாதான் செய்யும்
நல்லவும் அல்ல ஆகும்;
ஆதர வதனால் ஆவிக்(கு)
அருந்துணை இன்ப முத்தி
ஆதர வலாது வேறொன்(று)
அளித்திடக் கண்ட துண்டோ!"

**மருளசங்கரர் கதி**

வசவண்ணருடைய திருமடத்திலுள்ள பிரசாத குண்டத்திலிருந்த மருளசங்கரரை அல்லமர் கண்டு அவர்க்கு ஞானம் அருளியதை இக்கதி யுணர்த்தும்.

அல்லமரை வசவண்ணர் திருமடத்துள் அழைத்துக் கொண்டு சென்றார். பல வாயில்களைக் கடந்து கடைசியில் உள்ள பிரசாத குண்டத்தை யடைந்தார். அதனை "சாக்கிரம் முதலிய பல அவத்தைகளைக் கடந்து இறுதியில் மெய்ப்பர சிவத்தினை யடைபவர்போல் பிரசாத குண்டத்தை யடைந்தார்" என்று ஏற்ற உவமையால் விளக்குகின்றார் ஆசிரியர். பிரசாத குண்டம் என்பது நிர்மல அடியார்கள் உண்ட பரிகலசேடம் இடும் இடம். அதன்கண் மருளசங்கரர் இருந்தார். இவர் சிறந்த பரம யோகி. இவர் பார்ப்பவர்க்கு மருளர்போல் இருந்ததால் மருளசங்கரர் என்று அழைக்கப்பெற்றார். பாம்பின்கால்

பாம்பே யறியும் என்றாற்போல் இவருடைய பெருமையை அல்லமரே யறிந்தார். தம்மைப்பணிந்த மருளசங்கரரைக் கட்டித் தழுவிக்கொண்டார். அவருடைய பெருமையை அறியாதிருந்த வசவண்ணர் முதலியோர்க்குச் சிவஞானி களின் பெருமையை,

"சரியை, கிரியை, யோகம் புரிபவர்களை அவரவர் செய்யும் செயல்களால் அறியமுடியும். ஒரு செயலுமின்றி வாளா இருக்கும் ஞானியை எங்ஙனம் அறிதல் கூடும்? சிவஞானி இல்லறத்திலாயினும் துறவறத்திலாயினும் ஒழுகி இலைமறை காய்போல் தன் இயல்பைப் பிறர் அறிய முடியாதவாறு இருப்பன். உலகத்தார் வல்லவன் என்று கூறும்படியும் இருப்பன்; வல்லமையற்றவன் என்றுரைக்கு மாறும் இருப்பன்; பிறர் இகழும்படி புல்லன் என்றிருப்பி னும் இருப்பன்; புண்ணியம் அடைதற்குரிய நற்கருமங் களைச் செய்பவன் என்று கூறுமாறும் இருப்பன். பிறப்பு அறிவதை யறிந்த ஞானியால் அன்றிக் கருமத்தையுடை யவனால் நீக்கப்படமாட்டாது." (செய்யுள், அ - கக)

என்று எடுத்துரைத்தார்.

வீர சைவசமய நூல்கள் குரு, இலிங்கம், அடியார், திருநீறு, உருத்திராக்கம், ஐந்தெழுத்து, தீர்த்தம், பிரசா தம் ஆகியவற்றை அட்டாவரணம் என்று போற்றிப் புகலும். அவற்றுள் ஈண்டுச் சிவஞானிகளின் பெருமை யோடு தொடர்புடைய அவர்களுடைய திருவடி விளக்கும் நீர் (தீர்த்தம்), சிவப்பிரசாதம் ஆகியவற்றின் பெருமையை யும் விளக்கியருளினார் அல்லமர். அவை:

**திருவடி விளக்கும் நீரின் பெருமை:** "பற்றற்ற சிவ பக்தர்களுடைய திருவடிகளை விளக்கும் நீர் தங்கியுள்ள குழியில் தோன்றி, வளர்ந்து, அதில் மூழ்கி, வாழும் புழு வானது அடையும் பெரும் பேற்றினை முதன்மையானதாக வுள்ள கங்கை முதலிய புனித நீர்களில் மூழ்கித் தீவினை களைப் போக்கும் அந்தணர்களும் அடையமாட்டார் என்று வேதங்கள் கூறும்." (செய்யுள், கச)

சிவப்பிரசாதத்தின் பெருமை: "தன்னை யீன்ற தாய், தந்தை, குற்றமற்ற மகளிர், பசு, குழந்தை, மறையோர் ஆகியவர்க்குத் துன்பம் செய்ததாலுண்டான தீர்திறன் அற்ற கொடிய பாதகத்தையும் இமைப்பொழுதில் போக்கி விடும்; அந்தக்கரணத்தைப் புனிதமாக்கிச் சிவமாக ஆக்கும் சிவப்பிரசாதம் என்றால் அதற்கு நிகராக வேறு ஏதேனும் உண்டோ?" (செய்யுள், கரு) என்பன.

மற்றும், அல்லமர் "அரன் பிரசாதம் பசியைப் போக்கும் மருந்துமாகும், பிறப்பையும் போக்கும். இந்த நன்மையைக் கருதியே இப் பிரசாத குண்டத்தில் மருளசங்கரர் இருக்கிறார். பசியைப் போக்குதல் ஒன்றையே கருதி உண்ணும் மனிதர்களுக்கு இத்தகு நன்மை உண்டாகாது" என்று விளக்கினார். இந் நாளில் எச்சில் உண்டு வாழும் இழிநிலையினரை இந்நனி நாகரிக உலகிற் காண்கின்றோம். அவர்களைப் போன்றவரல்லர் ஈண்டுச் சிறப்பித்துரைக்கப் படும் மருளசங்கரர். வசவண்ணரே "பொற்புதையல் தான் இருக்கும் இடத்தின் கீழ் இருத்தலை அறியாது வறுமையால் துன்புறுபவனைப் போல் சிறந்த ஞானியாகிய மருள சங்கரர் இங்கு இருக்கவும் அவருடைய பெருமையை யானே அறியாமல் இந்நாள் வரையில் இருந்தேன்" என்று இரங்கிக் கூறினாரெனில் அவர் பெருமையை என்னென்றுரைப்பது!

மருளசங்கரர் போல் சிறந்த அளவற்ற சிவசரணர்கள் வசவண்ணர் திருமடத்தில் இருத்தலைக் கண்ட அல்லமர் மகிழ்வு கொண்டு,

"பத்திக் கடலே! குணக்குன்றே!
பாசப் பகையே! எம்உறவே!
முத்திக் கரசே! சிவானந்த
முதலே! ஞான மணிவிளக்கே!
சித்திப் பொருளே! அருள்நந்தித்
தேவே! நின்னைத் தொழும்அடியார்
புத்திக் கமுதே! யாவர்நினைப்
போல்வார் அவரை அறியேமால்."

என்று புகழ்ந்துரைத்தார். அடுக்கிய விளிகளாற் காதற் சிறப்புத் தோன்றும் என்பர் பேராசிரியர். அவ்வாறு இப் பாட்டில் அன்புகனிந்த மொழிகளால் வசவண்ணரை அல்லமர் அழைக்கின்றார். இங்ஙனம் வசவண்ணரை அல்லமர் புகழ்ந்துரைப்பதால் அல்லமர் தம்மினும் தாழ்ந்தவராயினும் அவர்பால் கண்ட நல்லியல்புகளைப் போற்றிப் பாராட்டும் இயல்புடையார் என்பது விளங்கும்.

இவ்வாறு கூறிய புகழுரைக்கு வசவண்ணர்,

"..................எனக்குப் புகன்ற நலமெல்லாம்
சென்றநாளில் இலிங்கினது செந்தாமரைத்தாள் தொழப்பெற்ற
இன்று தொடங்கி யுளவாம்."

என்று கூறிய உரை வசவண்ணருடைய பணிவைப் புலப்படுத்துதல் காண்க.

**கதலிவன கதி**

அக்கமா தேவியார் கல்யாணபுரியில் அல்லமரைக் கண்டு ஞானம் பெற்று ஸ்ரீசைலத்துள்ள கதலி வனத்தை யடைந்து நிட்டை கூடியதை இக்கதி யுணர்த்தும்.

அக்கமா தேவியார் ஞான குரவனைத் தேடியலைந்தார். இறுதியில் வசவண்ணரது திருமடத்தை யடைந்து அல்லமரைக் கண்டு "அஞ்சினேன் பவப்பிணிக்கு அருள் செய்" என்று பணிந்தார். மாதேவியாரின் பக்குவ நிலையை உணர்ந்தார் அல்லமர். "வீடு உவப்பவர் ஆணெனப் பெண்ணென வேறோ" என்று எண்ணினார். பெண்ணுயிருப்பினும் இவர் ஞானம் அடைவதற்கு உரியவரே என்று துணிந்து மாதேவியார்க்கு மெய்ப் பொருளை உணர்த்தி யருளினர். வீடுபேற்றினை யடைதற்கு ஆண்மக்களைப் போலப் பெண்களும் உரியவரே யாவர் என்று அல்லமர் கருதியது மிகச் சிறந்த பரந்த நோக்கமாகும். முன்னரும் அல்லமர் முத்தாயி அம்மை என்ற பெண்ணிற்கு அருள் புரிந்துள்ளார். தமிழ்நாட்டுச் சைவ அடியார்களுள் ஒருவராகக் காரைக்கால் அம்மை

யார் விளங்குகின்றார். அம்மையாருடைய திருப்பாசுரங்கள் திருமுறைகளில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. அம்மையாருடைய வரலாற்றை யாவரும் பெரிதும் போற்றிப் புகழுகின்றார்கள். வைணவ ஆழ்வார்களுள் ஆண்டாள் ஒருவராகத் திகழ்கின்றார். அவருடைய திருப் பாசுரங்கள் யாவராலும் போற்றப்படுகின்றன. ஆதலின் பெண் பாலரும், ஞானகுரவர்களால் மெய்ஞ்ஞானம் பெறுதற் குரியவர்களேயாவர்.

இங்ஙனமிருக்க, மணிமேகலை என்னும் பெருங்காப்பியத்தில் மணிமேகலா தெய்வம் "இளமைப் பருவமுடையவள், வளையல்களையுடையவள் (பெண்) என்று கருதி உனக்குச் சமய உண்மைகளைச் சொல்லார்; ஆதலின், வேற்றுருக் கொள்ளவும் ஒரு மந்திரங் கூறுகின்றேன்" என்று ஒரு மந்திரத்தை மணிமேகலைக்குக் கூறிச்சென்றது; அவ்வாறே மணிமேகலை வேற்றுருவெய்தும் மந்திரத்தால் ஒரு முனிவன் வேடங்கொண்டு வஞ்சியம்பதியிலிருந்த சமயக் கணக்கர்களைக் கண்டு அவர்களுடைய கொள்கைகளைக் கேட்டறிந்தாள் என்று கூறப்படுகிறது. இத்துடன் அக்கமா தேவியாருடைய வரலாற்றை ஒப்பிட்டு நோக்குங் கால் அல்லமருடைய உயர்ந்த அருள்நெறியின் பெருமை விளங்கும்.

அல்லமர் மாதேவியாரின் பக்குவ நிலைக்கேற்ப மிகச் சுருக்கமாக, "நீ ஐம்பூதங்களும் அல்லை; ஐம்பொறிகளும் அல்லை; புத்தியும் அல்லை; இவைகள் எல்லாவற்றையும் நீ என்று மயங்குதற் கேதுவாகிய அற்ப வுணர்வை யொழித்துச் சோதிரூபமாய் விளங்குகின்ற பிரமமே நீ ஆவாய்." "காண்பான் (ஞாதுரு), காட்சி (ஞானம்), காட்சிப்பொருள் (ஞேயம்) என்னும் இவை இருக்குமாயின் அந்தநிலை முத்திநிலை யன்று; அது சகமாகும்" (செய்யுள், கங-கச) என்று இது, அது என்ற சுட்டற்ற நிலையை அவர்க்கு அருளினார்.

பின்னர் அல்லமதேவர் அக்கமா தேவியாரை நோக்கி, "அன்னை! நீ இனிக் கதலிமா வனத்தை

யடைந்து கேட்ட இப்பொருளை யெல்லாம் உன்பால் நீயே தெளிந்தறிவாய்,'' என்றருளினர். சிவபெருமான், கயிலையை நண்ணிய காரைக்கால் அம்மையாரை நோக்கி, "அம்மையே! என்னும் செம்மை ஒரு மொழி உலக மெல்லாம் உய்யவே அருளிச்செய்தார்'' என்றார் சேக்கிழார் பெருமான். அவ்வாறே அல்லமர், மாதேவியாரை "அன்னை'' என்று அழைத்திருத்தலும் ஈண்டொப்பிடத் தக்கது. மாதேவியாரின் இளமைத் துறவையும் அவர் இறைவனை யடையும் நன்னெறி யுணர நற்குரவனை நாடி யலைந்ததையும் அல்லமராகிய ஞானகுரவரைக் கண்டதும் மனம் நெருப்பிற்பட்ட அரக்குப்போல் உருக, வாயில் செஞ்சொல் தடுமாற, விழிகளினின்று நீர் பெருகிச் சிந்த, மலர்போலுங் கைகளால் தொழுது, அனங்கன் நோய் காணுத அம்மையார் பவப்பிணியைப் போக்கவேண்டி அழுது நின்றதையும் நோக்குங்கால் மாதேவியாரை மானிடமாதருள் ஒருவராக எண்ணுதல் கூடுமோ? உமையம்மையாரின் சத்துவகலை மடந்தை யென்றே துணிதல் சாலும்.

அம்மையாரின் வரலாறு சாத்துவிக குணமே பக்திக்குக் காரணம்; மனை வாழ்க்கையைத் துறந்து, அறிவாசானை நாடி, அவன் அருளால் ஞான நெறியை யுணர்ந்தோர் வீடுபேற்றினை யடைவர், என்பனவாகிய சீரிய பொருள்களை விளங்க வைத்தல் காண்க.

**கோரக்கர் கதி**

கோரக்கர் என்னும் சித்தர்க்கு அல்லமர் மெய்ப் பொருள் உணர்த்தியதை இக்கதி யுணர்த்தும்.

அல்லமர் மற்றும் பல இடங்களுக்குச் செல்லுதலை விரும்பி வசவண்ணர் முதலியோரை விட்டு மின்னலைப் போல் மறைந்தார். முன்னர் அல்லமருக்குத் தாய்ப் பசுவை உவமானமாகக் கூறிய ஆசிரியர் அடியார்களை விட்டு நீங்கிய அவர்க்கு இங்கு, "கன்றின்வாய் முலைநெகிழ்த் துக் கறவைவிட் டகன்றதென்னச் சென்றனன் ஐயன்''

என்று கூறியுள்ள உவமை உள்ளத்தைக் கவர்வதாக வுள்ளது. மற்றும் அல்லமர் பிரிவால் அடியார்கள் உற்ற துயரத்தை "ஊண் இடும் ஒருதாய் நீத்த பார்ப்பென உளங்குலைந்தார்" என்ற உவமையால் விளக்குந்திறன் மிகமிகப் பாராட்டுதற்குரியது.

சித்தராமரை அல்லமர் விட்டுப்பிரிந்து செல்லினும், சித்தராமர் அல்லமரைப் பிரிந்திலர் என்பதை,

"தொண்டனாகிய இராமன் சொன்னலா புரத்தில் நெஞ்சிற்
கொண்ட ஆரியனோ டேகிக் கொடுவழி தப்பிநின்றார்."

என்று நயம்பட உரைக்கின்றார் ஆசிரியர்.

அல்லமர் கர்நூல் மாவட்டத்திலுள்ள ஸ்ரீசைலம் என்னும் திருப்பருப்பதத்தை யடைந்தார். இப்பருப்ப தத்தை ஆசிரியர் மிக அழகாகப் பதினேழு பாடல்களால் (கூ-உடு செய்யுள்கள்) கற்பனை நலங் கனிந்தொழுக வருணித்துப் பாடியுள்ளார். ஒவ்வொரு பாட்டின் நலத்தையும் அறிஞர்கள் நூலிற் கண்டின்புறுவார்களாக. அப்பருப் பதத்தில் கோரக்கர் என்னும் பெயரிய சித்தர் ஒருவர் இருந்தார். பதினெண் சித்தர்களில் கோரக்கர் என்று ஒருவர் சொல்லப்படுகிறார். இவர் அவர்தாமோ? அன்றி வேறு ஒருவரோ? என்பது ஆராயத் தக்கது. இவர் காயசித்திபெற்றவர். அல்லமரைக் கோரக்கர் கண்டதும் அவரை வரவேற்று,

"இரவி வானவன் எழுந்ததும் இன்றெனக் கதாஅன்று
தெரிவ வாயின கண்களும் இன்றுநின் சிறந்த
வரவு நானெதிர் இன்று பெற்றமையின் நின்வரவு
பொருவின் மாதவம் புரிந்திடார்க் கெளியதோ! புகலின்."

"மதலை யாகிய நற்குணஞ் சார்ந்து நல்வாய்மை
சிதைவி லாஅடி யாரினஞ் சேர்ந்திடா தவன்கண்
ணுதலி ணையுஞ் சேர்ந்திடான் என்ப எந்நூலும்
முதலி லான்பெறும் ஊதியம் யாதுகொல்? மொழியில்."

என்று முகமனுரை வழங்கினர். "தங்கள் வருகையை யான் இன்று பெற்றதால் சூரியன் உதித்த நாளும் எனக்கு இன்றேயாகும். அதுவல்லாமல், என் இரு கண்களும் அடையும் பேற்றினை இன்றே பெற்றன. நின் வருகை மிக்க தவமுடையார்க்கன்றிப் பிறர்க்கு எளிதில் கிடைக்குமோ? உயிர்க்கு உறுதுணையாகவுள்ள நற்குணங்களைப் பெற்று, நல்ல உண்மையான அடியார் கூட்டத்தை யடையாதவன் சிவபெருமானையும் அடைந்திடான் என்று எந்நாலும் உரைக்கும். சொல்லுங்கால் முதற் பொருளில்லாத ஒரு வணிகன் அடையும் இலாபம் யாது?" என்று கூறியுள்ள மொழிகளில் அன்பு ததும்பி நிற்றலைக் காண்க. இந்நாளில் ஒரு மாநாட்டிற்கோ ஒரு நகர்க்கோ வரும் சிறந்த பெரியோர்களை வரவேற்றுக் கூறும் உரையினும் சிறந்து விளங்குதலைக் காண்க. இவ்வாறு வரவேற்கும் முறை பழங்காலத்தும் உண்டு என்பதைச் சிவப்பிரகாச அடிகளார் வாக்கால் நாம் அறிதல் கூடும்

கோரக்கர், இரசமணி முதலியவற்றால் காயசித்தி பெற்றவர்கள் எந்நாளும் அழியாமல் இருப்பர்; அங்ஙனம் பெருதவர் அழிவர் என்றும், உடம்பு வேறு உயிர் வேறு என்று அறியாத உலகாயதனைப்போல உடலே உயிர் என்றும், உடம்பு வாழ்தலைத் தான் வாழ்வதாகவும் உடம்பு இறத்தலைத் தான் இறப்பதாகவும் எண்ணியிருந்தார். அவர் கொண்ட பிழைபட்ட கருத்தை அல்லமர் போக்கிய திறம் அறியத்தக்கது.

அல்லமர் கோரக்கரை நோக்கி, "உடம்பே உயிர் என்றால் 'எனது உடம்பு', என்று சொல்வது ஏன்? யான் உடம்பு, யான் கை, யான் கால் என வழங்குவாரின்றி எனது உடம்பு, எனது கை, எனது கால் என வேற்றுமைப் படவே வழங்கலால் அதுவே இவ்வுடம்பின் வேறாய் ஆன்மா உண்டென்பதை அறிவுறுத்தும் அல்லவா? மற்றும் ஆடை, பொன் முதலியவற்றுள் ஒன்றைத் தம்முடையதாகக் (எனது ஆடை, எனது பொன் என்று) கொள்பவர் அதனை யான் (யான் ஆடை, யான் பொன்)

என்று கூறுபவர் உளரோ? இல்லை. ஆதலின் எனது என்பது வேறொன்றைச் சுட்டுதல் வேண்டும். அதுவே உயிர்," என்றார். அதற்குக் கோரக்கர் "அவ்வாறாயின் 'ஒழியும் என் உயிர்' என்று சொல்லுங்கால் இவ்வுயிரை யன்றி வேறு ஓர் உயிருளதோ?" என்று வினவினார். அதற்கு அல்லமர், "உயிர் என்ற பெயர் உயிர் வளிக்கு (பிராண வாயு) இயற் பெயராகும். அஃது ஆன்மாவைக் குறிக்கும் பொழுது ஆகு பெயராகும் என்று இலக்கண நூலார் உரைப்பர். ஆதலின் 'என் உயிர் ஒழியும்' என்ற இடத்து உயிர் என்னுஞ் சொல் உயிர்வளியைக் குறிக்கின்றது, ஆன்மாவைக் குறித்ததன்று,' என்று விளக்கி யருளினார்.

இவ்வாறு அல்லமர் தேகான்மவாதியாக இருந்த கோரக்கருக்கு உடம்பு உயிர் அன்று என்பதைத் தெளிவித்தார். மின்னலைப் போல் விரைவில் தோன்றி யழியும் தசை, நிணம், எலும்பு, தோலாற் போர்த்ததாகிய உடலை உயிர் என்று எண்ணற்க என்று அறிவுறுத்தியது பிறன்கோள் மறுத்தலாகும். உயிர் உடலின் வேறு என்று உணர்த்தியது தன் கோள் நிறுவுதலாகும்.

கோரக்கர் காயசித்திக்குரிய மருந்துகளை யுண்டு உடலைப் பேணியிருந்ததால் அல்லமர் கூறிய உரைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏது கூறினாலும் என் உடல் அழிவுறாது என்று அவர் கொண்டதையே சாதித்தார். அதனைக் காட்சியால் காட்டவே தன் உடலை வெட்டுமாறு அல்லமரிடம் கூறினார். அவ்வாறே அல்லமர் அவர் உடலை வெட்ட உடலில் சிறிதும் ஊறு உண்டாகவில்லை. அதனால் கோரக்கர் தன்னை நித்தன் என்பதை நிரூபிக்க எண்ணினார். அல்லமர் அவர் எதனை அரிய செயலாகக் கருதினாரோ அதனையே தாமும் செய்துகாட்டி அவரைத் தம் வயப்படுத்த எண்ணிய முறை நன்று. இது "மூர்க்னும் முதலையுங் கொண்டது விடா" என்ற முதுமொழிக்கு எடுத்துக் காட்டாயுள்ள சிலரைத் திருத்தும் முறையாகும். அல்லமர் அவ்வாளையே கொடுத்து "உனது வலிமையும்

உன்னைச் சார்ந்தவர் வலிமையுங் கொண்டு என்னைத் தாக்கு" என்றார். கோரக்கரும் அவ் வாளால் அல்லமர் மீது வீசினர். அவ் வாளின் வீச்சே அல்லமருடைய உடலிற் படவில்லை. வாள் வீச்சு வரும்போது அருவமாயினர். இவ் வியத்தகு செயலைக் கண்ட கோரக்கர் செருக்கு அடங்கி ஆட் கொள்ளுமாறு பணிந்தார். இம் முறையில் கோரக்கரை அல்லமர் தம் வயப்படுத்தினர்.

தன் உடலிற் கொண்ட பற்றை விடுத்து அறிய வேண்டுவனவற்றை அருள் புரியுமாறு கோரக்கர் வேண்டி நின்ற பொழுது அல்லமர் "குகேசனை நீ அறிவையெனில் நின் பிறவி யெனும் நோய் தீர்ந்து பொருந்துறுவை பேரின்பம்" என்றார். அதைக்கேட்ட கோரக்கர் "குகேசன் எனும் மொழிப் பொருள் ஏது? அது கூறப்படுவான் யாவன்?" என்று வினவினர். அதற்கு அல்லமர் "குகை யிதயம் அதன்கண் அமர் இறையீச னென்றுபொருள் குறித்துக் கொண்மோ, நிகழனைய குகேசமொழி யுடையன் யான்" என்றார். அப்பொழுது கோரக்கர் அல்லமரை நோக்கித் "தாங்கள் குகேசன் என்ற சொற்குப் பொருளாக இருப்பின் சிவலிங்கத்தைக் கரத்திற்கொண்டிருப்பது ஏன்?" என்று வினவுகின்றார். அதற்கு அல்லமர் "உலகிற் பிறந்தோர் இறைவனோடு இரண்டறக் கலத்தலே அடையும் சிறந்த பயனாகும். அதனைப் பெற மனம் பிறழ்தலின்றிச் சிறந்த சிவலிங்கத்தை உலகமக்கள் கரத்திற் கொண்டு பூசனை செய்வதை அறிவிக்க வேண்டியே எனது உருவமாகும் இச் சிவலிங்கத்தை நீங்காமற் கொண்டுள்ளேன். மற்றும் ஞானசிரியனாக வுள்ளவன் எக்காலத்தும் நற்கருமங்களைப் புரியவேண்டு மென்று வேத முதலிய நூல்கள் கூறுவதால் உடல் உள்ளளவும் வழிபாடு செய்தல் முதலிய நற்காரியங்களை விடுதல் கூடாது. ஆதலின், இவ்வாறு கொண்டுள்ளேன்;" என்று தம் உண்மை நிலையை அறிவித்து அவருடைய ஐயத்தைப் போக்கிய முறை சிறப்புடைத்து. இங்குக் கோரக்கர் வினவிய வினக்களும் அவற்றிற்கு அல்லமர்

கூறிய விடைகளும் பொருத்தமுடையனவாய் விளங்குதலை அறிஞர்கள் காண்பார்களாக.

முனிவரர் கதி

அல்லமர் முனிவர்களுக்கு மெய்ப்பொருள் உணர்த்தியதை இக்கதி யுணர்த்தும்.

அல்லமர் ஸ்ரீசயிலத்தினின்று நீங்கி வடதிசையிலுள்ளார்க்கும் அருள்புரியச் சென்றார். செல்லுங்கால் இடையே தோன்றிய வனத்தில் ஒரு வேடனைக் கண்டார். அவன் கொலைபுரிதலையே தொழிலாகக் கொண்டவன். அவனைக் கண்டதும் அல்லமருடைய திருவுள்ளத்தில் " அன்புடையவனாய்க் கண்ணைத் தோண்டி அப்பும் கண்ணப்பருக்கு வீட்டின்பத்தை அளித்தல் புகழுக்கு ஏற்றதாகாது. கொடியனாய்த் திரியும் இவ் வேடனைத் தீய நெறியினின்றுங் காத்தலே சிறப்புடையதாகும். ஆதலின், இவ்வேடனுக்கு அருள்புரிவேன்" என்றெண்ணி அவன்பால் மன இரக்கங்கொண்டு அருட்கண் வைத்தார். அவ்வாறு அருளால் அவனை நோக்க அதன் பயனாக அவன்,

"மேவுதீ வினையெலாம் விளித்துத் தூயனாய்ப்
பாவியேன் உய்வகை பகர்தி."

என்று அல்லமரை வேண்டிக் கொண்டான். இத்தகு நல்லறிவினை அல்லமருடைய அருட் பார்வை கொடிய வேடன் உள்ளத்தில் உண்டாக்கிற்று. அறிவாசான், நோக்கத்தால் (சக்ஷு தீக்ஷையால்) தன்னை யடைந்த மாணவனது வினையை மாற்றி ஆண்டருளுதலை இது விளக்குகிறது. இதற்கு ஆசிரியர் "கொல்லையில் வித்தினை யிடுவதற்காகக் கொழுப்புகாதவாறு வளர்ந்துள்ள உலர்ந்த புல் அழிவுறும்படி தீயை யிட்டாற்போல மெய்ஞ்ஞானத்தை அவன் உள்ளத்திற் பதிய வைத்தற்காக அவன் வினை நீங்க அருட் பார்வை வைத்தார்" என்று கூறுகிறார்.

அவ் வேடனுக்கு அல்லமதேவர் அறிவுறுத்திய திறமும் நோக்கற்பாலது. "குமர! ஐம்புலன்களாகிய மான் கூட்டம் அருள் என்னும் வலையினின்றுந் தப்பி யோடாதபடி தடுத்து, அறிவென்னும் வேலால் எறிவா யானால் உனக்குத் துன்பமில்லை." (செய்யுள், கூ)

"அறிவை வில்லாகவும் மனத்தை அம்பாகவுங் கொண்டு என்னைக் குறியாக வைத்து எய்வாயானால் விற்போரிற் சிறந்த இராமனும் உன்னைப் பணிவான்." (செய்யுள், க0) என்று அவனுக்கு மெய்ப்பொருளை யுணர்த்தினார்.

அவ்வேடன் காட்டில் வாழும் மான் முதலிய விலங்குகளை வலையிட்டுத் தடுத்து வேலால் எறிந்து கொல்லுந் தொழிலினன். மற்றும் வில்லையும் அம்பையுங் கொண்டு குறிவைத்து எய்து உயிர்களைக் கொன்று வாழ்பவன். இத்தகு வினையினையுடைய அவனுக்கு அவன் அறிந்த முறையிலேயே தத்துவப் பொருளை அல்லமர் விளக்கிய இம்முறை மிகமிகப் போற்றத்தக்க தொன்றும்.

அப்பால் ஒரு வனத்தில் வேள்வி செய்துகொண்டிருந்த முனிவர்களைக் கண்டார் அல்லமதேவர். அவர்கள் மலைபோல் தருப்பைப் புற்களைக் குவித்துக்கொண்டு வேள்வி யியற்றுஞ் செயலில் ஈடுபட்டிருந்தனர். அவர்களை நோக்கி அல்லமர்; "முனிவர்களே! மாயாமலம் சிவஞானத்தாலன்றி வேள்வி முதலியன செய்தலால் நீங்காது. வேள்வி செய்து மாயாமலத்தை நீக்க முயலுதல் சேற்றினால் சேற்றைக் கழுவுதலை யொக்கும். ஞானத்தால் அடையும் சிவபதத்தைக் கருமத்தால் அடையமுயல்வது மழையால் வளர்க்கப்படும் பயிரை நெருப்பால் வளர்க்க எண்ணுதலை யொக்கும். மலைபோல் குவித்த இத் தருப்பைப் புற்களைத் தீயிலிட்டுச் சுடுதலால் பிறவி நீங்காது. ஐம்புலன்களை அறிவாகிய நெருப்பால் சுடுதலால் பிறவி சுடப்படும்" என்று அம்முனிவர்களுக்கு ஏற்ற முறையில் அறிவுறுத்திக் கருமகாண்டிகளாகிய அவர்

களுடைய கொள்கைகளை மறுத்துரைத்தார். இதுவும் பிறன் கோள் மறுத்துத் தன் கோள் நிறுவியதாம்.

**சூனிய சிங்காதன கதி**

ஞான குருவாகிய பிரபுதேவர் வந்தமர்வதற்கு வசவண்ணர் சூனிய சிங்காதனம் அமைத்ததை இக்கதி யுணர்த்தும்.

> "ஒடுக்குமனம் வீட்டுநெறிக் கொருதுணை யாகும்; புறத்து
> நடக்குமனம் நிரயவழி நடப்பதற்குத் துணையாம்."

என்பது அல்லமர் வசவண்ணர்க் குணர்த்திய தத்துவப் பொருள்களின் சுருங்கிய கருத்தாகும். ஆதலின் வசவண்ணர் தம்வயப்படாமல் ஓடுகின்ற மனத்தைப் பிராணவாயுவின் அடக்கத்தால் நிறுத்திப் புறவிடயங் களிற் செல்லாதபடி தம் வசப்படுத்திக்கொண்டு சித்திரத்தை ஒத்திருந்தார். மற்றும் பிரபுதேவர் எந்நாள் வருவார் என்று எதிர்நோக்கியும் இருந்தார். அவரை அறிந்துகொள்வதற்காகவே அவர் அமர்வதற்குரிய ஏழு நிலைகளோடு கூடிய பொன்னாலாகிய சூனிய சிங்காதனம் ஒன்றை அமைத்தார். அதனைச் சூனிய பீடம், அம்பரா சனம், வெளித்தவிசு, ஞானபீடம் என்னும் பெயர்களால் இந்நூல் அறிவிக்கிறது அப்பீடம் பொன், பல நிறத்த மணிகள், பளிங்கு முதலியவற்றைக்கொண்டு செய்யப் பெற்றது. ஏழு நிலைகளையுடையது. அவ்வேழு நிலை களின் மேலாக வெளித் தவிசு ஒன்று உண்டு. அதுவே சூனிய பீடம். அது பளிங்குப் பீடத்துக்கு மேல்நிலையாக உள்ளது. பளிங்கினால் செய்யப்பெற்றிருப்பதால் அந் நிலைக்கண் வந்து பார்ப்பவருடைய உடல் நிழலானது படிந்து அந் நிலையைத் தலையிற் சுமப்பதுபோலத் தோற்றும்.

இச்சூனிய பீடத்தின் உட்கருத்தை,

> "ஆதியா தாரமாதி அடுக்கெனப் பன்னிறத்த
> சோதியேழ் நிலைகள் ஓங்கச் சூனியபீடம்......"

(செய்யுள், சு)

" முதனிலை முதலா மூவிரு நிலையின்
மூலமா முதல ஆதார
இதழவிழ் கமலப் பொகுட்டினுள் நின்ற
இலிங்கமோர் ஆறெென நின்று
நுதன்மிசை இலகு நிட்களம் போல
நுவன்றஏ ழாநிலை யாகும்
அதன்மிசை அமலன் அல்லம தேவன்
அமர்ந்தனன் அமரரும் வியப்ப."
(சூனியசிங்காதனத்தில் இருந்தகதி - செய்யுள், ருஎ)

என்ற பாடல்கள் அறிவிக்கின்றன.

யாக்கையில் நான்கிதழ்களையுடைய மூலாதாரம், ஆறிதழ்களையுடைய சுவாதிட்டானம், பத்து இதழ்களையுடைய மணிபூரகம், பன்னிரண்டிதழ்களையுடைய அநாகதம், பதினாறு இதழ்களையுடைய விசுத்தி, இரண்டிதழ்களையுடைய ஆக்கினை என்னும் ஆறு ஆதார கமலங்கள் உள்ளன. அவற்றில் முறையே ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிரசாதலிங்கம், மகாலிங்கம் எனப் பெயரிய ஆறு இலிங்கங்கள் விளங்குகின்றன. அவற்றிற்கு அப்பால் நெற்றி, சிகை, சிகாந்தமாகிய தானங்களில் முறையே ஆயிரம் இதழ், மூன்றிதழ், ஓரிதழ் களையுடைய பிரமசக்கரம், சிகா சக்கரம், பச்சிமசக்கரம் என்னும் மூன்று சக்கரங்கள் உள்ளன. அவற்றில் முறையே நிட்களலிங்கம், சூனியலிங்கம், நிரஞ்சனலிங்கங்கள் அமர்ந்திலங்குவன.

அல்லமர் சூனிய சிங்காதனத்தில் ஏழாம் நிலையில் நெற்றியில் விளங்கும் நிட்களலிங்கம்போல் அமர்ந்திருந்தார் என்று அப்பாடல் அறிவிக்கின்றது. அதற்கு மேல் நிலையாகவுள்ளது சூனியத்தலமாகும்.

ஆகவே இங்ஙனம் யாக்கையினுள் இறைவன் குடிகொண்டிருத்தலைப் புறத்தே அறிவிப்பதை உட்கருத்தாகக்கொண்டு அமைக்கப்பட்டது இச் சூனிய சிங்காதனம் என அறிக.

இப்பீடத்திற்கு ஒப்பாகச் சொல்லத் தக்கது ஒன்றும் இல்லே. பூசலார் நாயனர் தம் மனத்திஞலேயே சிவபெருமானுக்குத் திருக்கோயில் ஒன்று அமைத்தார். அதனைத்தான் ஒப்பாகக் கூறவேண்டுமேயன்றிக் கைவினையால் உலகோர் செய்த எதனையும் இதனுடன் ஒப்பிட்டுரைத்தல் பொருந்தாது என்று ஆசிரியர் கூறுவது சாலப் பொருந்தும்.

**சூனிய சிங்காதனத்தில் இருந்த கதி**

அல்லமதேவர் சூனிய சிங்காதனத்தில் ஏறி அமர்ந்திருந்ததை இக்கதி யுணர்த்தும்.

அல்லமரது பிரிவை ஆற்ருதிருந்த வசவண்ணருக்கு அவர் வருதலே அறிவிக்கும் நற்குறி தோன்றிற்று. அதனே,

"வலமாடின விழிதோள்அருள் வசவற்குஅதி தூரஞ்
செலும்ஆடவன் வருநாள்விழி இடமாடிய செயல்வாய்
குலமாதுளம் எனவேமகிழ் கொண்டன்பு நிறைந்து
மலமாயைகள் துரக்குஞ்சென்ன வசவசற்கிது புகல்வான்.''
(செய்யுள், ரு)

என்ற செய்யுள் அறிவிக்கின்றது.

வசவண்ணருக்கு வலப்பக்கமுள்ள கண்ணும் தோளும் துடித்தன. அதனேக் கண்டு சேய்மையிற் பிரிந்து சென்ற தலேவன் வருகின்ற நாளில் இடக்கண் துடிக்கப்பெற்ற தலேவியின் உள்ளம் மகிழ்ச்சியுற்ருற்போல வசவண்ணர் உவகைகொண்டார். இத்தகு நற்குறியால் அல்லமர் வருவார் என்று துணிந்தார்.

மற்றும் இப் பாசுரத்தால் ஆண்களுக்கு வலதுகண், வலதுதோள் துடித்தலும் பெண்களுக்கு இடதுகண் துடித்தலும் நல்ல அறிகுறிகள் என்பன பெறப்படும். இந் நூலில் மாயை உற்பத்தி கதியில்,

"மன்னிய மாரன் வலப்புயம் ஆடக்
கன்னிகை மாயை கருப்பம் அடைந்தாள்."
(செய்யுள், உசு)

என்றும், சூனிய சிங்காதனத்திருந்த கதியில்,

"தோள்வலந் துடித்த தின்று
சுடரிலை வேற்புண் ஒன்று
கோள்வலங் கொள்ளுஞ் செம்பொற்
குன்றெனு மார்பிற் காண்பேம்." (செய்யுள், உஉ)

என்றும் கூறுவதால் ஆடவர்க்கு வலதுதோள் துடித்தல் நற்குறியாகவும் பிரபுதேவர் வந்த கதியில்,

"என்னப் பலவு நினைந்துமட
மாயை யிருப்ப இகுளைமார்
மின்னற் கருங்கண் இடனுடைக்
குறிகள் நல்ல விளங்குதலால்." (செய்யுள், ௩0)

என்பதால் பெண்களுக்கு இடதுகண் துடித்தல் நற்குறியாமென்பதையும் அறிதல்கூடும். கம்பரும் தம் காவியத்தில் இந்நிமித்தத்தைப் பல இடங்களில் கூறியுள்ளார் என்பதும் ஈண்டறியத்தக்கது.

வசவண்ணர் பிரபுதேவர் வருவார் என்ற மகிழ்ச்சியால் ஏவலரை நோக்கி,

"உடம்பெனும் வனத்தில் நின்ற
உயிரெனுங் கன்னி தன்னைத்
தொடர்ந்திசை மணத்தாற் சேர்ந்த
துணைவன் அல்லமன் இன்றெய்தும்
அடைந்தருள் கல்யாணத்தை அணிமின்."
(செய்யுள், அ)

என்று கட்டளையிட்டார்.

இச் செய்யுளடிகள் அகப்பொருள் நூலின் உண்மைப் பொருளைப் புலப்படுத்துகின்றன. அகப்பொருள் நூல்கள் ஒரு பொழிலினிடத்து உருவும் திருவும் வாய்ந்த

தலைமகனும் தலைமகளும் எதிர்ப்பட்டுத் தெய்வம் கூட்டு விக்கத் தம்முள் ஒத்த அன்பினராய்க் கூடினர் என்று கூறும். இதற்கு உண்மைப் பொருளாக இன்ப சுகத்தைப் பெறுவது பக்குவான்மா ஆகவும் அச்சுகப்பேற்றை யளிப் பவன் பரம்பொருளாகவும் இருத்தலின் பக்குவான்மா வையும் பரம் பொருளையும் முறையே தலைமகனும் தலை மகளுமாக வைத்துக் கூறப்படுவதாம் என்பர். மற்றும் ஒரு சாரார் சிவமும், ஆன்மாவும் முறையே ஆண்டான், அடிமையாகக் கூறப்படுவதாலும் சான்றோர் பலர் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவுங் கொண்டு பாடிய இலக்கியங்கள் பல உள்ளனவாதலானும் பரம் பொருளும் பக்குவான்மாவும் முறையே தலைமகனும் தலைமகளுமாவர் என்றும் உரைப்பர். ஈண்டுச் சிவப்பிரகாச அடிகளார் "உடம்பாகிய வனத்தில் நின்ற உயிராகிய கன்னியை யாழோர் மணத்தாற் கூடிய தலைவனாகிய அல்லமன்" என்று உருவகப்படுத்திக் கூறுவதால் பக்குவான்மாவைத் தலைவியாகவும் பரம்பொருளைத் தலைவனாகவும் அமைத்துப் பாடும் அகப்பொருள் நூல் களின் உண்மையைப் புலப்படுத்துகின்றார்.

வசவண்ணருடைய ஆணையின்படி ஏவலர் நகரை அலங்கரித்தனர். அவ்வாறு அலங்கரிக்கப்பட்டவற்றுள் ஒன்று நிலைத்தேர். அந் நிலைத்தேர் "இஃது என்னே! சூரியனுடைய இரதமானது எப்பொழுதும் சுற்றிக் கொண்டே இருக்கிறது. நாங்கள் அவ்வாறு சுற்றுவ தில்லை" என்று அதனைப் பார்த்துச் சிரிப்பதுபோலக் கண்ணாடிகளோடு கூடி விளங்குகின்ற நிலைத்தேர்களை வீதிகளில் ஆங்காங்கே நிறுத்தினர். இதனை,

"சோதிதன் னிரதம் என்றுஞ் சுழன்மென நகுதல்போல
வீதியுள் ஆடியோடு விளங்குறு **நிலைத்தேர்** செய்தார்."

என்ற செய்யுளடிகள் அறிவிக்கின்றன. இந் நிலைத்தேர் அழகுக்காக அலங்கரித்து நிறுத்தி வைக்கப்படுவதாம்.

மற்றும் ஒரு நிலைத்தேரினைக் கூறுகின்றார் ஆசிரியர். இங்குக் கூறப்படும் நிலைத்தேர் அரண்மனைகளில் முன்

முகப்பில் தேர்போல் பல மாடங்களுடன் அமைக்கப் படுவதாம். இப்பொழுது தஞ்சை சரபோசி மன்னர் அரண்மனையின் முன்முகப்பாகப் பல அடுக்குகளோடு கூடித் தேர்போல் அமைக்கப்பட்டிருக்கும் இல்லின் உறுப்பே இதற்கு எடுத்துக் காட்டாம். அதில் மாதர்கள் இருந்து அல்லமர் வரவைப் பார்க்கின்றார்கள். அக் காட்சி தேவமகளிர் அல்லமரது வருகையை வசவண்ணருடன் நாமும் சென்று காண்போம் என்று தேவ விமானத்தோடு வந்திருப்பதுபோல் இருக்கின்றதாம். இதனை,

"அல்லம குரவன் றன்னை அருணந்தி யோடு காணச்
செல்லுவம் என்று செம்பொற் சீர்கெழு விமானத் தோடும்
ஒல்லையின் நிலத்தி ழிந்த உம்பர்வாழ் மகளிர் போல
இல்லெனு மருங்குல் மாதர் இருந்தனர் நிலைத்தேர் ஏறி.''
(செய்யுள், கரு)

என்ற பாடல் அறிவித்தல் காண்க.

நகரை அலங்கரித்த சிறப்பினை ஆசிரியர் கூ - கசூ செய்யுள்களில் விளக்கியுரைத்துள்ளார். அப் பாடல்கள் படித்து இன்புறத்தக்கன.

பின்னர் அல்லமரை வரவேற்பதற்காக வசவண்ணர் செல்கின்றார். அவருடன் சென்னவசவேசர், மடிவால மாச்சிதேவர், கின்னரப்பிரமர் மற்றும் பல்திறத்த அடியார்களும் செல்கின்றனர். அவர்களைத் தொடர்ந்து காலாட்படையினரும் சூழ்ந்து செல்கின்றனர். குதிரைப் படை, யானைப் படைகளும் செல்கின்றன. சேனாதிபதிகள் அமைச்சராகிய வசவண்ணர் பக்கத்தே செல்கின்றனர். பல வாத்தியங்கள் முழங்குகின்றன. இவற்றின் சிறப்பை ஆசிரியர் கஅ - ௩௦ செய்யுள்களில் அணிநலம் படக் கூறியுள்ளார். அச் செய்யுள்கள் வரவேற்கச் செல்லும் செலவினைப் படம் பிடித்தாற்போல் நம் அகக்கண் முன் காட்டுகின்றன. அச் செய்யுள்களின் சுவைநலம் அறிந்து இன்புறத் தக்கதாம்.

இவ்வாறு வசவண்ணர் குருபரனை எதிர்கொண்டழைக்கத் தோள்வலம் துடித்த அறிகுறியைக் கண்டு

செல்லுதலைக் கேட்டறிந்த சமணர்கள் விச்சல மன்னனிடம், "தனது வலதுதோள் துடித்ததைக்கொண்டு தன்பால் ஒருவன் வருவான் எனத் துணிந்து கடல்போல் பரந்த படையுடன் செல்லும் இவ் வசவண்ணனை நீ அமைச்சனாகக் கொண்டிருக்கிறாயே! உன்னைப் போல் சிறந்த அறிஞர்கள் இவ்வுலகில் இல்லை!" என்று இகழ்ந்துரைத்தனர். அவ்வாறு உரைத்ததைக் கேட்ட மன்னன் "அடிகேள்! அறிவுமிக்க தண்டநாயகன் என்ன பயன் கருதிச் செய்கின்றானோ? யாம் அறிகிலம்; முடிவுறக் காண்பம்; வருக; நீர் இருமின்," என்று கூறுகின்றான். இவ்வாறு உரைத்ததால் வசவண்ணரிடம் மன்னன் கொண்டிருந்த உறுதிப்பாடும் நன்மதிப்பும் புலனாம்.

வரவேற்கச் சென்றோர் முன்னர்த் தோன்றினார் அல்லமர். ஆனால் அவரை "இவர்தாம்" என்று எவரும் அறியமுடியாதவாறு பல்வேறு வடிவமாகப் பல இடங்களில் காட்சியளித்தார். இவ்வற்புதத் திருவிளையாடல் அல்லமர் எல்லாமாய் அல்லவுமாய் விளங்கும் ஆற்றலுடையவர் என்பதைப் புலப்படுத்துவதாம். அத்தகு திருவிளையாடல் புரிந்த அல்லமரை வசவண்ணரே கண்டார். பிறர் அறிந்திலர். அவ்வாறு அறிந்ததை மண்ணில் மறைந்துள்ள செல்வப் புதையலை அஞ்சனமிடப்பட்ட விழியுடையவனே காண்பான்; அதுபோல அல்லமதேவரை ஞானக் கண்ணுடைய வசவண்ணரே அறிந்தார் என்று ஆசிரியர் கூறுகின்றார். இங்குக் கூறியுள்ள உவமையையே கயிலையில் சிவபெருமான்,

"அழிவரு நிதிய வைப்பை அஞ்சனங் கொண்டு காணும்
விழியுடை யவன்போல் ஞான மெய்க்குர வனைத்தான் கண்டு
கழிமயல் அன்பர் காணக் காட்டுவோன் இவனென் றெம்மை
வழிவழி அடிமை கொள்ளும் வள்ளல்நந் தியைப்பு கழ்ந்து."
(வசவண்ணர் வந்தகதி செய்யுள், ௩௯)

என்று நந்தியைப் புகழ்ந்து கூறிய இடத்து ஆசிரியர் ஆண்டுள்ளார். இவ்வாறு உவமைகளை முன்பின் நோக்கித்

தொடர்பு பொருந்த எடுத்தாளுதல் கவிஞர் திலகர் சிவப்பிரகாச முனிவரிடம் காணும் ஒப்பற்ற புலமைத் திறனும்.

ஆரோகணா கதி

இக் கதியில் வரும் பொருள் முன்னைய கதியுடன் தொடர்புடையது. அல்லமர் சூனிய சிம்மாசனத்தில் அமர்ந்திருத்தலையும் அதனால் நேர்ந்தனவற்றையும் இக் கதி புணர்த்துகிறது.

வசவண்ணருடைய திருமடத்தில் அளவற்ற அடியார்கள் இருந்தனர். அவர்களுடைய இயல்புகளை இக்கதி ஏழாவது செய்யுள் முதலாக எட்டுச் செய்யுள்களில் ஆசிரியர் விளக்குகின்றார். அவற்றின் பொருளை ஈண்டு அறிவாம்.

திருநீற்றினைத் திரிபுண்டரமாக நெற்றியிற் பூசி, உருத்திராக்க கண்டி என்னும் ஆபரணத்தை அணிபவர் சிலர்; பழமையான நான்மறையின் பயனாகவுள்ள ஐந்தெழுத்தை உன்னுபவர் சிலர்; அன்றலர்ந்த மலர்கள், திருமஞ்சனம், சந்தனம், தீபம், நறும்புகை முதலியன கொண்டு ஐம்பொறிகளுமடங்கிய உள்ளத்துடன் சிவபெருமானை வழிபடுபவர் சிலர். இறைவனை வழிபடுவதினும் நூல்களெல்லாம் நுவலும் ஐம்புலன்களையும் அடக்கியாளும் பெரியோர்களுக்குத் தொண்டுபுரிதல் நன்றென்று கருதி அவ்வாறு செய்பவர் சிலர். பூசை செய்வதினும் ஈசனைத் துதித்தல் எண்மடங்கு நன்மை தருவதாகும் என்றெண்ணி ஊசல்போல் அலையும்படியான உள்ளமில்லாதவராய்ப் புலன்களை யடக்கி இறைவனைத் துதிப்பவர் சிலர். மறையில் சிறப்பாகவுள்ள தத்துவமசி என்னும் மகாவாக்கியத்தின் பொருள் அங்க லிங்க அயிக்கமாகும் (அங்கம் என்ற ஆன்மா மலவலியினின்று நீங்கிச் சிவத்துடன் இரண்டறக் கலக்கும் அத்துவிதத் தன்மை) என்று மாணவருக்கு உரைப்பவர் சிலர். பாசம் என்பது

யாது? பசு என்று சொல்லப்படுவது யாது? ஈசன் யார்? இறைவன் எத்தகைய உயிர்களுக்கு மலமாசு நீங்க அருள் புரிவான் என்று ஞானசிரியர்பால் கேட்டறிபவர் சிலர். நாள்தோறும் புறத்தே பூசனை செய்வதினும் மனத்துள் சிவபெருமானை உன்னி மனத்தே சிவம் தங்கியிருக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பவர் சிலர். (இவர்கள் பாவலிங்கிகளாக இருப்பவர்) வெளியே சென்று மீளும் உயிர்வளி நில்லாதாயின் மனம் நில்லாது; மனம் நில்லாதாயின் வீடு அடைதல் முடியாது என்று கருதி யோகமுறையை யாராய்ந்து வாயுவைத் தடுப்பவர் சிலர்.

என்று இவ்வாறு அடியார்களுடைய இயல்புகளைக் கூறுவதால் வசவண்ணருடைய திருமடத்தின் பெருமையையும் அவ் வடியார்களின் சிறப்பையும் அறிதல் கூடும். வசவண்ணருடைய திருமடம சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறியில் ஒழுகுவார் யாவர்க்கும் இருப்பிடமாக விளங்கியதென்பது தெற்றென விளங்கும்.

அல்லமர் ஒருவரையே நோக்கிக் கொண்டிருந்ததால் தம்மை மதியாதிருந்தார் வசவண்ணர் என்று கருதிய அடியார்கள் திருமடத்தில் சமைத்த உணவுகளை உண்ணுமல் வெகுண்டு சென்றனர். அப்பொழுது அல்லமர் "ஒருவன் யான்; சிறு பசி யுடையன்; சிற்றுண விரைவுற இடுக, பின்னர் வேண்டுமாறு அன்புள்ள அடியவர்பாற் செய்க" என்றபொழுது வசவண்ணர் அல்லமர்க்கு அமுது படைத்தார். இட்ட வுணவை யுண்டு அல்லமர் பசி தணியாமல் இருந்ததால் வசவண்ணர் திருமடத்தில் அட்ட உணவுகளை யெல்லாம் இடச்செய்தார். மேலும் செல்வர்களுடைய மனைகளில் சமைத்த உணவுகளையும் கொண்டுவந்து படைக்கச் செய்தார். மற்றும் தானியங்களையும் குவிக்கச் செய்தார். அவைகள் யாவற்றையும் அல்லமர் உண்டார். அத் திருவிளையாடலை ஙங - ருo செய்யுட்களில் ஆசிரியர் அழகுபடக் கூறுகின்ருர். அவற்றை அறிஞர்கள் படித்துச் செய்யுளின்பங் காண்பார்களாக. அவற்றுள் ஒன்று ஈண்டுக் காண்பாம்.

அல்லமருக்கு உண்கலத்தில் இனிய பசுவின்பாலைச் சொரிந்தனர். பல்வகைப் பழங்களையும் இட்டனர். அதனை,

"குளங்கரை யாக அந்தக்
குளத்தினுட் பசுவின் தீம்பால்
விளங்குறும் அமுத வேலை
விடுத்தென விட்டார் சில்லோர்
உளங்கனி மூவர் செய்யுள்
ஒத்தமுக் கனியும் ஏனோர்
வளங்கெழு தொடர்பு போலு
மற்றைய பழமுந் தூர்த்தார்" (செய்யுள், ருசு)

(குளம் - வெல்லம்.)

(கலத்தில் இடப்பட்ட வெல்லம் கரைபோலிருக்க, அதன்கண் பாற்கடலை விடுத்தாற்போல இனிய பசுவின் பாலைச் சிலர் விட்டனர். உள்ளங் கனிந்து சைவசமய குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் அருளிய தேவாரப் பாசுரங்களை யொத்த வாழை, மா, பலா என்ற முக்கனிகளையும் ஏனைய அடியார்கள் அருளிய சொல் வளம், பொருள் வளம் பொருந்திய திருமுறைகளை யொத்த திராக்ஷை, பேரீச்சங் கனி முதலிய மற்றப் பழங்களையும் இட்டு நிரப்பினர்.)

என்று ஆசிரியர் வருணித்துள்ளார். இதன்கண் மூவருடைய தேவாரப் பாசுரங்களை முக்கனிகளுக்கும் ஏனைய அடியார்கள் அருளிய திருமுறைகளைத் திராக்ஷை முதலிய பழங்களுக்கும் ஒப்புமையாகக் கூறுவதால் சிவப்பிரகாச அடிகளாருக்குத் திருமுறைகளிலுள்ள பற்றும் அவர் திருமுறைகளைப் பல்காலும் படித்தறிந்து அனுபவித்த இன்பமும் விளங்கும்.

அல்லமதேவருக்குப் பல்வகைய உணவுப் பொருள்களை வசவண்ணர் படைக்கச் செய்தும் அவர் பசி தணியாதிருத்தலைக் கண்ட சென்னவசவேசர் "உயிருணின் அமைவன்" என்று வசவண்ணரிடம் உரைத்தார்.

அம்மொழி அவருடைய உள்ளத்தைத் தெளிவித்தது. அவ்வாறே வசவண்ணர்,

"பொறிகள் கரணம் பூதங்கள் புலன்கள் மற்றும் பல்வகைய
கறிக ளாக ஆருயிரே கலந்துண் பதமா நீயுண்ணப்
பெறுக திலன்யான்" (செய்யுள், நஉ)

என்று அல்லமருடைய திருவடியில் பணிந்தார். இதன் உட்பொருள் ஐம்பொறிகள், அந்தக்கரணங்கள், புலன்கள், பூதங்கள், உயிர் ஆகிய யாவற்றையும் அல்லமதேவர்பால் செலுத்தினர் என்பதேயாம். இக் கருத்தை "கரண மோடுறு பிராணனு மனத்தொடு கலந்தோன், புரணமாகு சிவமாகுவன் சகமயல் பொன்றி" (இந்திரியாநுக்கிரகத் தலம்) என்று சித்தாந்த சிகாமணி கூறும். பொறிக ளோடு உயிரை மனத்தில் அடக்கி அம் மனத்தைச் சிவனோடு சேர்ப்பவன் சிவயோகி யாவான். ஆதலின் சிவயோகியாகிய வசவண்ணர் இறைவனுகிய அல்லம தேவர்பால் பொறிகள் முதலிய யாவற்றையும் உரிமைப் படுத்தினர் (அர்ப்பித்தார்). அந்நிலையைக் கண்ட அல்லமர்,

"பசியின் வந்தேனலன், பொருட்குப்
படர்காமக்கு வந்திலன் யான்
கசியு நினது மனத்தன்பு
காணவந்தேன் என்று ஏத்தி"

அரனடியார் யாவரும் மகிழ வசவண்ணரை எடுத்து அணைத்துக் கொண்டார்.

பின்னர் அல்லமர் வசவண்ணரை நோக்கி, "நின்னைப் பிரிந்து சென்ற அடியார்களை உணவருந்த வணங்கி அழைத்து வருக," என்றார். அவ்வாறே சென்ற வசவண்ணர் அவ் வடியார்கள் அல்லமருடைய திருமேனி யில் தான் அணிந்த மலர்மாலையும் சந்தனமும் அவர்க ளுடைய மேனியில் விளங்கவும், வயிறுபுடைத்து அல்லமர் உண்ட திருஅமுதின் மணம் வீச ஏப்பமும் விடுத்து முக மலர்ச்சியுடனும் இருக்கக் கண்டார். வசவண்ணர் அவ் வடியார்களுடைய திருவடிகளை வணங்கி, "கடையேன்

செய்த பிழையெல்லாம் உண்டு பொறுமின்; வருக" என்றழைத்தார். அவர்கள், "வசவ! நின் பெருமை சொல்ல எளிதோ? யாங்கள் வயிறுர முன்போல் வாய், கை தொழில் புரியாமல் இன்று உண்டோம். தேவர்கள் உண்ண வேள்வித் தீயில் அவியுணவு இடுதல்போல யாங்கள் எல்லோரும் அருந்த அல்லமதேவருக்கு அருத்தினீர்," என்று கூறினர்.

அல்லமர் உண்ட உணவும் அவர் பூசியதும் புனைந்ததும் பெற்று அடியார்கள் மிகக் களிப்புடன் இருந்தார்கள். இவ் வரலாற்றின் சாரமாக,

"உலகில் ஒருவன் சிவயோகி
யுண்டதம்ம சரா சரமாம்
அலகில் உயிர்க ளெலாம்உண்ட
தாகும் என்ன மறைகூறும்
இலகும் உரையைக் காட்சியான்
இன்றிங் குணர உணர்த்தினன்
கலக வினைகள் தீர்க்கும்அருட்
கண்ணன் திகழ்அல் லமதேவன்"

(உலகில் சிவயோகி ஒருவன் உண்ட உணவு இயங்கியற் பொருள், நிலையியற் பொருள்களாகிய உலகிலுள்ள அளவற்ற உயிர்கள் யாவும உண்டதற்கு ஒப்பாகுமென்று திருமறை கூறும் மொழியை யாவரும் கண்ணுற் காணுமாறு வினைகளைப் போக்கும் அருட்கண்ணினை யுடையவனாகிய அல்லமர் உணர்த்தினர்.)

என்ற இத் திருப்பாசுரம் விளக்குகின்றது.

இக் கருத்தைத் திருமூலர் திருமந்திர மாலையிலுள்ள,

"தண்டறு சிந்தைத் தபோதனர் தாமகிழ்ந்(து)
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்(று)
எண்டிசை நந்தி எடுத்துரைத் தானே"

என்ற திருப்பாசுரமும் கூறுகின்றது.

அல்லமர் இவ்வாறு "ஒருவருண்ண ஒருவர் பசி கெடார்" என்று வழங்கும் உலகமொழி பொய்க்கச்செய்த வியத்தகு செயலால் அல்லமர் எல்லா உயிர்களிடத்தும் நிறைந்து (சருவ வியாபியாக) உள்ளவரென்பது விளங்கும். இந் நூலாசிரியரும்,

"மாறன் அடித்த அடிபட்ட
மன்னும் உயிரின் திறமெல்லாம்
ஈறில் புகழ்க்கங் கணவசவன்
இட்ட அடிசில் உண்டுபசி
யாறி யிருந்த ஆதலினல்
அல்ல மன்பூரணன் என்னக்
கூறு மொழிமெய் மெய்என்று
கூறி யுலகங் களித்ததால்"

[அரிமர்த்தன பாண்டியன் (சிவபெருமான், செம்மனச் செல்வியின் கூலியாளாகப் பிட்டுக்கு மண் சுமந்த நாளில்) பிரம்பால் அடித்த அடிபட்ட நிலைபெற்ற உயிர் வகைகள் யாவும் எல்லையற்ற புகழினையுடைய வசவேசர் இட்ட உணவினை யுண்டு பசி தணிந்திருந்தன. ஆதலினல் அல்லமன் எங்கும் நிறைந்தவனுவன் என்று கூறும் மொழி உண்மை, உண்மை என்றுகூறி உலகோர் களிப்புற்றனர்.]

என்பர். சித்து, சடமாகிய எல்லாவற்றிலும் வியாபித்து "நீங்காப் பொருளாய் உயிர்க்குயிராகி" (அத்துவித வெண்பா, உண்மை - உ) இருத்தல் இறைவனுடைய இயல்பாம். இறைவனே அல்லமராக மக்களுய்ய உலகில் தோன்றி யருளினராதலின் இவ்வியல்பு அல்லமரிடத்தும் விளங்கியதில் வியப்பில்லை யன்றே!

இவ்வண்ணம் ஊண் விளையாடல் புரிந்த அல்லமர் வசவண்ணருக்கு மறைகளிலும் சைவாகமங்களிலும் உணர்த்தும்படியான மெய்ப்பொருளை அறிவிக்கத் திருவுளங் கொண்டார். அவ்வமயம் நந்தி விருப்பும் வெறுப்பும் ஆகிய உலக மயக்கம் நீங்கிப் பிரமத்தைக் காணும் இயல்பு தெரித்தருள் என்றார். அவ்வாறே மயக்கற வகுத்துரைத்தார்.

**இட்டலிங்க கதி, சாதகாங்க கதி, மனோலய கதி, மான்மிய கதி**

பிரபுதேவரின் அருள் விளையாடலை நுவலும் இவ் விழுமிய நூலகத்து அறிவு நூற் பொருள்கள் ஆங்காங்கே உணர்த்தப்படினும் இட்டலிங்க கதி, சாதகாங்க கதி, மனோலய கதி, மான்மிய கதி ஆகியவற்றில் அவை சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் மூன்று கதிகள் வசவண்ணர் விண்ணப்பித்துக் கொள்ள அருட் குரவராகிய அல்லமர் முறையே சிவபத்தி நெறியை விளக்கவும், முத்தியடைவதற்குச் சாதனங்களாகியவற்றை யுணர்த்தவும், மனம் பொறிவழியே செல்லாமல் சிவத்தி னிடத்து நிற்றற்குரிய நெறியை அறிவிக்கவும் அருளியவற்றை உணர்த்துவனவாம். மான்மிய கதி, அல்லமர் உலகில் வசவண்ணர் முதலிய அடியார்களுக்கும் சத்துவ கலை மடந்தையாகிய மாதேவியார்க்கும் வீரசைவ நன்னெறியை உணர்த்தினர் என்று சிவபெருமான் உமை யம்மையார்க்குக் கயிலையில் புகன்றதை அறிவிக்கின்றது. இதில் வீர சைவசமயத்தின் சிறப்புக் கூறப்படுகிறது. இந் நாற்கதிகளும் தத்துவ நூல்களின் சாரமாகவும் இந் நூல் வீட்டுநூல் என்பதைச் செவ்விதின் எடுத்துக் காட்டுவனவாகவும் உள்ளன. இவ் வியைபு நோக்கி ஈண்டு அக்கதிகளை ஒருங்கே ஆராய்தல் பொருத்தமுடைத்தாம்.

இட்டலிங்க கதியில் வசவணர் அல்லமரிடம் "அடியனேன் சிவபத்தி யறிந்தமை, படியில் ஊமன் கனவெனப் பட்டது; முடியுமாறு மொழிந்தருள்" என்று வேண்டிக் கொள்கிறார். வசவண்ணர் சிவானுபவச் செல்வராயிருந்தும் ஒன்றும் அறியாதவர்போல் இவ்வாறு விண்ணப் பித்துக் கொள்ளுதல் அல்லமர்பால் மேன்மேலும் கேட்டுணரும் பெருவிருப்பினரா யிருத்தலையும் தம்மை யணுகி யுள்ள சிவசரணர்கள் அறிவாசான் உரையைக் கேட்டு உள்ளம் தெளிவுறல் வேண்டுமென்ற நற்கருத்துடையார் என்பதையும் புலப்படுத்தும்.

இவ்வண்ணம் வேண்டிக்கொண்ட வசவண்ணரை அல்லமர், "சிவநெறிக் கூட்ட மேவுறு கொள்கையினாய்

நினைக், காட்டு வாருளரோ செங்கதிர்க் கிருள், ஓட்டு சோதியும் உண்டுகொலோ" என்று புகழ்ந்துரைக்கின்றார். இதனால் அவர் அன்பர்களைப் பெருமைப்படுத்தும் பெருந் தகையினரென்பது அறியலாம்.

அல்லமர் வீர சைவசமய நெறியைப் பரப்பவந்த ஞானகுரவராதலின் வசவண்ணர்க்கு அச்சமய நெறியின் உயர்வை "உலகில் உண்டாகும் புல், மரம், புழு, புள், விலங்கு ஆகிய பல பிறவிகளைக் கடந்து மக்கள் பிறப்பை அடைந்தாலும் நன்மரபில் பிறத்தல் அரிது. நன்மரபில் பிறந்தாலும் அறத்தைப் புரிவதற்குரிய இடம், பொருள், ஏவல்களைப் பெற்று அன்பால் அறம்புரிதல் அரிது. அவ்வாறு செய்தாலும் புறச்சமயங்களை விடுத்து ஆகமம் புகலும் நற்சமயங்களைச் சார்தல் அரிது. அவற்றுள்ளும் சைவசமயத்தைச் சேர்தல் அரிது. அங்ஙனம் சேர்ந்தாலும் ஏகலிங்கயிக்யனாதல் (வீர சைவசமய நெறியினாதல்) எளிதில் கிடைக்கப் பெறா," (செய்யுள், க0 - கங) என்று அறிவிக்கின்றார்.

மற்றும் வீர சைவசமய நெறியின் சிறப்பு மான்மிய கதியில் சிவபெருமான் உமைக்குக் கூறும் மாற்றத்திலும் வைத்து விளக்கப்படுகிறது. அது பின் வருமாறு:

"சமையம்எவ் வகையி னுந்தான் சைவமே லாய தென்கொல்?
அமையுநல் வீர சைவம் அதனினும் சிறந்த தென்கொல்?
இமையவர் பரவு முக்கண் எம்பிரான் அருள்செய் என்ன
உமையவள் வினவ வேழம் உரித்தவன் விளம்பும் அன்றே.

உரைக்கும்எச் சமயத் திற்கும் உத்தர பாகம் சைவம்
தரிக்குமச் சைவத் திற்கு(உ) த்தரமென வீர சைவம்
தெரிக்குநற் காமி காதி சிரத்தினில் திகழுங் கண்டாய்
அரிக்குரற் சிலம்ப ரற்றும் அடிமலர்த் தடங்கண் நல்லாய்!

புறந்தரு சமயம் புக்குப் புறமலாச் சமயத் தெய்தி
அறந்திகழ் சைவ முற்றுங்(கு) அதிற்சரி தாதி யாற்றிச்
சிறந்துள வீர சைவஞ் சேர்ந்தபின் வீடு நண்ணும்
நறுந்தளிர் கவற்று மேனி நனைமலர் வல்லி யன்னாய்!

அருமறை முடியும் சீர்சால் ஆகம முடியும் ஒத்துப்
பொருமற மிலாமல் முற்றும் பொருளினை விளங்கக் காட்டித்
தருமுறை யதனுல் வீர சைவமே தலைமைத் தாமிவ்
விருமறு வறுநன் னூலும் இதிற்பிர மாண மாகும்.

ஒன்றெரு விடயந் தன்னில் உறுசுவை நிறைவென் றுக்கி
என்றும்எம் முகத்த ளித்திட்(டு) எம்பிர சாதங் கொண்டு
துன்றுறு கரும முன்னுத் தூய்மைஇவ் வீர சைவத்
தன்றிவே ருருமார்க் கத்தின் அடுக்குமோ வடுக்கண் மாதே!''
(மான்மிய கதி. செய்யுள், கo-கச.)

பின்னர் இட்டலிங்கத்தின் இயல்பினை அல்லமர் விளக்கி யருளினர். அதனை ஆசிரியர் நான்கு (செய்யுள், கரு - கஅ) பாடல்களில் அறிவிக்கின்றுர். அப் பாசுரங்கள் வீரசைவ சடுத்தல சித்தாந்தத்தின் சாரமாகவுள்ளன. சடுத்தலம் = ஆறுநிலை. தலம் = அவசரம், நிலை. அஃதாவது பரசிவமும் ஆன்மாவும் வழிபாட்டினைப பெறுதல், வழிபடுதல் ஆகிய முறையில் ஆறுநிலையினை யடைதல். இவ்வாறு நிலைகளைப் பற்றிய உண்மை முடிபினை அறிவிப்பதே சடுத்தல சித்தாந்தமாகும். இதனை ஈண்டு விரிக்கிற் பெருகும். ஆதலின் சுருங்கக் கூறுவாம்.

உயிர்கள் பருவுடல், நுண்ணுடல், காரண உடல் என்ற முத்தனுக்களைக் கொண்டுள்ளன. அவற்றிற் கேற்பப் பரசிவமானது இட்டலிங்கம், பிராணலிங்கம், பாவலிங்கம் என்ற மூவகைப் பெயர்களைப் பெறும்.

இட்டலிங்க மென்பது தோன்றும் உருவாய், வேண்டாதனவாகிய மல மாயாதி கன்மங்களைப் போக்கி, விரும்புவதாகிய சிவானந்தானுபூதியைக் கொடுத்து, கண்ணுக்குத் தோன்றிக் கொண்டிருப்பது.

பிராணலிங்கம் என்பது தோன்றி, தோன்ரு உருவாய் மனது என்னும் பொருளுக்குத் தோற்றிக் கொண்டிருப்பது.

பாவலிங்கம் என்பது தோன்று உருவாய் அறிவெனும் பொருளுக்குத் தோன்றிக் கொண்டிருக்கும். இவ்வாறு எவ்விதத் திரிபுமில்லாத பரசிவம் ஆன்மாக்களின் நிலைக் கேற்ப இம் மூவகை நிலையில் அருள் புரியும்.

இவ்வாறு முத்தனுவை இடமாகக் கொள்ளுவதால் மூவகைத்தாய இலிங்கம் ஆன்மாவின் வழிபாட்டு நிலையில் அறுவகைப்படும். அவை: ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிரசாதலிங்கம், மகாலிங்கம் என்பன. இவற்றை வழிபடும் ஆன்மாவும் பக்தன், மகேசன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், ஐக்கியன் என்ற பெயர்களைப் பெறும். ஆன்மா ஞான வளர்ச்சியில் பலநிலையை அடைதல் காரணமாக, பரசிவம் ஒன்றே ஆன்மாவுக்கு அருள்புரிய பலநிலையைக் கொள்கின்றது என்பதை உளத்துட் கொள்க.

இவ்வாறுள்ள பரசிவமே இட்டலிங்கம் என்ற பெயரைப் பெறும்.

உலகில் பசுவிற்குண்டான ஒரு நோயைப் போக்க அதன் பாலையே கறந்து அதற்கு அருத்தி அப் பிணியைப் போக்குவர். அதுபோல உயிரை அநாதியே பற்றியுள்ள ஆணவ மலங்கெட ஆவியினிடத்தேயுள்ள அமலனை மாணவனுடைய அகங்கையினிடத்தே எழுந்தருளச் செய்து மீண்டும் ஆவியினிடத்தே தங்குமாறு அறிவாசான் தன் வித்தகத்தால் ஆக்குவன். காகத்தினுடைய இரு விழியிடத்தும் ஒரு மணி திரிதல்போல உயிரின் அகத்தும் கண்காணப் புறத்தும் இட்டலிங்கம் விளங்கும். இஃது ஆசாரலிங்க முதலிய அறுவகைப் பெயர்களைப் பெற்று மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களை இடமாகக் கொண்டு விளங்கும். ஆன்மாவினுடைய வினையைத் தொலைத்து இன்பத்தை அருளும்.

உயிர்க்குயிராய் விளங்கும் இறைவனைப் புறத்தே கண்டு வழிபடும் முறையை இச் சமயம் கற்பிக்கின்றதென்பது இதனால் விளங்கும்.

இட்டலிங்கத்தைக் கரதலத்தில் வைத்து வழிபாடு செய்தால் மட்டும் பயன்பெறுதல் முடியாது. அகத்தும் பொருந்துதல் வேண்டும். இதனைச் சாதகாங்க கதியில்,

"மனமி லிங்க மருவிலை யேல்உடல்
தனில்இ லிங்கம் தரித்தும் இலைஇலை;
எனஇ யம்பும் இணையிலி யாகமம்
நினைவ ரன்கழல் நிற்க நிறுத்தினாய்." (செய்யுள், ரு)

(இணையிலி ஆகமம் = ஒப்பற்றவனாகிய சிவபெருமான் அருளிய ஆகமம்.)

"புறம்பு காண்குவன் புல்லியன் ஈசனை
அறிந்த ஞானி அகமுறக் காண்பனால்."
(செய்யுள், எ)

என்று ஆகமச்சான்று காட்டி வலியுறுத்துகின்றார்.

புறப்பூசனை புரியுங்காலும் இறைவனை அன்புடனும் மன ஒருமையுடனும் வழிபடுதல் வேண்டும். அவ்வாறின்றி நீராட்டிப் பூசனை புரிவதாற் பயனில்லை. அன்பின்றி அபிடேகிக்கும் நீர் சிவபெருமானுடைய முடியில் கொண்டுள்ள கங்கை நீரினும் சிறந்ததோ? என்று வினவுகின்றார். அன்பில்லாத வழிபாடு உயிரற்ற உடலை யொக்கும் என்றுங் கூறுகின்றார்.

அச் செய்யுள் :

ஆசறு மனத்தெழும் அன்பை யன்றியே
பூசனை யுவக்கிலன் புராரி சென்னிமேல்
வீசறு திரையினு மிக்க தோசொலாய்
ஊசல்செய் மனமுடை யொருவன் ஆட்டுநீர்."
(இட்ட. செய்யுள், உ௬)

(ஆசறு - குற்றமற்ற. புராரி - சிவபெருமான். வீசறு திரை-வீசுகின்ற அலையை யுடைய கங்கை.)

"தாவி லாத மனமொடு சார்தரா(து)
ஒவு மாயின் உலகிற் புனலுமொண்

பூவு நாடொறும் போக்குறு பூசனை
ஆவி போக்கிய ஆக நிகர்க்குமால்.''
(சாதகாங்க - செய்யுள், ௬)

(தாவிலாத - நீங்குதலில்லாத. ஆகம் - உடல்.)

மற்றும், தம் கரதலத்தில் எழுந்தருளச் செய்து வழிபடும் இறைவனையன்றிப் பிற தெய்வங்களை வழிபடாத உறுதியும் வேண்டும். அவ்வுறுதியே வீரமாகும். அத்தகு உறுதியின்றிப் பிற தெய்வங்களை வழிபடுபவர் கங்கையில் நீராடுவதை விட்டு உவர் நிறைந்த உப்பங்கழியில் நீராடும் அறிவிலிகளை ஒப்பர் என்றுங் கூறுகின்றார்.

அச் செய்யுள் :

"அங்கையின் அமர்தரும் அரனை விட்டொரு
வெங்கட வுளர்தமை விழைந்து போற்றுவார்
கங்கையை யகன்றுவர்க் கழியின் மூழ்குநர்
தங்களின் வேறலர் தரும மூர்த்தியே.''
(இட்ட - செய்யுள், ௩௰)

(வெங் கடவுளர் - கொடிய தெய்வங்கள். உவர்க் கழி - உவர்நீரையுடைய கடல்.

வீர சைவசமயத்திற் கூறப்பெறும் சதாசாரம், இலிங்காசாரம், சிவாசாரம், கணுசாரம், பிருத்யாசாரம் என்னும் ஐவகைச் சீலங்களில் ஒன்றாகிய இலிங்காசாரம் ஆகும் இது. இலிங்காசாரமாவது அறிவாசான் அருளிய இட்டலிங்கத்தையன்றிப் பிற தெய்வங்களை வழிபடாதிருத்தல் என்பர். இத்தகு உறுதிப்பாடுடைமையே வீர சைவம் என்ற பெயர்க்குக் காரணமாயிற்றெனை அறிக.

மற்றும், அடியார்கள், யாவரையும் சிவமாகவே எண்ணுதல் வேண்டும். பிறப்பாலுண்டாகும் சாதி வேறுபாட்டைக் கருதுதல் கூடாது. அங்ஙனம் கருதியவன் அடியாரது அகங்கையில் அமர்ந்துள்ள சிவத்துக்கும் உயர்வு தாழ்வு கருதியவனாவான். அத் தீவினையின் பயனால் அரிய நரகத்தில் ஆழ்வன் என்றும் கூறுகின்றார்.

அச் செய்யுள் :

"சங்கமந் தனக்கொரு சாதி யுன்னினன்
அங்கையின் அமர்தரும் அரற்கும் உன்னினன்
சங்கர னொடுசரந் தம்மில் வேறெனும்
அங்கவன் அறிவரும் அளற்ற முங்குவான்."

(இட்ட - செய்யுள், கக)

(சரம் - சரலிங்கம்; அடியார். அளறு - நரகம்.)

இது சிவாசாரம் எனப்படும். சிவாசாரமாவது சிவ சரணர்கள் யாவரையும் சிவமாகப் பாவித்தல். குலம், தொழில் முதலியவற்றால் மேலானவர் என்றும் கீழானவர் என்றும் வேறுபாடு கருதாதிருத்தல் என்பர். இக் கொள் கைக்குப் புத்துயிர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் அளித் தவர் வசவண்ணர். வசவபுராணத்துள் பல்வேறு வகைப் பட்ட குலத்திற் பிறந்தோரையும் அவர்களுடைய செயற் கருஞ்செயலால் சிவசரணர்களாக வைத்துக் கூறியிருத்தல் ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கது.

மற்றும், சதாசாரம் (நல்லொழுக்கம்) உடையவராக வும் இருத்தல் வேண்டும். சதாசாரமாவது அறவழியால் ஈட்டிய பொருளை குரு, லிங்க, சங்கமர்களுக்குக் கொடுத் தல், ஏழைகளைப் புரத்தல், பிறர்க்குத் துன்பம் செய்யா திருத்தல், பிறர் பொருளை அபகரியாதிருத்தல், தனக்கு வரும் இன்ப துன்பங்கள்போல் யாவர்க்கும் உண்டென எண்ணுதல் ஆம். இத்தகு சதாசாரம் உடையவனுக்கு இறைவன் அருள் புரிவன். இதற்கு மாறாகப் பொய், களவு, முதலிய தீய இயல்புகளுடையவர்களது செங்கையிலிருப்பி னும் இறைவன் சேயனே யாவன் என்பதை,

"வெங்கொலை களவுபொய் வெகுளி ஆசையென்(று)
இங்கிவை யொடுமரீஇ யிருக்கின் றார்தமக்(கு)
அங்கையில் நெல்லிபோல் அவிர்ச டைப்பிரான்
செங்கையில் இருப்பினும் சேயன் சேயனே."

(இட்ட - செய்யுள், கக)

என்ற பாடலில் வலியுறுத்திக் கூறுதல் காண்க.

சாதகாங்க கதியில் முத்தியடைவதற்கு ஏது, அந்தக் கரண சுத்தியாகும்; அந்தக்கரணசுத்தி சிவபூசை முதலிய நற்கருமங்களைச் செய்தலால் உண்டாகும்; நற்கருமங் களைச் செய்யுங்காலத்து மனம் அவற்றின்கண் ஒன்று படுதல் வேண்டும்; அவ்வாறின்றிப் பிற இடங்களிற் செல்லும் மனத்தை யடக்குதல் வேண்டும்; அவ்வாறு அடக்கப் பெற்றவன் சிவத்துடன் இரண்டற்று விளங்கு வன் என்னும் பொருள்கள் விவரிக்கப்படுகின்றன. இவற்றை ஆசிரியர் திட்பமாகவும் நுட்பமாகவும் சுருங்கச் சொல்லல் என்னும் அழகு தோன்றவும் எடுத்துரைக் கின்றார்.

மனமே ஒருவன் பிறவா நெறியடைவதற்கும் மீண்டும் மீண்டும் உலகில் பிறந்துழல்வதற்கும், உலகில் அடையும் பல நன்மைகளுக்கும் துறவு நெறிக்கும் நற்காரியங்களைச் செய்து விண்ணுலகு அடைவதற்கும் தீய காரியங்களைச் செய்து நரக உலகை யடைவதற்கும் காரணமாகும் என்பதை நன்கு விளக்குகின்றார்.

அச் செய்யுள்கள் :

"மனமொ ருத்தன் வசப்படு மேல்அவன்
பினைவ ருத்தும் பிறப்பை யடைந்திடான்
மனமொ ருத்தன் வசப்படா தோடுமேல்
நனிபி றப்பிடை நாளுஞ் சுழலுமே."
(சாதகாங்க - செய்யுள், கம)

"அறவி னைக்கும் அரும்பொருள் இன்பொடு
பெறுவ தற்கும் பெருங்கல்வி கற்றுயர்
விறலி னுக்குநல் வீரந் தனக்குமொண்
துறவி னுக்குந் துணைமனம் என்பவே." ( ,, கக)

"நல்ல செய்து நரரை யுயர்த்தவும்
அல்ல செய்தங் களற்றிடை யாழ்ப்பவும்
வல்ல திந்த மனமல(து) ஐயனே!
இல்லை யென்ன இயம்பு மறையெலாம்." ( ,, கஉ)

மனம் ஒருவழிப்படாமல் விடயங்களிற் பரந்து செல்லும் மனத்தை அடக்கும் வழியையும் எடுத்துரைக்கின்றார். அது :

..........................................

..........................................

"நீடுமா மன நிற்க நிறுத்துறில்
ஓடும் வாயுவை யுள்ளுற ஈர்ப்பரால்." (செய்யுள், கஎ)

"அடுத்த நாடிகள் ஆங்கொரு மூன்றினும்
விடுத்தும் வாங்கியு மேவ நிறுத்தியுந்
தடுத்தும் வாயுவைத் தன்வச மாக்கில்வாய்
மடுத்தி டாது மனமும் வசப்படும்." - ( ,, கஅ)

(புலன்கள் மேல் விரைந்து ஓடும் இயல்புடைய மனத்தைத் தடைப்படுத்தக் கருதினால் ஓடாநின்ற வாயுவை உள்ளே இழுப்பர். இடைகலை, பிங்கலை, சுழுமுனையாகிய மூன்று நாடிகளிலும் வாயுவை விடுத்தும் வாங்கியும் அசைவற நிறுத்தியும் அதுபோனபடி போகவொட்டாமல் தடுத்தும் ஒருவன் தன் வசப்படுத்திக் கொண்டால் அவனுக்கு மனம் வசப்பட்டு நிற்கும்.)

இவ்வாறு மனமும் உயிர்வளியும் ஒருவனுக்கு அடங்கி விடுமாயின் அவன் சிவமயமாவன். மனத்தையடக்குவதற்கும் சிவமயமாவதற்கும் மனமே துணையாகும். இதனை மனோலய கதியில்,

"மனத்தை யடக்க மனந்துணை யாகும்
பினைத்துணை யின்றது பெற்றனன் ஆயின்
தனிச்சிவ மேயொரு தானென வாழ்வன்
நினைத்து மறந்து நிலத்துழ லானே." (செய்யுள், ௯)

என்று கூறுதலுங் காண்க.

பிறப்பறுதலே வீடடைதலாகும். பிறப்பிற்கு யான் எனது என்னும் அகங்கார மமகாரமே மூலகாரணமாகும், இதனை,

"யானென தென்ப திருந்திடு காறு
ஞானமு ருன்." (செய்யுள், ரு)

"இருவினை தாம்வரும் யானென லாலவ்
விருவினை யால்வரும் இன்பொடு துன்பம்
இருவினை யான்எனல் இன்றெனில் இல்லை
இருவினை யில்லெனில் இல்லை பிறப்பே." ( ,, அ)

என்று சொற் சுருக்கமாகவும் எளிதாகவும் விளங்கவைத் திருத்தல் காண்க.

மற்றும், "ஆசையறுதல் வீட்டின்பம் நேரேயடையக் காரணமாம்" என்றும், "ஆசையறுவோன் சிவனுதல் திண்ணம்" என்றும், யான் "வானமல்லேன் வளியல் லேன் அழல்நீர் அல்லேன் மண்ணல்லேன், ஞானமல்லேன் வினையல்லேன்" என்று கண்டு, நானே சிவம் என்றெண் ணிச் சோகம்பாவனையில் மனத்தை நிறுத்தி விடயங்களைத் துறவாது துறந்தவன் சிவயோகி யாவான் என்றும், அவன் அடியை வாழ்த்தி வணங்காத தேவர் முனிவர் இல்லை என்று மறைகள் முழங்காநின்றன என்றும் வீடுபேற்றிற்குரிய நெறிகளை இக்கதிகள் விளக்குகின்றன.

---

## கக. இலக்கண நூலாட்சி

நுண்மாண் நுழைபுலமிக்க சான்றோர்கள் தம் உள்ளக் கருத்தைக் காலம் வாய்த்தபோது செய்யுள்களாகவும் நூல்களாகவும் வெளியிட்டனர். அவை யாப்பமைதியும் ஓசை நயமும் சொற்பொருட் சுவையும் பொருந்தப் பெற்று, பேச்சு நடையினும் சிறந்து கற்போர் உள்ளத்தைக் கவரும் அழகு பெற்று விளங்கின. அவ் வழகியல்புகளே இலக்கணக் கூறுபாடுகளாகப் பின்னாளில் உருப்பெற்றன. அவற்றின் தொகுப்புக்களையே நாம் இப்பொழுது இலக்கண நூல்களாகப் பிரித்துக் காண்கின்றோம். இலக்கண அமைதிகள் இலக்கிய நூல்களில் ஒன்றுபட்டுள்ளனவே யாயினும் இலக்கண நூல்களைக் கல்லாமல் இலக்கிய நூல்களை மட்டுங் கற்றோர் சிறந்த மொழிப்புலமை யுடையோராதல் அரிது. இதனைச் சிவப்பிரகாச அடிகளாரே,

"எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம்." (நன்னெறி)

என்று அறிவித்துள்ளார். இத்தகு இலக்கண நூல்களில் புலமை பெறுதல் கூர்த்த மதியினர்க்கே சாலும். அடிகளார் தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கணப் பெரு நூல்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த சீரியபுலமைச் செல்வராதலின் அந் நூல்களிலுள்ள இலக்கணக் கருத்துக்கள் அவரியற்றிய நூல்களில் உவமையணி முதலாகிய அணிநலம்படக் கூறவும் வந்து ஆங்காங்கே முன் வந்து உதவுகின்றன. அங்ஙனம் இந் நூலில் ஆண்டுள்ள இலக்கண நூலாட்சியை இனிக் காண்போம்.

### 1. வினாவெதிர் வினாதல்

நன்னூலார் விடையிறுத்தல் எட்டுவிதமாம் என்பர். அவற்றுள் வினா எதிர் வினாதல் என்பது ஒன்று. அஃதாவது ஒருவன் மற்றொருவனைப் பார்த்து "நீ உண்ணாயோ?"

என்று வினவியபொழுது "உண்ணேனே?" என்று கூறுவானாயின், அதற்கு விடையாக "உண்பன்" என்னும் பொருளைத் தருகிறது. இங்ஙனம் கூறுதல் வினாவிற்கு நேரே விடை தருவதாக இல்லாவிடினும் ஒருவாற்றான் அச்சொல் விடைப் பொருளைத் தருகின்றது. ஆதலின், வினாவிற்கு எதிர் வினா வினவுதலையும் விடை பயத்தலில் ஒன்றாக வைத்து உரைத்துள்ளனர். தொல்காப்பியரும் "வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே" என்றார் சொல்லதிகாரத்தில். இவ் விலக்கண அமைதியை அடிகளார் ஓரிடத்தில் அமைத்துக் கூறுகின்றார்.

மதுகை நாதனைப் பூசனைபுரிய மாதர் குழாத்துடன் சிவிகையிலேறிச் செல்கின்றாள் மாயை. உடன் செல்லும் மங்கையர்கள் மிக்க அழகுடையவர்கள். அவர்களைக் கட்டிளங்காளையர் காண்கின்றனர். அவர்கள் ஒருவருக்கொருவர் செல்லும் மாதர்களுடைய அழகைப் பற்றிப் பேசிக்கொள்கின்றார்கள். ஒருவர் "இங்குக் கூட்டமாகச் செல்லும் மாதர்களுள் யார் அழகால் சிறப்புற்றிருப்பவர்?" என்று ஒருவரை வினவுகின்றார். அவர் தம்மை வினவினவர்க்கு "வாழை, மா, பலா ஆகிய முக்கனிகளில் சுவை முதிர்ந்துள்ளது எக்கனி? என்று எதிர் வினவுகின்றார். இவ் வினாவானது சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்ற அழகுக்கு இடனாய் இயைந்த பொருள்களை யெல்லாம் தன்னுள் அடக்கிக்காட்டி எவ்வளவு பொருத்தமாகவும் திறமையாகவும் அமைந்து இருக்கிறது பாருங்கள்!

வாழை, மா, பலா என்ற முக்கனியும் மிக்க சுவை யுடையனவே. அவை ஒன்றிற்கு ஒன்று சுவையில் தாழ்வுடையன வாகா. அவ்வாறே இம் மகளிர் யாவரும் வனப்பில் ஒருவருக்கொருவர் தாழ்வுடையரல்லர். யாவரும் அழகு நிரம்பியவர்; அழகில் ஒத்த தன்மையுடையவர் என்ற விடையை அவ் வெதிர்வினா அளிக்கின்றது. இதில் வினாவிற்குக் கூறிய எதிர் வினாவில் விடை கொள்ளக் கிடக்கின்றது. வினா எதிர் வினாதல் என்பதை விளக்க இஃது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இலங்குகிறதன்றோ?

அச் செய்யுள் :

" இக்குழூ மகளிருள் யார்வ னப்பினல்
மிக்கவள் எனத்தமை வினவி ஞர்எதிர்
முக்கனி களுட்சுவை முதிர்ச்சி பெற்றுள(து)
எக்கனி அதனைநீர் இயம்புவீர் என்பார்."

(மாயை பூசைகதி. செய்யுள், ௩௬)

(குழூ - கூட்டம். வனப்பினல் - அழகால். இயம்புவீர் - கூறுவீராக.)

## 2. மங்கல மரபு

தமிழ்மக்கள் தம் பண்பில், ஒழுக்கத்தில் மட்டுமன்றிப் பேசும் சொற்களிலும் நாகரிகத்தைக் காட்டுபவர். ஆதலின், பேசும்பொழுது மங்கல மில்லாததை யொழித்து மங்கலமுடைய சொற்களையே ஆளுவர். இவ்வாறு ஆளுதலை மங்கல மரபு என்பர் இலக்கண நூலார். இதற்கு எடுத்துக்காட்டாக [1] "செத்தாரைத் துஞ்சினு ரென்றும், ஓலையைத் திருமுக மென்றும், காராட்டை வெள்ளாடென்றும், இடுகாட்டை நன்காடு" என்றும் வழங்குவதைக் காட்டுவர். இங்குக் காராட்டை வெள்ளாடு என்று கூறுதலை நோக்குவோம். உண்மையில் கரிய ஆடாக உள்ளதை வெள்ளாடு என்று உலகோர் வழங்கி வருகின்றனர். கருமை அமங்கலத்தின் அடையாளம்; வெண்மை மங்கலத்தின் அறிகுறி; ஆதலின், அச்சொல்லை மாற்றி மங்கல மொழியால் வெள்யாடு என்று கூறுகின்றனர். இவ் வழக்குத் தொன்றுதொட்டு வருவது. இவ்வாறு வழங்கும் மங்கல மரபினைத் தம் கற்பனைக்கு உதவியாகக் கொள்ளுகின்றார் அடிகளார். அதனை நோக்குவோம்.

மாயை அல்லமனைக் கண்டு அவனுடைய பேரழகில் ஈடுபட்டு விரக நோயுற்றாள். காமமுற்றார்க்குத் திங்களின் நிலவு துன்பந்தரும். ஆதலின், நிலவைக் காலும் திங்களைப் பார்த்து,

---

1. நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை.

" வெண்ணிறமுடைய சந்திரனே! தேவர்களும் அசுரர்களும் கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது கொடிய நஞ்சு உண்டாயிற்று. அந் நஞ்சின்வேகம் தாங்க முடியாமல் விண்ணோர் சிவபெருமானிடம் சரண் புகுந்தனர். சிவபெருமான் விண்ணோரைக் காக்க அந்நஞ்சை அருந்தித் தன் கண்டத்தில் தங்க வைத்தார். நஞ்சின் கொடுமையையும் கருதாமல் தன் உடலுள் கொள்ளத்தக்க பேராற்றல் வாய்ந்த சிவபெருமான் நின்னைத் தனது புறவுறுப்பாக வுள்ள சடையின்கண் தங்கவே வைத்துள்ளார். ஏனெனில், நீ நஞ்சினும் கொடுமையுடையை என்று எண்ணித் துணிந்தே அவ்வாறு அவர் வைத்துள்ளார். உன்னை உலகோர் மேன்மேல் வளர்கின்ற அமுத கிரணங்களை யுடையவன் என்று கூறுகின்றனர். அவ்வாறு கூறுதல் இவ் வுலகமக்கள் கருமையாகவுள்ள ஆட்டை வெள்யாடு என்று சொல்வதுபோல மங்கல மரபிற் கூறுகின்றனரே யன்றி உண்மையிலன்று." (சந்திரன் அமுதகிரண முடையவனல்லன்; நஞ்சினும் கொடியவன் என்றபடி) என்று பழித்துரைக்கின்றாள்.

அச் செய்யுள் :

" அங்க மதில்நஞ் சிருத்திஞேன்
அங்கம் அல்லா அவிர்சடைமேல்
தங்க நினைவைத் திட்டதுநின்
கொடுமை கருதித் தான்அன்றே?
பொங்கும் அமுத கலையென்ன
நின்னைப் புகறல் வெண்திங்காள்!
இங்கு மனிதர் காராட்டை
வெள்ளா டென்ப தொக்குமால்"

(பிரபுதேவர் வந்த கதி, செய். ௧௯)

ஈண்டு அங்கம் என்றது அகத்துறுப்பாகிய கண்டத்தைக் குறிக்கும். சடை, சிவபெருமானுடைய அங்கத்துள் ஒன்றாயினும் அது புறத்துறுப்பா யிருப்பதால் திங்களால் சடைக்கு ஏதேனும் ஊறு உண்டாமாயினும் அது தன்னைத்

தாக்காதென்று கருதியே அவ்வாறு அணிந்துள்ளார் என்ற கருத்துப்படக் கூறியுள்ளார்.

இச் செய்யுளில் இலக்கண நூலின் உரையாசிரியர்கள் தகுதி வழக்குள் ஒன்ருகிய மங்கல மரபிற்குக் காட்டும் "காராட்டை வெள்ளாடு என்றல்" என்ற தொடரை அடிகளார் ஆண்டு கவிக்கு இன்பமூட்டுதல் காண்க.

## 3. புணர்ச்சி விதியை உவமைப்படுத்தல்

கவிஞர்கள் தாம் எடுத்துக் கூறும் பொருளை விளக்க உவமையை உதவியாகக் கொள்வர். அவ்வாறு உரைக்கும் உவமை, பொருளுடன் பொதுத்தன்மையில் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றில் ஒத்திருக்கும். நம் அடிகளாரோ இலக்கண நூல் விதியையும் உவமைப்படுத்தி நம் உள்ளத்தை உவப்புறச் செய்கின்ருர். இலக்கண நூல்களிலுள்ள நூற்பாக்களில் பொதிந்துள்ள நுண்ணிய கருத்தைக் கூர்த்த மதியினரே அறிதல் கூடும். அத்தகு நூற்பாப் பொருளை உவமைப்படுத்திக் கூறும் அருந்திறல் உடையார் நம் கவிஞர் பெருமான் எனில் அவரது இலக்கண நூற் புலமையை என்னென்று புகழ்வது! தமிழ் நூல்களில் அடிகளாரே இலக்கண நூற் ருெடர்புடைய உவமைகளை முதன்முதலில் கையாண்டவர். பின்னர் கச்சியப்ப முனிவர் முதலிய புலவர்கள் இந் நெறியைத் தம் நூல்களில் ஆண்டுள்ளனர்.

இங்கு அடிகளார் ஒரு புணர்ச்சி விதியின் பொருளை உவமையாக ஆளுதலை நோக்குவோம்.

திருநந்தி தேவர் வசவண்ணராக உலகில் தோன்றினுர். வசவண்ணரைப் பார்க்கும் அறிஞர்கள் அவரை ஒரு மனிதராக இருப்பினும் சிவபிரான் உகந்த திருநந்தி தேவராகவே கருதினர். இதுவே உவமேயப் பொருள். இதற்கு இலக்கண நூலிலுள்ள புணர்ச்சிவிதி யொன்றை உவமைப்படுத்தி விளக்குகின்ருர்.

தனிக் குற்றெழுத்தைச் சார்ந்து வரும் லகர, ளகரங்களுள் ஒன்று நிலைமொழியின் கடைசியில் நிற்ப, வருமொழி முதலில் தகர எழுத்துடைய சொல் புணர்ந்து அல்வழிச் சந்தியாக முடியுமாயின், அந் நிலைமொழி யீற்றில் நின்ற லகர, ளகரங்கள் ஓர் ஆய்த எழுத்தாக மாறும். வருமொழி முதலில் நின்ற தகரம் லகர, ளகரங்களோடு புணரும் போது அடையும் திரிபுப்படியே றகர, டகரங்களாக மாறும். இப் புணர்ச்சி விதியை,

"குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே"
(நன்னூல், சூத்திரம், உ௨அ)

என்னும் நன்னூற் சூத்திரம் அறிவிக்கும். இதற்கு உதாரணமாக,

கல் + தீது = கஃறீது. முள் + தீது = முஃடீது.

என்று காட்டுவர். இவற்றில் லகர, ளகரங்கள் ஆய்தமாகத் திரிந்திருத்தலைக் காண்க.

ஈண்டு அடிகளார் மேற்கூறிய உவமேயத்துடன் இப் புணர்ச்சி விதியை எங்ஙனம் பொருத்துகின்றார் என்பதைப் பார்ப்போம்.

புணர்ச்சியில் ஒரு மெய்யெழுத்து மற்றொரு மெய்யாகத் திரிதல் உண்டு. நிலைமொழியிலுள்ள மகரத்துடன் ககரம் வந்து சேரின், மகரம் ஙகரமாகத் திரியும். மகரத்துடன் சகரம் புணரின், மகரம் ஞகரமாகத் திரியும். இங்ஙனமின்றி முதலெழுத்துக்களில் ஒன்றாகிய லகர மெய், சார்பெழுத்தாகிய ஆய்தமாக மாறுபடுதலை நோக்குவோர் இஃது இயற்கையாக வந்த ஆய்தமோ? புணர்ச்சியால் வந்ததோ? என நுட்பமாக ஆராய்ந்து லகரமே இவ்வாறாயிற்று; ஆயினும் இது நிலைமொழி வருமொழிகளை வேறு வேறாகப் பிரித்துப் பார்க்குங்கால் தன் மெய் காட்டுமே யன்றி இப்பொழுதுள்ள ஆய்த எழுத்தைக் காட்டாதென்று நிச்சயிப்பர் இலக்கணப் புலமையுடையோர்.

அவ்வாறே கடவுள் தன்மையுடைய நந்தியம்பெருமான் ஒரு மக்கட் பிறவியில் (வசவண்ணராக) அவதரித்துள்ளார் என்றாலும் ஊன்றி ஆராயுங்கால் அவர் நந்தியே தவிர வேறு மனிதருள் ஒருவரல்லர் என்பது தெற்றென விளங்கும். "ளமுன் கசப வயவொன் றும்மே" (நன்னூல், சூத்திரம், கசள) என்பது மயக்க விதிச் சூத்திரம் ஆதலின் அல்வழிச் சந்தியால் தகரத்தை முன்னருடைய வருமொழி புணர்க்கப்படும் பொழுது மயக்க விதியின்மையால் லகரம் ஆய்தமாக மாறும். அதுபோல் சிவபிரானுடைய ஆணையால் நிலவுலகிலுள்ள மக்கட்கு அருள் புரிய நேர்ந்ததால் தமக்குரிய கடவுள் வடிவை நீக்கித் தமக்கியல்பல்லாத மானிடச் சட்டை தாங்கிப் பிறந்தார் என்ற ஒப்புமை கொள்ள வைத்துள்ளார்.

அச் செய்யுள் :

"குறில்வழி லகரந் தனிநிலை யாயுங்
கூடிய தகரமுன் எழுந்தென்(று)
அறிகுறி வடிவந் திரிதல்போல் நந்தி
அடல்விடை மெய்திரிந் துறினு
நறுமலர் விழியிற் கண்டவ ரெல்லா
நந்தியே என்றுள மகிழ்ந்தார்
பெறுதவ முயன்ற அன்னையும் பிதாவும்
பெறும்உவ கையினையார் உரைப்பார்''

(அக்க. உற்பத்தி. செய். உஅ)

இச் செய்யுளின்கண் நிலைமொழியீற்றிலுள்ள லகரத்தைப் பூர்வ நந்தியம்பெருமானுக்கும், அஃது ஆய்தமாக மாறியதை நந்தி வசவண்ணராக மாறியதற்கும் உவமானமாகக் கூறியுள்ளதை யறிக. அடிகளார் ஓர் இலக்கண விதியை உவமைப்படுத்தி நம் உள்ளத்திற்குப் பெரு விருந்தளிக்கும் திறனை நோக்குக.

## 4. சிறுபொழுது ஐந்து

கொக்கிதேவர் வைத்திருந்த நந்தவனத்தின் வளத்தை,

"சிறுபொழு தைந்தினுந் திரிவி லாதபேர்
அறுபொழு தினுமிதழ் அவிழ்ந்து தேன்சொரி
நறுமலர் நிறையும்அந் நந்த னத்தினைப்
பெறின்மக பதிவளம் பெறவு வந்திடார்"

என்று அடிகளார் வருணித்துள்ளார். இச் செய்யுளில் "சிறுபொழு தைந்தினும்" என்று கூறுவதால் அடிகளார் ஒருநாளிற்குரிய சிறுபொழுது ஐந்து என்ற கருத்துடையவரென்பது விளங்கும். தொல்காப்பிய இலக்கணப் பெரு நூலிற்கு உரைகண்ட இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் சிறுபொழுது மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு (கதிரவன் சாயுங்காலம்) என ஆறு கூறினர். இவ் வுரையாசிரியர்கள் சிவப்பிரகாச அடிகளாரின் காலத்திற்கு முற்பட்டவரே யாவர். நம்பியகப்பொருள் நூலாசிரியர்,

"மாலை யாமம் வைகறை யெற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்"

என்ற நூற்பாவில் மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல் எனச் சிறுபொழுது ஐந்து என்று கூறுவர். சிவப்பிரகாச அடிகளார் "சிறுபொழு தைந்து" என்று தொகையாகக் கூறினரேயன்றி அவை இவை என விவரித்திலர்.

இவருக்குப் பிற்காலத்தில் விளங்கிய மாதவச் சிவஞான முனிவர் தமது தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியில் சிறுபொழுது ஐந்து என்று கூறித் தம் கூற்றிற்கு "காலையும் பகலும் கையறு மாலையும், ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப் பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்" என்னுங் குறுந்தொகைப் பாட்டையும் சான்றாகக் காட்டினர். இவ்வாறு சிறுபொழுதைப் பற்றிப் புலவர்கள் கொண்டுள்ள இருவகைப்பட்ட கருத்துக்களில் சிவப்பிரகாச அடிகளார் ஐவகைச் சிறுபொழுதினைக் கொண்ட கொள்கையுடையரென்பது துணிவாம்.

## 5. நிரையசையை உவமைப்படுத்தல்

அல்லமதேவர் சித்தராமர்க்கு வீட்டுநெறியை யருளினர். பின்னர் தாம் கூறிய இலக்கணத்திற்கு இலக்கியமாக வசவண்ணரைக் காட்டத் திருவுளங் கொண்டார். ஆதலின், தன்னுடன் சித்தராமரை அழைத்துக்கொண்டு கல்யாணபுரத்திற்குச் செல்கின்றார். அங்ஙனம் செல்லுதலைக் குறிலும் நெடிலும் சேர்ந்து வரும் நிரையசைபோல் உளது என்னும் ஒப்புமையால் விளக்குகின்றார். ஈண்டு ஒப்புமை யாக்கப்படுவது நிரையசை இரு குறில்கள் சேர்ந்து நிரையசையாக வருதலும் உண்டு. அதனை இங்கு உவமையாகக் கூருமல் குறிலும் நெடிலும் சேர்ந்து வரும் நிரையசையையே உவமானமாகக் கூறியுள்ளார். குறிலிணையை உவமானமாகக் கூறின் அல்லமரும் சித்தராமரும் ஒத்த தன்மையர் என்று கொள்ளப்பெறும். ஆதலின், அதனை விலக்கக் குறிலும் நெடிலும் சேர்ந்துவரும் நிரையசையையே உவமானமாகக் கொண்டார். அவற்றுள் குறிலை அல்லம தேவர்க்கும் நெடிலைச் சித்தராமர்க்கும் உவமானமாகக் கொள்ளுதல் வேண்டும். குறிலினது விகாரமே நெடிலாதலானும், குறில் நெட்டெழுத்தினும் தலைமை பெற்றது ஆதலானும், நெடிலினும் குறில் காலத்தால் முற்பட்டது ஆதலானும் குறிலை யடுத்தே நெடில் வந்து நிரையசையாவதனுலும் குறிலை அல்லமதேவர்க்கும், குறிலைச் சார்ந்துவரும் நெடிலை அல்லமதேவரை யடுத்துச் செல்லும் சித்தராமர்க்கும் உவமானமாகக் கொள்ளுதல் பொருத்தமாதல் அறிக சிலர் மாத்திரை யொன்றையே கருதி நெடிலை அல்லம தேவர்க்கும், குறிலைச் சித்தராமர்க்கும் ஒப்புமை காட்டுவர்; அது பொருந்தாது.

அச் செய்யுள் :

"அடிய வர்க்கெளி யானெனும் அவனெம தகத்தில்
குடியி ருக்குமவ் விராமனை யுடன்கொடு குறிலோர்
நெடிலை டுத்தநன் னிரையென அங்ககர் நீங்கிக்
கொடிம திற்கலி யாணமா நகர்வழிக் கொண்டான்."

(வசவண்ணர் கதி. செய்யுள், ௬)

இருவரும் சேர்ந்து வழிக்கொள்வதற்குக் கூற வேறு பல உவமைகள் இருப்பினும் அவற்றையெல்லாம் கூருமல் யாப்பிலக்கணத்திற் பயின்று வரும் நிரையசையில் ஒரு வகையை உவமைப்படுத்திக் கூறியுள்ள மாட்சியைக் காண்க.

## 6. ஆகுபெயர்

அல்லமதேவர் கோரக்கருக்கு மெய்ப்பொருளை விளக்குமிடத்து "உயிர் என்ற பெயரானது இயங்குகின்ற காற்றுக்கு இயற்பெயராகும். அதற்கு வேருகவுள்ள ஆன்மாவிற்கு (உயிர் என்ற அப் பெயரானது) ஆகு பெயராக வரும் என்று இலக்கணம் உணர்ந்தவர் உரைப்பர்" என்றருளுகின்ருர்.

அச் செய்யுள் :

"உயிரெ னும்பெயர் இயங்குகாற் கியற்பெயர் உரைப்பின்
அயலு றுந்தனக் கப்பெயர் ஆகுபே ராமென்(று)
இயலு ணர்ந்தவர் இயம்புவர் என்றெமக் கிறைவன்
மயல றும்படி யுணர்ந்திஃ துரைத்தனன் மன்னே."
(கோரக்கர் கதி. செய்யுள், ௩அ)

காற்றின் இயற் பெயராகிய உயிர் என்பது விட்ட ஆகுபெயராக ஆன்மாவைக் குறிப்பதாம். "உயிரென்ப காற்றே சீவன்" என்று நிகண்டு கூறுவதும் ஈண்டு அறியத்தக்கதாம்.

## கஉ. தருக்க நூலாட்சி

கலைச் செல்வராகிய சிவப்பிரகாச அடிகளார் வடமொழித் தருக்க நூல்களை நன்கு கற்றுணர்ந்தவராதலின், இந் நூலில் ஆங்காங்கே தருக்க நூற் கருத்துக்களும் விரவிக் காணப்படுகின்றன. இனி அவற்றை ஆராய்ந்துணர்வோம்.

### 1. கடபடாம் நியாயம்

அரசிளங் குமரியாகிய மாலையை மகளிர் அலங்கரித்தனர். அவர்களுள் ஒருத்தி மாயைக்கு இரத்தினக் கோவை சூழ்ந்த கரையையுடைய பட்டாடையை உடுத்தினாள். அதன் ஒரு பக்கமாகிய முன்றானையை அவளுடைய நகிலின்மீது அழகு பெறும்படியாக அணிந்தாள். அந் நகிலுடன் கூடிய ஆடையைத் தருக்க நூற் புலவர்கள் கண்டனர்; கண்ட அந்நாளிலிருந்தே அவர்கள் கடபடாம் என்ற நியாயத்தைக் கூறி வருகின்றனர் என்று ஒரு கற்பனையைக் கற்பிக்கின்றார்.

அச் செய்யுள் :

"விலைவ ரம்பறி யாமணிக் கோவைசூழ் விளிம்பு
கலைய ணிந்தொரு தலைமுலை மேல்அலங் கரித்தாள்
முலையொ டுந்துகில் கண்டநாள் முதற்றொடர்ந் தன்றே
இலகு றுங்கலை வல்லவர் கடபடாம் என்றல்."

(மாயை பூசை கதி. செய்யுள், ௬)

(விலை வரம்பறியா - விலை இவ்வளவு என்று மதித்து அறியப்படாத. ஒரு தலை - ஒரு பக்கம்; முன்றானை. கலை - ஆடை. கடம் - குடம். படாம் - ஆடை.)

தருக்க நூலிற் பல இடங்களில் மண்ணாற் செய்த கடமும், நூலாற் செய்த படமும் (துணியும்) ஒன்றின் ஒன்றபாவம் முதலியவற்றிற்குப் பிரசித்தமாகக் காட்டப்படுதலின் கடபடநியாயம் என வழங்கப்பெறும்.

தருக்க நூலார் திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம் என்ற பதார்த்தம் ஏழு என்பர். அவற்றுள் அபாவம் என்பது ஒன்று. அபாவம், முன்னபாவம், அழிவுபாட்டபாவம், முழுதும் அபாவம், ஒன்றினொன்றபாவம் என நால்வகைப்படும். ஒன்றின் ஒன்றபாவம் என்பதற்கு ஒன்றன்கண் ஒன்றனது இல்லாமை என்பது பொருளாம். அபாவம் - இன்மை. இதற்கு உதாரணமாகக் "குடம் ஆடை யன்று" என்பதைக் காட்டுவர். ஆடையில் குடத்தன்மையில்லை என்பது இதன் பொருளாம்.

இவ்வாறு கடம் என்ற சொல்லையும் படம் என்ற சொல்லையும் சேர்த்துக் கடபடாம் என்னும் நியாயமாகவுரைத்தல் மாயையினுடைய குடம் போன்ற நகிலின்மீது இடப்பட்ட துகிலைக்கண்ட அக்காலத்திலிருந்தே போலும்! என்று தற்குறிப்பேற்றமாக வருணித்துரைக்கின்றார் அடிகளார்.

## மனம் அணுவளவிற்று

மனம், அணு பரிமாணமுடையது என்பர் தருக்க நூலார். இதனை மமகாரன், தான் அரிதில் பெற்ற மகவாகிய மாயைக்குச் செய்த சிறப்பினை அறிவிக்குமிடத்து அமைத்துக் கூறுகின்றார் அடிகளார். அது வருமாறு :

" காந்தம் இரும்பை இழுக்குந் தன்மையுடையது ; அதுபோல மாயையாகிய அக் குழந்தையின் மேனி யழகு அரசனுடைய கட் பார்வையைத் தன்பால் ஈர்த்தது. அம் மகவை நோக்கி நோக்கி மன்னன் களிப்புற்றான். மற்றும் அக் குழவியினிடத்துப் பெரு விருப்பங் கொண்டான். அவன் கொண்ட ஆசை எல்லையற்றது ; கடல்போல் பரந்தது. அத்தகு விருப்பத்திற்கு நிலைக்களமாகவுள்ளது அவனுடைய உள்ளம். மனம் ஓர் அணுவாக வுள்ளது என்று தருக்க நூலார் கூறுவர். இத்துணைப் பெரிய

ஆசைக்கடலைக் கொண்டுள்ள மனத்தை ஓர் அணுவளவு என்று கூறுதல் பொருந்துமா? அங்ஙனம் கூறுதல் நியாயமாகாது என்று கூறும்படி அவனுடைய உள்ளத்தில் ஆசைப் பெருங்கடலை உண்டாக்கிய அம் மகவைக் கண்டு களிப்புற்று மன்னன் மாயை என்ற பெயரை யிட்டழைத்தான்; மற்றும் பல சிறப்புக்களையும் செய்தான்."

அச் செய்யுள் :

"காந்தம் வலியும் இரும்புபோல்
 கண்கள் தன்னை யுறப்பிணித்து
நேர்ந்த மனமோர் அணுவென்னல்
 நியாயம் அன்றென் றம்மனத்தில்
போந்த ஆசைப் பெருங்கடலைப்
 புகட்டு மகளைக் கண்டுவந்து
வேந்தன் மாயை எனும் நாமம்
 விளம்பிச் சிறப்புப் பலசெய்தான்."

(மாயை யுற்பத்தி கதி. செய்யுள், சுகு)

(பிணித்து - அகப்படுத்திக் கொண்டு. வலியும் - இழுக்கப் படுகின்ற.)

## 2. அநுமானப் பிரமாணம், 3. அருத்தாபத்தி

அநுமானப் பிரமாணமும் அருத்தாபத்தியும் ஒரு செய்யுளில் அமையக் கூறுகின்றார் அடிகளார்.

ஒரு பொருளின் உண்மையை அளவிட்டு அறிவதற்குக் கருவியாயுள்ளவை அளவைகள். அவை எட்டு வகைப்படும். அவை: பிரத்தியட்சம், அநுமானம், உவமானம், ஆகமம், அருத்தாபத்தி, அபாவம், ஐதிகம், சம்பவம் என்பன. இவற்றுள் அநுமான அளவை என்பது குறிகளான் உய்த்துணர்வது. அஃதாவது புகையைக் கண்டு நெருப்புண்டென்று அறிவது போல்வதாம். இவ்வாறு வரும் அநுமான வாக்கியம் ஐவகை யுறுப்புக்களை

யுடையது. அவை : பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபநயம், நிகமனம் என்பன. "இம்மலை நெருப்புடைத்து, புகையுடைமையால், அடுக்களை போல" என வரும் வாக்கியத்தில் அநுமானப் பிரமாணத்திற்குரிய பிரதிஞ்ஞை, ஏது, திருட்டாந்தங்கள் முறையே அமைந்திருக்கின்றன. இவ்வாறு "மாயை இடையை யுடையவளே யாதல் வேண்டும், நகில் இருத்தலான், மற்றைய மாதர்களுடைய நகிலைத் தாங்கியிருத்தற்கு இடை யமைந்திருக்க யாம் காண்பதுபோல" என்று அநுமிதித்து அறிவதற்குரிய நுண்ணிய இடையையுடையாள் என மாயையை வருணிக்கின்றார்.

இதனை விளக்கும் செய்யுளடிகள் :

"மாயை யிடையை யுளள்,முலையான்,
மற்றை மாதர் போலென்று
தூய மதிஞர் அனுமிதித்துச்
சொல்லு மருங்குல் தோகைதான்."
(பிரபுதேவர் வந்தகதி, செய். ௬எ)

என்பன.

இவற்றுள் "மாயை இடையை யுளள்" என்பது பிரதிஞ்ஞை ; "முலையான்" என்பது ஏது ; "மற்றை மாதர் போல்" என்பது உதாரணம். இதன்கண் அநுமான அளவையின் இலக்கணம் அமைந்திருத்தல் காண்க.

அடுத்து வரும் அருத்தாபத்தியைப் பார்ப்போம்.

மாயையின் உடல் வேறுபாட்டைக் கண்டு வினவிய சகலை என்னும் தோழிக்கு விலாசி என்பாள், "இனி யான் மறைக்கத்தக்கது யாதுளது? இன்று வந்த அல்லமனுகிய ஒப்பற்ற தலைவனுடைய பேரழகென்னும் மதுவை யுண்டு தரியாமல் உள்ளம் அழிந்தாள்" என்றுரைத்தாள். அவ்வாறு சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த மாயை, அவ் வுரையை வெறுக்காமல் புன்னகை புரிந்து முகங் கவிழ்ந்து இருந்தாள். அவ்வாறு வாளா இருத்தலைக்

கண்டு, இவள் அல்லமன்பால் காமவேட்கையுடையாள் என்று அம் மாதர்கள் அருத்தாபத்தியினால் உணர்ந்து கொண்டார்களாம். இதனை,

"வாயில் இளவெண் ணகைதோன்ற
வாளா இருப்பக் கண்டுமயல்
ஆயின் உடையள் எனமாதர்
அறிந்தார் அருந்தா பந்தியினால்."
(பிரபுதேவர் வந்தகதி, செய். ௬௭)

என்ற அடிகள் விளக்குவன.

அருத்தாபத்தியாவது "இன்னபடி யில்லாவிட்டால் இன்னபடி கூடாது" என்ற வாய்பாடு தோன்ற வெளிப் படையாக அன்றிச் சொல்லின் குறிப்பால் பொருள் தோன்றுவது என்பர். இதற்கு உதாரணமாகப் "பகலுண்ணான் பருத்திருப்பான் என்ற இடத்து இரவில் ஒளித்து உண்பான் என உணர்வது" என்பதைக் காட்டுவர். அவ்வாறே மாயையானவள் தோழியர் பேசு வதில் வெறுப்பின்றிப் புன்னகையுடனும் நாணத்துடனும் கேட்டுக் கொண்டிருந்தாள்; ஆதலின், அக் குறிப்பால் அல்லமனிடம் விருப்புடையாள் என்பதை யறிந்தார்கள். அவ்வாறு அறிந்தது அருத்தாபத்தி என்னும் அளவையாலாகும்.

அடிகளார் இவ் வீரடிகளில் அருந்தாபந்தி என்னும் அளவையை அமைத்துக் கூறியுள்ள அருந்திறனைக் காண்க.

## 4. நெருப்பு வெண்மை

நெருப்பினது நிறம் வெண்மை என்று தருக்கநூலார் கூறுவதை மாயை விரகநோயால் சந்திரனை நிந்தித்து உரைக்கும் உரையில் வைத்து அறிவிக்கின்றார். அது வருமாறு :

"பொதிய மலையிற் றோன்றிய நல்ல சந்தனக் கட்டையை இழைத்துச் சேர்த்த சந்தனக் குழம்பை யான்

மேனியிற் பூசியுள்ளேன். அஃது உனது வெய்ய கதிரால் காய்ந்து பொரிந்து போய்விட்டது. யான் படுத்திருக்கும் படுக்கையில் பரப்பப்பெற்ற மலர்களும் எரிந்து போயின. யான் விரும்பிச் சூடியுள்ள மலர்களும் கருகிப்போயின ; இவ்வாறுருகும்படி நெருப்பை வீசிக்கொண்டு வானிற் றோன்றிய வெண்ணிறச் சந்திரனே ! உலகோர் காணும்படி வெப்பமிகுந்த கொடிய நெருப்புச் செந்நிற முடையதாக ஒளியை வீசுகிறது. அவ்வாறிருந்தும் தருக்க நூலார் 'நெருப்பு வெண்ணிற முடையது' என்று கூறுகின்றார்கள். அவர்கள் அவ்வாறு உரைத்தல் உனது இயல்பை ஆராய்ந்த காரணத்தால் அல்லவா ?'' என்று மாயை திங்களைப் பழித்துரைத்தாள்.

அச் செய்யுள் :

"உருப்ப மிகுவன் றழல்சிவப்புற்
றுலகர் காண ஒளிதரவு
நெருப்பு வெண்மை யென்பதுநன்
னியாயர் நின்னைக் குறித்தன்றோ !
பொருப்பு நறுஞ்சந் தனச்சேறு
புலர்ந்து பொரியப் பூவணையும்
விருப்ப மலரும் கொளுந்தஅழல்
வீசி எழுந்த வெண்டிங்காள் !"

(பிரபுதேவர் வந்தகதி, செய். ௬0)

(பொருப்பு - பொதிய மலை. உருப்பமிகும் - வெப்பமிகும்.)

# கரு. சோதிட நூலாட்சி

## 1

இந் நூலில் சோதிட நூலாட்சி பெற்றுள்ள ஈரிடங்கள் காணப்படுகின்றன. அவற்றைக் காண்போம்.

மாயை பெதும்பைப் பருவங் கடந்தாள். அவளது பேரழகைக் கண்ட முனிவர்களும் தம் ஒழுக்க நிலையி லிருந்து தளர்வுற்றனர். தான் வெற்றி யடைவதற்குரிய நற்காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த மன்மதன், இந் நாள் வரையில் தனக்குப் பகைவராயிருந்த முனிவர் களை மாயையின் துணையால் வெல்லக் கருதினன். அவன் மாயையின் முகமாகிய சந்திரனது முழுப்பார்வையும், செந் நிறம் பொருந்திய வாயினது வலிமையும், அழகிய சிங்கத் தின் இடுப்புப் போன்ற இடையினை அடுத்திருப்பதாகிய அரவின் படம் போன்ற அல்குலினது வலிமையும் ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு முனிவர்களாகிய பகைவர்களை வெல்லக் கரும்புச்சிலையில் மலரம்புகளைத் தொடுத்தான்.

இவ்வாறு வருணிக்கப்படுகின்ற மன்மதன் செயலில் அரசர் கோட்சார பலன் பார்த்துப் போர்க்குச் செல்லுதலை அடைமொழி யொப்புமை ஆற்றலால் புலப்படுத்துகின்றார்.

ஓர் அரசன் தன் பகைவர்களை வென்று வாகை சூட வேண்டின், தன் சென்ம இலக்கினத்திற்குத் தக்கவாறு கோட்சார பலம் பார்த்துப் புறப்படுவான். அவ்வாறே மீனத்தைக் கொடியாகவுடைய (மீன லக்கினத்தையுடைய) மன்மதனும் கன்னியிலிருக்கிற சந்திரனுடைய [1]முழுப் பார்வையும் செவ்வாய் பலமும் சிங்கத்திலே யிருக்கிற இராகு வலியுமாகிய கோட்சாரபலன் பார்த்துப் போர் செய்யத் தொடங்கினனம்.

---

1. ஒவ்வொரு கோளும் தனக்கு ஏழாமிடத்தைப் பார்க்கும். அது முழுப்பார்வை.

மீன இலக்கினத்தில் பிறந்த ஒருவனுக்குச் சத்துருத் தானமாகிய [1]ஆறும் இடத்தில் (சிங்கத்தில்) இராகு இருந் தால் பகைவரை வெல்வான். சந்திரனும் செவ்வாயும் கூடுதல் அதற்குச் சிறந்த வலியுடைமையாகும் என்று சோதிட நூலார் கூறுவர்.

இவற்றை அறிவிக்கும் செய்யுள் :

[2]" இந்தக் கன்னி மதிமுழுநோக்
கெய்திச் செவ்வாய் வலியடைந்து
சந்தச் சிங்கந் தனையடுத்த
தக்க அரவின் வலிசார்ந்து
முந்தைக் கொடிமீ னத்தலைவன்
முனிவ ராகும் பகைவெல்லக்
கந்தப் பகழி பலவேழக்
கருப்புச் சிலையில் தொடுத்தனனால்."

(மாயையினுற்பத்தி கதி, செய். ரு அ)

---

1. ஆறில் பாபி யிருப்பதும் அல்லது இராகு இருப்பதும் பகைவரை அழிப்பதற்கு நன்று.

2. பொருள் : முந்தைக் கொடி மீனத்தலைவன் - முதன்மை பெற்ற கொடியாகிய மீனையுடைய மன்மதன். (முதன்மையான கொடியையுடைய மீனத்தை இலக்கினமாகக் கொண்ட தலைவன்.)

இந்தக் கன்னி மதிமுழு நோக்கு எய்தி - இத்தகைய மாயையினுடைய மதிமுழு நோக்கை (முகப்பார்வை)த் துணையாகக் கொண்டு (கன்னி இராசியிலுள்ள சந்திரனின் முழுப் பார்வையும் பெற்று.)

செவ்வாய் வலி யடைந்து - அவளது சிவந்த அதரங்கள் தரும் ஆசையையும் உபபல மாகக் கொண்டு (போர்க்காரகனை செவ்வா யின் வலிமை யடையப்பெற்று.)

சந்தச் சிங்கந் தனையடுத்த தக்க அரவின் வலி சார்ந்து - அழகிய சிங்க இடை போன்ற இடையைச் சார்ந்த பாம்பின் படம் போன்ற நிதம்பத்தின் வேட்கையையும் தனக்குறு துணையாகக் கொண்டு, (சிங்க இராசியை

மீனம்

| | | | |
|---|---|---|---|
| இலக்கினம் 1 | 2 | 3 | 4 |
| | இராசி | | 5 |
| | | | இராகு 6 |
| | | | சந்திரன் 7 |

சிங்கம்

கன்னி

2

தோழி ஒருத்தி மாயையினுடைய கரத்தில் மாணிக்கக் கற்கள் பதித்த பொற்கடகத்தை அணிந்தாள். அவ்வணி, வளையல்கள் கழன்றுவிடாதபடி தடுத்தற்காக முன்னர் அணியப்படுவதாகும். அவ்வாறு மாயையினுடைய கரம் இம்மணிக் கடகத்தை அணிந்திருப்பது வியக்கத்தக்க அழகுடையதா யிருக்கிறதே! என்று கண்டோர் "கன்னியத்தம் வந்தினமணி கற்கடகத்தில், மன்னி யுற்றதற் புதம்" என்றனர். இத்தொடரைக் கேட்ட சோதிட நூற் புலவர்கள் "கன்னி இராசிக்குரிய அத்த நட்சத்திரம் கற்கடக இராசியில் வந்து பொருந்துவது என்றுமில்லாத புதுமைத்தே!" என்று இறும்பூதுற்றனராம். இதனை அறிவிக்கும் செய்யுள் :

---

யடுத்த இராகு என்ற கோளின் வலிமையையும் சாரப்பெற்று.)

வேழக் கருப்புச் சிலையில் - (இத்தகு நற்காலத்தில்) தனது கரும்புச் சிலையில்.

கந்தப் பகழி தொடுத்தனன் - மலரம்புகளைத் தொடுத்தான்.

"கன்னி யத்தம்வந் தினமணி கற்கட கத்தின்
மன்னி யுற்றதுஅற் புதமென வளைபல காக்க,
வின்னு தற்கருங் கண்மட மாதுகை விளங்க,
பொன்னின் நற்கட கம்புனைந் தனள்ஒரு பூவை."
(மாயை பூசை கதி, செய். ௩௯)

(ஒரு பூவை, வளைபல காக்கவும், கை விளங்கவும், கடகம் புனைந்தனள் என்க. வில் நுதல் கருங்கண் மடமாது - மாயை.)

**மேற்கண்ட செய்யுள் தொடரில் அமைந்துள்ள சிலேடைப் பொருள் :**

கன்னி அத்தம் வந்து - மாயை யாகிய கன்னிகையின் கைகள் வந்து [1](கன்னி இராசியிலுள்ள அத்தமாகிய நட்சத்திரம் தன் இராசியை விட்டு வெளியே வந்து.)

இனம் மணி கற்கடகத்தில் மன்னி உற்றது அற்புதம் என - சாதியான மாணிக்கக் கற்கள் பதித்த கங்கணத்தினுள் பொருந்தியிருப்பது வியக்கத்தக்க அழகாயுள்ளது என,

(கூட்டமான மாணிக்கக் கற்கள் போன்ற புனர்பூசம், பூசம், ஆயில்யம் என்னும் நட்சத்திரங்களைப் பெற்றிருக்கும் கடக இராசியில் வந்து என்றுமில்லாத நிலைபெற்றிருப்பது புதுமை என்று சொல்லும்படி (விளங்கப் பூவை புனைந்தனள்.)

---

1. உத்திரத்து முக்காலும் அஸ்தம் முழுமையும் சித்திரை முதல் இரண்டு காலும் கன்னிராசிக் குரியன.

## ௧௪. இந்நூலில் ஆட்சிபெற்றுள்ள பழமொழிகள்

உலகில் வழங்கிவரும் பழமொழிகளைக் காவியங்களில் ஆசிரியர்கள் தம் கூற்றிலும் காப்பிய மாந்தர்களது கருத்துக்களிலும் புகுத்தி ஆள்வதிலும், பொருளை விளக்க உவமையாகக் கொள்வதிலும் ஓர் இனிமை தோன்றுகின்றது. அங்ஙனம் இந்நூலில் ஆளப்பெற்றுள்ள பழமொழிகள் பல. அவற்றைக் காண்க.

| வரிசை எண் | கதியின் பெயர் | செய்யுள் எண் | பழமொழிகள் | ஆளப்பெற்ற செய்யுளடிகள் |
|---|---|---|---|---|
| 1. | துதிகதி | 1 | முடவனுக்குக்கொம்புத்தேன் கிடைத்தாற் போலும். | "பூவாய் நெடுங்கோட் டுறுபசுந் தேன்கைகான் முடங்கு பொறியி லிதன், நாவாய் ஒழுகிற்றென." |
| 2. | கைலாசகதி | 60 | ஓர் அற்ப எறும்பு கடலை வற்ற உண்பேன் என்று ஆற்றல் கூறுவதுபோலும். | "......வேலை சுவறவுண் டிடுவ லென்று, புல்லிய எறும்பொன் ருற்றல் புகல்வது போல அன்றே." |
| 3. | மாயையி னுற்பத்தி கதி | 39 | விளக்கைக் காண இருளை விட்டாற் போல. | "...விளக்கைக் காண்பான், பயிலிரு ளினைவி டுத்த பரிசென விடுத் தாள் அன்றே." |
| 4. | ,, | 40 | கருட மந்திரத்தால் விடம் நீங்குதல் போல. | "மாரண விடங்கலந்த மயக்கம் அல்லமனென் றிட்ட, பேரணி கலுழன் றன்னை நினைந்திடிற் பெயரும் அன்றே." |
| | கோரக்கர் கதி | 62 | ,, | "பொன்றலுறு விடங்கலுழன் றனை நினைப்பப் போதல் போல்." |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | மாயையினுற்பத்தி கதி | 45 | காந்தத்தால் இழுக்கப்படும் இரும்புபோல. | "காந்தம் வலியும் இரும்புபோல்." |
| | கொக்கிதேவர் கதி | 23 | ,, | "காந்தங் கண்ட இரும்புபோல்." |
| 6. | மாயையினுற்பத்தி கதி | 71 | கங்கையை அடைவது கொக்கன்று அன்னமே. | "...கூன்கொக் கன்றுவான், கங்கையை யடைவது கடவுள் அன்னமே." |
| 7. | மாயை பூசை கதி | 17 | யானைக்கு மணி கட்டிறைற் போல. | "கறைய டிக்களி யானையின் வரவினைக் கண்டு, மறுகி னுற்றவர் இரிதர மணிமருங் கிடல்போல்." |
| 8. | ,, | 32 | யானையுண்ட விளங்கனி போல. | "கரிநுகர் வெள்ளிலங் கனியை யொத்தனர்." |
| | பிரபுதேவர் வந்த கதி | 45 | ,, | "நின்னை எதிர்ந்தளவே கரியுண் விளவின் நிறையழிந்தாள்." |
| 9. | ,, | 32 | இறங்கு துறையில் நீத்தாயிருந்தாற்போல. | "இறங்கு துறையில் நீத்தாயிற் றென்ன." |
| 10. | ,, | 65 | சிங்கத்திற்குத் தவளையூண் இட்டாற் போல. | "...தேரையூண், வென்றி மடங்கற் கிடுதல் போல்." |
| 11. | ,, | 81 | வேலியில்லாத பயிர்போல. | "வளைதரு வேலியில் பயிர்போல்." |
| 12. | விமலை கதி | 13 | ஓட மருந்துண்டு உறங்குதல் போல. | "ஓடுற மருந்தயின் றுறங்கல் போல்." |
| 13. | ,, | 24 | தவத்திற்கொருவர் படிப்பிற் கிருவர். | "வேருமொருவன் உடனிருப்பும் வேண்டா தவத்திற்கு." |
| 14. | மாயை கோலாகல கதி | 19 | அறிவில்லாதவனுக்குச் சொல்பவன் அறிவில்லாதவனாவான். | "அறிவிலர்க் கறிவிப் பார்தாம் அறிவில ராவர்." |

| வரிசை எண் | கதியின் பெயர் | செய்யுள் எண் | பழமொழிகள். | ஆளப்பெற்ற செய்யுளடிகள் |
|---|---|---|---|---|
| 15. | ,, | 36 | நீரின் ஆழத்தைக் கோலாற் காண்பதுபோல். | "நீர்நிலை கோலாற் காணு நீர்மை போல்." |
| 16. | ,, | 45 | பத்துக்குமேல் வைத்திருத்தல் பாவம். | "மகள்தனை அந்தோ ஆண்டு, பத்தின்மேல் வைத்திருத்தல் பாவமென் றிகழ்ந்தார் கண்டோர்." |
| 17. | ,, | 61 | ஏறவிட்டு ஏணியை வாங்குதல். | "என்னை ஏறவிட் டேணியை வாங்கினை யென்றாள்." |
| 18. | ,, | 70 | பசிக்குச் சோறிட்டால் பசிபோக்கும் மருந்து உதவுவேன். | "...பசிக்கனமிடிற்பசிநோய், தீருமா மருந் துதவுவன் என்பவர் சீர்போல்." |
| 19. | ,, | 73 | கடுவை விதைத்துக் கரும்பாக்க லாகாது. | [1] "முன்பினைக் கடுவிதைத்துக் கரும்பாக, வேண்டிமிக முயன்று நெஞ்சில் துன்பராய்த் திரியுமவர்போல் என்றான்." |
| 20. | ,, | 74 | கரை வந்த கப்பல் கவிழ்ந்த மாலுமி போல். | "கரைகுறுக வந்தகலங் கவிழ்ந்த நாய்கன் போல." |
| 21. | ,, | 76 | கனவிலுண்ட உணவு குறையுமா? | "கனவினுகர் வுறுமுணவு குறையுமோ?" |
| 22. | வசவண்ணர் வந்த கதி | 2 | பஞ்ச காலத்தில் கடன் வாங்கியவன் பொருளை யிழந்தாற் போல. | "தீங்கு காணுஞ் சிறுவிலை நாட் கடன் வாங்கும் ஓர்பொருள் போக்கும் வறிஞர்போல்." |
| 23. | வசவண்ணர் வந்த கதி | 31 | மூக்கில்லாதவன் முன் கண்ணுடி காட்டினற்போல. | "மூக்கிலி முகத்தின் முன்னர் முகுரங் காட்டுதல் போன்ம்." |

| | | | | |
|---|---|---|---|---|
| 24. | ,, | 32 | ஆட்டைக் கொல்வோன் சிங்கத்தை வெல்வேனென்று வருதலே ஆண்மை. | "ஆடுகொல் வோன், மடங்கல்முன் வெல்வே னென்று வருதலே யாற்ற லன்றே." |
| 25. | ,, | 35 | உள்ளங்கை நெல்லிக்கனி போல. | "கைத்தல நெல்லிபோலக் காண்குவை." |
| 26. | அக்கமாதேவி யுற்பத்தி கதி | 38 | கலைமகள் பொய்யாள். | "இயலுரை மடந்தை பொய்யாள்." |
| 27. | ,, | 51 | வாடுேக்கிய இளம்பயிர் போல். | "வாடுேக்கும், இளம்பயிர்போ லிருந்தான்." |
| 28. | அக்கமாதேவி துறவு கதி | 1 | கக்கிய சோற்றைப்போல. | "மன்னைக் காலுஞ் சோறென விட்டு." |
| 29. | ,, | 13 | தீயிற் பட்ட பஞ்சுபோல் மாயும். | "அனல் காணும், பஞ்சு படும்பாடு அங்கசன் அம்பாற் படுவேனே." |
| | சாதகாங்க கதி | 13 | ,, | "பஞ்சு தீயிடைப் பட்டென மாயுமே." |
| 30. | அக்கமாதேவி துறவு கதி | 14 | தீயிலிட்ட வெண்ணெய் போல. | "வெந்தீ யிழுதாகி" |
| | கோரக்கர் கதி | 3 | ,, | "வன்றழ லிழுதுபோல" |
| 31. | அக்கமாதேவி துறவு கதி | 19 | வலிய வந்த சீதேவியைத் தள்ளுவா ருண்டோ. | "போந்த ஓர்திரு மகள்வர வினைப் புறம்போக்கு மாந்தர் யாருளர்." |
| 32. | ,, | 27 | காமங் கொண்டவன் என்ன செய்யான். | "எள்ளு காமநோய் கொண்டவன் என்செய இசையான்." |

1. "வெளிறுமுன் வித்திப் பின்னை வச்சிரம் விளைத்த லாமோ"

வெளிறு வித்தி வச்சிரம் விளைத்தல் - ஆமணக்கு நட்டு ஆச்சா வாக்கலாகா தென்னும் பழமொழி (சிந்தாமணி - முத்தியிலம்பகம், செய். ௧௬) என்ற கருத்துடன் ஒத்தது.

| வரிசை எண் | கதியின் பெயர் | செய்யுள் எண் | பழமொழிகள் | ஆளப்பெற்ற செய்யுளடிகள் |
|---|---|---|---|---|
| 33. | கொக்கிதேவர் கதி | 12 | கமரில் ஊற்றிய பால்போல. | "...பொற்கலத்திற், பெய்தற்குரிய பால்கமரிற் பெய்ததொக்கும்." |
| 34. | ,, | 17 | மலையைக் கல்லி எலி பிடித்தாற் போல. | "பொருப்பை யகழ்ந்திட்டு எலி பிடித்தாங்கு." |
| 35. | ,, | 20 | வறிஞன் கண்ட புதையல் போல. | "மிடியன் கண்ட பொருள்போல." |
| | மருளசங்கர தேவர் கதி | 2 | ,, | "ஆதுலர் எதிர்பொருளாக." |
| 36. | முத்தாயி அம்மை கதி | 11 | எச்சிற் கலை போல. | "தனைக், கண்ட மெய்த்தவன் காயந் தனையன முண்ட நெட்டிலை யொப்ப விடுப்பனால்." |
| 37. | ,, | 18 | பாம்பின் கால் பாம்பறியும். | "அரவின் கால் அரவன்றி யறிபவர் தரையி னில்லை." |
| | மருளசங்கர தேவர் கதி | 17 | ,, | "பாம்பே பாம்பின்கால் தன்னை யறியும்." |
| 38. | முத்தாயி அம்மை கதி | 19 | முடவனுள்ள இடத்திற்குக் கங்கை வந்தாற்போல. | "பங்க னிருந்த பதிக்கருள் செய்து கங்கை யடைந்த கணக்கென." |
| 39. | ,, | 23 | நெய்யைக் கொண்டு நெருப்பை அவித்தாற்போல. | "நெய்யை விடுத்தெரிகின்ற நெருப்பை யவிப்ப நினைப்பதை யொக்கும்." |
| | சித்தராமர் கதி | 20 | ,, | "நீடுவெந் தழல்சொரி நெய்மிகர்த்த தால்." |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | முத்தாயி அம்மை கதி | 25 | குப்பையைக் கிண்டி முத்தெடுத்தாற் போல். | "பொய்த்துறு குப்பை கிளைத்தொளி பொங்கு முத்தை யளித்தென." |
| 41. | சித்தராமர் கதி | 9 | உமியைக் குத்திக் கையிளைத் தாற்போல். | "கொட்டி வீழுமி குத்தல்போல்." |
| 42. | ,, | 10 | விழலுக்கு முத்துலை போட்டிறைப்பது போல. | "விழற்கிறைப்ப விடுத்தல்போல்." |
| 43. | ,, | 40 | நிலத்தில் அடித்த பந்தைப் போல. | "அறையு றுந்திரள் பந்தென" |
| 44. | ,, | 42 | தன்னைக் கொன்றாலும் நீ பிறிதொன்றைக் கொல்லாதே. | "தன்னைக் கொல்லினும் தான்பிறிதொன்றினைக் கோறல், பன்னிற் பாவமென் றறைகுவர் கற்றுணர் பழையோர்." |
| 45. | ,, | 72 | கீழ்ப் பானையைத் தட்டினால் மேற்பானை விழும். | "...அடியில் வைத்த வெறுங்குடந் தள்ளின் மேன்மேல், மலங்குற ஒருங்கடுக்கு மட்கலம் விழுதலே போல்." |
| 46. | வசவண்ணர் கதி | 12 | பாவிற்செல்லுங் குழல்போல. | "பாவி ஞேடுவண் குழலெனத் திரிதலைப் பாராய்." |
| 47. | ,, | 29 | கன்றை நினைந்து வரும் பசு போல. | "கன்றினை நினைந்து நெஞ்சங் கரைந்துவந் தணையும் தாய்க்கு இங்கொருதடையு முண்டோ." |
| 48. | ,, | 32 | தாய்ப் பசுவைக் கண்ட இளங் கன்றுபோல. | "புல்லவந் தணையுந் தாய்முன் பொருந்தும் பறுத்திட் டோடு, நல்லிளங் கன்று போன்முன் னான் செலா திருந்தேன்." |

| வரிசை எண் | கதியின் பெயர் | செய்யுள் எண் | பழமொழிகள் | ஆளப்பெற்ற செய்யுளடிகள் |
|---|---|---|---|---|
| 49. | வசவண்ணர் கதி | 34 | விளக்குத் தூண்டுங் கோல் போல. | "...விளக்குத் தூண்டுந் துரும் பென." |
| 50. | ,, | 46 | எட்டிக்காய் தின்றாற்போல. | "காஞ்சிரங் கனிதின் றுங்கு." |
| 51. | மருளசங்கர தேவர் கதி | 9 | இலைமறை காயென. | "இலைமறை காயென இருக்கு மென்பவே." |
| 52. | ,, | 18 | பொற்புதையலின் மீதிருந்து வறுமையுற்றவன் போல. | "அம்பொன் வைப்பின் மீதிருந்தும் அறியா தல்லற் படுவான்போல்." |
| 53. | இட்டலிங்க கதி | 5 | ஊமன் கண்ட கனுப் போல. | [1]"படியில் ஊமன் கனவெனப் பட்டது." |
| 54. | ,, | 6 | இரவிக்கு இருள் போக்கும் இரவியுண்டோ. | [2]"...செங்கதிர்க் கிருள், ஓட்டு சோதியும் உண்டு கொலோ." |
| 55. | ,, | 8 | போன நோயைப் புளியிட் டழைத்தாற் போல். | "...விழைபுளிங் கறியிட் டாறு நோய் மிகுந்தெழ வளர்த்தல் போல்." |
| 56. | ,, | 15 | பசுவின் நோய்க்குப் பசுவின் பால் ஊட்டினாற்போல. | "ஆவுறு பிணிகெட ஆவின் பால் கறந்(து) ஆவினை யூட்டல் போல்." |
| 57. | கதலிவன கதி | 7 | தீப்பட்ட அரக்குப்போல. | "நெஞ்சம் ஆரழல் அரக்கென." |
| 58. | ,, | 18 | பழம் நழுவிப் பாலில் விழுந் தாற் போல. | "...வானோர், பசுவின் பானிறை சுனையிடை நழுவி வீழ்பழத்தை." |
| 59. | சாதகாங்க கதி | 7 | யானை கரும்பைத் தின்னும் ஆடு இலையைத் தின்னும். | "எறும்பி காணுறில் இன்கரும்பே கொளுஞ் செறிந்த ஆடிலை தின் பன என்பவே." |

| | | | | |
|---|---|---|---|---|
| 60. | ,, | 16 | நீர் நின்றால் துரும்பு நிற்கும். | "தோய நிற்குறின் நிற்கும் துரும்புமே." |
| 61. | கோரக்கர் கதி | 3 | கன்றின் வாய் முலை நெகிழ்த்துக் கறவை அகன்றாற் போல. | "கன்றின்வாய் முலைநெ கிழ்த்துக் கறவைவிட் டகன்ற தென்ன." |
| 62. | ,, | 29 | முதலில் லாமல் வட்டியில்லை. | "முதலி லான்பெறும் ஊதியம் யாதுகொல்." |
| 63. | ,, | 49 | பறையொலி கேட்ட அசுணமாப் போல. | "...பதலைகேட் டயர் அசுணம் போல்." |
| 64. | முனிவரர் கதி | 16 | சேற்றாற் சேற்றைக் கழுவினாற் போல. | "...செறுவிற்படு, சேற்றினாற் கழுஞ் சேறு நிகர்க்குமால்." |
| 65. | சூனிய சிங்காதன கதி | 15 | வீட்டிற்கு ஏற்றும் விளக்கு விருந்திற்கும் உதவும் | "வீட்டினுக் கேற்றுஞ்சோதி விருந்திற்கும் உதவு றாதோ." |
| 66. | சூனிய சிங்காதனத் திருந்த கதி | 1 | பள்ளத்திற் பாயும் நீர்போல. | "பள்ளம் புகு புனல்போல்." |
| 67. | ஆரோகண கதி | 1 | ஒருவர் உண்டால் ஒருவர் பசி நீங்காது. | "ஒருவ ருண்ண ஒருவர் பசி கெடார்." |
| 68. | ,, | 37 | சூரியன் தேர்க் குதிரைக்குப் பள்ளமென்றும் மேடென்றும் இல்லை. | "பண்ணவன் பரிக்குமேடு பள்ளமென் பனவங் குண்டோ." |

1. "ஆரிய ஊமன் கனவென." (கல்லாடம்)

"ஊமனைக் கண்ட கனவிலும் பழுதாய், ஒழிந்தன் கழிந்த 'இந்நாள்கள்" (பெரிய திருமொழி) என்பனவும் ஈண்டறியத் தக்கன.

2. "காட்டும் இரவிக் கிரவியுண்டோ இருள் காய்வதற்கே" (திருக்கோவையார்) என்பதும் இங்குக் காண்க.

## கரு. கற்பனைத் திறம்

கற்பனைத் திறன் யாவர்க்கும் வாய்ப்பதொன்றன்று. கருவிலே புலமைத் திருவுடையார்க்கே அமைவதாகும். இவ்வாற்றலினாலேயே உலகில் புத்தம் புதிய இலக்கியத் துறைகளும், இலக்கியங்களும் பிறவும் உண்டாகின்றன. ஆதிகாவியம் எனப் போற்றிப் புகலப்படும் வடமொழி இராமாயணம் வால்மீகி முனிவருடைய கற்பனையாற்றலினாலேயே எழுந்தது. அவரே வடமொழிச் செய்யுளுக்கும் தந்தையாவார். அவருடைய கற்பனைத்திறனே அம் மொழியில் காப்பிய நூல் அமைக்கும் முறையையும் புலப் படுத்தியது. மணிவாசகப் பெருமான் தம் கற்பனையாற்ற லினாலேயே அகப்பொருள் துறைகளை முறைப்படுத்திக் கோவையாக அமைக்கும் நான்முறையையும் திருவெம் பாவை, திருச்சாழல், திருப்பொன்னூசல், திருப்பொற் சுண்ணம் முதலிய இலக்கியத்துறைகளையும் நூதனமாக அமைத்துத் தமிழ்மக்களுக்கு அளித்தருளினர். இவ் வாறே சான்றோர்களுடைய உள்ளத்தில் இயற்கையி லெழுந்த புதியன படைக்குந் திறமே நூலுருவாகி யாவரும் நுகர்ந்தனுபவிக்கும் மொழியமுதமாக விளங்குகிறது.

இவ்வாற்றல் அமைய இயற்கைப் பொருள்களை உற்றுநோக்கி அவற்றின் இயல்புகளை ஐயந்திரிபற உணர்ந்து உளத்துக்கோடல் இன்றியமையாததாகும். அவ்வாறு கொள்ளினும் உளத்துக் கொண்ட எண் ணத்தை வெளியிடும் மொழியாற்றலும் அமைதல் வேண்டும். இவ்விரு ஆற்றல்களும் நன்கு அமையப் பெற்றவராலேயே புதிய சீரிய இலக்கிய நூல்களை வெளி யிடுதல் கூடும். அத்தகு வல்லமை பெற்ற புலவர்கள் இயற்றிய நூல்கள் படிப்போர் உள்ளத்தைச் சோர்வுறாமல் தம் வயப்படுத்தி ஈர்த்துச் செல்வன. உள்ளத்திற்கு இனிய அமுதம் போன்ற கருத்துக்களைப் பெருவிருந்தாக அளிப்பன.

அடிகளார் இவ்விருதிறனும் நன்கு அமையப் பெற்றவர். உலகிற் காணும் சிறு பொருள்களையும் நுனித்தறியும் மதிநுட்பம் வாய்ந்தவர். சிறிது, எளிது என்று நாம் எண்ணும் இயற்கைப் பொருள்களையும் தம் கற்பனைத் திறத்தால் பெரிதாக மதிக்கச் செய்யும் புலமைத்திறம் படைத்தவர். பழம் புலவர்கள் கூறியுள்ள அலங்காரங்களையும் கருத்துக்களையும் படியெடுத்தாற்போல் தம் பாக்களில் பதித்துக் காட்டும் புலவர் இனத்தைச் சேர்ந்தவரல்லர். தாமே நுண்ணுணர்வால் ஆய்ந்து ஆய்ந்து அரிய பெரிய பொருள்களை அணிநலமும் யாப்பமைதியும் பெறத் தேனெனப் பாலெனச் சில்லமிர் தூற் றெனச் செந்தமிழ்ப் பாட்டுக்களை யாக்கும் கற்பனை நலம் படைத்தவர். ஆதலின் கற்பனைக் கருவூலம் என்று புலவர் பெருமக்களால் பாராட்டிக் கூறுதலையும் பெற்ற அடிகளார் இயற்றிய இந்நூலில் கற்பனைத்திறம் மலிந்த சில பாட்டுக்களை ஈண்டுக் காண்போம்.

## 1

கயிலாயத்தை வருணிக்கின்றார். கயிலைமலை பனிப் படலங்களால் மூடப்பட்டிருப்பதால் எங்கும் ஒரே வெண்ணிறமாகத் தோன்றுகின்றது. பார்ப்பதற்கு வெள்ளி மலைபோல் காட்சியளிக்கின்றது. ஆதலின் அதனை வெள்ளிமலையென்றே கூறுவர். கயிலை வெண்ணிறமாக விளங்குகிறது என்று நேரே பொருள் தரும்படி கூறாமல் அதன் வெண்ணிறத்தை மற்றொரு வகையால் புலப்படக் கூறுகின்றார். அதன் அழகைப் பார்ப்போம்.

கயிலையிலிருந்து பனியருவிகள் ஒழுகுகின்றன. அவை மேலிடத்திலிருந்து கீழே விழுகின்றன. அவ்வாறு விழுகின்றபோது உண்டாகும் ஒலியினாலே அவ்வருவிகளை அறிதல் கூடும். ஒளி பொருந்திய வெண்ணிறத்த சந்திரன் ஆங்குத் தவழ்கின்றது. அதனை அதன் நடுவேயுள்ள களங்கத்தால்தான் இது சந்திரன் என்று அறிய முடியும். இந்திரன் ஏறிவந்த ஐராவதயானை ஆங்கு நிற்கிறது. அதன்நிறமும் வெண்மையே. அதனை அஃது உமிழ்கின்ற

கரியமத நீரால்தான் இஃது ஐராவதம் என்று அறிதல் கூடும். மற்றும் நான்முகன் இவர்ந்து வந்த அன்னப் புள்ளும் உளது, அதனை எவ்வாறு அறிவது? அதனை அது புடைபெயர்ந்து நடக்கும் நடையால்தான் அறிதல் கூடும் என்று கற்பிக்கின்றார்.

அச் செய்யுள் :

"ஒழுகுறும் அருவி யீட்டம் ஒலியினால், நகுவெண் திங்கள்
பழகுறும் உடற்க ளங்கால், பாகசா தனன்கூர்ங் கோட்டு
மழகளி(று) உமிழ்ம தத்தான், மலர்மிசைக் கடவுள் ஊர்தி
அழகுறு நடையால் அன்றி அறிதரப் படாஅக் குன்றில்."

(பாகசாதனன் - இந்திரன்; மலர்மிசைக் கடவுள் - பிரமன். ஈட்டம் - கூட்டம்.)

இச் செய்யுளில் வெண்ணிறமுடைய பல பொருள்களையுங் கூறி அவற்றைப் பொதுத்தன்மையினின்றும் பிரித்துணர அவற்றின்பால் அமைந்துள்ள ஏதுக்களையும் எடுத்துரைத்துக் கயிலை வெண்ணிறமாக விளங்குந் தோற்றத்தை யாம் அறியப் புலப்படுத்துகின்றார். உள்ளதை உள்ளவாறே உரைப்பதிலும் கூர்ந்தறியுமாறு வைத்திருத்தலால் உளத்திற்கு இன்பம் பயக்கின்றது. இச்செய்யுள் மறையாமை யணி என்னும் அலங்காரத்தைப் பெற்றுள்ளது.

## 2

கயிலாயத்தில் அரசிருக்கை மண்டபத்தில் சிவபெருமான் உமையம்மையாருடன் வீற்றிருக்கின்றார்.

சிவபெருமானுடைய இடக்கரத்தில் மானும், வலக்கரத்தில் மழுவாயுதமும் உள்ளன. மான், தன் இயல்பில் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கிறது. மழு, தகுந்தகுவென ஒளியை விட்டுக்கொண்டிருக்கிறது.

சிவபெருமானது இடக்கரத்துள்ள மான் முகந்திரும்பியிருத்தல் உமாதேவியாரின் கட்பார்வையின் அழகைக்

கண்டு நாணி முகந்திரும்பியுள்ளதுபோல் உள்ளதாம். மழுவாயுதத்தினின்று இயற்கையிலுண்டாகும் தகுந்தகுந் தகுமென்னும் ஓசை, மானானது இவ்வாறு நாணித் திரும்பியது தகும் தகும் தகும் என்று தன்கருத்தை முக்காலும் உரைப்பதுபோல் உளதாம்.

அச் செய்யுள் :

"நகந்த ருங்கொடி கண்களை நாணியே
முகந்தி ரும்பு முறையில் திரும்புமான்
மகிழ்ந்தி டங்கதிர் வீர மழுவலந்
தகுந்த குந்தகு மென்று தயங்குற."

(கைலாசகதி, செய். கூ)

(நகந்தருங் கொடி - இமய மலையரையன் ஈன்ற பூங்கொடி போன்ற உமை. நாகம்-மலை. நகம் என்றது குறுக்கும் வழிக் குறுக்கல். தயங்குற-விளங்காநிற்க. மான், இடந்தயங்குற; மழு, வலந் தயங்குற எனக் கூட்டுக.)

சிவபெருமானுடைய திருவடியைப் புனைந்துரைக்கின்றார். கழல் என்பதோர் அணி. அது காதணி, விரலாழி என்பனபோல அழகு குறித்து அணியப்படுவதன்று. கொடைத் தன்மையைக் குறித்தும் வீரச்செயலினைக் குறித்தும் ஆடவர்கள் காலில் அணிவதாகும். சிவபெருமானும் திருவடியில் வீரக்கழல் அணிந்துள்ளார். அஃது எதன் பொருட்டு? அவர் பல வீரச்செயல்களைச் செய்துள்ளார். முப்புரவாசிகள் விண்ணவர்க்கு மிக்க இடையூறு செய்தனர். அவர்கள் தங்கியிருந்த முப்புரத்தைப் பார்த்துச் சிரித்து எரித்தார். பிரமன் ஐந்து தலைகளையுடையவனாயிருந்தான். யான் சிவபெருமானுக்கு ஒப்பாவேன் என்று தருக்குற்றிருந்தான். அவனது ஒரு தலையைக் கைவிரலாற் கொய்தார். மன்மதன் சிவபெருமான் புரிந்துகொண்டிருந்த யோகநிலையைக் குலைத்தான். அவனை நெற்றி விழியால் பார்த்து எரித்து அநங்கனாக்கினார். சிவபெருமானுடைய அன்பனாகிய மார்க்கண்டனுடைய உயிரைக் கவரக் கூற்றுவன் வந்தான். தன் அன்பனுக்கு இரங்கிக் கூற்றுவனைக் காலால் உதைத்து

அழித்தார். இவையெல்லாம் சிவபெருமானுடைய வீரச் செயல்களேயாம். இத்துணை வீரச்செயல்கள் புரிந்தவர் காலில் வீரக்கழல் அணிந்து கொள்வது தகுமன்றோ? ஆனால் எவ்வுறுப்பு வீரச்செயலைச் செய்ததோ அதன் பெருமையை அறிவிக்க அதற்கு அணிவதுதான் பொருத்தமாகும். சிவபெருமான் காலில்தான் வீரக்கழல் அணிந்திருக்கிறார். அவ்வீரக்கழல் நகைப்பு, செங்கை, கண் இவற்றின் வீரச்செயல்களுக்காக அணியப்பட்டது இல்லை. கூற்றுவனை உதைத்த திருவடியின் வீரச்செய லுக்கே அணிந்ததாகும் என்று கூறும்படி தரித்துள்ள வீரக்கழலுடன் திருவடி விளங்காநிற்க வீற்றிருந்தார்.

அச்செய்யுள் :

"புரத்தை வென்ற நகைக்குமென் போதினோன்
சிரத்தை வென்றசெங் கைக்குஞ் சிலைமதன்
எரித்த கண்ணிற்கும் இன்றெனக் கூற்றறேஉத்
தரித்த வீரக் கழலொடு தாளுற."

(கைலாசகதி, செய், கக)

(புரம் - முப்புரம். போதினோன் - பிரமன். கூற்று - கூற்று வன்.)

வீரக்கழல் காலில் அணிவது என்றதொரு பொருத் தம் நோக்கி இக் கற்பனையை அமைத்துள்ளார். இக் கருத்தமைந்த இடங்களை அடிகளார் இயற்றிய நூல்களில் தான் நாம் காணுதல் கூடும்.

## 4

உமையம்மையாரைச் சிறப்பித்துக் கூறுகின்றார் :

உமையம்மையாரது கூந்தலில் சிவபெருமான் அணிந் துள்ள மலர்மாலை தொங்குகின்றது என்று கூந்தலை வரு ணித்தார். நெற்றியில் தொங்கவிடப்பட்டுள்ள மணிச் சுட்டி என்னும் ஆபரணம் அழகைத் தருகின்றது என்று நெற்றியைச் சிறப்பித்தார். பின்னர் அம்மையாருடைய

கண்களையும் வாயையும் வருணித்தல்வேண்டும். இவற்றிற்கு என்ன அணிகலங்களைப் புனைகின்றாரென்று பார்ப்போம்.

வண்டை மாதர்களுடைய கண்களுக்கும், செவ்வாம்பல் மலரை வாய்க்கும் உவமானமாகக் கூறுதல் கவிமரபு. அவ்வாறே உமையம்மையாருடைய விழியை வண்டு போலும் விழி (அளிவிழி) என்று உவமித்து உரைத்தார். வண்டு தேனை விரும்பித் தாமரை மலரை நாடும். அம்மையாருடைய அளிவிழியும் சிவபெருமானுடைய முகமென்னும் தாமரை மலரின்கண் ஆசைமிக்கு நாடுகின்றது. (சிவபெருமானுடைய முகத்தை நோக்கி நோக்கி அம்மையார் களிப்புறுகின்றார் என்றபடி) அவ்விழிக்கு உயிர்களிடத்துக் கொண்ட பேரருளே, ஆபரணமாகச் சிறந்து விளங்குகிறது. மணம்பொருந்திய செவ்வாம்பல் மலர் போலும் வாய்க்குப் புன்னகை, ஒளிபொருந்திய அணியாக விளங்குகின்றது என்று விழிக்கு அருளையும் வாய்க்குப் புன்னகையையும் ஆபரணங்களாக ஆசிரியர் அணிந்துள்ள அழகைப் பாருங்கள் :

அச்செய்யுள் :

"ஈச னார்முகம் என்னு முளரியில்
ஆசை கூரும் அளிவிழிக் காரருள்,
வாச மாமலர் வாய்க்கிள வெண்ணகை,
தேசு லாமணி யாகச் சிறந்துற."

(கைலாசகதி-செய், க௩)

(முளரி - தாமரைமலர். அளி-வண்டு. தேசு - ஒளி. அளிவிழி, மலர்வாய் : உவமத் தொகைகள். ஆரருளும், வெண்ணகையும், அணியாகச் சிறந்துற என்க.)

## 5

அம்மையார் மார்பில் அணிந்திருப்பது முத்துமாலை. பாரதம்பாடிய பெருந்தேவனாரும் ஐங்குறுநூற்றில் "நீலமேனி வாலிழை பாகத் தொருவன்" என்றார். இங்கு அம் முத்து மாலையின் வருணனையைக் காண்போம்.

முத்துமாலை வெண்ணிறமுடையது. புகழ் கட்புலனுக்குத் தோன்ருததாயினும் வெண்ணிறமுடையதாக உரைத்தல் தொன்று தொட்டுவரும் கவிமரபாகும். அம்மையார் அணிந்துள்ள முத்துமாலை அம்மையாருடைய கொங்கையின் புகழ் என்று சொல்லுமாறு விளங்குகிறதாம். கொங்கை பெற்ற புகழ்தான் யாது? ஆளுடைய பிள்ளையார் மூன்றுவயதில் சிவபெருமானைத் தேவார இன்னிசைத் தமிழ்ப்பாசுரங்களாற் பாடினர். அவ்வாறு பாடும் படியான சிவஞானத்தை அளித்தது அம்மையாருடைய திருமுலைப்பாலேயாகும். இத்தகு செயற்கருஞ் செயலைச் செய்த அக்கொங்கைப் புகழின் தோற்றமாக முத்துமாலை மார்பில் காட்சி யளிக்கிறது என்று சிறப்பிக்கின்ருர்.

ஏனைய கவிஞர்கள் நகிலுக்கு ஒப்பாகக் கோங்கரும்பு, சூதாடுகருவி, கிண்ணம் முதலியவற்றைக் கூறி வருணிப்பர். அவ்வாறு சிற்சத்தியாக விளங்கும் அம்மையாருடைய தனத்தை வருணித்தல் ஒவ்வுமா? அடிகளார் எத்துணை நலந்தோன்ற அம்மையாருடைய கொங்கையின் சிறப்பைக் கூறி அதன் புகழ் வடிவமாக முத்துமாலை விளங்குகின்றது என்று கூறுகின்ருர். இந் நனி நாகரிகத்தைப் பிற கவிஞர்பால் காணுதல் கூடுமோ?

அச்செய்யுள் :

"அரவு லாஞ்சடை அண்ணலைப் பிள்ளைதான்
பருவ மூன்றினிற் பாடஇன் பால்தரும்
பொருவில் கொங்கைப் புகழெனப் பொங்கொளி
மருவும் ஆர மணிவடந் தாழ்ந்துற."

(கைலாசகதி, செய். உஉ)

(அண்ணல் - சிவபெருமான். பிள்ளை - திருஞான சம்பந்தர். ஆரம் - முத்து.)

## 6, 7, 8

கயிலையில் கூடியுள்ள பேரவைக்கு உருத்திரர்கள் வருகின்ருர்கள். அவர்கள் ஒவ்வொருவருடைய முடியிலும்

கங்கையும் இளஞ்சந்திரனும் உள்ளன. கரத்தில் மானும் உளது. இவைகள் ஒவ்வொருவரிடத்தும் தனித்தனியாக வாழ்ந்து வருகின்றன. ஒன்றையொன்று காண்பதற்குரிய வாய்ப்புக்கிடைப்பது அரிதாகவுளது. இப்பொழுது கங்கையோடு கங்கையும், இளஞ்சந்திரனுடன் இளஞ்சந்திரனும், மானுடன் மானும் தத்தம் இனத்துடன் கண்டு பேசி உறவு கொள்வதற்கொரு வாய்ப்பு அவைகளுக்கு உண்டாயிற்று. இவ்வாறு அவைகள் ஒன்றுடன் ஒன்று கலந்து நட்புக்கொள்ளுமாறு உருத்திர குழாங்கள் அப்பேரவையில் நெருங்கின.

அடுத்து நாரணருடைய கூட்டங்கள் வருகின்றன. அவர்கள் ஒவ்வொருவருடைய கரங்களிலும் சங்கு, சக்கரங்கள் உள்ளன. சபையில் நெருங்கிச் செல்லும் பொழுது சங்குடன் சங்கு மோதுகின்றன. ஒளி மிக்குள்ள சக்கரங்களும் அவ்வாறே ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. இவ்வாறு அலை மடங்குகின்ற பொங்கும் நீலக்கடல் வந்தாற்போல நாரணர்கள் பேரவையில் வந்து தங்கினர்.

பிரமர்கள் வருகின்றனர்கள். உலகைப் படைக்குந் தொழிலையுடைய பிரமர்கள் நான்கு முகங்களிலும் நான்கு மறைகளை விதிப்படி கூறும் ஒலி முழங்க, எட்டுக்கரங்களும் நான்கு முடிகளில் குவித்து வணங்க, உமையொரு பாகனுடைய பேரவையின்கண் பரவிப் புகுந்தனர்.

இவ்வாறு உருத்திரர், நாரணர், பிரமர்கள் வருகையைப் புனைந்துரைக்கின்றனர்.

அச் செய்யுள்கள்,

"தெள்ளு வார்திரைக் கங்கையுங் கங்கையும், சிறிய
பிள்ளை யாகிய மதியமு மதியமும், பெரிது
துள்ளும் ஓரிள நவ்வியும் நவ்வியும் தொடர்பு
கொள்ளு மாறுஅவண் நெருங்கின உருத்திர குழாங்கள்."

(திரை - அலை. நவ்வி - மான். தொடர்பு - உறவு.)

"சங்கம் ஒன்றுடன் ஒன்றுதாக் குற,ஒளி தழைக்குந்
துங்க நேமியும் அன்னவா யுற,அலை சுருட்டும்
பொங்கு வேலைவந் தெனஅரிக் கணங்கள் அற்புதத்த
எங்கள் நாயகன் பேரவை யிடத்துவந் திறுத்த."

(நேமி - சக்கரம். வேலை - கடல். அரிக்கணம் - திருமால்களின் கூட்டம். இறுத்த - தங்கின.)

"முகங்களூ் நான்கிலு நான்மறை விதிமுறை முழங்க,
உகந்து கையிரு நான்குநான் குச்சியிற் குவியச்,
சகந்த ருஞ்செயல் பிரமர்கள் அளப்பிலர் தையல்
பகுந்த மேனியன் அவையிடைப் புகுந்தனர் பரவி."

(சகம் - உலகம். தையல் - உமை.)

இச் செய்யுள்கள் கற்பனை நலஞ்சிறந்து விளங்குவதோடு கவிச் சித்திரமாகவும் திகழ்கின்றன. நம் அகக்கண் முன்னர் முத்தேவர் குழாங்களும் இறைவன் திருவோலக்கங் கொண்டுள்ள பேரவையில் புகுதலைக் காட்டுகின்றன.

## 9

விளவல நாட்டைச் சிறப்பித்துக் கூறுகின்றார்:

நீரால் நிறைந்து தாமரையும் நீலமும் பூத்துள்ள பல குளங்கள் அந்நாட்டில் உள்ளன. கரும்புகள் விளையுங் கழனிகள் உள்ளன; குயில்களிருந்து கூவும் சோலைகள் சூழ்ந்துள்ளன. ஆங்கு வாழும் ஆடவரும் மகளிரும் இன்பமாக வாழ்கின்றார்கள் என்றிவ்வாறு நேரே பொருள்தர நாட்டின் வளத்தை அமைத்து ஒரு செய்யுள் கூறினால் அது கற்போர் உள்ளத்தைக் கவராது; அறிவைத் தூண்டாது. இதே பொருளை நம் கவிஞர் பெருமான் கூறுந் திறத்தைப் பாருங்கள்!

"வாவி யாவு மதன்பெருந் தூணி,செய்
யாவு மாரன் எடுக்குஞ் சிலையிடம்
காவெ லாம்அவன் காகள சாலைகள்
பூவை மார்மனை போர்க்களம் என்பவே."

(மாயையினுற்பத்தி கதி, செய். ௩)

தடாகங்களெல்லாம் மன்மதனுடைய அம்புகள் பொதிந்து வைக்கப்படும் தூணிகளாம். (மன்மதனுடைய ஐங்கணைகளுள் நீர்ப்பூக்களாகிய தாமரை மலரும், நீல மலரும் நிறைந்திருக்கின்றன), வயல்கள் யாவும் மன்மதனுடைய விற்கள் சார்த்தி வைக்கப்பட்டிருக்கும் ஆயுதக் கொட்டிலாம். (வயல்கள் யாவும் கரும்புகள் விளையும் இடமாகவுள்ளன), சோலைகள் முழுவதும் அவனுடைய எக்காளம் என்னும் ஊதுகொம்பு நிறைந்த கூடங்களாம். (சோலைகளில் குயில்கள் வாழ்கின்றன), மங்கையர் வாழும் மாளிகைகள் யாவும் அவன் போர்புரியும் களமாம். (அழகிய இளம் பருவ மாதரும் ஆடவரும் எல்லா மனைகளிலும் காதலுடன் கூடி இன்பத்தை அனுபவித்து வாழ்கின்றார்கள்.)

என்று ஊன்றி யறியுமாறு ஆழ்ந்த கருத்தை யமைத்துப் பாடியுள்ளார். இப் பாட்டிலுள்ள நான்கடிகளில் குளம், வயல், சோலை, மனை யாகிய நான்கு இடங்களின் வருணனைகள் உள்ளன. சுருங்கச் சொல்லல் என்னும் அழகும் பொருள் காண்பதில் மயக்கமில்லாதவாறு சொற்கிடக்கையும் அமைந்துள்ளன.

## 10

வனவசை நகரின் அழகையும் மதிலையும் வருணிக்கின்றார். புலவர்கள், அகழ் மிக ஆழமுடையதாய்ப் பல கொடிய நீர்வாழ் உயிர்களைப் பெற்றுள்ளது என்றும், மதில் மிக உயரமுடையதாய்ப் பல பொறிகளை யுடையதாகவுள்ளதென்றும் வருணிப்பர். இவ்வாறே பெருங் காப்பியப் புலவர்களும் கூறியுள்ளனர். ஆனல் நம் புலவர் பெருமான் அகழ் ஆழ்ந்து சென்றிருப்பதிலும், மதில் உயர்ந்து போயிருப்பதிலும் ஒரு நீதியைக் கண்டு உலகிற்குக் கூற விரும்புகின்றார்.

மதிலைச் சூழ்ந்துள்ள பழமையான அகழியானது பூமியின் கீழ் மிக ஆழமாகச் சென்று இறுதியில் பூமியைத்

தாங்கும் ஆதிசேடனது இரத்தினத்தையுடைய முடிமேல் போய் நின்றது. நகரைச் சூழ்ந்துள்ள மதிலோ வானத்தை நோக்கி உயர்ந்து கொண்டே போய் இறுதியில் மேரு மலையை வலமாகச் சுற்றி உதயகிரியில் உதிப்பவனாகிய சூரியனுடைய அடியின்கீழ் நின்றது.

இக் காட்சியில் உலகில் "தாழ்ந்தோர் உயர்வர் என்றும் மிக உயர்ந்தோர் தாழ்வர்" என்றும் அற நூல்களை யுணர்ந்தோர் கூறும் உண்மையை நேரில் கண்டறிந்தோம் என்கின்றார்.

அச் செய்யுள் :

"தாழ்ந்தோர் உயர்வர் என்றுமிக
உயர்ந்தோர் தாழ்வர் என்றும்அறம்
சூழ்ந்தோர் உரைக்கும் உரைகண்டா
மதில்சூழ் கிடந்த தொல்லகழி
தாழ்ந்தோர் அனந்தன் மணிமுடிமேல்
நின்றன்(று) உயர்ந்து தடவரையைச்
சூழ்ந்தோர் வரையி னுதிப்பவன்தாள்
கீழ்நின் றதுபோய்ச் சூழ்எயிலே."

(மாயையினுற்பத்தி கதி, செய். கச)

(நின்றன்று-நின்றது. எயில்-மதில். தடவரை-மேருமலை.)

பிற புலவர்கள் பல பாடல்களால் புனைந்துரைக்கும் பொருளை இரண்டடிகளில் சுருங்கக் கூறி, இப் பாட்டு வருணனையைக் கொண்டதாக மட்டும் அமையாமல் உலகிற்கு நீதியையும் உணர்த்தும் அரிய செய்யுளாக விளங்கவேண்டி மற்றிரண்டடிகளில் "தாழ்ந்தோர் உயர்வர், உயர்ந்தோர் தாழ்வர்" என்னும் அரிய நீதியையும் புலப்படுத்தும் அழகை என்னென்பது! இப் பாட்டு முன் இரண்டடிகளில் பொதுப் பொருளும் பின் இரண்டடிகளில் சிறப்புப் பொருளுங் கொண்டு வேற்றுப் பொருள் வைப்பு என்னும் அணி நலம்சிறந்து விளங்குதல் காண்க. இவர் கற்பனை மிகவும் புதுமையானது.

## 11

வனவசை மாநகரின் தெருக்களில் யானைகளும் குதிரைகளும் உலாவுகின்றன. அவ்யானைகள் தம் உயர்வை எண்ணுகின்றன. இந்திரனைத் தாங்கும் ஐராவத யானைக்கு நான்கு கொம்புகள் இருக்கின்றன. நமக்கு இரண்டு கொம்புகளே இருக்கின்றன. அந்த ஐராவதம் நம்மினும் உயர்ந்ததாகக் கொள்ளப்படுமா? என்று ஆலோசித்தன. அங்ஙனம் ஆலோசித்தபோது சிவபெருமான் ஈன்ற விநாயகக் கடவுளும் யானை முகத்தைப் பெற்றிருப்பதால் அவரையும் ஒரு யானையாகவே எண்ண வேண்டும். அவர்க்கு ஒற்றைக் கொம்பே உண்டு. இரு கொம்புகளை யுடைய நமக்கு ஒரு கொம்புடைய விநாயகர் சமான மாகவோ இழிவாகவோ கூறப்படாமல் நம்மினும் உயர் வுடையவராகவே உலகத்தாரால் மதிக்கப்படுகிறார். அவ்வாறு மதித்தற்குக் கொம்பு குறைந்திருப்பதே காரண மாக இருக்கிறது. ஆதலின் ஒரு கொம்புடைய யானைக்கு (விநாயகருக்கு) இரு கொம்பிருந்தும் யாங்கள் ஒப்பாகாதது போல எமக்கு நான்கு கொம்புகளையுடைய அவ் ஐராவத யானையும் ஒப்பாவது ஒருபோதும் இல்லை. அஃது எங்க ளுக்கு ஒப்பாகுமென்றால் யாங்களும் தனித்தனி விநாயகக் கடவுளை ஒப்பாக மதிக்கப்படுதல் வேண்டும் என்று செருக்குற்றுத் திரிந்தன.

குதிரைகளும் தம் உயர்வை எண்ணுகின்றன. இக் குதிரைகள் வையாளிக் குதிரைகள் அல்லது நாட்டியக் குதிரைகள் அல்லது போர்க்காலத்தில் மட்டும் போர்க்கு உபயோகப்பட்டு மற்றை நாளில் ஒரு வேலையுமின்றி யிருக்கும் குதிரைகளாகும்.

அக் குதிரைகள் சூரியனுடைய ஒரு சக்கரத்தை யுடைய தேரை இழுத்துச் செல்லும் ஏழு பச்சைப் புரவிகள் நம்மினும் உயர்ந்தனவாகுமா? என்று ஆலோ சித்தன. ஒரு சக்கரத்தை இழுக்கும் அவ் வேழு புரவி களைக் காட்டிலும் ஒரு வண்டியின் இரு சக்கரங்களையும் இரு பக்கத்துங் கட்டப்பட்டு ஒவ்வொன்றையும் தனித்தனி

இழுத்துச் செல்லும் இரண்டு கடாக்கள் மிக்க உழைப் புடையன. ஆதலின் அக் கடாக்களே வலிமையுடையன வாகும். அவ்வாறு உயர்வுடையனவாகக் கடாக்கள் கருதப்படாமல் மிகத் தாழ்வுடையனவாகவே உலகில் மதிக்கப்படுதலால் உழைப்பு மிகமிகக் குறைந்திருப்பதே உயர்விற்குக் காரணமாகு மென்பது பெறப்படும். அவ் வாறாகவே அவ் வேழு பச்சைப் புரவிகளைப் போல ஒரு சக்கரத்தையும் இழுக்காமல் ஒரு தொழிலுமின்றி வாளா இருந்து உல்லாசமாகத் திரியும் நாமே உயர்வுடையோம். அன்றி, நம்மினும் சூரியனுடைய புரவிகள் உயர்ந்தன எனின், அவற்றினும் கடாக்கள் உயர்வுடையனவாக வேண்டும். அவ்வாறுவது எக்காலத்தும் இல்லை. ஆகலின் நம்மினும் அப் பச்சைப் புரவிகள் உயர்வடைவதும் ஒரு காலத்தும் இல்லை என்று செருக்குற்றுத் திரிந்தன.

அச் செய்யுள் :

“ஈசன் அளித்த ஒருகோட்டி
யானைக் கியாங்கள் இணையாயின்
வாச வனைத்தாங் கீரிருகோட்
டியானை யெம்மை மானுமெனும்
பாச வுரற்கால் யானையொடு
பாண்டி விழுக்கும் பகடுயரில்
தேசின் இரதப் பரிசிறந்த
என்னும் பரிகள் தெருவகலா.”

(மாயையினுற்பத்தி கதி, செய். கஎ)

[ஒரு கோட்டியானை - ஒரு கொம்பினையுடைய யானை முகத்தையுடைய விநாயகக் கடவுள். வாசவன்-இந்திரன். ஈரிரு கோட்டியானை - நான்கு கொம்புகளையுடைய ஐராவதம். பாண்டில் - இரண்டு உருளையையுடைய சகடம். இதனைச் சிலப்பதிகாரம், ஐராவதத்திற்கு நான்கு கொம்புகள் உண்டு. “நாலு கோடுடைய மத்தயானை யேறிவரும், வச்ரபாணி வாசவனே” என்னும் தக்கயாகப் பரணி (சகo - கண்ணி)யால் அறிக.]

அடிகளார் பிற நூலாசிரியர்கள் யானைகளையும் குதிரைகளையும் சிறப்பித்துக் கூறும் முறையைப் பின்

பற்றாமல் தாமே புதிய கற்பனையைப் படைத்துள்ளார். அவரது உள்ளக் கருவூலத்தினின்றுந் தோன்றிய கற்பனையின் உருவமே இப் பாட்டாகும். இதன் பொருள் பல்கால் எண்ணி எண்ணி அறியத்தக்கதாக வுளது. சுருங்கிய அடிகளில் அமைந்த அகன்ற பொருளைக் கற்போர் உய்த்துணர வைத்திருத்தலின் இச் செய்யுள் உய்த்துணர வைப்பணியாம்.

## 12

பெற்றோராகிய மமகாரனும் மோகினியும் மாயையாகிய மகவை மாண்புற வளர்க்கின்றனர். இரவில் குழந்தைக்குப் பாதுகாவலாக விளக்கு எரியவிட்டு வைத்திருக்கின்றனர். அவ் விளக்கின் ஒளிப்பிழம்பு அசைகின்றது. அவ் வசைவு இம் மாயையின் அழகைப் போல யான் கண்டதில்லை என்று உள்ளத்தில் வியப்புற்று அச் சுடர் தலையசைப்பதைப்போல் உளதாம். அச் சுடரைப் பார்த்தும், மெதுவாகத் தனது காற் பெரு விரலை வாயாற் சுவைத்தும், விளங்குகின்ற அழகிய சதங்கை யணிந்துள்ள கால்களை உதைத்தும், இதழ் விரிந்த மலர்போலும் வாயைக் குவித்து அழுதும், திரும்பச் சிரித்தும் தொட்டிலில் கிடக்கின்றதாம் அம் மாயையாகிய குழந்தை.

அச் செய்யுள் :

"கள்ள மாயை தன்னெழில்போற்
கண்ட தில்லை என்னமிக
உள்ளம் வியந்து தலையசைப்ப(து)
ஒப்ப அசையுஞ் சுடர்பார்த்து
மெள்ள விரலொன் றனைச்சுவைத்து
மிளிர்பூஞ் சதங்கைத் தாளுதைத்து
விள்ளு மலர்வாய் குவித்தழுது
மீள நகைத்துங் கிடக்குமால்."

(மாயையினுற்பத்தி கதி, செய். ௫௦)

(கள்ளமாயை - வஞ்சகத் தன்மையுடைய மாயை.)

குழந்தைகள் இருக்கும் இடத்தில் அச்சந்தோன்றும விருக்க விளக்கு எப்பொழுதும் எரிய வைப்பர். "வளர்த்த செம்மையை வாலியை" (சீவகசிந்தாமணி செய்யுள் கருஅ) என்றதன் உரையில் "பிள்ளைகளுக்கு விளக்கம் காவலாக இடுதலின் எங்களை வளர்த்த மனக்கோட்ட மின்மையையுடையை யென்றார்" என்பர் நச்சினார்க்கினியரும். அவ்வாறு வைத்திருக்கும் விளக்குச் சுடரின் அசைவை மாயையின் அழகைப் போல் கண்டதில்லை என்றி உளத்தில் வியப்புற்றுத் தலையசைப்பதுபோல் உளது என்று தற்குறிப்பேற்ற அணிபடக் கூறியுள்ள அழகு காணத்தக்கது. பின்னர்க் குழந்தை அச்சுடரைப் பார்த்தல், காற்பெருவிரலைச் சுவைத்தல், தாளை உதைத்தல், அழுதல், நகைத்தல் ஆகிய குழந்தைச் செயல்களைத் தன்மையணி தோன்றக் கூறியுள்ளதை யுணரும்போது நம் மனத்தில் இன்பம் உண்டாகிறதன்றோ !

## 13

மாயையை பணிப்பெண்கள் அலங்கரித்தனர். அவ்வலங்கரிப்பின் சிறப்பைப் பல பாடல்களிற் கூறியுள்ளார். அவற்றுள் ஈண்டு இரண்டு செய்யுள்களின் கற்பனையைக் காண்போம்.

சுட்டி என்பது மகளிர் நெற்றியில் பொருந்தத் தொங்கவிடும் ஓர் ஆபரணம். இதனைப் பண்டைநாளில் செல்வமகளிர் அணிந்து வந்தனர். இவ்வணி தமிழ்நூல்கள் பலவற்றுள் கூறப்படுகிறது. ஆயினும் இந்நாளில் இவ்வணி காண்பது அரிதாகவுளது. இத்தகு மணிச்சுட்டி யொன்றை ஒரு பணிப்பெண் மாயைக்கு அணிந்தாள்.

மாயையின் கூந்தலாகிய கருமணலின்மீது சுவடு உண்டாகும்படி ஊர்ந்து, அழகிய சந்தனப் பொட்டாகிய வெண்மதியைப் பற்றுவதற்குச் செல்லும் ஒரு சிறிய பாம்பைப்போல் மயிர் வகிரைப் பொருந்தும்படி ஒளி பொருந்

திய ஒரு மணிச்சுட்டியை ஒருத்தி அணிந்தாள் என்று கூறுகின்றார்.

அச்செய்யுள் :

"ஓதி யாகிய அறன்மிசைச் சுவடுற வூர்ந்து
தீதி லாதவொண் சந்தனத் திலகவெண் மதிக்குப்
போதும் ஓர்சிறு பாம்பென மயிர்வகிர்ப் பொருந்தச்
சோதி மாமணிச் சுட்டியொன் றொருத்திதாக் கினளால்."
(மாயைபூசைகதி, செய். அ)

(ஓதி - கூந்தல். அறல் - கருமணல்.)

## 14

மற்றொருத்தி மாயையினுடைய காதில் பொன்னோலையை யணிந்தாள். அவ்வணியை வருணிக்கின்றார் :

மாயையின் கண்பார்வையால் துறவிகளும் தம் தவத்தை யிழந்து காமபரவச ராயினர். இஃது என்ன ! இம்மாயையின் கட்பார்வை இத்துணைத் தீமையைச் செய்கின்றது என்று உலகோர் பழிச்சொல் கூறக்கூடும். உலகோர் நிந்தனைக்கு அஞ்சி யொழுகுதல் நல்லோர்க்கு இயல்பு. அவ்வாறே கண்கள் தமக்கு உண்டாகும் பழிக்குப் பயந்து தாமாக இச்செயலைச் செய்யவில்லை. இது மன்மதனுடைய ஆணை. அவன் நீங்கள் துறந்தோரை அண்மி அவர்களுடைய தவத்தை யழியுங்கள் என்று கட்டளையிட்டுள்ளான். அவனுடைய படைகள் யாங்கள். (மாதர்களை மன்மதனுடைய படையாகக் கூறுதல் மரபு) அவன் இட்ட ஆணையை நிறைவேற்றுவதே எங்களுடைய கடமை யாகும். இதோ பாருங்கள். அவனுடைய ஆணை பொறித்த திருமுகத்தை (ஓலைச்சுருளை) வைத்திருக்கிறோம் என்று அவ்வாறு ஆணையிட்ட மன்மதன்மீது பழி கூறப் பக்கத்திலேயே கண்கள் வைத்திருப்பதுபோல் தோன்றப் பொன்னோலையை (காதணியை) ஒருத்தி மாயையின் காதில் அணிந்தனள்.

அச்செய்யுள் :

"அடுத்து மாதவம் அழிமின்என் றனங்கவேள் தமக்கு
விடுத்த ஓலையைக் கண்கள்தம் மேற்பழி விளம்பில்
கொடுத்த வேள்மிசை நிந்தைகூ றுதற்குவைத் திருத்தல்
கடுத்து வாழ்தர ஒருத்திபொன் னோலைகா தணிந்தாள்."
(மாயைபூசைகதி, செய். ௪0)

(அழிமின் - அழியுங்கள். அனங்கவேள் - அனங்கனாகிய வேள், மன்மதன். ஓலை - மன்மதனுடைய ஆணை பொறித்த ஓலைச் சுருள்.)

பொன்னோலை என்னும் அணி ஓலைச் சுருள்போல் பொன்னாற் செய்து காதிலணிவது. முற்காலத்தில் அரசன் ஆணையை அனுப்புவோர் பனையோலையிலெழுதி அதனைச் சுருளாக்கி அனுப்பி வைப்பர். இவ்விரு பொருளுக்கு முள்ள வடிவொப்புமையைக் கொண்டு புதியதொரு கருத்தைத் தருகின்றார்.

இவ்வாறு மூக்கணி முதலிய அணிகளைப் பற்றிய வருணனைகளும் புதிய கற்பனைகளாகவே யுள்ளன.

## 15

சூரியன் மறைதலையும் சந்திரன் தோன்றுதலையும் வருணிக்கிறார். நீரில் மூழ்கி நீந்தி ஒருவரை யொருவர் தொட்டுச் சிறார் விளையாடுவர். இது சாதாரணமாக யாவருங் காணத்தக்க ஒரு காட்சியே. அவ்வாறிருப்பினும் நம் புலவர்பெருமான் இதனை உற்று நோக்கி உள்ளத்து வைத்திருந்து இதனோடொப்பத் தக்க பொருளுக்கு உவமையாக்குகின்றார்.

சூரியன் மேலைக்கடலில் மறைகின்றான். சந்திரன் கீழ்க்கடலில் உதிக்கின்றான். இக் காட்சிகள் எவ்வாறிருக்கின்றனவெனில், நீர்விளையாட்டு விளையாடும் இருவருள் நீரில் குதித்து மூழ்கும் ஒருவனைப்போல இதுகாறும் உலகில் ஒளி வீசிய ஞாயிறு மேலைக்கடலில் விழுந்தது

(அத்தமித்தது.) நீரில் மூழ்கிக் கொண்டே மறைந்து வந்து மற்றொரு பக்கத்தில் எழுபவனைப் போல இருளைப் பருகிப் புதிய வெண்ணிறத்த சந்திரன் கீழ்க்கடலில் உதயமாயிற்று என்று இவ்வாறு எளிய உவமையில் பொருள் தெற்றென விளங்குமாறு அணிந்துரைக்கின்றார்.

இரண்டடிகளில் சூரியன் மறைவை அழகுற அமைத்தார்; மற்றிரண்டடிகளில் சந்திரன் தோற்றத்தை அழகுறக் கூறினார். சூரியனுக்கும் சந்திரனுக்கும் நீர்விளையாட்டு விளையாடும் இருவரை உவமானமாக்கினார். கவித்திறமையை நோக்குங்கள்:

"புனலின் விளையா டிருமைந்தர்
தம்முள் எழுந்து போயோடிப்
புனலின் விழுவான் போல்விழுந்த
தொளிஞா யிறுபோய்ப் புணரியிடைப்
புனலின் விழுந்து மூழ்குபுவந்
தெழுவான் போலக் குணுதுகடற்
புனலின் மிசைவந் தெழுந்ததிருள்
பருகிப் புதுவெண் திங்களே."

(பிரபுதேவர் வந்தகதி, செய். ௫௩)

(புனல் - நீர்; ஞாயிறு - சூரியன்; புணரி - கடல்; குணுது கடல் - கீழ்க்கடல்.)

## 16

ஓர் ஓவியக் கலைஞனின் கலைத்திறத்தைப் புலப்படுத்துகின்றார். அதனைக் காண்போம்:

கலியாண புரியில் ஒரு மாளிகை முன்வாயிலில் இரு பக்கத்தும் வாழை நாட்டியுள்ளது போல் வரையப்பட்ட சித்திரங்கள் உள்ளன. பச்சைக் கிளி ஒன்று அவற்றைச் சித்திரிக்கப் பட்டவை யென்றறியாமல் தனக்கு உணவாகுமென்று கருதி அவற்றிலுள்ள பழங்களைத் தின்ன அலகால் கொத்திற்று அதனால் அதற்கு அலகில் வலியுண்டாயிற்று. மற்றும், ஆங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ள

உண்மையான வாழைகளும் உள்ளன. அவற்றிலுள்ள பழங்களையும் அவ்வாறே சித்திரிக்கப்பட்டனவே யாமென்று கருதி அவற்றைத் தின்னாமல் அமர்ந்துள்ள தாம்.

இதில் உண்மையான கலைத்திறன் இத்தன்மைத்து என்று புலப்படுத்தும் அழகைக் கண்டு வியப்பதா? அன்றி நம் கவிஞர்திலகர் சமத்காரமாகக் கலையருமையைப் பாராட்டுவதைக் கண்டு போற்றுவதா?

அச்செய்யுள் :

"பொறித்த வாழையின் கனியினைக் கடைத்தலை பொருந்தக்
குறித்தி டாதுண வெனக்கறித் தலகுநோய் கொண்டு
நிறுத்து வாழையின் கனியுமச் செய்கையாய் நினைந்து
கறித்தி டாதமர் செம்முகப் பசுங்கிளி காணாய்."

(வசவண்ணர்கதி, செய். கஅ)

(பொறித்த - பொறிக்கப்பட்ட; நிறுத்து வாழை-நிறுத்தப் பட்ட வாழை. கறித்திடாமல் - தின்னாமல்.)

## 17

திருப் பருப்பதத்தை (ஸ்ரீசைலம்) வருணிப்பதில் அடிகளார் தனி இன்பங்கொள்கின்றார். அம்மலையை எவ்வாறெல்லாம் புனைந்துரைக்கலாமோ அப்படி யெல்லாம் அழகு பொருந்தப் பாடுகின்றார். இதற்குமேல் மற்றொரு புலவர் வருணித்தல் கூடுமோ என்றெண்ணுமாறு அதைப் பற்றிய பதினேழு செய்யுள்களும் கற்பனை நலங் கனிந்து அமைந்துள்ளன. அவற்றிலுள்ள கருத்துக்களும் மிகச் சிறப்புடையன. உதயகிரி, அத்தமனகிரி, கைலைமலை, மேருமலை, மைந்நாகமலை, விந்தமலை, மந்தரமலை ஆகிய மலைகள் யாவற்றிலும் திருப்பருப்பதம் சிறப்புடையதெனத் தம் மதிவன்மையாலும் கற்பனைத்திறத்தாலும் நாட்டுகின்றார். ஈண்டு அவற்றுள் சில காண்பாம்:

கயிலைமலை வெண்மையாக இருக்கிறது. ஏன்? அதற்கு ஒருகவலை. அக் கவலையால் மனம் நொந்து அதே

சிந்தனையால் உடல் வெளுத்திருக்கிறது. அக்கவலை தான் யாது? மேரு முதலிய எண்ணற்ற மலைகள் உலகில் உள்ளன. அவைகள் இருக்கவும், திருப்பருப்பதம் தன்னைக் கண்டு வணங்கியவரை என் ஒரு தலைமீது சுமக்கும்படி ஏற்றுவது ஏன்? எவ்வளவு சுமையைத் தனித்து யான் சுமப்பது? இவ்வாறு என்னை அவமதிக்கலாமா? என்பதாம். (ஸ்ரீ சைலத்தைக் கண்டு வணங்கினவர் கயிலையை யடைவர் என்பது இதன் கருத்து) கயிலை எப்பொழுதும் இக் கவலையே கொண்டிருப்பதால் உடல் வெளுத்ததாய்க் காணப்படுகிறதே தவிர வேறு காரணமில்லை யென்று தற்குறிப் பேற்ற அணிநலந் தோற்ற வருணிக்கின்றார். அச்செய்யுள் :

"பொன்னிற்குன் றெழுவா யாகப்
பொருப்பள விறந்த நிற்பச்
சென்னிக்கண் தவழ்வெண் திங்கள்
சிலாதரன் குழவி வெற்புத்
தன்னைக்கண் டவரை யென்னுர்
தலைமிசை ஏற்றும் என்னென்(று)
இன்னற்கண் படிந்தன் றேஅவ்
இறைமலை விளர்த்த(து) அம்மா!"

(கோரக்கர் கதி, செய். ௧௦)

(பொன்னிற் குன்று - மேருமலை, எழுவாயாக - முதலாக. பொருப்பு - மலை. சிலாதரன் - குழவி வெற்பு - ஸ்ரீசைலம். இன்னல் - துன்பம். இறைமலை - கயிலை. விளர்த்தது - வெளுத்தது.)

இவ்வாறு ஸ்ரீ சைலத்திற்குள்ள பெருமையால் கயிலை மலை கவலைகொண்டு வெளுத்தது என்றார்.

## 18

மேருமலை ஒரு காரணத்தால் சோகமுடையதாயிருந்தது. அதற்கு நேர்ந்தது என்ன? திருப்பருப்பதம் பரசிவலிங்கத்தைத் (மல்லிகார்ச்சுனரை) தன்பால் அமர்ந்திருக்கப் பெற்றிருப்பதுபோல என்பால் இறைவன் அமர்ந்

திருக்கத் தக்க தூய்மையை யடைந்தேன் இல்லையே! என்ற கவலையைப் பெரிதாகக் கொண்டிருந்தது. அச் சமயத்தில்தான் (மனம் உருகியுள்ள நிலையில்) சிவபெருமான் விரைந்தோடி அம்மேருமலையை முப்புரவாசிகளோடு போர்புரிய வேண்டி ஆயுதமாகக் கொள்ள வில்லாக வளைத்தார். இன்றேல் அவரால் அம்மேருவை வளைக்க முடியுமா? முடியாது. ஏனெனில், ஒரு காலத்தில் காஞ்சிப்பதியில் உமையம்மையார் இறைவனைப் பூசித்தார். வெள்ளம் பெருகி வந்தது. சிவபெருமானைக் கட்டித் தழுவிக் கொண்டார் அம்மையார். அப்பொழுது அம்மையாருடைய நகிலும் கைவளையும் சிவபெருமானுடைய திருமேனியில் பதிந்ததால் தழும்பாய்விட்டது. அவ்வளவு மென்மையுடைய அவர், வலிய மலையை வளைக்கும் ஆற்றலுடையவர் ஆவரோ? என்று அணிந்துரைக்கின்றார்.

அச்செய்யுள் :

"பரசிவ லிங்கம் ஒன்று
பருப்பதம் போல்த ரிப்பத்
துரிசற அடைந்தேன் இல்லை
என்னும்அச் சோகத் தீயால்
உருகுறும் அமையத் தோடி
ஒருமலை குழைத்தான் அன்றிக்
குருகமர் தளிரி யற்குக்
குழைந்தவன் குழைக்கு மோதான்."

(கோரக்கர் கதி, செய். ௧௧)

(குருகு அமர் தளிரியல் - வளையல் அணிந்துள்ள தளிர்போலும் இயல்பினையுடைய உமை. குழைந்தவன் - இளகியவன். மலை - மேரு. மேருவைப் பொன்மலை என்னும் வழக்குண்மையால் சோகத்தீயால் உருகுறும் அமையத் தோடி வளைத்தனன் என்றார். பொன் தீயால் உருகுதல் இயற்கை.)

இவ்வாறு திருப்பருப்பதத்திற்குள்ள சிறப்பால் சோகமுற்ற மேரு வளைய நேர்ந்தது.

## 19

மற்றும், மைந்நாகமலை தனக்குண்டான நாணம் பொறுக்கமாட்டாமல் கடலிற் போய் விழுந்து விட்டதாம். அதற்குண்டான நாணம் யாது? யானோ மலைகட்கு அரசனை மேருவின் அருமைப் புதல்வன். அவ்வாறிருந்தும் என்னை "சைலம்" என்ற தனிமொழியால் அழைப்பதில்லை. இம்மலையோ (ஸ்ரீசைலம்) தொடர் மொழியால் அல்லாமல் சைலம் என்ற பெயராலேயே உலகோரால் அழைக்கப் படுகிறது. அஃது ஈசன் என்ற பெயர் எல்லாக் கடவுளரை யும் குறிக்காமல் சிவபிரான் ஒருவரையே குறிப்பது போலுளது. இவ்வளவு பெருமை இம்மலை பெற்றிருக்க மலையரையன் மகனாகிய யான் பார்த்துக் கொண்டு வாழ்ந் திருத்தல் மானமுடைமை யாகாது. எனக்கு மிக்க வெட் கத்தைத் தருகின்றது என்று நாணந் தாங்கமாட்டாமல் உயிரைவிடத் துணிந்து மைந்நாகம் கடலில்போய் விழுந்து விட்டதாம்.

மைந்நாகம் கடலில் வீழ்ந்ததற்கு வேறு காரணம் இருப்பினும் அதனைக் கூறாமல், தமக்குண்டான நாணத் தைச் சகிக்கமுடியாதவர் கடலில் விழுந்து உயிரைத் துறத்தல்போல் மைந்நாகம் நாணத்தால் விழுந்துவிட்ட தென்று கூறும் கற்பனையைக் காண்க.

அச் செய்யுள் :

"பொருப்பிறை மகன்நான், எற்குப்
பொருந்துறு(து) ஈசன் நாமம்
நெருப்பனை யான்சார்ந் தாங்கு
நிகழ்தொடர் மொழியின் அன்றிப்
பருப்பதம் எனவே கூறப்
படும்இது என்னு நாணல்
திரைப்பொலி கடலிற் சென்று
வீழ்ந்தது சிலம்பொன் றம்மா!"

(கோரக்கர் கதி, செய். கஉ)

(பொருப்பு இறை - மலைகளுக்கு அரசனாகிய இமயமலை. சிலம்பு - மலை; இங்கு மைந்நாக மலை.)

இவ்வாறு திருப்பருப்பதத்திற்குள்ள உயர்வால் மைந்நாகமலை கடலிற் படிந்தது.

## 20

அடிகளார் தமது நூலில் சோதிமரத்தைப் பற்றிக் கூறுவதுண்டு. அவ்வாறே இந் நூலிலும் அதனை எடுத்தாள்கின்றார். சோதி மரமென்பது பகலில் பசிய மரம்போல் தோன்றி இரவில் ஒளிமயமாகக் காணப்படுவது. அதுபற்றிய கற்பனையும் ஈண்டு ஒன்று அமைத்துக் கூறுகின்றார்.

சூரியன் தோன்றியுள்ள பகற்காலத்தில் பறவைக் கூட்டம் சோதிமரத்தில் கூடுகட்டி முட்டையிட்டுச் சென்றது. இரவில் அடைகாப்பதற்காக வெளியே சென்ற அப் பறவைகள் வந்தன. ஒரே ஒளிமயமாக இருந்தது. அந்தோ! நாம் கூடுகட்டிப் பொறை யுயிர்த்துச் சென்ற மரம் தீப் பற்றிக்கொண்டதே என்று ஆகாயத்தில் சுழன்று சுழன்று இரங்குகின்றனவாம்.

அச் செய்யுள்:

"செங்கதி ரவன்எ ழுந்த
 திவாஇடைக் குடம்பை தெற்றிப்
பொங்கொளி மரத்திற் சீர்சால்
 புள்ளினம் பொறை யுயிர்த்துக்
கங்குலின் அடைகி டப்பக்
 கருதிவந் ததனைக் கண்டு
வெங்கனல் கொளுந்திற் றென்று
 மீமிசைச் சுழன்றி ரங்கும்."

(கோரக்கர் கதி, செய். கக)

(திவா - பகல். குடம்பை தெற்றி - கூடுகட்டி. ஒளிமரம்- சோதிமரம்.)

இவ்வாறு சோதிமரத்தைப் பிற தமிழ் நூல்களில் வைத்து வருணித்தல் அரிதாகவுளது. இம் மரத்தின் தொடர்புடைய கற்பனைகள் அடிகளார் இயற்றிய சோணசைலமாலை, கூவப்புராணம் முதலிய நூல்களில் உள்ளன.

## 21

ஒரு யானையின் விளையாட்டைக் கூறுகின்றார்: மலையை வருணிக்குமிடத்துக் குறிஞ்சி நிலத்தின் கருப்பொருளாகிய யானையைப் பற்றிக் கூறுமலிருக்கலாமா? திருப்பருப்பதத்தில் அடர்ந்த காடுகள் உள்ளன. அருவிகளும் ஒழுகுகின்றன. ஆங்கு யானைகளும் வாழ்கின்றன. ஒரு யானை நீர் அருந்த ஆற்றிற்கு வந்தது. மேலிருந்து இழுமென்னும் ஒலியுடன் ஒழுகுகின்ற அருவிநீரைத் தனது துதிக்கையால் முகந்தது. அந்நீரைத் தன் வாய்க்குள் பெய்வதற்குள் அதற்கொரு நினைவு உண்டாயிற்று. துதிக்கையை உயர்த்தி பூ பூ என்று ஊதிற்று. நெருப்பு எவ்வளவு தாழ்த்திப் பிடித்தாலும் மேல் நோக்குந் தன்மைத்து. நீர் எவ்வளவு உயரத்திலிருந்தாலும் கீழ் நோக்கி யோடும் இயல்புடையது என்று கூறும் உண்மைக்கு மாறுகத் துதிக்கை நீர் ஆகாயத்திற் சென்று அழகிய கதிர்களையுடைய சந்திரனை யொக்கும் என்னும்படி நீர்த்திவலைகளை யுண்டாக்கிற்று.

இந்தக் கற்பனையில் தீயின் இயல்பைக் கூறுகின்றார். நீரின் தன்மையை அறிவிக்கின்றார். காற்றின் வேகத்தால் நீர் உந்தப்பட்டு மேனோக்கிச் செல்லுதலையும் உணர்த்துகிறார். யானையினுடைய விளையாட்டு வருணனையில் எத்துணை அரும் பொருள்களை யாம் அறிய எடுத்துரைக்கின்றார். மேலும் அவ் யானையைத் துளைபொருந்திய கையையுடையது; வெள்ளிய மருப்பையுடையது; உரல்போன்ற கால்களையுடையது; மதநீர் ஒழுகும் ஈரமான கவுளினை உடையது எனச் சிறப்பிக்கின்றார். இத்தகு கலைத்திறன் பிற கவிஞர்பால் காணுதல் கூடுமோ?

அச் செய்யுள் :

" தூங்கிசை யருவி பாயத்
துளைக்கைவெண் கோட்டு ரற்கால்
ஈர்ங்கவுள் நெடுநல் யானை
ஏற்ப,வெந் தழல்அ லாமல்
தேங்குதண் புனல்மேல் நோக்கா
தென்பது தீரச், சென்று
பூங்கதிர் பனிவெண் திங்கள்
போன்மெனத் திவலை செய்யும்."

(கோரக்கர் கதி, செய். கசு)

(போன்ம் - போலும். கவுள் - கன்னம்.)

இவ்வாறு திருப்பருப்பத வருணனைகள் யாவும் உள்ளங் கவர்வனவாக உள்ளன.

## 22

அல்லமதேவர் வருகைக்காகக் கலியாணபுரி நகரைப் பலவகையாக அலங்கரித்தனர். மாடங்களின்மேல் (மாவிலை) பச்சிலைத் தோரணங்கள் கட்டினார்கள். அத் தோற்றம் பச்சைக்கிளிகள் வானில் வரிசையாகப் பறப்பது போல் உள்ளதாம்.

அச் செய்யுளடிகள் :

" பலர்புகழ் மணிமா டத்துப்
பறக்கும்ஒண் கிளியொ ழுங்கில்
இலைசெரு கியப சும்பூந்
தோரண மிசைய ஆர்த்தார்."

(சூனிய - இருந்த கதி, செய். சு)

என்று கூறும் உவமை எவ்வளவு பொருத்தமாக அமைந்துள்ளது !

## 23

இனி மனைகளின் புறத்தோற்றத்தை வருணித்தலைப் பார்ப்போம். வாழை, கரும்பு, கமுகு இவைகள் மருத

நிலத்தில் உண்டாவன. ஆகவே இவை ஓரிடத்தில் சேர்ந்திருக்கின்றனவாகும். அல்லமதேவர் வருகைக்காகக் கலியாணபுரியிலுள்ள மாளிகைகளின் முன் வாயில்களில் இவற்றைக் கட்டி அலங்கரித்திருக்கிறார்கள். அவ்வாறு கட்டியிருக்குந் தோற்றம் இவைகள் தம்முள் கூடி ஆலோசித்துக்கொண்டு அந் நகரத்துள்ள மாதர்களுடைய தொடை, தோள், கழுத்து என்னும் அங்கங்களின் அழகை யாசிக்கும் செயலை மேற்கொண்டு வந்தடைந்துள்ளன போல் உள்ளதாம்.

ஒருவர்பால் ஒன்றை யாசிப்பவர் முன்வாயிலினின்று யாசிப்பர். அத்தன்மையைப் புலப்படுத்துகின்றதாம் வாழை, கரும்பு, கமுகு இவைகள் வாயிலின் முன்னர் நாட்டப்பட்டிருத்தல். இவைகள் யாசிப்பதென்ன? வாழை மாதர்களுடைய தொடை யழகையும், கரும்பு தோளின் வனப்பையும், கமுகு கழுத்தின் அழகையும் ஆகும். பெண் களுடைய தொடை, தோள், கண்டம் ஆகிய அங்கங் களுக்கு முறையே வாழை, கரும்பு, கமுகு இவற்றை உவமானமாகக் கூறுதல் உண்டு. உவமம் உயர்ந்த பொருள். அவை யாசித்ததற்காக வந்துள்ளன போலும் எனின் அவற்றினும் உவமேயப் பொருள் சிறப்புடையன என்பது பெறப்படும்.

அச் செய்யுள் :

“ வயலிடஞ் சேர்ந்து நின்ற
வாழையுங் கரும்பும் பாளை
உயரிளங் கமுகும் ஒன்றோ
டொன்றுநின் றுசாவித் தாமெல்
லியர்அருந் தொடை,தோள், கண்டம்
எனும்உறுப் பழ(கு) இரக்குஞ்
செயலில்வந் தடைந்த என்னச்
செழுங்கடைத் தலைமுன் ஆர்த்தார்.”

(சூனிய - இருந்த கதி. செய். கஉ)

(உசாவுதல் - ஆலோசித்தல், வினவுதல். ஆர்த்தார் கட்டினர். மெல்லியர் - பெண்கள்.)

இங்கு இல்லங்களின் புற அலங்கரிப்பை நம் அகக் கண்முன் காட்டுகின்றார். அந்நகர மாதர்களின் வனப்பையும் புலப்படுத்துகின்றார். வாழை, கரும்பு, கமுகு ஆகிய ஓரினப் பொருள்களைக் கொண்டு நிரனிறையணிபட ஒரு கற்பனையையும் அமைத்துத் தருகின்றார்.

## 24

அல்லமதேவரை வரவேற்க வசவண்ணர் செல்கின்றார். அவருடன் பல விருதுகளும் செல்கின்றன. பல ஏவலர் குடைகள் தாங்கிச் சென்றனர். பலர் சாமரைகளை அசைத்துச் சென்றனர். அவற்றை வருணிக்கின்றார்.

முழுமதியை மன்மதனுடைய குடையாகக் கவிஞர் கூறுவர். முழுமதி வட்டமாகவும் வெண்மையாகவும் இருக்கிறது. ஆதலின், வடிவாலும் உருவாலும் ஒப்புமை பொருந்தும். ஆனால் குடைக்குக் கையில் பிடித்தற்குரிய காம்பு உண்டு. சந்திரனிடத்து அதற்கேற்ற அங்கம் இல்லை. ஆதலின் அதனை முழுதும் வடிவால் ஒத்ததாகக் கூறுதல் பொருந்தாது. ஒருபுடை யொப்புமையாகவே கொள்ளல் வேண்டும். இக் குறையை அடிகளார் இந் நூலின் மாயையினுற்பத்தி கதியில் நகரச் சிறப்புக் கூறுமிடத்தும் அறிவிக்கின்றார். அந்நகரில் ஈரப் பலாவின் பழம் பூமிக்குள் பழுத்திருக்கிறது. அதனால் நிலம் வெடிப்புண்டான இடத்தின் வாயிலாக ஆதிசேடனுடைய முடியிலுள்ள இரத்தினத்தின் ஒளி வானத்து விளங்குகின்ற மதியைப் பொருந்தி மன்மதனுடைய குடைக் காம்பாகத் தோன்றுகிறது என்கின்றார். அவ்வாறே இவ்விடத்தும் மன்மதன் குடையாகிய சந்திரனுக்குக் காம்பு இல்லை. ஆனால் இக் குடைகளுக்கு ஒளி விளங்குகின்ற பசும் பொன்னாற் செய்யப்பட்ட காம்புகள் உண்டு. ஆதலின் அக்குடை (மன்மதனுடைய குடை) இவற்றினும் எவ்வாறு உயர்வுடையதாகும் என்று கூறுமாறு பல வெண் குடைகள் எழுந்தனவாம்.

மற்றும், ஐம்புலன்களை வென்ற வீரராகிய வசவண்ணர் சென்ற தெருக்களெங்கும் கவரிமான் இல்லாமலே அதனுடைய வால் ஆடிற்று. (சாமரையை அசைத்தனர்) என்று வியப்புச்சுவை தோன்றக் கூறுகின்றார்.

அச் செய்யுள் :

"நலங்கிளர் மதன்கு டைக்கு
நகைமணிக் காம்பில் என்ன
இலங்குறு பசும்பொற் காம்போ(டு)
எண்ணில்வெண் குடையெ ழுந்த
புலன்களை வென்ற வீரன்
போகிய மறுகில் எங்கும்
விலங்கினை யன்றி அந்த
விலங்கின்வால் ஆடிற் றன்றே."

(சூனிய - இருந்த கதி, செய். உசு)

(புலன்களை வென்ற வீரன் - வசவண்ணர். விலங்கு - கவரிமான். விலங்கின் வால் - சாமரை.)

இதன்கண் "விலங்கினை யன்றி யந்த விலங்கின் வால் ஆடிற் றன்றே" என்று கூறியுள்ளது எப்புலவர் மதியினும் இந்நாள்வரையில் தோன்றாத புதிய கற்பனை. ஒரு மிருகம் இருக்கும் இடத்தில்தான் அதனுடைய வால் இருந்து ஆடும். "தலையில்லாமல் வால் ஆடுமா?" என்பது பழமொழி. அதற்கு மாறாகக் கவரிமான் இல்லாமலே அதனுடைய வால் (வெண்கவரி) அசைந்தது என்று அயற்காரண விபாவனை என்னும் அணிநலம்பட ஆசிரியர் உரைக்குந் திறங் கண்டின்புறுக.

## 25

அல்லமதேவர்க்கு வசவண்ணருடைய கருத்தறிந்து ஒழுகும் ஏவலர் திருமடத்துள்ள உணவுகளையெல்லாம் இடத்தொடங்கினர். பலர் அவர் முன்னர் வடை, மாங்கனி, கரும்பு ஆகியவற்றையும் இட்டனர். அவற்றைப் பார்க்குங்கால் வடை சக்கரமாகவும், மாங்கனி கவணில்

வைத்தெறியும் கல்லாகவும், கரும்பு கதையாகவும் காணப் பட்டன. எல்லா உலகங்களுக்கும் நிமித்த காரணனாகிய அல்லமர் முன்னர் இவற்றைப் போர்முகத்துள்ள வீரர் களைப்போலப் படை படை (இடுக; இடுக.) என்று இட்டனர் என்கின்றார்.

அச்செய்யுள் :

"விடைபடு திகிரி யாக
  மாங்கனி கவண்கல் லாக
உடைபடு கழைக்க ரும்பங்
  கொண்கதை யாகக் கொண்டு
கடைபடும் உலகிற் கெல்லாம்
  காரிய கருத்தன் முன்னர்ப்
படைபடை எனச்சொ ரிந்தார்
  படைமுகத் திளைஞர் போல."

(ஆரோகணகதி, செய். ௩௫)

படை என்ற சொல்லைப் பெயர்ச் சொல்லாகக் கொள் ளின் சேனை என்றும், ஏவல் வினைமுற்றாகக் கொள்ளின் இடு என்னும் பொருளும் கொள்ளப்படும். இவ்வாறு இருவேறு - பொருள் படுதலைக் கொண்டு அதற்கேற்ற வாறு ஒரு கற்பனைச் செய்யுளை அமைத்துக் காட்டுந் திறனைக் காண்க. உணவு பரிமாறுவோர் படை என்று கூறுதல் உண்டு.

இவ்வாறு அடிகளாருடைய கற்பனையாற்றல் விளங் கும் இடங்கள் இந்நூலில் பல உள்ளன. அவற்றை அறிஞர்கள் ஆய்ந்துணர்ந்து இன்பம் பெறுவார்களாக.

# கக௬. முடிப்புரை

இக்காப்பியத் தலைவராகிய அல்லமாப்பிரபு தேவரும், மற்றும் இந்நூலில் சிறப்புடையவர்களாய்க் கூறப்பெறும் வசவண்ணர், சென்ன வசவேசர், சித்தராமர், அக்கமா தேவியார் முதலியவர்களும் உலகில் வாழ்ந்திருந்தவர்களே யாவர். அவர்கள் அமைத்துள்ள திருமடங்கள், கோவில், குளம் முதலிய அறநிலையங்களும் இயற்றியுள்ள கன்னட நூல்களும் இன்றும் நாம் காணத்தக்கனவாகவும் அறியத் தக்கனவாகவும் உள்ளன. இவர்கள் ஆற்றிய அரிய சமயத்தொண்டினாலேயே கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் மைசூர், பம்பாய் மாகாணம், ஆந்திரப்பிரதேசம் முதலிய இடங்களில் வீரசைவசமயம் பரவிச்செழித்தோங்கலாயிற்று. சமண முதலிய புறச்சமயங்களின் வளர்ச்சி குன்றலாயிற்று. இவ் வுண்மையறியாத சிலர் இவர்கள் உலகில் வாழ்ந்திருந்தவரல்லர் என்றும், இந்நூல் வீரசைவ சமய நெறியைக் காப்பிய வடிவில் புனைந்துரையாக ஆக்கப்பட்டதென்றும் உரைப்பர். மற்றும், இந்நூலின் முற்பகுதியாகவுள்ள மாயையின் வரலாற்றில் வரும் மமகாரன், மோகினி, மாயை ஆகிய பெயர்களை நோக்குங்கால் அல்லமர் உலக மாயையினின்றும் நீங்கியவர் என்னும் பொருளை நூலாசிரியர் இவ்வாறு சித்திரித்துக் காட்டுகின்றார் என்றே நமக்குத் தோன்றும். ஆயினும் கன்னடப் புலவர்கள் மமகாரன் முதலியவர்கள் உலகில் இருந்தவர்களே யென்றும் மமகாரனுடைய அரண்மனை இடிந்து பாழடைந்துள்ளது என்றுங் கூறுகின்றனர். தார்வார் வீரசைவ இலக்கிய நூற்குழுவினரால் வெளியிடப் பெற்றுள்ள கன்னடப் பிரபுலிங்கலீலையில் வனவசை நகரிலுள்ள மதுகைநாதன் கோவிலையும் அக்கோவிலிலுள்ள மாயையின் உருவத்தையும் நிழற்படமாக எடுத்துச் சேர்த்துள்ளனர். இம் மதுகைநாதன் கோவிலில்தான் மாயை நடனம் புரிந்தாள் என்பது ஈண்டு நாம் நினைவிற் கொள்ளத் தக்கது. ஆகவே அம் முற்பகுதியையும் கன்னடப் புலவர்

கள் உண்மை வரலாருகவே நம்புகின்றனர் என்பது போதரும். மமகார மன்னன் நாட்டு வரலாற்றில் இடம் பெற்றுள்ளவனு? என்பதும் அவனைப்பற்றிய பிற செய்திகளும் அறிய முடியவில்லை. இஃது அறிஞர்களுடைய ஆராய்ச்சிக்குரியதாகுமென விடுக்கின்றேன்.

பிரபுதேவர், நிராங்கார—சுஞ்ஞானிகளாகிய தந்தை தாயர்க்குத் தோன்றினர் என்ற அளவிலேயே நாம் அவருடைய பிறப்பைப்பற்றி அறிய முடிகிறது. அவருடைய பிறப்பை,

"ஒருங்கு மனமோ டிணையசிவ
யோக சமாதி நவதிங்கள்
நிரம்ப இருந்த காலத்து
நெற்றி மிசையிற் பரஞ்சோதி
திரண்டு குழவி யுருவாகிச்
சென்று புறமுற் றிடஅதனை
விரும்பு மிருவர் தாமுமுடன்
விழிகள் திறந்து கண்டனரால்."

(விமலைகதி, செய்யுள். உஎ)

என்ற செய்யுள் அறிவிக்கின்றது. இச்செய்யுள் நிராங்கார-சுஞ்ஞானிகள் சிவயோக சமாதியிலிருக்க, நெற்றியில் தோன்றிய பரஞ்சோதியே குழவியுருவமாகிப் புறத்தே தோன்ற அம்மகவை அவ்விருமுது குரவர்கள் கண்டனர் என்று விவரிக்கின்றது. இங்ஙனம் தோன்றிய மகவே அல்லமாப் பிரபுதேவர் என்ற பெயருடன் விளங்கினர் என்றும் நூல் நுவல்கிறது. ஆதலின் இவருடைய பிறப்பைக் கூறுந்திறன் உலக இயற்கையோடு பொருந்தியிருக்கவில்லை. இவ்வாறே இவருடைய மறைவும் விளக்கமுருமல் இருக்கின்றது. இந்நூலின் இறுதியாகிய மான்மிய கதியில்,

"இன்னவா றருளி னனே
இவருற விவர்வே றென்ன(து)
அன்னைபோ லுயிர்கட் கெல்லாம்
ஆரரு ளொருங்கு செய்தே

என்னையா ளெனக்கொண் டாளும்
இணையடிக் குருகு கேசன்
மன்னுமா தவர்கள் நெஞ்ச
மலர்தொறும் வாழா நின்றான்.'' (செய்யுள், உ௦)

என்று அல்லமர் நித்தியமாகவுள்ளவர் என்ற பொருளிலேயே கூறப்பெறுகிறது. பிரபுதேவர் இறைவன் கூறாக உலகிடைத் தோன்றியவர் என்பதால் முதனூலாசிரியராகிய சாமரசரும் வழிநூலாசிரியராகிய சிவப்பிரகாச அடிகளாரும் இங்ஙனம் கூறிச் செல்கின்றனர் போலும்.

உலகில் தோற்றமுற்ற பிரபுதேவர் உலகமக்களுடைய வல்வினையைத் தம் அறிவுரையால் போக்கக் கருதித் தம் தாய் தந்தையரை விட்டகன்று உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினார். அப்பொழுது மமகாரன் மகளாகிய மாயை அவரைக் கண்டு காமுற்றாள். அவர்பால் அடையத்தகும் ஞானத்தை விரும்பாமல் காம இன்பத்தையே விழைந்தாள். அதனால் அவளைத் துறந்தகன்றார். இவ்வரிய செயல் பிரபுதேவருடைய பொறிவாயில் ஐந்தவித்த பொய்தீர் ஒழுக்கத்தை உலகோர் அறியச் செய்தது.

பின்னர் மாதவத்தோர் வாழும் இடங்களை நாடிச் சென்று ஞானம் ஒன்றினாலே வீட்டின்பத்தை யடைதல் கூடும் என்ற உண்மையை அறிவிக்கத் தொடங்கினார்.

இந்நிலையில் பிரபுதேவர் உலகில் ஞானாசிரியர்களாகவுள்ளவர்கள் எங்ஙனம் இருத்தல் வேண்டுமென்பதற்கோர் எடுத்துக்காட்டாகவும் ஞானவுருவினராகவும் பொறையின் வடிவமாகவும் அருளுக்கொரு புகலிடமாகவும் விளங்கினார். உலகிடை குரு, இலிங்க, சங்கமபத்தியை விளக்கினார். தாமே குரு, இலிங்க, சங்கமமாகவும் விளங்கினார். ஒரே இடத்தில் நிலைத்திராது ஆங்காங்கு அன்பர்கள் உள்ள இடங்களுக்குச் சென்று சென்று ஞானத்தை வாரி வாரி வழங்கினார். "எவ்வெவர் திறமும் அப்பரிசதனால் ஆண்டு கொண் டருளியும்'' (கீர்த்தித் திருவகவல் - கஉ௫) என்று

மணிவாசகப் பெருமான் அருளியவாறு அவ்வவர் தரத்திற் கேற்ப மெய்யுரை யருளி ஆட்கொண்டார். உலகர் பிறந்த பயனைச் சிவலிங்க வழிபாட்டால் அடையக்கூடுமென்பதை யுணர்த்த வேண்டி அங்கையில் சிவலிங்கந் திகழப் பல இடங்களில் சஞ்சரித்தார். இதனைக் கூறுங்கால்,

"அடியர் வேண்டிற் றேபுரியும்
அல்ல மப்பேர் எம்பெருமான்
நெடிய விழிகள் அருள்சுரப்ப
நிமல லிங்கங் கரத்தேந்திப்
படியி லரிய தவஞ்செய்யும்
பத்த ருள்ளங் களிகூர
வடிய இளமாத் தழைப்பவரு
மந்தா நிலம்போற் சரிக்கின்றான்."

(கொக்கிதேவர்கதி, - செய். ௬0)

(மந்தாநிலம் - தென்றற்காற்று. மா - மாமரம்.)

"எரிபுரை தளிர்த ளிர்ப்ப
இளமரக் காவில் தென்றல்
மருவுதல் போல அன்பர்
மனமொடு கண்க ளிப்ப."

(கோரக்கர்கதி, செய். எ)

என்று இவர்க்குப் பல இடத்தும் தென்றலையே உவமைப் படுத்துகின்றார் ஆசிரியர். ஆதலின் இவர் அன்பர்கள் விரும்பும் வண்ணம் உலகிடை விளங்கினாரென்பது நன்கு விளங்கும்.

இவ்வாறு பிரபுதேவர் சஞ்சரிக்குங்கால் அவருடைய அருளுக்கு இலக்காயினோர் பலர். அவர்களுடைய வரலாறுகளும் இந்நூலில் இணைந்துள்ளன.

**கொக்கிதேவர்** என்பார் எய்தற்கரிய யாக்கையைப் பெற்றதன் பயனாகச் செய்தற்கரிய அறங்கள் பல புரிந்து, அப்புண்ணியப் பயனால் பிறவியினின்றும் நீங்கக் கூடுமென் றிருந்தவர். அவர்க்குப் புறக் கருமத்தால் சிறிய விண்

ணின்பமே கிடைக்கப் பெறும் என்பதை யுணர்த்தினர். இலிங்க நிட்டையிலமர்ந்திருந்த அநிமிடன் என்ற சிவயோகியை நேரிற் காணச்செய்து, சிவஞானத்தால் பிறவித் துயர் நீங்குமென்பதையும் விளக்கியருளினர். குரு, இலிங்க, சங்கமம் என்ற முப்பொருளுக்கும் உள்ள தொடர்பையும் நேரில் காட்டித் தெளிவித்தார்.

**சித்தராமர்** ஒரு கருமயோகி. தாவரலிங்க வழிபாடுடையவர். சரியை கிரியாதிகளைச் செய்து வீடுபேற்றை யடையக் கூடுமென்ற கருத்தினர். அவரைத் தம் பொறுமையால் ஆட்கொண்டார். பரமஞானம் ஒன்றே முத்தியைப் பயக்கும். சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றும் ஞானம் மருவுவதற்கு ஏதுவாகும் என்றும், மனம் புறத்தே செல்லாமல் அடங்கப் பெற்ருல் இறைவனும் உயிரும் பேதமோ அபேதமோ என்றெண்ணும்படியான அறியாமை நீங்கும் என்றும் விளக்கி யருளினர். இவரை நண்பராகக் கொண்டு அங்கலிங்க சம்பந்தமுடையவராகச் செய்தார்.

**வசவண்ணர்** குரு, இலிங்க, சங்கம பத்தியிற் சிறந்து விளங்கினர். அவரை யணுகி அவருடைய திருமடத்தில் மருளசங்கரர் போன்ற சிவஞானிகள் பலர் இருத்தலைக் கண்டு வியந்து அவருடைய தொண்டினைப் போற்றிப் புகழ்ந்தார். அவரைத் தமக்கு மாணவனுகக் கொண்டார். அவர்க்கு அன்பின் பெருமையையும் இட்டலிங்கத்தின் தத்துவத்தையும் மனத்தை யடக்கும் நெறியையும் இலிங்க நிட்டையால் உலகப்பற்று நீங்கி உயிர் சிவமாதலையும் விளக்கியருளினர். ஒரு செயலுமின்றிச் சிவானுபூதிச் செல்வராய் விளங்கிய மருளசங்கரருடைய பெருமையை யாவரும் அறியச் செய்தார்.

**கோரக்கர்** ஒரு சித்தர். உடல் வாழ்தலே தான் வாழ்தலாகக் கருதியிருந்தவர். அவரைத் தமது அரிய ஆற்றலால் காயசித்தி பெற்று வாழும் சித்தரிலும் சிவஞானிகள் சிறந்தோராவர் என்பதைத் தம்மைக் கொண்டே யறியச்

செய்து அவர்க்கு ஞானநெறியை யருளினர். அவரைச் சோகம்பாவனை கொண்டு நிற்கச் செய்தார்.

முனிவர்கள் வேள்வியியற்றுவதால் விளையும் சிறிய பயனைக் கருதி அவ்வினையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களுக்குத் தத்துவமசிப் பொருளை விளங்கச் செய்து ஞான நிலையினராகச் செய்தார்.

அக்கமாதேவியார் காட்டிலும் குன்றிலும் ஞானாசிரியனைத் தேடியலைந்து கலியாணபுரியில் தம்மை யடைந்த பொழுது, அவரது சத்திநிபாத நிலையைக் கண்டு, அவர்க்கு அபேதமற்ற முத்தியை யடையும் நெறியை யருளினர்.

முத்தாயி அம்மையார் சிவஞானிகளுடைய உண்மை நிலையினையறியாதிருந்தவர். அவர்க்கு ஞானிகளின் இயல்பை யுணர்த்தி அவரையும் ஞான நிலையினராகச் செய்தார்.

கொலைபுரிதலையே தொழிலாகக் கொண்டிருந்த ஒரு வேடனுக்கும் தம் அருட்பார்வையால் ஞானம் வழங்கி அவனை உய்வித்தார்.

வசவண்ணர், நிட்கள சிவம் ஆறு ஆதாரங்களையுங் கடந்து அப்பால் விளங்கும் உண்மைநிலையை உலகினர் புறத்தே கண்டுணர வேண்டி ஏழுநிலைகளையுடைய சூனிய சிங்காதன பீடத்தை அமைத்தார். அதன்கண் அல்லமர் ஏறியமர்ந்து வசவண்ணரும் ஏனைய சிவசரணர்களும் அகத்தும் புறத்தும் தம்மைக் கண்டு களிக்கச் செய்தார்.

இவ்வாறு அல்லமர் யாவர்க்கும் ஞானத்தை வாரி வழங்கினர். இவர் ஞானம நல்கிய திறத்தை,

"நல்லன தீயன நாடு ருதுகொள்
வல்லழ லென, அருண் மழையெ னப்படும்
அல்லமன் எதிர்ந்தவர் அறமுளார் அறம்
இல்லவ ரெனுதறி(வு) இயற்றி னரோ."

(முனிவரர்கதி, செய். க)

"யாவருந் தனதருட் கேற்று ளாரெனப்
பாவவன் றளையறப் பரிந்து நன்னெறி
மேவவந் தருள்புரி விமலன். (முனிவரர்கதி, செய். ச)

என்னும் பகுதிகள் உணர்த்துமாறு காண்க.

மற்றும், அல்லமர் உண்ட உணவால் சிவசரணர்கள் யாவரும் பசி தணிந்து உவப்புடன் இருந்தனர் என்னும் செய்தியால் அல்லமர் எவ்வுயிர்க் கண்ணும் நிறைந்திருப்பவர் என்னும் பொருள் விளக்கமாகிறது. விமலகதியில் வரும்,

"எள்ளில் எண்ணெ யென,ப்படர்
இந்தனத் தெரி யென்ன, வாய்
விள்ளு மென்மலர் மணமென
விரவி யெங்கணு நிற்பினும்
வள்ளல் அல்லமன் அன்பர்தம்
மனம டைந்து விளங்குவன்
தெள்ளும் இன்சுவை விம்முபால்
திரண்மு லைக்கணின் ஒழுகல்போல்."
(செய்யுள், ௫0)

(இந்தனம் - விறகு. எரி - தீ)

என்ற பாசுரமும் இக் கருத்தை வலியுறுத்தும்,

இவற்றால் அல்லமர் உலகமாயையை வென்றவர், மெய்ம்மை அறிவருள் குரவனாக விளங்கியவர், எங்கும் நிறைந்திருப்பவர் என்னும் அவருடைய ஒப்புயர்வற்ற மூன்று இயல்புகளை இந்நூல் விளக்கியுரைத்தல் காண்க.

இந்நூல் சிவாத்துவிதமாகிய வீரசைவசமய நூலாதலின் அச்சமயநெறிகளும் ஆங்காங்கே விளக்கப்பட்டுள்ளன. இச்சமய நூல்களை யுணர்ந்தவர்களும் அறிவிப்பவர்களும் தமிழகத்து இலைமறைகாய்போல் உள்ளனராதலின் இச் சமயத்தைப் பற்றிப் பலவாறு எண்ணுபவரும் உளர். ஆதலின் இச்சமய வுண்மைகளையும் இந் நூலினின்று அறிவித்தல் இன்றியமையாததாகும்.

இச் சமயம் வேதம் ஆகமம் ஆகிய இருபெரு உயரிய நூல்களையும் ஆதாரமாகக் கொண்டது. சில வரலாற்று ஆசிரியர்கள் "இச் சமயத்தினர் வேதத்தை ஒப்புக் கொள்வதில்லை; ஆகமங்களையே ஆதார நூல்களாகக் கொள்வர்" என்று எழுதுகின்றனர். அது முற்றிலும் பொருந்தாது. இதனை,

"அருமறை முடியுஞ் சீர்சால்
ஆகம முடியு மொத்துப்
பொருமற மிலாமல் முற்றும்
பொருளினை விளங்கக் காட்டித்
தருமுறை யதனால் வீர
சைவமே தலைமைத் தாமிவ்
விருமறு வறுநன் னூலும்
இதிற்பிர மாண மாகும்."

(மான்மியகதி, செய். கூ)

என்னும் பாசுரம் உணர்த்தும். இந்நூலின் துதிகதியில் படலத்தொகையை,

"நாற்கதி தருமிடர் கடந்து நச்சுநர்
பார்க்கதி முதலிரு பத்தைந் தாங்கதி
மேற்கதி பெறஅருள் விளங்கும் அல்லமன்
சீர்க்கதி இருபதோ டைந்துஞ் செப்புவாம்."

என்று அறிவிக்கும் இச்செய்யுள் "தன்னை விரும்பியவர் தேவகதி, மனிதகதி, விலங்குகதி, நரககதி ஆகிய நால்வகைப் பிறப்பிலும் உண்டாகின்ற துன்பத்தைக் கடந்து மண் முதலிய இருபத்தைந்து தத்துவங்களுக்கு மேற்பட்ட முத்திநிலையை யடைய அருள்புரிகின்ற அல்லமதேவரது புகழையுடைய இருபத்தைந்து படலங்களையும் கூறுவாம்" என்னும் பொருள் தருதலான் வீரசைவ சமயம் இருபத்தைந்து தத்துவங்களையே கொண்டது என்றும், மாயாவாதம் போலுளதென்றும் சிலர் உரைப்பர். இக்கூற்று நூல்முழுவதையும் ஆராயாமல் உரைப்பதாம். ஆசிரியர் இருபத்தைந்தாங் கதிக்கு மேற்கதி என்

றனரே யன்றித் தத்துவங்கள் இருபத்தைந் தென்று வரையறுத்து ஓதிஞரல்லர். இருபத்தைந்து தத்துவங் களுக்கு மேற்பட்ட நிலையாகவுள்ளதே முப்பத்தாறையுங் கடந்து பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் பெற்ற முத்தி நிலையுமாகும். ஆதலின் மேற்கதி என்றது அந்நிலையையே சுட்டியதென அறிக. இச்சமயம் முப்பத்தாறு தத்துவங் களையும் கொண்டதேயாம். இதனை இந்நூலில் சித்தராமர் கதியில்,

"புலன்களை யொழித்த போதே
 பொறிகளும் பூத மைந்துங்
கலங்குறு கரண நான்குங்
 கலாதியுஞ் சுத்த மைந்தும்
விலங்குறும் அடியில் வைத்த
 வெறுங்குடந் தள்ளின் மேன்மேல்
மலங்குற வொருங்க டுக்கு
 மட்கலம் விழுத லேபோல்." (செய்யுள், எஉ)

எனவரும் செய்யுளில் புலன் ஐந்தும், கன்மேந்திரிய ஞானேந்திரியங்கள் பத்தும், ஐம்பூதமும், அந்தக்கரணம் நான்கும், கலைமுதலிய ஏழு தத்துவங்களும் சுத்த தத்து வம் ஐந்தும்ஆக தத்துவங்கள் முப்பத்தாறும் விதந்தோ தப் படுதல் காண்க. மற்றும் வடமொழியினின்றும் சிவப்பிர காச அடிகளாரால் மொழி பெயர்க்கப் பெற்றுள்ள சித் தாந்த சிகாமணி என்னும் பெருநூலில்,

"தத்துவ முப்பத் தாறுஞ்
 சமைத்திடப் பட்டு மாசில்
சுத்தநன் மனமாம் பீடந்
 துளக்கற அமைத்து ஞானப்
புத்தொளி மணி விளக்குப்
 பொருந்துறு மிந்த யாக்கை
அத்தனஞ் சிவனி ருக்கும்
 ஆலய மென்பர் மேலோர்."
(பிண்டாகாசத்தலம், செய்யுள், ௬)

என்னும் செய்யுளிலும் முப்பத்தாறு தத்துவங்கள் கூறி யிருத்தல் காண்க.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்டென் பதிலும் உடன்பாடுடையது இச் சமயம். இதனை,

"பாசம் ஏது? பசு எனப் பட்டதேது?
ஈசன் யார்? பதி எவ்வகை யாருயிர்க்
காசு தீர அருளும் அருளுடைத்
தேசிகா! எனத் தேர்பவர் ஓர்சிலர்."

(ஆரோகணகதி, செய்., கஉ)

என்றும்,

"பதியுமப் பதியாற் காணும்
பசுவுமப் பசுவின் ஞானம்
பொதியுமைம் பாசந் தானும்
பொருளென வழக்கிற் கூறும்
விதியுமப் பாசம் பொய்யாய்
வேறாம் வீடு மோதி
மதிமயக் கறுத்த தென்ன
வசவனு மருங்கு சென்றான்."

(சூனிய...இருந்தகதி, செய், கஅ)

என்றுங் கூறப்பட்டுள்ள பாசுரங்கள் நன் குணர்த்தும். இதன்கண் ஐம்பாசம் என்ற தொகைச்சொல் ஆணவம், கன்மம், மாயை, வைந்தவம், திரோதாயி என்பனவற்றை யும் உணர்த்துகின்றது. சிலர் இச் சமயம் ஆணவமலம் உண்டெனக் கொள்ளாதது என உரைத்து இச் சமயத் திற்கு ஒவ்வாப் புனைபெயரிட்டும் அழைப்பர். அன்னார் "வருத்தலுறு மும்மலங்களினோர் மலமாகிய ஆணவத்தா லும்" (கொக்கிதேவர் கதி, கச) என்பதுபோல் பல இடத் தும் கூறப்படுதலை உணர்வார்களாக.

மற்றும், உலகத் தோற்றத்திற்குச் சிவபெருமான் நிமித்த காரணன் என்பதை,

"கடைபடும் உலகிற் கெல்லாம் காரிய கருத்தன் முன்னர்
படைபடை யெனச் சொரிந்தார்."
(ஆரோகணகதி, செய்,. ருரு)

என இந்நூலில் வரும் செய்யுளடிகள் உணர்த்து கின்றன.

மற்றும் இந்நூலில் சிவாத்துவத்தையே பல இடத்தும் கூறுவதைக் காணலாம். வீரசைவ சமயத்திற்குச் சிவாத்வைதமதம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. சிவாத்வைதமாவது சிவ சீவர்களின் அத்வைதம்; சிற்சத்தியுடன் கூடிய பரசிவத்துக்கும் அவித்தியா சத்தியுடன் கூடிய சீவனுக்கும் அத்வைதத்தைக் கூறுகின்ற சமயம். அத்வைதம் = இரண்டறக் கலத்தல். இந்நெறியை இந்நூல் மனோலயகதியில்,

"தன்னைப் பேதமாய்க் காண்கை
சகத்திற் காணப் பட்டதாம்
தன்னைப் பேதமறச் சிவமென்
றறிவோன் ஞானி தானொருவன்
என்னக் கருதி மறையதுநீ
யானுய் என்ன அத்துவிதந்
தன்னைப் புகலுங் கண்டதனைச்
சாற்றல் மறையின் கருத்தன்றே.'
(செய்யுள், கஎ)

என்று கூறுமாற்றானறிக. இப்பாசுரத்தில் தத்துவமசி என்னும் மகாவாக்கியத்திற்கு அதுநீயானுய் எனப்பொருள் கோடலையும் அறிக. இதன் விளக்க வுரையாக ஆரோகண கதியில்,

"அங்க லிங்க மயிக்கியம் இதுவென
மங்க லந்தரு மாமறை யின்முடித்
தங்குறுந் தத்துவ மசிதன் பொருள்
பங்க மின்றிப் பகர்பவர் ஓர்சிலர்." (செய்யுள், கக)

என்று சிவசீவ ஐக்கியமே தத்துவமசி மகாவாக்கியப் பொருளாக உரைத்தலும் அறியத்தக்கது. அங்கம் என்

பது சிவனையும் ஐக்கியம் என்பது அசிபதத்தின் பொருளையும் குறிக்கும். இதுவே இலிங்காங்க சையோகம், இலிங்காங்க சாமரசம், என்று சொல்லப்படும். ஆசிரியர் இதனை "வேறறுமுத்தி" "வேறறுவீடு" என்ற தொடர்களால் பல இடத்தும் ஆள்வர்.

இவ்வாறுள்ள அகச் சான்றுகளால் தமிழகத்து வழங்கும் சைவ சித்தாந்தத்தோடு வீரசைவ சமயம் முரண்பட்டதன்று என்பது நன்கு விளங்கும் இனி, வீரசைவ சமயத்திற்கே சிறப்பாகவுள்ளது சடுத்தல சித்தாந்தமாகும். இதனை இந் நூலிலுள்ள இட்டலிங்க கதி, மான்மிய கதிகள் எடுத்துரைக்கின்றன. இக் கதிகளே இந்நூல் வீரசைவ சமய நூலென்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன. இச் சித்தாந்தத்தின் சாரமாகவுள்ளதே [1]"ஒன்றொரு விடயந் தன்னில்" என்ற பாசுரமாகும். அப் பாசுரம் உடலோடு கூடிய ஆன்மா நுகரும் ஒவ்வொரு பொருளினது உரு, சுவை, நிறைவு ஆகியவற்றை இட்ட, பிராண, பாவ லிங்கங்களுக்கு அர்ப்பித்து அவற்றைச் சிவசேடமாக நுகர்வதால் "யான் அனுபவிக்கின்றேன்" என்ற தன்மை நீங்க, அதன் வாயிலாக உலகப்பற்று நீங்கும். பற்று நீங்கவே வினை நீங்கும்; வினை நீங்கவே வீடுபேறுண்டாம் என்பதைக் குறிப்பால் உணர்த்தாநின்றது.

இத்தகைய அரும்பெரும் பொருள்களைக் கொண்டுள்ள இவ்வுயரிய தமிழ்த் தொடர்நிலைச் செய்யுளாகிய பிரபுலிங்க லீலை, கன்னடப் பெரும்புலவராகிய சாமரசருடைய சிறந்த புலமையையும் அருங்கலைச் செல்வராகிய சிவப்பிரகாச அடிகளாரது ஒப்புயர்வற்ற கற்பனைத் திறமும் ஒருங்கே பெற்றுக் காவிய இரத்தினமாகவும் அல்லமருடைய அருள விளக்க நூலாகவும் அறிவு நூலாகவும் சமய நூலாகவும் விளங்குகின்றது. ஏனைய மொழிகளிலுள்ள பிரபுலிங்க லீலையினும் தமிழ்ப் பிரபுலிங்க லீலை கற்பனைத் திறத்தாலும் சொன்னயம் பொருள

1. இப் பாசுரத்தை இட்டலிங்க கதி ஆராய்ச்சியிற் காண்க.

நலங்களாலும் காவியச் சுவையாலும் சிறந்து விளங்குதல் தமிழகப் புலவர்களின் புலமைத் திறத்திற்கோர் ஏற்றந் தருவதாகும். தமிழ்ப் பிரபுலிங்க லீலையில் உலக வழக்காற்றிலுள்ள பழமொழிகள் விரவியுள்ளன; சாத்திரக் கருத்துக்கள் மலிந்துள்ளன; இலக்கண நூற் கருத்துக்களும் சோதிட நூற் கருத்துக்களும் தருக்கநூற் செய்திகளும் திகழ்கின்றன. அற நூல்களுள் இணையற்று விளங்கும் தெய்வப்புலமைத் திருவள்ளுவருடைய திருக்குறட் பாக்களும் கருத்துக்களும் தொடர்களும் ஆட்சி பெற்றுள்ளன. இவ்வாராய்ச்சியைத் தனியே "திருவள்ளுவரும் சிவப்பிரகாசரும்" என்ற தலைப்பில் வரைந்துள்ள நூலுட் காண்க. மற்றும் தமிழ்ச் சான்றோர்களாகிய மணிவாசகப் பெருமான், திருத்தக்கதேவர், கம்பர், சேக்கிழார், கச்சியப்ப சிவாசாரியார் முதலியவர்களின் செய்யுள் மணமும் பிரபுலிங்கலீலை என்னும் இப் பூஞ்சோலையில் மணக்கக் காணலாம். அடிகளார் பல புராணவரலாறுகளையும் கற்றுணர்ந்தவராதலின் அவ் வரலாறுகளும் ஏற்ற இடங்களில் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு பலகலைச் செல்வங்களும் செறிந்து விளங்கும் கருவூலமாக இத் தமிழ்ப் பிரபுலிங்க லீலை இலங்குவதை அறிஞர்கள் கண்டுணர்ந்து இன்பந் துய்ப்பார்களாக.

இவ் வுயரிய அருந்தமிழ்ப் பனுவலாகிய "அல்லமன் சரிதத் தீம்பாலைப் புண்ணியர்தம் செவிவாயில் தமிழ்ச் சங்கத்தான் முகந்து புகட்டிய" சிவப்பிரகாச அடிகளாரின் பொன்றாப்புகழ் இந் நிலவுலகில் என்றும் நின்று நிலவுவதாக.

## பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 51 | 8 | அவருக்கும் | அவருக்குப் |
| 61 | 18 | ஒருவடோருவர் | ஒருவரோடொரு |
| 87 | 24 | கரங்களிளுள்ள | கரங்களிலுள்ள |
| 92 | 29 | பேரூழிக்காலத்துச் | பேரூழிக்காலத் |
| 98 | 26 | நன்முறை | நான்முறை |
| 105 | 7 | இடனுகை | இடனுடை |
| 114 | 27 | முப்பத்தொன்றும் | முப்பத்தொன் தோன்றும் |
| 133 | 2 | பருவமுடைய | பருவமுமுடை |
| 136 | 12 | என்மர் | என்பர் |
| 137 | 33 | கொக்கிதவர் | கொக்கிதேவர் |
| 151 | 26 | சமவசரணர் | சமவசரணம் |
| 209 | 19, 20 | வந்து என்றுமில்லாத நிலைபெற்றிருப்பது புதுமை | வந்து நிலைபெற் பது என்றுமி புதுமை |
| 256 | 20 | நன்குணர்ந்தும் | நன்குணர்த்து |
| 258 | 1 | அசிபதத்தின் | அசிபதத்தின் |